பிர்மமே-ஸத்யம்

கைவல்ய நவநீத சாரம்

(அல்லது)

எனது நிஜ சொரூபம்

(இரண்டாம் பாகம்)

நாங்கூர்

ஆனந்தாஸ்ரம தலைவர், வேதாந்தகேசரி,

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமி வாசுதேவானந்தா

அவர்கள்

இயற்றியருளியது

நாங்கூர்

ஆனந்தாஸ்ரம வெளியீடு

எண்-3

பதிப்புரிமை ஆனந்தாஸ்ரமத்திற்குரியது

1984

பிர்மமே-ஸத்யம்

அரக்கோணம் கிளை, பிர்மவித்யா பீடத் தலைவர்,

சுவாமி அபேதானந்தா அவர்களால்

பார்வையிடப்பெற்றது.

நாங்கூர் ஆனந்தாஸ்ரம வெளியீடு

எண் - 3

பதிப்புரிமை - ஆனந்தாஸ்ரமத்திற்குரியது

விலை ரூ. 5-00

நூல் வெளியிட உதவியவர் :

நாங்கூர். செ. முருகேசன்,

திருவள்ளுவர் நூல் நிலையம்,

121, சிராங்கூன் சாலை,

சிங்கப்பூர் -0821

அச்சிட்டோர் :

ஸ்ரீ விநாயகா பிரஸ்,

அரக்கோணம்-631001

பிர்மமே-ஸத்யம்

கைவல்ய நவநீத சாரம்

(அல்லது)

எனது நிஜ சொரூபம்

(இரண்டாம் பாகம்)

❋

நாங்கூர்

ஆனந்தாஸ்ரம தலைவர், வேதாந்தகேசரி,

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமி வாசுதேவானந்தா

அவர்கள்

இயற்றியருளியது

❋

நாங்கூர்

ஆனந்தாஸ்ரம வெளியீடு

ரூபா-3

1984

பிரமமே-ஸத்யம்

இந்நூலாசிரியர், நாங்கூர்-ஆனந்தாஸ்ரமத் தலைவர்



இமாலயமகரிஷி, வேதாந்தகேசரி,

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமி வாசுதேவானந்தா

மறைவு : 25—10—1981


பிரம்மமே ஸத்யம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமி வாசுதேவானந்த ... சிஷ்யர்கள்



இடமிருந்து வலம் :- திருவாளர்கள் க. கா. ஏகாம்பரம் (மாப்பிள்ளைக்குப்பம்) எம. கணபதி (குருகாடிப்பட்டி, ராமநாதபுரம் மாவட்டம்) வெ. குஞ்சிதபாதம் (நாங்கூர்) வை. இரா. ஆறுமுகம் (நாங்கூர்) செ. முருகேசன் (நாங்கூர்) வை. மாயழகு (திருநாடன்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம்)

பிர்மமே-ஸத்யம்




தமிழ்நாட்டுத் தத்துவஞானி

ஸ்ரீ குருகிணையர் சுவாமிகள்

ஸ்தாபகர் பிர்மவித்யா பீடம், புலிவலம்

(தோற்றம் : 1905]   திருவாரூர்   [மறைவு : 1966

பிர்மமே-ஸத்யம்



தமிழ்நாட்டுத்தத்துவ ஞானி
ஸ்ரீ குருகிணகர் சுவாமிகளின் பிரதமசிஷ்யர்

பேரறிஞர் ஸாது பிர்மானந்தா அவர்கள்

தோற்றம் : 25-11-1924 மறைவு : 13-1—1983

பிர்மமே-ஸத்யம்

அதுவே நித்யம்

நன்றியுரை

ஆதிகாலம் முதற்கொண்டு தென்புலத்தாருகிய தத்துவ ஞானிகள் திருநாங்கூரில் இருப்பிடமாகக்கொண்டு வசித்து வந்துள்ளார்கள் என்பது வரலாறு கண்ட உண்மை. அப்பலத்தாடியார் மடம், பூம்பொழில் நம்பியார் சாமாதி பிரதிவாதி பயங்கரம், ஆயிரத்தில் ஒருவர், மகரிஷி மாதங்கேஸ்வரர் என்ற சின்னங்களாலும் புலனுகின்றது. மகான்கள் தோன்றிய திருநாங்கூரில் எங்கள் குருபிராணுகிய சுவாமி வாசுதேவானந்தா அவர்களும் தங்கி இருந்தார். மகான்கள் தொடர்புவழியுள்ளதால்தான் நானும், இங்கு தங்கினேன் என்று சுவாமிகள் சொல்லுவார்கள்.

மறைந்த எனது தகப்பனுர் சுவாமிகளோடு தொடர்பு கொண்டு பழகிய காலத்தில்; ஒருநாள்; சுவாமிகளிடம் ஆஸ்ரமம் கட்டப்பட்டு அதில் தாங்கள் வடக்குநோக்கி அமர்ந்து வேதாந்த பாடங்களை சிஷ்யர்களுக்கு போதிப்பதாக சொற்பனம் கண்டேன் என்று கூறினுர்களாம். இதை சுவாமிகளின் வாயிலாக கேட்டதுண்டு. அதன்படி ஆஸ்ரமம் கட்டி சிஷ்யர்களுக்கு பாடம் நடந்து வந்திருக்கின்றது. எனது தகப்பனுர் கண்ட கனவு நனவானது. தாம் அடைந்த ஆத்ம ஞானத்தை சிஷ்யர்களை உண்டாக்கி அவர்கள் அறியாமையை போக்கி ஆனந்த வாழ்க்கை நடத்தவேண்டும் என்பது சுவாமிகளின் வற்றுத இதயதுடிப்பாக மிளிர்ந்தது. சுவாமிகளுக்கு இருப்பிடமாக ஆனந்தாஸ்ரமத்தை அமைத்துக் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும் செய்து கொடுத்தவர், காலஞ்சென்ற திரு. G. சீனிவாச அண்ணுர் அவர்களுக்கும், அவர்களுக்குப்பின் சுவாமியை ஆதரித்துவந்த அவர்கள் குடும்பத்தார்களுக்கும், எங்கள் மனமார்ந்த நன்றியும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேம். குருபிரான் அவர்கள் எனக்கு முப்பது ஆண்டுகளுக்குமேல் தெரியும் என்றுலும், மனிதன் எதைத் தெரிந்துக்கொள்ளவேண்டுமோ, அதை தெரிந்துக்கொள்ளாமல் பெரியவர்கள் அவர்களிடம் ஆசிபெற்றுல் வாழ்க்கை நன்றுகஅமையும்என்பதுமட்டுமே நான் உணர்ந்திருந்தேன்

மேலும் அதிப்படியான நாட்களை வெளி நாட்டிலேயே கழிக்க வேண்டியிருந்ததால் சுவாமிகளிடம் நெருங்கிப்பழகுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. சில ஆண்டுகளுக்குமுன் அண்ணா் **V R** ஆறுமுகம் அவர்கள் நான் சிங்கப்பூரில் நடத்திவரும் திருவள்ளுவர் நூல்நிலையத்திற்கு வருவார்கள். அப்பொழுது தான் சுவாமிகளைப்பற்றியும், அவர்கள் எழுதி அனுப்பிய ஆத்மஞான ஆன்மீக கருத்துக்களைப் பற்றியும் எடுத்துக்கூறி சுவாமிகள் எழுதி அனுப்பிய கடிதங்களை போட்டோசெட் காபி எடுத்துக்கொடுத்து படிக்கும்படிச் செய்தார்கள். அந்த நேரத்தில் என் நிலைமை நடுக்கடலிலே பேரிடிக்கும்,பெருமழைக்கும்,பேரலைக்கும், புயற் காற்றுக்கும் இடையில் திக்கு திசை தெரியாது சிக்குண்ட கப்பலைப்போன்று இந்த உயிருக்கும் உடல் தேவைதானு? என்று சஞ்சலமடைந்திருந்த சமயம் குருபிரான் கடிதங்கள் என் கையில் கிடைத்தது. நடுக்கடலில் தத்தளிப்பவனுக்கு ஒரு கட்டுமரம் கிடைத்ததுபோல் இருந்தது. ஒருசில கடிதங்களிலேயே எனது மனமும், சிந்தனையும், ஆர்வமும், ஆன்மீகத்தில் ஆராய்ப்புகுந்தது. சுவாமிகளுடன் நேரிடையான கடிதத்தொடர்புகளைக் கொண்டு ஐயங்களைத் தெளிவாகிக் கொண்டேன். எனைச்சார்ந்திருந்த தம்பி மாயழகு அண்ணன் ஏகாம்பரம், கணபதி, குஞ்சிதபாதம் மற்ற நண்பர்களையும் சுவாமிகளின் கடிதங்களைப் படிக்கச்செய்தேன். அவர்களும் ஆன்மீக கருத்துக்களை ஆராய்ந்து சுவாமிகளுடன் தொடர்பு கொண்டார்கள். சுவாமிகள் எழுதிய இரண்டாவது கடிதமே என் சிந்தனையைத் தூண்டத் திறவுகோலாக இருந்தது. ஒருவரிடம் இரவலாக மண்வெட்டியை வாங்கி வந்தால் உடனே வேலையை செய்து முடிக்கவேண்டும் அல்லாவிட்டால் மறுகணமோ, மறுநாளோ கொடுத்தவன் வாங்கிக்கொண்டுப் போய்விடுவான். அதைப்போன்று இந்த ஜடமாகிய உடம்பை இரவல் வாங்கி வந்துள்ளோம். இயற்கை சக்தி இதை அழிக்குமுன், பிறவிப்பயனையடைய வேண்டும் என்பதே என் சிந்தனையைத்தூண்டி விழிப்படையச்செய்தது. மேலும் சுவாமிகளின் காரிய காரண விளக்கங்களும், சித்து ஜட விளக்கங்களும் பசுமரத்தாணிபோல் பதிந்தன. அந்த விளக்கங்கள் எல்லாம் குருபிரான் எங்களுக்கு எழுதிய சொரூபாத்வைதம் என்னும் ஆத்மஞான அனுபவ நிருபகம் என்னும் நூலில் காணலாம். சுவாமிகளின் மறைவிற்கு

முன்பாகவே இந்தக் கடிதங்களை யெல்லாம் ஒன்று திரட்டி நூலாக்கிக்கொடுத்த பெருமை மறைந்த மாமேதை சாதுபிர்மானந்தா அவர்களையே சாரும். அடுத்து சுவாமிகள் கையேட்டுப்பிரதியாக கைவல்ய சாரம் முதல் பாகத்தையும் விரைவாகவே அச்சேற்றி நூலாக்கித்தந்த பெருமையும் அவர்களையே சாரும். அன்னார் நினைவு எங்கள் இதயத்தில் என்னென்றும் நிலைத்திருக்கும். கைவல்யசாரம் இரண்டாவது பாகத்தை எனது பொருளுதவியாலேயே அச்சிட்டுத்தரும்படியாக சுவாமி அபேதானந்தா என்கிற டாக்டர். T. முத்து R. I. M. P., அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களும் செவ்வனே செய்துகொடுப்பதாக உறுதி அளித்தவகையில் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக என்பதற்கு இணங்க இந்நூலைப்பெற்று எல்லோரும் பிறவிப்பயனடைய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். சுவாமி சற்குருநாதனை நான் அடைந்த நேரத்திலிருந்தே துன்பம் எனக்கில்லையென்பதை அறிந்தேன். எங்கும் இன்பமே என்பதை உணர்ந்தேன். பிறவியில்லை என்பதறிந்தேன். நான் பிரமம் என்று உணர்ந்தேன். நான் கண்ட எனது நிஜ சொரூபத்தை காண்பானின்றி கண்டு தெளிந்ததை என்னுடனிருக்கும் ஆத்மீக ஒருமைப்பாடுடைய நண்பர்களும் கண்டு தெளிந்தார்கள். ஏனைய மெய்யன்பர்களும் பயனடைய வேண்டி அவர்கள் இதயக்கமலங்களில் இந்நூலினைச் சமர்ப்பிக்கின்றோம்.

வெ. ரா. ஆறுமுகம்
வை. மாயழகு
எம். கணபதி
க. கா. ஏகாம்பரம்
வெ. குஞ்சிதபாதம்

இங்ஙனம்,
செ. முருகேசன்
(கேம்ப்) சிங்கப்பூர்

முன்னுரை:

தருமம் குன்றி அதர்மம் தலையெடுக்கும் சமயம் பிரம்ம சாகர அலை மகனே பிரித்ததை நீக்குமடா. என்று ஸ்ரீகுரு கிணகர் சுவாமிகள் அருளிய வாக்கியப்படி தருமம் நிலைத்-தோங்க அவதரித்தவர் ஸ்ரீலஸ்ரீ-வாசுதேவானந்த சுவாமிகள்

சுவாமி வாசுதேவானந்தா அவர்கள் ஆதிசங்கரர் அவ-தரித்த கேரள நாட்டில் பிறந்தவர். சிறிய வயதிலேயே கடவுளைக்காண வேண்டும் என்று கைலிலங்கிரியாகிய இமய மலைக்குச்சென்று மடங்களிலும், குகைகளிலும் இருக்கும் சந்நியாசிகளைச் சந்தித்தும் யோகம், தவம் பல செய்தும் சந்தேகம் தெளியாமல் ரிஷிகேசம் வந்து பல ஆண்டு காலம் இருந்து அங்குவரும் சந்நியாசிகளையும், வேதாந்திகளையும் சம்வாதம் செய்தும் சமாதானம் கிடைக்காமல் இமயமலையில் இருந்து தமிழ்நாடு வேதாரண்யம் வரை சமுத்திரகரை ஓர-மாகவே கால் நடையாக நடந்து வந்தார். இம்மாதிரி இரு-முறை இமயமலையிலிருந்து கால் நடையாக தமிழ்நாட்டுக்கு நடந்துவரும் வழியில் சுவாமிகளை திருநாங்கூரில் காலம் சென்ற திரு. சீனிவாச அண்ணர் அவர்கள் சந்தித்து, சுவாமிகள் தங்குவதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்-தமையால் சுவாமிகள் தங்கி ஆசிரமம் அமைத்து வேதாந்த உண்மையை எளிய முறையில் போதித்து வந்துள்ளார். நான் தமிழ்நாட்டிற்கு வந்த பின்னர் தான் எனக்கு சமாதானம் கிடைத்தது என்று சுவாமிகள் சொல்வார்கள்.

சுவாமிகள் சிறிய வயதிலிருந்தே சந்நியாசம் பெற்று காவி உடை அணிந்திருப்பார். ஒரு சிஷ்யன் சுவாமிகளை அணுகி; நான் சந்நியாசம் பெறவேண்டும், காவி உடை தரிக்க வேண்டும் என்று கேட்டபோது; சந்நியாசமோ, காவியோ வேண்டாம். கிரகஸ்தனுக இருந்து ஆத்மஞானம் அடைவது தான் சாலச்சிறந்தது என்ருர். வேதகாலத்தில் சந்நியாசமோ காவியோ இல்லை. இடைக்காலத்தில் வந்தது. சந்நியாசம் என்பது அறிவாளிகளை காட்டுக்கு அனுப்பும் சதித்திட்டம் என்று சுவாமிகள் சொல்வதும் உண்டு.

திருவாரூர் ரயில்நிலையத்தில் ஸ்ரீகுருகிணகர் சுவாமிகள் பற்பொடி விற்பனை செய்துக்கொண்டு ஆஸ்தீக விஞ்ஞான சாகரம் என்னும் புத்தகமும் விற்பனை செய்து வருவதைகண்ட சுவாமி அவர்கள் அந்நூல் எழுதிய பெரியோரை சந்திக்க வேண்டும் என்று கிணகர் சுவாமிகளுடன் சாது சௌந்திர-ராஜ பிரம்மம் அவர்களைச் சந்தித்து அன்றுமுதல் திருவாரூர் பிரம வித்யா பீடத்தின் தொடர்பு கொண்டு வேதாந்த நூல்-களை எளியமுறையில் சாது பிர்மானந்தாவுடன் இருந்து வெளியிட்டுள்ளார். சுவாமிகள் பூதவுடலும், சாது பிர்மானந்தா அவர்கள் பூதவுடலும் மறைந்து விட்டதால் சுவாமிகள் சிஷ்யர் செ. முருகேசன் அவர்கள் சுவாமிகள் எழுதிய இந்நூலை அவருடைய பொருளுதவியால் அச்சிட்டு யாம் அறிந்த உண்மையை இவ்வையகம் அறிய வேண்டும் என்ற பேரவாவோடு அச்சிடும் பணியை என்னிடம் ஒப்படைத்தார். அவர்கள் கட்டளையை சிரமேல் கொண்டு சுவாமிகள் எழுதிய கைவல்ய நவனீத சாரம் சந்தேகம் தெளி-தல் இரண்டாவது பாகமான இந்நூலை வெளியிட மேற்க்-கொண்டேன். சிஷ்யர்கள் எளிதில் புரிந்துக் கொள்ளும் வகையில் வசன நடையாகவும் எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையிலும் மனதில் பசுமரத்தாணியைப்போல் பதியும் வண்ணம் எழுதியுள்ளார். சுவாமிகள் இந்நூலில் ஜீவன் முக்தி, எனது நிஜ சொரூபம், விஷயானந்தம், ஆத்மானு-பவம், திருக்கு திரிசிய விவேகம், தூல தேகம் விடுத்த லிங்க தேகம் பற்றியும் கைவல்ய நவனீத சாராம்சமும், அறிவே தெய்வம் என்று ஆணித்தரமான பதிலும், நீ ஜனன மரணம் இன்றியவன் என்பதை விளக்கியும் இன்னும் அனேகவித சந்தேகங்களுக்கு பிரஸ்தானஸ்திரயம் எனப்படும் உபநிஷத், பிரம்ம சூத்திரம், கீதை முதலியவைகளிலும் பஞ்சதசி, விசார-சாகரம், ஞானவாசிட்டம், வேதாந்த சூடாமணி இன்னும் பல நூல்களிலிருந்தும், திருமூலர், திருவள்ளுவர், தாயுமாணவர் அவ்வைபிராட்டியார், பட்டினத்தார், சிவஞான வள்ளலார், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீபொன்னம்பல சுவாமிகள் கோ. வடிவேல் செட்டியார், பாரதியார், வீரசுப்பையா சுவாமிகள், மகாத்மா, குமாரதேவ சுவாமிகள் இன்னும்பல தமிழ்ப்பெரியோர்களின் அனுபவங்களை எடுத்துகூறிவிளக்கம் தந்துள்ளார். வேதாகமங்களை அறிய ஆற்றலற்றவர்களாக பலர் காணப்படுவதால் அவர்களுடைய மனோநிலைக்குத் தக்க-

வாறு; உத்தமன், மத்திமன், அதமன் என அதிகாரிகளை மூவகைப்படுத்தி, அவர்களுக்கு தகுந்தவாறு சாஸ்திரங்களில் இருந்து பலவித உவமானங்களையும் எடுத்து எழுதி உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்கம் தந்துள்ளார் சுவாமிகள்.

வியாசபகவான் வகுத்த நான்கு வேதங்களின் முடிவும் உன் சொரூபம் சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம் பூரண மாகிய ஐந்து லட்சணங்களைப் பெற்றுள்ள அறிவுசொரூபமே நீ என்பதாம்.

இந்த உண்மை சகல மொழிகளிலும் இருப்பது பிரசித்தமாம். இந்நூல் வாசிக்கும் அன்பர்கள் வடமொழி, தென் மொழி என்ற மொழி வித்தியாசம் பாராமல் சுவாமிகள் எழுதிய உண்மைக்கருத்தை ஊன்றி கவனித்து உன்னத நிலை அடைவீராக. இந்நூல் அச்சிட என்னுடன் உறுதுணையாக இருந்து ஒத்துழைப்புத்தந்த திரு. S. ஜெயராமன் அவர்களுக்கும், ஸ்ரீ விநாயகா அச்சகத்தார் அவர்களுக்கும், நன்றியைத்தெரிவித்து, நூல் வெளியிட பொருளுதவி தந்து ஊக்கம் தந்த சிங்கப்பூரிலிருக்கும் திரு. செ. முருகேச அண்ணார் அவர்களுக்கும், மற்றும் அவருடனிருக்கும் திரு. வை. மாயழகு, திரு.V.R. ஆறுமுகம், திரு K.K.ஏகாம்பரம் திரு. M. கணபதி, திரு. V. குஞ்சிதபாதம் மற்றும் அன்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து சுவாமிகள் எழுதிய இந்நூலை மெய்யன்பர்களின் இதயக்கமலங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

இங்ஙனம்

சுவாமி அபேதானந்தா என்கிற
டாக்டர். **T. முத்து** ஆர்.ஐ.எம்.பி.
தலைவர்,
பிர்மவித்யா பீடம் கிளை, அரக்கோணம்.

((((!))))

ஓம் தத் ஸத்.

கைவல்ய நவநீதம்

(சந்தேகம் தெளிதல் படலம்)

1. அன்பனே உலகத்தவர்கள் ஒரு ஸ்தம்பத்தை நட்டு அதைப்பலப்படுத்தவேண்டி கல் மண் முதலியவைகளைப் போட்டு குத்திக் குத்தி உரைப்பிற்கும் உபாயம் போல் தத்வ விளக்கப்படலம் 108 கவியிலுள்ள பொருள்களைக் கேட்டு மனனம் செய்த உன்னுடைய மனோவிருத்தியில் நானே பிரமம் பிரமமே நான் என்ற ஓதப்புரோத பாவம் ஐயம் திரிபுஅற ஏற்பட்டிருக்கின்றது அல்லவா அந்த விருத்தி அந்தப்பிரமத்தில் விபரீதஉணர்வு ஏற்படாமல் வயிர மலையைப் போன்று ஸ்திரநிலை பெறுவதற்காக சந்தேகந் தெளிதல் படலத்தை சொல்லுகின்றேன்.

2. சத்துவகுண சம்பன்னனாகவும் பிரமாத்ம ஐக்கிய ஞானம் உள்ளவனாகவும் நின்று சிஷ்யன் மர்க்கட நியாயம் போல் அதாவது குரங்கு எங்கு தாவினும் அதன் குட்டி தாய்க்குரங்கை விடாது பற்றிக் கொள்வது போல் ஆத்தம், அங்கம், தானம் சற்பாவம் முதலிய பணிவிடைகளால் சற்குருவைப் பின்தொடர்ந்தான். அதாவது பஞ்சீகிருத பஞ்ச மகாபூத காரியமான ஸ்தூல் தேகத்தோற்றம் முதற்கொண்டு ஜீவன்முக்தி விதேகமுக்தி பரியந்தம் சொன்ன சற்குருவை எப்பொழுதும் வழிபடத் தொடங்கினான்.

3. ஒரு புருஷனை விட்டு நீங்காத அவன் சாயை (நிழல்)ப் போல் சற்குருவை விடாமல் அன்பாய் பின்பற்றி நின்ற சீடனை நோக்கி குருவானவர் அருளிச் செய்கின்றார். அன்பனே காண்பான், காட்சி, காணப்படுபொருள் ஆகிய மூன்றில் காண்பான் ஆகிய சாட்சி மாத்திரமாய் நிற்கின்றாயோ உனக்கு ஏற்படக்கூடிய பிரமாணகத சந்தேகம் பிரமேயகத சந்தேகம் முதலியன எல்லாம் தீர்ந்து விட்டதா? அதாவது வேதாந்தமானது ஜீவப் பரமங்களின் பேதத்தைக்

கூறுகின்றதா? அல்லது அபேதத்தைக் கூறுகின்றதா? என்னும் சந்தேகம் பிரமாணகத சந்தேகம் எனப்படும் ஜீவப் பிரமங்களின் பேதம் சாத்தியமா? அல்லது அபேதம் சாத்தியமா? என்னும் சந்தேகம் பிரமேயகத சந்தேகம் எனப்படும். இந்த சம்சயங்கள் எல்லாம் உன்னை விட்டு ஒழிந்து போய்விட்டதா? உன் புத்தியில் மேகமானது சூரியனை மறைப்பது போல் ஏதாவது பேதப்பிராந்தி வந்து கலந்ததுண்டா? அனுபவம் கூறுவாயாக.

4. குருதேவா! முன் கவியில் உன் அனுபவத்தை சொல் என்று கட்டளையிட்டீர் அல்லவா! எனது பிதாவே தங்கள் திருவடிகளுக்கு வணக்கம். குருதேவா! ஜனனமாகிய பெரிய காட்டில் அஞ்ஞானமாகிய இருளில் பேத புத்தியாகிய பிசாசுகள் தங்களுடைய கிருபையாகிய உதயகிரியில் பிரம்மோபதேசமான சூரியன் உதயமாய் அதன் வாயிலாக என் உள்ளத்தில் உள்ள ஞானமாகிய கண் திறந்து ஞான வொளியைப் பரப்பினால் மேற்கூறிய பேதப் பேய்கள் நிற்குமோ? நிற்காதல்லவா? இதில் பேதங்களாவன :- ஜீவேஸ்வரபேதம், ஜீவர்களின் பரஸ்பர பேதம், ஜீவ ஜடங்களின் பேதம், ஈஸ்வர ஜடங்களின் பேதம், ஜட ஜடங்களின் பேதம் ஆகிய ஐந்துமாம். பேதப் பேய்கள் மற்றொரு விதம் வருமாறு :-

நித்தனன்றுரைத்த வாக்கியப்படியே நிகழ்த்துன் பிராந்தியைந்தினையுஞ்
சத்தியமிந்தவுலகெனல் கருவி தணிந்திடாதுடலை நானென்னல்
கத்த போத்தாவு நானென் தானுங் கடவுளும் வேறெனக்கருதல்
சித்துருவாகியிருந்து நானுகேன் சிவனெனல் சிதடர் பாலறியே

[சிவஞான வள்ளலார் சாத்திரம் பக்கம் 171]

இக்கவியில் பேதப் பேய்கள் ஐந்து விதத்தை காண்க.

5. குருதேவா ! உலகில் ஒருவனைப் பேய் பிடித்தால் அதை நீக்குவதற்கு மந்திரவாதியானவன் பல உபாயத்தால் ஓட்டினாலும் திரும்பவும் வந்து அவனை பிடித்துக்கொள்ளாத வாறு எந்திரம் எழுதிக்கட்டும் உலக வழக்கம் போல் முன் தத்துவ விளக்கப் படலத்தில் தேவரீர் அருளிச் செய்த பிரம்மோபதேசத்தால் அஞ்ஞானம் நீங்கி விட்டது. ஆனாலும் ஐயா குருவே என் புத்தியானது மாறுதல் அடையாமல் இருக்க மேலும் விண்ணப்பம் உண்டு.

6. குருதேவா! தாங்கள் தத்வ விளக்கப் படலத்தின் 64வது செய்யுள் முதல் 82 வது செய்யுள் வரை கூறியுள்ள தத்துவமஸி மகா வாக்கியமான ஆகமப் பிரமாணத்தால் உன் நிஜ சொரூபமான பிரமத்தை நீயாய் அறியக் கடவாய் என்று அருளிச் செய்தீர். பின் அந்தப் பிரமம் வேத வாக்கியத்துக்கு எட்டாது என்றும் அருளிச் செய்தீர். பின் மனதினால்தான் அந்த பிரமத்தை அறிய வேண்டும். என்றும் துக்கத்தோடு கூடிய மனத்திற்கு எட்டாது என்றும் சொன்னீர். இதில் அடியேனுக்கு ஏற்பட்ட சந்தேகம்யாதோவெனின் பிரம சொரூபம் தத்வமஸி மகா வாக்கியமானது வேத வாக்கியத் திற்கு எட்டுமா? எட்டாதா? மனதுக்கு எட்டுமா? எட்டாதா? என்னும் மயக்கத்திற்கு இடமான இரண்டு வித சந்தே கங்கள் உண்டாயின அவற்றை நீக்கி அருள்வீராக.

7. அன்பனே உனக்குண்டான இரண்டு சந்தேகங் களில் முதல் சந்தேகமான பிரமம் வாக்குக் கெட்டாது என்பதற்கு காரணம் கூறுகின்றேன். வேதாந்தத்தில் ஒன்றை விளக்குவதற்காக நான்கு வித பிரமாணங்கள் கூறப்பட் டுள்ளது. ஒரு பொருளை உணர்வதற்கு ஒப்புவமையாகக் கூறப்படுவது பிரமாணமெனப்படும். அது சப்தத்தால் அறிவிப்பது, பிரத்தியட்சமான கண் கூடாய் அறிவிப்பது, அனுமானத்தால் அறிவிப்பது, உவமானத்தால் அறிவிப்பது ஆகிய நான்கில் கண் கூடாக பார்ப்பது எல்லாம் அறிபடு பொருளாய் அசத்தாய்ப் போம். பிரமம் அறிபடுபொருளன்று. ஆகையால் பிரத்தியட்சப் பிரமாணத்தால் அறியக்கூடாது.

அனுமானப்பிரமாணத்தால் அறியலாமோ எனின் கூடாது. புகையைக்கண்டு ஆங்கு நெருப்புண்டு என்று அறிவது அனுமானமாம். இதன்படிப் பார்த்தால் கண்டத்துவ தோஷம் வரும். பிரமம் அகண்டமாகையால் அனுமானத்தால் அறியக்கூடாது. இனி உவமானத்தால் அறியலாமோ எனின் கூடாது. தனக்கு சமானமான மற்றொரு பொருள் இன்மையின் உவமானத்தால் அறிய முடியாது, இக்காரணத்தால் எக்குணங்களுக்கும் குண விசேஷங்களுக்கும் பொருந்தாமல் இருப்பதால் அந்தப் பிரமம்வாக்குக் கெட்டாது என்பதை நீ அறிவாயாக. இதன் உள்ளுரை :- மற்றை முப்பிரமாணம் என்பதால் நான்காவதான சப்தப் பிரமாணத்தால் தான் அந்தப் பிரமத்தை அறியவேண்டும். இதற்கு ஆகமப் பிராமாணம் என்றும் ஒரு பெயர் கூறுவர். இதை ஆறுவது கவியில் ஆகமப்பிரமாணத்தால் அறி என்று கூறினமையால் ஆகமப்பிரமாணமான தத்வமசி மகா வாக்கியத்தால் தான் பிரம்ம நிச்சயம் செய்தல் வேண்டும், இது அடுத்த செய்யுளில் தொடரும்.

8. அன்பனே பிரமம் வாக்குக் கெட்டாது என்று கூறிய வேதம் மகா வாக்கியத்தின் லட்சண விருத்தியால் அந்தப்பிரமத்தை காட்டியிருக்கிறது. லட்சண விருத்தி என்பதும் பாகத்தியாக லட்சணை என்பதும் ஒன்றேயாம். த்வம் பத வாச்சியார்த்தத்தை நேதி செய்யக்கூடிய லட்சண விருத்தியால் தான் பிரம்ம நிச்சயம் செய்தல் வேண்டும். இவ்வாறாக பிரமம் வாக்குக்கு எட்டும் எட்டாது என்று கூறும் இரண்டு வாக்கியத்தில் நாம் அங்கீகரிக்கத்தக்கது எதுவெனின் இரண்டு வாக்கியமும் உண்மைதான். வேதம் பொய் சொல்லாது இது அடுத்த செய்யுளில் தொடரும்.

9 அன்பனே இந்த இரண்டுவாக்கியங்களும் பொருந்துமாறு ஒரு உதாரணம் கூறுகின்றேன். கேட்பாய் ஓரிடத்தில் திருமணம் நடந்தபின் இரண்டு மணமக்களும் இருந்த ஒரு கூட்டத்தில் மணமகளுடைய தோழியானவள் அக்கூட்டத்தில் இருப்பவர்களைச் சுட்டிக்காட்டி அவன்தான் உன் கணவனா?

இவன் தான் உன் கணவனு? என்று கேட்ட பொழுது அல்ல, அல்ல என்றே கூறிக்கொண்டே வந்தாள். முடிவில் கணவனைக் காட்டிக் கேட்ட பொழுது அவள் வெட்கி மௌன மானுள். இந்த உதாரணத்தைப் போல் வேதமும் ஸ்தூல சரீர தத்துவம் ஆறும் நீயா? சூட்சும தத்வம் இருபதும் நீயா? அவித்தை, ஜீவன் ஆகிய ஒவ்வொன்றும் நீயா? என்று நேதி செய்து பின் முடிவில் 29 வது ஆனகூடாஸ்தனைப் பற்றிக் கேட்கிற போது வேதம் மௌனமாய் விட்டது இதனல் கூடஸ்தனே பிரமம். பிரமமே கூடஸ்தன் என்பது பொருள். இதை அறிவிப்பதற்காக ஜட பதார்த்தங்களை யெல்லாம் நேதி செய்தபின் எஞ்சி நின்ற அறிவே பிரமமென்று கூருமல் கூறிற்று வேதம்.

10. அன்பனே வாக்குக்கு பிரமம் எட்டுமா? எட்டாதா? என்ற உன் முதற்கேள்விக்கு பதில் கூறினேன். இனி இரண்டாவது கேள்வியான மனதிற்கு பிரமம் எட்டுமா? எட்டாதா? என்பதற்கும் பதில் கூறுகின்றேன் கேட்பாயாக. அன்பனே நீ முன்னதாகமனதின் சொரூபம் இத்தகையது என்று தெரிந்து கொண்டால் தான் எட்டும் எட்டாது என்பதைப் பற்றி நிச்சயம் செய்தல் கூடும். ஆகையால் பின் வரும் இரண்டு கவியால் மனதின் சொரூபத்தைக் கூறுகின்றேன் கேட்பாயாக. சகல இந்திரியங்களுக்கும் இராஜன் ஆத்மாவாகும். அதனுடைய எண்ணங்கள் புத்தியென்றும், மனமென்றும் சொல்லப்படும். அதுதான் உள்ளிலும், வெளியிலும் கூத்தாடா நிற்கும். இதில் வரும் எட்டும் எட்டாது என்பதற்கு முடிவு அடுத்த 14வது கவியில் காணலாம்.

11. அன்பனே எண்ணங்களாகிய ஜீவத்வமும் இவ் வாறே. தோன்றும் ஒருவன் ஒரு கண்ணுடியில் பார்க்கும் போது அதில் தன் பிரதி பிம்பமுகம் தோன்றுவது போல் சித்து வடிவமான ஆத்மாவின் பிரதிபிம்பமும் அந்தக் கரணத்தில் மற்றெரு சித்தைப்போல் தோன்றும் அப்போது நான் எனது என்ற விருத்தியுண்டாகும். அந்த விருத்தியும்

அந்த கரணமும் ஒன்ருகச்சேர்ந்து வெளிபட்டு விஷயங்களைச் சென்று பற்றும். உத்தம சிஷ்யனே இவ்வாறு சென்று பற்று கின்ற எண்ணங்களுக்குத்தான் விருத்தி ஞானம் என்று பெயர் கூறுவர் பெரியோர்கள் இதன் உள்ளுரை :- நினைத்தல், ஸ்மரித்தல், எண்ணுதல் இவை ஒரு பொருளைக் குறிக்கும் சொற்கள். ஒன்றை நினைக்கும் செயல் ஜடவஸ்துக்களுக்கு இல்லை. எங்கு சேதனம் உண்டோ? அங்கு தான் ஒன்றை நினைக்கமுடியும். எனவே புத்தியில் பிரதி பிம்பித்த ஆத்மாவின் சாயையே சிதாபாச ஜீவனும். இந்த ஜீவனே கர்த்தா போக்தாவாம். நான் எனது என்று அபிமானிப் பதுவும் இதுவேயாம்.

12. அன்பனே இவ்வாறு தோன்றிய மனோ விருத்தியின் பரிணமம் எவ்வாருகுமென்னில் மூசையில் இட்டு உலையில் வைத்து உருக்கிய பஞ்சலோகங்களின் தாராநீர் ஆனது பல அச்சுக்கருவிகளில் வார்த்தப்போது அச்சுருவம் எப்படி எப்படியிருக்கின்றதோ அப்படி அப்படி அந்த நீர் உருவம் பெறுகின்றது. அதுபோல் இந்த விருத்திகள் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றி அதன் அதன் வடிவமாகின்றன. இங்கனம் பல விஷயங்களை இந்த ஆபாச ஜீவன் தோற்றி வைக்கும். எங்கனமெனின் இருட்டில் உள்ள பதார்த்தங்களை அறிவதற்கு விளக்கு ஒளியும் கண்ணும் வேண்டும்.

13. அன்பனே இருட்டிள் உள்ள பொருள்கள் காண வேண்டுமானல் விளக்கொளியும் கண்ணும் வேண்டும். சூரியனைப் பார்ப்பதற்கு கண் ஒன்றே போதும் அதுபோல் விரிந்திருக்கின்ற இந்த உலகை அறிவதற்கு விருத்தி ஞானமும் சிதா பாசனும் ஆகிய இரண்டும் வேண்டும். ஆனல் ஆத்மாவை பிரமரூபமாக அறிவதற்கு விசாரரூப விருத்தி ஒன்றே போதுமானது சிதாபாசன் வேண்டுவதில்லை.

14. அன்பனே அந்தக்கரணத்தின் விருத்தியும் சிதா பாசமும் சேர்ந்த பரிணமமே அதாவது கூட்டுறவே மனமென்று சொல்லப்படும். சற்குரு கிருபையாலும் வேதாந்த

சாஸ்திர பாடத்தாலும் அந்தக்கரணத்தில் உண்டாகும் அகம் பிரம்மாகார விருத்திக்கு எட்டும். சிதாபாசனேடு கூடிய மனதிற்கு எட்டாது என அறிவாய். அதாவது வேதாந்த விசாரம் செய்யும் மனதிற்கு எட்டும் என்றும் அங்கனம் செய்யாத மனதிற்கு எட்டாது என்றும் அறிக. அன்பனே நீ இந்தப் படலம் 6வது கவியில் பிரமம் மனேவாக்குக்கு எட்டுமா ? எட்டாதா ? என்று வினவிய வினவிற்கு விடையளித்து விட்டேன்.

15. குருதேவா ! தாங்கள் எனக்கு ஒன்றும் மறைக்கமால் சொரூபாத்வைத சித்தாந்தத்தைச் சொன்ன பிரகாரம் அறிந்தேன். பிரம்ம மனேவாக்குக்கு எட்டும் எட்டாது என்பதற்கு தாங்கள் சொன்ன விளக்கங்களைத் தெரிந்து கொண்டேன். மேலும் ஒரு விண்ணப்பத்தை கேட்டு அருள் வீராக. மனமானது ஒன்றிலும் அசைவடையாமல் பிரம சொரூபமாக ஆவதல்லவா சமாதி யெனப்படும். காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சி போல் ஒரு கணத்தில் பல உலகாகார வடிவமாகி பரிணமிக்கும் சுபாவமுடைய இந்த மனமானது காற்றில்லாத இடத்து விளக்குப்போல பிரமத்தில் அசைவற நிலே பெறுவது எப்படியோ ? அருள்வீராக.

16. அன்பனே உன்னுடைய வினவிற்கு விடையளிக் கின்றேன் கேட்பாயாக. மனமானது மூன்று குணத்தின் வசப்பட்டு நிற்கும். அந்த மூன்றில் ஒன்று மேல் ஓங்கி நின்றால் மற்று இரண்டும் கீழ் அடங்கி நிற்கும் இதில் சத்துவ குணம் மேல் அதிகரித்தால் நன்மார்க்கமும், ஆத்ம ஞான விசாரமும் சற்குணங்களுமான தெய்வ சம்பத்து உண்டாகும் ரஜோகுணம் அதிகரித்த போது உலக வாசனேயும், தேக வாசனேயும் கர்மகாண்ட பக்திகாண்ட சாஸ்திர வாசனேகளும் ஆகிய மூன்றும் உண்டாகும். தமோ குணம் அதிகரித்தபோது மேற்கூறிய ஆத்ம ஞானத்திற்கு எதிர்மறை துர்க்குணங்களான அசுரசம்பத்து உண்டாகும். இதை நீ தெரிந்து கொள்ளுவாயாக.

17. அன்பனே மனமானது சத்துவகுணத்தில் தோன்றினபடியால் அதற்கு இயற்கையில் நற்குணமே சுபாவமாம். மற்றும் இரண்டு குணங்களானரஜதமோகுணங்கள் இடையில் வந்து இந்த மனதோடு கலந்தது. அவ்விரண்டையும் உனது முயற்சியினுல் நீக்கினுல் போய்விடும். இங்கனம் இரண்டு குணங்களும் போனுல் இந்த மனதிற்கு உண்டான சலனம் போய்விடும். போய்விடுமானுல் களங்கமற்று தெளிந்த ஆகாயம்போல் உனது இயற்கை வடிவான சத்துவகுண மனமானது அந்த பிரமத்தோடு ஒன்றி நிர்விகல்ப சமாதியில் நிற்கும். இதில் நிர்விகல்ப சமாதியின் விளக்கம் அடுத்த கவியின் உள்ளுரையில் காணலாம்.

18. அன்பனே இந்த மனமானது பிரமத்தை அடைவதற்கு மேலும் வழி சொல்லுகின்றேன் கேட்பாய். நேருக்கு நேராக இரண்டு கண்ணுடியைக் காட்டுகின்ற போது இரண்டுக்கும் இடைவெளியில் என்ன இருக்கின்றது? பரிசுத்தமாய் இருக்கின்றதல்லவா? அது போல் சற்குரு முன்னிலையில் தத்துவமசி மகாவாக்கிய விசாரத்தால் நானே பிரமம் பிரமமே நான் என்று ஐயந்திரிபற தெளிந்தபடி இருந்தால் பின் மனம் ஜகத்தாகப் பரிணமித்தல் ஏது, ஓயாமல் சலித்தல் ஏது என்று உன் ஐயம் நீக்கக்கடவாய். இதன் உள்ளுரை :- இதற்கு முன் கவியில் நிர்விகற்ப சமாதியில் நிற்கும் என்று கூறியதில் மனம் அசைவற்று நிற்கும் என்பது பொருளன்று பின் யாது பொருளோ எனின் நான் பிரம சொரூபன் என்ற உறுதியில் நிற்கும் எனக் கொள்க. இந்த உறுதிப் பாடோடு சகல விவகாரமும் கூடும். இதை விடுத்து மனம் அத்தியந்தம் அடங்கவேண்டும் என்று விசார சாகரத்தின் ஏழாம் தரங்கத்தில் மத்திமாதிகாரியானவன் கூறியபோது அதைக் கேட்டிருந்த உத்தமதிகாரியானவன் இவர்கள் பைத்தியம் பிடித்தவர் போல் உளறுகிறுர்கள் என்று சிரித்தான். என விசார சாகரம் கூறியிருப்பதால் மனதே சத்துவகுணத்தோடும் பிரம்ம நிச்சயத்தோடும் தனக்குரிய விவகாரத்தை செய்வாய். இக்காரணம் பற்றி இந்நூலசிரியரும் அடுத்த கவியில் தெளிந்த தன்றே முத்திதானே என்று கூறியிருப்பதால் அறியலாம்.

19. குருதேவா! அடியேனுக்கு பின்வருமாறு சந்தேகம் தோன்றுகின்றன. அதாவது பிரமத்தோடு ஏகமாய் மனம் கலந்தால் ஜீவன் முத்தர்களின் தேகம் உள்ள பரியந்தம் பிராரத்துவ கர்மத்தின் பலனாகிய போகங்களை அனுபவித்தே தீரவேண்டுமல்லவா? இங்ஙனம் அனுபவிக்குமானால் அப்போது மனம் அடங்கவில்லையே. துன்பத்தைக்கொடுக்கும் மனம் அடங்கினால் அவனுக்கு போகானுபவம் இல்லையே. மனம் அடங்காமல் தோன்றினால் முத்தன் என்று சொல்லக் கூடாதே. மயக்கத்திற்கு ஏதுவான இந்த சந்தேகங்களை நீக்கி உபதேசித்தருள வேண்டும். தன்னை பிரம சொரூப னென்று தெளிந்ததல்லவா ஜீவன்முக்தி.

20. அன்பனே. உன் வினாவிற்கு விடையளிக்கின்றேன். மனோ நாசம் இரண்டு விதமாகச் சொல்லுவார்கள், ஒன்று சொரூப நாசம் மற்றொன்று அரூப நாசம். இவற்றில் தன்னை பிரம்ம சொருபமாக ஐயந்திரிபற தெளிந்த ஜீவன் முத்தனிடத்தில் ஒன்றும், விதேக முத்தனிடத்தில் ஒன்றும் பொருந்தியிருக்கும். இந்த இரண்டில் ஜீவன் முத்தனிடத்தில் மனம் அருபமாயிருக்கும் அதாவது சத்துவகுண வடிவ் மாயிருக்கும். விதேக முக்தரிடத்தில் அந்த அருபமனமும் நாசமாய்ப் போகும். இதில் முக்குணத்தோடு கூடிய மனம் உருவ மனமெனப்படும். அது எல்லோரிடத்திலும் இருக்கும். இந்த முக்குணத்தில் ரஜ, தமோகுணங்கள் நசித்து சத்துவ குணமாகி சேஷித்த மனம் அருவமனமெனப்படும். அது ஜீவன் முத்தரிடத்தில் இருக்கும். விதேக முத்தரிடத்தில் அதுவும் இராது. ஏன் எனில் அவனுக்கு சூட்சும சரீரம் லயமாய்ப் போனபடியால் சத்துவ குண மனமும் போய் விடுகிறது. இங்கே விதேக முத்தனுக்கு சூட்சும சரீரம் லயமாய்ப் போனபடியால் சத்துவகுண மனமும் லயமாய் விட்டது. என்று கூறியிருப்பதன் பொருள் ஜீவன் முத்தனது ஸ்தூல சரீரம் காலத்தால் பிணமாய்ப் போனபின் விதேக முத்தியை ஒப்புக்கொள்ளும் அபிப்பிராயத்தைத் தழுவிக் கூறியதாம். ஏனெனின் ஜீவன் முத்தனுக்கு தன் திருஷ்டியில் தேகம் இல்லை. பிறருடைய திருஷ்டியில் அவனுக்கு தேகம் உண்டு. எனவே ஜீவன் முத்தனை விதேக முத்தன் எனக் கூறுவது பொருந்தும்.

21. அன்பனே சுத்தமான சத்துவ குணமே உண்மையாகும். ரஜ, தமோ குணங்கள் போனால் மனம் என்கின்ற சொல்லும் போகும். போனக்கால் இந்த ஜீவன் முத்தர்களின் நிலை ஏவ்வாறாகும் எனில் நிகழ்காலத்தில் கிடைத்த உணவை உண்பார்கள் வருங்காலத்தில் வருவதையும் போவதையும் நினைத்து மகிழ்ச்சியும் வாட்டமும் அடையமாட்டார்கள். தேகத்தைத்தான் எனக்கருதும் கர்த்தாத்தன்மையை எல்லா கருவி கரணாதிகளின் செயல் நான் ஒன்றும் செய்யவில்லையென்ற அகர்த்தா தன்மை உடையவர்கள் ஆகி அந்தக்கரணங்களின் செயல்களுக்கும் மூன்றவஸ்தைகளுக்கும் சாட்சியாகி முக்தராய் இருப்பார்கள். மேலும் பிராரத்துவ கர்மப்படி போக போக்கியமும் கூடும். இதற்குத்தடையானதொன்றும் இல்லையென அறிந்து சந்தேகத்தை ஒழிப்பாய்.

22. குரு தேவா! ஜீவன் முத்தர்கள் சத்வகுணமனத்தோடு பிராரத்துவ கர்மங்களின் பயன்களை அனுபவிக்கும் நேரத்தில் தான் பிரம்மம் என்னும் நிச்சயமாகிய சமாதியும் ஒரேகாலத்தில் எங்ஙனம் கூடும். கூடுமானால் மனம் விஷயமாகிய ஆசா பாசத்தில் விழுந்து அலையாதோ? அங்ஙனம் அலையுமானால் முடிவில் நான் பிரம்மமென்னும் நிச்சயம் நழுவி விடுமே. இந்த சந்தேகம் அடியேனுக்கு உண்டாகிறது அன்பனே அதற்கு விடையளிக்கின்றேன் கேட்பாயாக ஒரு பர புருஷருடன் சுகத்தை அனுபவித்த நாரியின் மனம் தவம் செய்வதற்கு ஏதுவான குடும்ப விவகாரங்களை செய்யும் போதும் முன் தழுவி அனுபவித்த சுகத்தை மறவாமல் இருப்பதை போல் ஞானியும் தன்னை பிரம்ம சொரூபன் என்பதை மறவாமல் இருப்பான். இதன் உள்ளுரை :- இதில் சமாதி என்று வரும் இடங்களில் எல்லாம் அறிவு சொரூப நிலை எனப்பொருள் கொள்க. வேதாந்த விசாரத்தால் பிரம்ம சொரூபம் நாமே என திடமாகத் துணிந்தவர்கள் உலக விவகாரத்தை செய்யும் போதும் அந்த நிச்சயம் மறவாமலிருப்பார்கள் என்பதாயிற்று: ஆகுமானால் சிலர் மனமானது சரீரத்திற்குள் சென்று பிரம்மத்துடன் கலந்து அல்லது பிரம்மத்தைப் பார்த்தபின் வெளியில் வந்து விவகரிக்கும். அந்த பிரம்மத்தை பார்த்ததனால் அல்லது கலந்ததனால்

அதை மறவாமல் இருப்பார்கள் என்று இந்த கவிக்கு அர்த்தம் கூறுகிறார்கள். அது பொருந்தாது. ஏனெனின் இவர்கள் தன் சொரூபத்தை தனக்கு அறிபடு பொருளாய்க் கண்டார்களா? அல்லது அறிபடு பொருள் ஆகாமல் தன்னை கண்டார்களா? அறிபடு பொருளாய்க் கண்டார்கள் எனின் அறிபுடு பொருள் அசத்தென்று முன்னமே கூறினோம். இனி தன்னைத்தான் கண்டார்கள் எனின் தன்னைப் பற்றுதல் என்னும் கிரியைக்கு கர்த்தாவும், கருமமும் (பற்றப்படு பொருள்) தானே ஆதல் ஆத்மாஸ்ரேய தோஷமாம் குயவன் குடமாகாதது போல் செயப்படு பொருளும் செய்பவனும் ஒன்றாகாது. இதுபோல் தானே தனக்கு அறிபடு பொருளா யிடுதல் வேதவிரோதமாம். இது நிற்க ஜீவன் முக்தனுக்கு விவகாரம் உடன்பாடா? அன்று என்பதைப் பற்றி சிறிது ஆராய்வோம். விசாரசாகரம் ஆறுநீதரங்கத்தில் திடபோதம் எவனுக்குண்டாயிருக்கிறதோ? அவனுக்கு சமாதியும் விவகாரமும் ஒன்றே. ஆகையால் அந்தக்கரணம் நிச்சலமா யிருக்கும் பொருட்டு ஞானி யாதொரு பிரயத்தனமும் செய்ய வேண்டியதில்லை. ஏன் எனின் அந்தக்கரணம் நிச்சலமாய் இருப்பதால் மட்டும் பிரமானந்தம் விசேஷமாய் விளங்காது. நான் சச்சிதானந்தமாம் இருக்கின்றேன் என்பது விசேஷத் திற்கு பொருளாம் ஆகையால் அகம் பிரம்மாகார விருத்தி யினால் நான் ஆனந்தம் விளங்கும். மனம் அடங்குவதால் விளங்காது. இந்த பிரம்மாகார விர்த்தி வேதாந்த விசாரத் தால் உண்டாகுமே ஒழிய உபாசனையாலும் ஏனைய அப்பியா சத்தாலும் உண்டாகாது. அந்தகரணத்தின் சஞ்சல சுபாவ மும் வேதாந்த விசாரத்தால் நீங்கிவிடும். என்றார். மேலும் நாலாந்தரங்கத்தில் "விஷய சம்பந்தத்தால் உண்டாகும் ஆனந்தம் தன் சொரூபானந்தத்திற்கு வேறல்ல வென்று ஞானி அறிகிறான். இதனால் விஷய போகத்திலும் ஞானிக்கு சமாதி சித்திக்கின்றது. அஞ்ஞானியோ தன் சொரூபம் ஆனந்தம் என்று அறிகிறதில்லை. மாறுதலாக விஷயத்தில் ஆனந்தம் இருப்பதாகக் கருதி மயக்கத்தை அடைகிறான்." என்று கூறி இருப்பதால் தன் சொரூபம் அசங்கன் என்று அறிந்து திட போதத்துடன் சகல விவகாரமும் செய்வாயாக.

'போதமுண்ட பிள்ளாய்' என்று திருஞானசம்பந்த சுவாமி களுக்கு ஒரு பெயர் வழங்குவதைக்காண்க. சமாதி என்ற சொல் கேட்டதும் தான் அறிவு சொருபன் என்ற ஞானத்தை விட்டு மனோலயத்தில் ஆழ்ந்தனர் பலர். பாவம் இவர்களை மறுக்கவேண்டி பர புருஷனை நச்சிய நாரி திருஷ்டாந்தம் கூறினர் இந்நூலாசிரியர். விசார சந்திரோதயம் 12-வது பக்கத்தில் "ஐயந்திரிபற ஆத்மாவே பிரம்மமென்னும் நிச்சயம் திடாபரோட்ச பிரம்ம ஞானமாம்" என்றும். உத்தரகீதை 2-ம் அத்தியாயம் 48-வது சுலோகத்தில்'' எவன் வேதாந்த சாஸ்திரங்களைக் கேட்டும் ஓதியும் நான் பிரம்மமென்று அறியவில்லையோ அவனுக்கு படித்த பிரயாசை மட்டும் தான் பலன்'' என்றும். சிவஞான வள்ளலார்'' நான் பிரம்மமெனுஞானம் ஞானிகள் பால் உளவாகும் என்றும், கூறியிருப்பதால் நான் பிரம்மமென்ற நிச்சயமே போதும். மனம் பிரம்மத்தில் லயமாக வேண்டிய தில்லை. மேலும் மனம் பிரம்மத்தில் கலப்பது தனக்கு அறிந்தா அறியாமலா? அறிந்து கலந்தது எனின் பிரமம் அறிபடு பொருளாயிற்று. அறிபடுபொருள் அசத்து என்பது முன்னமே கூறினோம். இனி அறியாமல் கலந்ததெனின் கலந்தது தனக்கு தெரியாது என்று ஆயிற்று. அப்போது கலந்தது பொய்யாம். ஆகையால் கலக்க வேண்டும் என்ற பிராந்தியை விட்டு ஜீவன் முக்திநிலையில் இருந்துகொண்டு உலக உபகார விவகாரம் செய்வாய். மேலும் ஞானவாசிட்டம் வீரசுப்பையா சுவாமிகள் உரை 1079-பக்கம் அருச்சுனன் பகவானை நோக்கி "ஹே பகவன் சமாதி பழக வேண்டும் என்று தாங்கள் ஏன் கூறுகின்றீர்? ஹே அர்ச்சுனா பிரம்மத்தை தன் சொருபமாக உணர்ந்தவன். எப்போதும் சமாதியில் இருப்பவனும், விவகரிப்பவனும் என் வடிவனுவன்'' எனவே ஞானிக்கு எப்பொழுதும் சமாதியாம் என்பது கருத்து என்று கூறியிருப்பதால் சமாதியோடு விவகாரம் செய்வாயாக.

23. குருதேவா! வேதாந்த விசாரம் செய்து தன்னை பிரமம் என்று தெளிவடைந்த ஜீவன் முத்தன் தேகந்தான் அல்லவென்றும் தான் அகர்த்தாவென்றும் ஜீவத்துவம் கற்பிதமென்றும் அதுவும் தான் அல்லவென்றும், தான்

பிரம்மமே என்றும் ஐயந்திரிபறத் தெளிந்தபின் அவன் போக போக்கியங்களை அனுபவிக்குமானால் அவன் கர்த்தாவாகுமே பரிபூரண பிரமசொரூபமாக தன்னையறிந்த ஜீவன்முத்தனுக்கு போக அனுபவம் கூடுமா? பிறவித்துன்பத்தை தீர்த்தருளிய குருவே இந்த சந்தேகத்தையும் நீக்கி அருள்வீர். அன்பனே உன் வினவிற்கு இதுமுதல் பதிமூன்று கவியினால் விடை அளிக்கின்றேன். மேற்கூறிய ஜீவன் முத்தர்கள் மூன்று விதமாய் இருப்பார்கள். அவர்களுடைய பெயர்கள் வருமாறு மாகர்த்தன், மாத்தியாகி, மாபோகி என்று மூன்று விதமாக அவர்கள் இருக்கும் பெருமையை நீ கேட்பாயாக.

24. அன்பனே முன்கூறிய மூவரில் மாகர்த்தனுடைய நிச்சயத்தை கூறுகின்றேன். கேட்பாயாக: ஒன்றை செய்தலும் செய்வித்தலும் இன்றி அசைவற்று இருக்கும் காந்தக்கல் மலை முன் இரும்பூசிகள் சலனமடைவது போல் செய்தல், செய்வித்தல் ஆகிய இரண்டுமின்றி அறிவு சொரூபமாயிருக்கும் என்முன் ஜடமான ஐம்பூதமும் அதன் காரியமான தேகாதிப்பிரபஞ்சமும் தனக்குதானே தொழிற்படும். உலக விவகாரத்திற்கு சூரியன் சாட்சியாயிருப்பது போல் சகல இந்திரியங்களின் தொழில்களுக்கும் அந்தக்கரணத்தின் விருத்திகளுக்கும் பிரமத்தில் பொருந்துதலான சமாதிக்கும் நான் சாட்சி மாத்திரமாய் உள்ளேன் என்ற நிச்சயம் உள்ளவனே விபு (வியாபகன்) மாகர்த்தன் ஆவான். இதில் ஜடமான அல்லது இந்திரியாதிகள் தாமாகவே இயங்குமோ வெனின் இயங்கும். மேற்கோள்:- நன்னூல் 454-வது சூத்திர உரையில் கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு என்னும் அறுசுவைகளும் வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்மை, சீர்மை, இழுமெனல், சர்ச்சரை ஆகிய இந்த எண்வகை ஊறுகளும் (ஸ்பரிசம்) உயிரல்லாத பொருள்களின் குணங்களாம். குணியான ஆத்மாவினுடையது அன்று: கீதாசாரம் 97, 98-ன் பொருள் காண்பதுவும், கேட்பதுவும், போவதுவும், வருவதுவும், வாங்குவதுவும், கொடுப்பதுவும் ஆகிய இவை ஞானேந்திரிய கர்மேந்திரியங்களின் தொழில்களாம் பசி தாகம் பிராண வாயுவின் தர்மமாம். அச்சம், துன்பம், ஆசை, கோபம் ஆகியவை புத்தியின் தர்மங்களாம். என்று கூறியிருப்பதால்

ஆத்மா தர்மியாம். ஆதலால் ஆத்மாவாகிய தனக்கு இவை இல்லையென்று மகிழ்ந்திருப்பார்கள். இந்த ஜீவன் முத்தர்கள் மேலும் தத்வ விளக்கப்படலம் 41-வது கவியின் உள்ளுரையில் காண்பித்துள்ள பஞ்சீகரணத்தால் தோன்றிய இருபத்தைந்து தத்வங்களும் ஜடப்பொருளின் இயக்கமேயாம் இக்காரணம் பற்றி ஜடப்பொருளின் இயக்கம் சித்தாகிய தனக்கு இல்லை யென்று நிச்சயித்தவனே மாகர்த்தனுவான் மேலும் உட்கரண புறக்கரணங்கள் யாவும் குணமே ஒழிய குணி அன்றும். குணமும் குணியும் ஒன்றெனின் குணங்கள் அழிவதுபோல் குணியும் அழியும் அன்றே, அழியுமாயின் முதல் இல்லாமல் போய்விடும். போமாயின் நாஸ்தீகமாம் இது சுருதியுக்தி அனுபவ விரோதமாம். இக்காரணம் பற்றி குணங்கள் யாவும் அறிவான தன் சொரூபத்தில் கற்பிதகுணமாம் சொற்பன சாட்சியை சொற்பனக் காட்சிகள் பாதிக்காதது போல் கற்பித குணமான தேகேந்திரியாதிகள் யதார்த்த குணியான தன்னை பாதிக்காது என்று அறிந்தவன் மாகர்த்தனெனப்படும் ஜீவன் முத்தனுவன். நன்னூல் சூத்திரம் 451 :- ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்றினும் வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர். இதன் உரையில் உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கும் என்று கூறியிருப்பதால் அறியலாம்.

25 அன்பனே இனி மாபோகியின் நிச்சயத்தைக் கூறுகின்றேன் கேட்பாயாக தாம் உட்கொள்ளும் உணவுகளின் அறுசுவையேயும் நன்மை, தீமைகளைப்பற்றியும், சுத்தம் அசுத்தத்தைப் பற்றியும், பத்தியம், அபத்தியத்தைப் பற்றியும் ஆராயாமல் பிராரத்துவக கர்மத்தின் பலனுக தன்னைத் தேடி வந்து சேர்ந்து உணவுகளை சகித்தலோடும் காட்டுத்தீப்போல் புசிப்பவன் மாபோகியாவன் இனி மாத்தியாகியின் நிச்சயத்தையும் நீ கேட்பாயாக :- சிறிது, பெரிது, தனது, பிறருடையது, நல்லது, கெட்டது ஆகிய இவைகள் வந்து சேர்ந்தாலும் ஒன்றையும் கவராத ஸ்படிகத்தின் செயல்போல் மனம் ஒன்றிலும் பற்றுதிருக்கும் அவனே மாத்தியாகியாவன் மாகர்த்தன், மாபோகி, மாத்தியாகி ஆகிய இந்த மூன்று விரதம் அதாவது உறுதிப்பாடு உடையவர்களே ஜீவன் முத்தர்களாம்.

26 குருதேவா! பிறவித்துன்பம் மாற்றியருளிய தங்கள் திருவடிகளுக்கு அஷ்டாங்க நமஸ்காரம் செய்கின்றேன். அடியேனுக்கு இன்னும் ஒரு ஐயமுண்டு. அதையும் கேட்டு அருளுவீராக. தேகத்தோடு கூடியிருக்கும் ஜீவன் முத்தர்கள் பிராரத்துவகர்மத்தின் பயன்களை அனுபவித்துக் கொண்டு இருக்கும் போது மோட்சம் அடைய விரும்பும் உத்தமர்களுக்கு பாடம் சொல்லவும் உபதேசாதிகள் புரியவும் அல்லது இல் வாழ்க்கைக்குரிய தொழில்களைச் செய்து கொண்டிருக்கும் போது அவர்களை கிருத கிருத்தியன் அதாவது எல்லாம் செய்து முடிந்த ஜீவன் முத்தன் என்று எங்கனம் கூறமுடியும் சர்வதுக்க நிவர்த்தி அளித்த குருவே நலமாய் அருள்வீராக.

27 ஞானபுத்திரா உன் வினவிற்கு விடையளிப்பேன் கேட்பாயாக உலகத்தில் உள்ளவர்கள் செய்கின்ற தொழில்கள் மூன்று விதமாக இருக்கும். ஏனையவைகளை இந்த மூன்றில் அடக்கிக்கொள்க. அந்த மூன்றுவன உழவாதி, யக்ஞாதி, சிரவணுதி எனப்படும். இவற்றில் போகத்தில் இச்சையும் தேகத்தில் நான் என்னும் அபிமானமும் உடையவர்களுக்கே உழவாதி இகலோக விவகாரமாம். சொர்க்காதி போகத்தில் இச்சையுடையவர்களுக்கே யக்ஞாதி விவகாரமாம். வீட்டின்பமான மோட்சம் அடைவோம் என்னும் இச்சையுடையவர்களுக்கு சிரவண மனனுதி விவகாரமாம். பரிபூரண பிரமமே நான் நானே பரிபூரண பிரமம் என்று ஐயந்திரிபற தன்னை உணர்ந்த ஞானிகளுக்கு முன்கூறிய யக்ஞாதி, உழவாதி, சிரவணுதி ஆன தொழில்களால் ஒரு பயனுமில்லை 25, 26, 27 கவிகளின் உள்ளுரை :- விரதம் இம் மூன்று உடையவரே வீடுள்ளோரே என்று வரையறுத்துக் கூறினமையால் ஏனைய கர்ம பக்தி காண்டிகள் வீடெனப்படும் மோட்சம் அடையமாட்டார்கள் என்பதாயிற்று இக்கவிக்கு ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் அளித்த உரையில் அதாவது பக்கம் 257:ல் "விரதம் இம் மூன்றுடையவரே என்றும் தேற்றேகாரத்தால் தவம் மகம், தீர்த்தம், சேவை, அர்ச்சனை, தானமாகிய புறக்கருமங்களையுடைய மற்றையர் நிரதிசயானந்த மோட்சம் அடையார் என்பது பெறப் படுகின்றது." என்று கூறியிருப்பதால் அறியலாம். இந்த மூவர்களும் உலக உபகார கர்மங்கள் செய்ய

வேண்டாவோ எனின் தனக்கு இஷ்டமிருந்தால் செய்யலாம் செய்ய வேண்டும் என்ற விதியில்லை. இதை பஞ்சதசி 743 பக்கத்தில் இந்த ஞானி பிரம்மாதி ஸ்தம்ப பரியந்தம் சகல பிராணிகளோடு தன்னையும் முத்தனை காணுகிறவனாக இருத்தலின் அவனுடைய திருஷ்டிக்கு பந்தப்பட்டவர்கள் இன்மையால் அவனுக்கு உலகோபகாரகர்மம் இல்லை. "மேலும் பகவத் கீதை 13 வது அத்தியாயம் 17-வது சுலோகத்தில் ஆத்ம திருப்தனாகவும் மனிதனாகவும் உள்ள அந்த ஞானிக்கு செய்யத்தக்கது ஒன்றுமில்லை." என்றும் பஞ்சதசி 744 பக்கம் "இந்த ஞானி வைதீக கருமங்கள் செய்ய வேண்டாவோவெனின் அதுவும் அஞ்ஞான கற்பித மாயிருத்தலின் பொய்யாம் ஆகையால் ஞானிக்கு விதியின்மையின் தோஷமில்லை" என்று கூறி இருப்பதால் ஞானிகளுக்கு விதி விலக்கு இல்லையென அறிக.

28. தேசிக சிரோரத்தினமே இன்னும் ஓர் விண்ணப்பம் உண்டு கேட்டருளுவீராக. ஜீவன் முத்தர்களுக்கு உழவாதி யாகாதி சிரவணாதி களால் யாதொரு பிரயோஜனமுமில்லை என்று தாங்கள் கூறியது பொருத்தமேயாகும், ஆனால் இகலோக ஆசையும், பரலோக ஆசையும் அற்றவர்களல்லவா சிரவண மனனாதியான ஞானப்பியாசங்கள் செய்வார்கள் மேற் கூறிய உழவாதி யக்ஞாதிகளின் பலன் ஜனன மரணத்தைக் கொடுக்குமே ஒழிய முத்தியைக் கொடுக்காது என்று எண்ணி அதை விட்டுவிட்டு சிரவணாதியைக்கேட்டு ஞானப்பியாசத்தை செய்யத் தொடங்கினவர்கள் மீண்டும் அந்த உழவாதி தொழிலை செய்வாரோ? செய்யமாட்டார்கள் அல்லவா ஆனால் அவர்கள் தன் சொரூபமான பிரமத்தில் மனம் திடம் பெறும் பொருட்டு சிரவண மனனாதிகள் செய்ய வேண்டாவோ?

29 ஆத்ம சொருபமாய் விளங்கும் சிஷ்யனே உன் வினாவிற்கு விடையளிக்கின்றேன் கேட்பாய் ஆத்மசொரூபமே தன் வாஸ்த்தவ சொரூபம் என்று அறியாதவர்கள் சிரவணாதி (கேட்டல்)களைச் செய்யவேண்டும். நான் ஜீவனோ அல்லது பிரம்மமோ என சந்தேகம் உடையவர்கள் சிந்தித்தலாகிய மனனம் செய்ய வேண்டும். நான் நிச்சயமாக

பிரம்மமல்ல ஜீவனேயாகும் என்னும் விபரீத புத்தி உடையவர்கள் நிதித்தியாசனம் எனப்படும் தெளிதலில் முயற்சிக்க வேண்டும். ஆனால் பரிபூரண அறிவை தன் நிஜ சொரூபமாய் அறிந்த ஜீவன் முத்தர்களுக்கு முன் கூறிய மூன்றும் வேண்டியதில்லை. ஏனெனில் நிறை பொருளே அவர்களாதலின் செய்யத்தக்கது ஒன்றுமில்லை. இதில் அறிவாய் நிறை வாயினர் வேண்டுவதொன்றுண்டோ? என்று கேட்டிருப்பதால் அறிவே வடிவாய் விளங்கும் அவர்கட்கு எக்கருமமும் செய்ய வேண்டிய கடமையில்லை அறிவே வடிவு என்று சொல்லும் போது எந்த அறிவு என்று ஐயப்படுமேயானால் இக்கவிக்கு ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகளின் உரை 261-ம் பக்கம் "தேகேந்திரியாதிகளைக் காணும் அறிவாய்" என்று உரைத்திருப்பதால் அறிக.

30 ஐயா கேளீர் பிரம்ம ஞானிகளும் அஞ்ஞானிகளைப் போலவே நான் ஸ்நானம் செய்தேன், நான் பார்த்தேன், நான் கண்டேன், நான் கேட்டேன் என்று சொல்கிறார்களே அவர்களுக்கு ஜீவேஸ்வர ஜகத்தோற்றம் போய்விட்டதாகச் சொன்னீர்களே அங்கனமாயின் பாம்பு என்ற பயம் போய் பழுதையென்று தெளிந்த பின்னரும் பாம்பு என்ற பயம் வரக்காரணம் இல்லை அல்லவா ? அதுபோல் நான் என்பது அத்தியாசமாம் அத்தியாசமாவது "தனது அபாவதிகரணத்தில் தனது அபவாசம்' (தான் இல்லாத இடத்தில் தான் தோன்றுதல் அத்தியாசம் எனப்படும்.) இதை தத்துவ விளக்கத்தின் 27-வது கவியில் கூறினீர். அங்கனமாயின் தன் சொரூபத்தில் தேகத்தைத்தான் எனக்கொண்ட நான் கற்பனை சொரூபத்தைத்தான் எனக்கொண்ட நான் உண்மையாகும். இவ்வாறறிந்தவன் மீண்டும் தேகத்தைத்தான் எனக்கொண்டு நான்வந்தேன், போனேன் என்று விவகரிப்பது பொருந்துமா பழுதையில் பாம்பு என்ற விபரீதம் போல் தன் சொரூபத்தில் இந்த நான் என்பது விபரீதமல்லவா? அது போனபின் நான் என்பது பொருந்துமா? உண்மையான பிரம்ம விசாரத்தை வெளிப்படுத்துமாறு அருள் வீராக.

31 அன்பனே உன் வினவிற்கு விடையளிக்கின்றேன் கேட்பாய். ஒருவன் தான் கண்டகனவில் தோன்றிய பல விவகாரங்களை விழித்துக்கொண்ட நனவில் முன் கனவில் தான் கண்ட விநோதக் காட்சிகளை விளையாட்டாகக் கூறுவன். அங்கனம் கூறினும் தான் கண்டு அனுபவித்த கனவின் சுக துக்கங்களில் பற்றில்லாமல் விநோத மாத்திரமாய்க் கூறுவான் போன்று தேகாதிப் பிரபஞ்சம் பொய்யென்றும் பிரம்மமாகிய தன் சொரூபமே வாஸ்த்தவமென்றும் ஐயந்திரிபறத் தெளிந்த ஜீவம்முத்தன் நனவின் வாசனையினுல் நான் பார்த்தேன், கண்டேன், கேட்டேன் என்று விவகரிப்பன். அங்கனம் விவகரிப்பினும் அவன் ஜீவத்தன்மையுடையவனுக மாட்டான். அவன் பிரம்மமேயாம். அது எதுபோல வெனின் தேவன் ஒருவன் மனிதனுகப் பிறந்து மீண்டும் தேவனுக வேண்டி கங்கா நதியில் முழுகி சரீரத்தை விடுவன் ஆயினும் அவன் உடல் நாசமடையுமளவும் உலகத்தாரால் அவனை மனிதன் என்றே கூறப்படும். அதுபோல் தத்துவ ஞானத்தால் பிரமத்தை அறிந்த இந்த ஞானிகளை உலகத்தவர் மனிதன் என்றே விவகரிப்பர். இந்த ஜீவத்துவம் இறுதிவரை தொடரும். இதன் உள்ளுரை ஞானி அஞ்ஞானியாகிய இருவர் களுக்கும் உலக விவகாரம் சமமாயினும் ஞானியானவன் பற்றற்று விவகரிக்கின்றுன் என்பதைக் கூறுவான் தொடங்கி இக்கவியில் முடிவு கூறுகின்றுர். ஒரு அரசன் தான்கண்ட கனவில் தன்னை பிச்சை ஏற்பனுகக்கண்டேன் என்று அந்த அரசன் நனவில் கூறுவான் ஆயின் அவனுக்கு அதில் பற்று இன்றி எங்கனம் கூறுகின்றுனே அங்கனமே இந்த ஞானியும் நான் கண்டேன், கேட்டேன், உண்டேன் என்று பற்றற்று விவகரிக்கின்றுன். அதனுல் இந்த ஞானி ஜீவத்தன்மை உடையவனுகிறதில்லை. அவன் எப்பொழுதும் பிரம்ம சொரூப மேயாம். இவ்வாறுயின் ஞானி அஞ்ஞானி இருவருக்கும் பேதம் யாதோ வெனின் வேதாந்த சூடாமணியின் 177-வது கவியில் கண்டு தெளிக. மேலும் இக்கவியில் சிதாபாசனுகிய ஜீவத்துவம் போம் அளவும் விவகாரம் தொடரும் என்று கூறி இருப்பதில் ஜீவத்துவம் நாசமாய் போகுமா? அல்லது கற்பிதமாய்ப்போகுமா? எனின் இந்நூல் தத்துவ விளக்கப்·

படலம் 29-வது கவியில் "அநாதியாம் ஜீவரெல்லாம்" என்று கூறியிருப்பதால் அநாதிப் பொருள்களுக்கு நாசம் சொல்லக் கூடாது. உற்பத்தி நாச ரகிதமாய் தோற்ற மாத்திரமாகி விளங்கும் பொருள்கள் அநாதியெனப்படும். இதில் இந்த ஜீவத்தன்மையும் அநாதியே யாம். ஒரு பொருளை அநாதி என்று ஒப்பியபின் அதற்கு நாசம் கூறுதல் பிழையினும் பெரிய பிழையாம். பின் முடிவு யாதோவெனின் சொற்பன காட்சி முழுதும் கற்பனையும் சொற்பன சாட்சி உண்மையுமானவாறு போல ஜீவத்வம் கற்பனையும் ஜீவ சாட்சி உண்மையுமாம் என கொள்க. இந்த ஜீவசாட்சியான அறிவினிடத்தில் கானல் நீர் போல் ஜீவத்வம் தோன்றிக்கொண்டே இருக்கும் இந்தத் தோற்றத்திற்கு காலவரையறை இன்மையால் அநாதியெனப் பட்டது. இக்காரணம் பற்றி ஜீவேஸ்வர ஜகத் தோற்றம் சோபாதிகம் எனப்பட்டது. சோபாதிகமாவது பொய்யென்று அறிந்த பின்னும் தோன்றிக் கொண்டே எது உள்ளதோ அதைக்குறிக்கும். அத்தகையது கானல் நீராம். கானலில் தோன்றும் நீர்த்தோற்றம் கானலைவிட தனிப்பொருளாகுமா? ஆகாத கற்பிதத் தோற்றத்தை உயர்திணை ஆண்பால் பொருளாக்கி ஜீவன் என்று கூறுவது உலக வழக்கே ஒழிய நூல் வழக்கன்று. நூல் வழக்கு ஆகுமாயின் பாரதத்தில் வரும் கர்ணனுக்கு தோன்றிய வேடுவ ஜாதிப்பிராந்தியும் அவனைவிட வேறு ஒரு உயர்திணை ஆண்பால் பொருளாக்கி கூறவேண்டும். முடியுமா பாவம்! இதை வீரசைவ சித்தாந்த மரபில்வந்த குமாரதேவ சுவாமிகள் அருளிய அத்வைத உண்மை 78-வது கவியில் "தன்னை ஜீவனெனத் திரிவாய் தான் நின்று உணர்தல் அஞ்ஞானம். தன்னை பிரமம் என்று துணிவாய்த் தான் நின்று உணர்தலே ஞானம்" என்றும் ஷ்டி 91-வது கவியில் "இந்த ஜீவன் கற்பிதமேயன்றி வேறூர் பொருளல்ல" என்று கூறியிருப்பதாலும் அறியலாம்.

32 குருதேவா! ஞானியின் விவகாரம் விதேக முத்தி பரியந்தம் தொடரும் என்றீரே. அங்கனமாயின் நானாவித விவகாரங்கள் ஞானிக்குத் துன்பத்தைக் கொடுக்குமேயொழிய அறிவானந்தத்தைக் கொடுக்ாதல்லவா? சகல விவகாரமும் ஒழிந்துபோனால் அல்லவா பிரம்மானந்தம் உண்டாகும்.

அதற்காக அவன் நன்ருக நிஷ்டை (தெளிதலில் உறுதி) சாதிக்க வேண்டாவோ? அங்கனம் நிஷ்டை புரிந்தால் எல்லாம் செய்து முடிந்தவன் அதாவது கிருத கிர்த்தியன் என்று எங்கனம் கூறத்தகும். இந்த சந்தேகத்தை நீக்கியருள்வீராக இதன் உள்ளுரை இதில் நிஷ்டை என்று வருமிடங்களில் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகிய மூன்றில் தெளிதல் உள்ள உறுதிக்கு உரிய பெயர் எனக்கொள்க. இந்தக்கருத்தை விட்டு நிஷ்டை என்பதற்கு நிர்விகல்ப சமாதி பழக்கம் எனப்பொருள் கொள்வாருமுளர். வேறு சிலர் மனதை உடம்புக்குள் திருப்பிச்சென்று பிரம்மத்தில் கலந்துக் கொள்வதுதான் நிஷ்டை என்றும் கூறுவர். இன்னும் சிலர் பத்மாசனம் போட்டுக்கொண்டு கைகளின் விரல்களை சின் முத்திரை பிடித்து கண்விழிகளிரண்டையும் மேலே சொருகி மரக்கட்டையைப்போல் சிறிது நேரம் இருந்துவிட்டு வெளியே வருவார்கள். என்னசெய்தீர்கள் என்று கேட்டால் நிர்விகல்ப சமாதியில் இருந்தேன் என்பார்கள். ஜீவ லட்ஷணமும் பிரம்ம லட்ஷணமும் அறியாத இவர்கள் தவப்பகடியாட்டம் ஆடுகின்ருர்களே ஒழிய தன் உண்மை சொரூபம் அறிந்தார்களில்லை பாவம்! உள்ளே சென்று பிரம்மத்தைக் காண வேண்டும் நிர்விகல்ப சமாதியை அடைய வேண்டும் என்று நினைக்கின்ற நினைப்பு எதுவோ அதுவே சித்து சொரூபம். அதாவது பிரம்ம சொரூபம் என்று இவர்கள் அறியவில்லை. எக்காலத்தில் இந்தஉண்மை அறிவார்களோ யாம் அறியேன் நான் என்ற சொல் சேதனம் அன்னியில் பொருந்தாதென்பதற்கு மேற்கோள் ஞான வாசிட்டம் அகமகமென்றனைத்து உயிரினிடத்துமிருந்து அன்வரதமுரைப்பதாகி, நிகழொளியாமாத்து மத்ததுவமான சொரூபத்தை நினைத்தல் செய்வாம், திகழிதய குகையுறையுந் தேவதையை விட்டயலே தெய்வந் தேடல், மிகவரிய கவுத்துவத்தை யெறிந்து சிறுமணி தேடும் வேட்கைபோலாம்! என்று கூறியிருப்பதால் நான் என்று நினைப்பது சடப்பொருள்களுக்குப் பொருந்தாது. சித்திற்கே பொருந்துமென அறிக.

33 ஞான புத்திரா சிரவணதிகள் (கேட்டலாதிகள்) ஆரம்பிக்கும்போதே புறத்திலுள்ள உழவாதி விவகாரங்கள்

குறையும். ஏனென்னின் த்த்வ விளக்கப்படலம் 13-வது க்வியில் கைதப்பி ஓடிய் மான் போல் என்று கூறியபடி இங்கும் சிரவணுதி ஆரம்பத்தில் விவகாரம் குறையவேண்டும். முத்திக் குரிய தியானமும் மற்று உள்ள விவகாரங்களும் அந்தக் கரணத்தின் தொழிலாகும். பிரமமேதன் சொரூபமாக அறிந்த ஞானிகளுக்கு லௌகீக வைதீகமான ஒரு தொழிலும் செய்ய வேண்டுவதில்லை. ஆகையால் கர்த்தத்துவ புத்தி-யோடு அறிவானந்தத்தை அடையவேண்டி அரிய சாமதிகள் பழகுமானுல் அவன் உண்மையுணர்ந்த ஆருட ஞானியன்று. இதில் ஆருட ஞானியென்பது 'சித்சொரூபந்தானே ஜெக சொரூபமானவெல்லாம்' என்ற சொரூப சாரத்திற் கிணங்க நாமரூபப் பிரபஞ்சத்தை பிரம்ம ரூபமாக காண்பவனேயே குறிக்கும் என்க.

34 குருதேவா! ஆருட ஞானிகளாயினுேர்கள் எல்லாம் செய்து முடித்த கிருத கிருத்தியரான அவர்களுக்கு ஒருவித தொழிலும் செய்யவேண்டும் என்ற விதியில்லை அங்கனமிருக்க சிலர் மனதை அடக்க கூடிய ஜப தப தியான யோகங்கள் ஏன் செய்கிறுர்கள். என்ற சந்தேகம் அடியேனுக்கு ஏற்பட்டு இருக்கிறது. அன்பனே அவர்களுடைய பிராரத்துவ கர்மம் எப்படியோ அப்படி இருப்பார்க்ள் என்று த்த்வ விளக்கபடலம் 97-வது க்வியில் கூறியிருப்பதை வாசித்து அறிந்து கொள்க.

35 உத்தமனே கேள்! தன்னலம் கருதாத ஞானிகள் செய்யும் விவகாரங்கள் முழுதும் உலக உபகார நிமித்தமே ஒழிய அதனுல் அந்த ஞானிகள் அடையும் பயன்யாதொன்றும் இல்லை. அங்கனம் செய்யாமையால் அவர்களுக்கு எவ்வித குறைபாடுமில்லை. எங்கனமெனின் சிருட்டி திதி சம்காரம் ஆகிய முத்தொழிலையும் செய்யும் ஈசுவரன் அதனுல் வரும் புண்ணிய பாப லாப நஷ்டத்தை அடையாதது போல். இந்த ஞானிகளும் தாம் செய்யும் உலக உபகார கர்மத்தால் வரும் புண்ணிய பாப லாப நஷ்டத்தை அடைய மாட்டார்கள். முக்கியமாக உலக உபகார கர்மமென்பது வேதாந்த பாடத்தைப் போதிப்பதாகும். அங்கனம் ஆயின் கர்த்தத்துவ புத்தி இல்லாத ஞானிகளால் எங்கனம் வேதாந்த பாடம்

சொல்லக்கூடும் எனின் விருப்பு, வெறுப்பு இல்லாத ஈசுவரன் ஜனங்களின் புண்ணிய பாப வசத்தால் சிருட்டியாதிகளை உண்டாக்குவது போல சிஷ்யர்களின் புண்ணிய விசேஷத்தால் ஞானிகள் தோன்றி வேதாந்த பாடம் சொல்லக் கூடும் என்க இதை சங்கர பகவற் பாதர் துதியில் "நாங்கள் புண்ணிய மனைத்தும் ஒன்ருய் அங்கு புல்லென வந்து ஆண்டருளி" என்று கூறியிருப்பதால் அறிக.

36 குருதேவா! ஜகத்துக்கு அபின்ன நிமித்த உபாதான காரணனும், ஈசுவரனும் வியாபக சேதனனுமாகி எனையாளும் குருவுமாகி எழுந்தருளிய ஆசாரியரே தங்களுக்கு வணக்கம். முன்பாட்டில் ஈசுவரனும் ஞானியும் சமான மானவர் என்றீர் அங்கனமாயின் இருவரும் எப்படி சமானம் ஆவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அன்பனே கேட்பாயாக இவ்விருவரும் நான் எனது என்னும் அபிமானம் இன்மையான அசங்கத்தன்மையால் சமானம் ஆவார்கள் அன்றியும் இந்த ஞானி பிரம்ம சொரூபமானதால் தன்னிடத்தில் கற்பிதமான ஜக ஜீவ பரமாயும் அன்ருயும் இருப்பதால் இந்த ஞானி எல்லாமாயும் அல்லவுமாயும் இருக்கிருன்.

37 குருதேவா! அடியேனுடைய எல்லா விணக்களுக்கும் தக்க விடை அளித்து முத்தியில் சேர்த்தீர். இன்னும் ஒரு விண்ணப்பம் உண்டு கேட்டருள்வீர் இந்த ஞானியே எல்லா ஜீவருமாவர் என்று அருளினீர். அங்கனமாயின் இந்தஞானி முத்தியடைந்தால் எல்லா ஜீவர்களும் முத்தியடைய வேண்டுமே அங்கனம் இல்லாதிருப்பதற்குகாரணம் யாதோ? அன்றியும் எல்லா ஜீவர்களும் வேறு வேறு இந்த ஞானியும் வேறு அதனுல் அப்போது எல்லாம் இந்த ஞானிதான் என்று முன்கூறியது பொருந்தாது அல்லவா இந்த விணவிற்கு விடை அளிப்பீர்.

38 அன்பனே ஒரே சேதனம் (அறிவு) பல ஜீவர்களாகத் தோன்றுவதை ஒரு உவமானத்தால் விளக்கி காட்டுகிறேன். ஜகத்தைப் பிரகாசிப்பிக்கும் வானச் சந்திரன் ஒன்றேயாம். ஆனல் ஏரி, குளம்குழி, சால், சட்டிகுடம் என்னு

பலவாம். இவ்வகளில் மேற்கூறிய சந்திரனின் பிரதிபிம்பம் பலவித ஜல சந்திரர்களாக விளங்குவதுபோல் ஒரே பிரம்ம சேதனம் பல அந்தக்கரணங்களில் பிரதி பிம்பித்து பல ஜீவர்களாக விளங்குகின்றது.

39 மேல் காண்பித்த சட்டி குட முதலிய உபாதிகளில் ஒன்று நாசமானுல் அதில் பிரதி பிம்பித்துத் தோன்றிய ஜல சந்திரன் பிம்ப சந்திரனேடு ஏகமாகும். ஏனைய சட்டி குடங்களில் தோன்றிய ஜல சந்திரர்கள் வானச்சந்திரனேடு ஏகமாவதில்லை. அதுபோல் ஒரு அந்தக்கரணத்தில் உள்ள அஞ்ஞான உபாதி தத்துவ ஞானத்தினுல் நாசமானுல் அதில் தோன்றிய ஜீவத்தன்மை தனது காரணமான பிரமத்தில் ஐக்கியமாகும். அந்த அஞ்ஞான உபாதி கெடாத ஏனைய ஜீவர்கள் தனக்கு காரணமான பிரமத்தில் ஐக்கியமாவதில்லை அன்பனே இந்த விடையை நீ ஆராய்ந்து அறிவாய். இதன் உள்ளுரை சட்டி குடங்களில் ஒன்று உடைந்துபோனுல் அதில் உள்ள ஜல சந்திரர்கள் வானச்சந்திரனேடு சேர்வதுபோல் அல்லது ஒன்றுபோல் தோன்றுவதாக தெரிவதுபோல் தூல சரீரம் நஷ்டமானுல் அதிலுள்ள ஜீவர்கள் பிரமத்தோடு ஏகமாகாதோ எனின் ஆகாது. குடத்தில் பிரதி பிம்பத்திற்கு ஏதுவான ஜலம் நஷ்டமாகவில்லை. அதுபோல் அந்தக்கரணமும் அஞ்ஞானம் நஷ்டமாகாதவரையில் பிரமத்தோடு ஐக்கியம் கிட்டாது. இவையிரண்டும் பிரம்ம ஞானத்தாலே நாசமாகவேண்டும் இதுபற்றியன்றே முன்படலம் 105-வது கவியில் "அரிய மெய்ஞ்ஞானத்தீயால் அவித்தையாம் உடல் நீருகும் சூட்சும சரீரம் உலையிரும்புண்ட நீர்போல் விபுவான சொரூபத்தில் இறந்து போமே" என்று கூறியதை இங்கு நினைவிற்கொள்ள வேண்டும். ஜலத்தைப் போன்ற அந்தக்கரணமும், அஞ்ஞானமும் இருக்கும் வரையில் ஜீவத்துவம் தோன்றிக்கொண்டே இருக்கும். இக்கவியில் கூறிய பிம்பப் பிரதி பிம்பதிருஷ்டாந்தம் உத்தம சித்தாந்தம் அன்று. பூர்வபட்சமேயாம். பேதவாதம் ஆறும், அபேதவாதம் ஐந்தும் ஆக பதினெறு வாதமும் பூர்வபட்சமெனக்கொள்க. முற்கூறிய அபேதவாதத்தில் மூன்று பிம்பப்பிரதி பிம்பதிருஷ்டாந்தமாம் ஜீவப் பிரமங்களுடைய ஐக்கியத்திற்கு இந்த பதினென்று

வாதப்படிக் கூறுவது தோஷமுடையது. இதன் விரிவை வேதாந்த சூடாமணி 125, 126 கவிகளில் காணலாம். இனி தோஷமில்லாத சித்தாந்த பட்சம் யாதேனெனின் கர்ணனுக்குத் தோன்றிய வேடுவ ஜாதித்தன்மை போலும் தசமனுக்கு தசமத்தன்மை தோன்றாதது போலும் மனிதனுகத் தோன்றிய இராமனுக்கு பிரமத்துவம் தோன்றாதது போலும் தோன்றிய இந்த ஜீவத்தன்மை கற்பிதம் என்று அறிந்து பிரமத்துவம் சுபாவச்சித்தமாகத் தோன்றுதலாம். மேற்கூறிய திருஷ்டாந்தத்தில் ஒன்றை எடுத்துக்கொள்வோம். பாரதத்தில் வரும் கர்ணனுக்கு தான் வேடுவ ஜாதியில் பிறந்தவன் என்ற இழிகுலப்பிராந்தி உண்டாயிற்று. அது ஆசாரியர் உபதேசத்தால் போய்விட்டது. அவனது இயற்கையான க்ஷத்திரியக்குலத்தன்மை அறிந்து ஆனந்தமடைந்தான். அதுபோல் பிரமத்தின் அஞ்ஞானத்தினுல் நான் ஒரு ஜீவன் என்ற பிராந்தி தோன்றுகிறது. அது குரு உபதேசத்தால் போனபின் நான் பிரம்மசொரூபன் என்னும் ஏகான்மஞானம் அவனுக்கு உண்டாகின்றது. அதுவே அவனுக்கு மோட்சமாம். என்று பிரஹ்தாரண்ய உபநிஷத்தின் வியாக்யானதில் பாஷ்யக்காரரும், வார்த்தீக்காரரும் எழுதியிருக்கிறுர்கள் எனவே இந்நூலாசிரியரும் உபாதி நசித்திடு ஜீவன் காரண ஆன்மாவில் கிட்டும் ஐக்கியம் என்று கூறியிருப்பதால் ஒரு அந்தக்கரணத்திலுள்ள அஞ்ஞானம் நசித்த ஜீவன் தனக்குக் காரணமான பிரமமாகவே எஞ்சிநிற்பன். எனக்கொள்க. இந்த திருஷ்டாந்தத்தை குமாரதேவ சுவாமிகள் அத்வைத உண்மை 34-வது கவியில் கண்டு தெளிக.

செய்யுள் :-

" அரைய குமாரன் புலையருடனனுகி மறந்து
 -- மொருவரால்
அரைய குமாரனென வறியிலஃதெப்போது
 -- மறவாதின்
தரையிலாசானெழுந்தருளித் தனைப்
 பார்த்தது நீ யெனவுரைக்கின்
புரையிலதுவா மூவத்தை பொருந்தும்
 பொழுது மறவானுல்."

இக்கவியால் ஜீவத்துவம் கற்பிதமென்றும் பிரமத்துவம்சுபாவ சித்தமென்றும் அறிவித்தவாறு காண்க.

40 குருதேவா! ஈசனும், ஞானியும் சமானம் என்று தாங்கள் கூறியதில் அடியேனுக்கு மீண்டும் ஐயம் தோன்றுகிறது. மும்மூர்த்திகளோடு இந்த ஞானிகள் எப்படி சமானம் ஆவார்கள்? மும்மூர்த்திகள் ஆக்கல், அளித்தல் முதலியவை செய்வார்கள் அன்றியும் அவர்கள் பிறருடைய புத்திகளையும் சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய முக்காலங்களையும் அறிவார்கள். இதனால் அவர்கள் சர்வாந்தர்யாமியும் ஆவார்கள் ஆனால் இந்த ஞானிக்கு முன்சொன்ன மகிமையில் சற்றும் கண்டிலேன். ஆதலின் ஈசனும், ஞானியும் எப்படி ஒப்பாகும் குருமூர்த்தி!

41 அன்பனே ஈசனும், ஞானியும் சமானமாம் என்று நான் சொன்னதை நீ இன்னும் புரிந்துகொள்ளவில்லை. அதை உதாரண முகத்தால் விளக்கிக்காட்டுகின்றேன். ஒரு ஏரியில் உள்ள ஜலமும் சந்திரப்பிரகாசமும் பல ஊரைக் காக்கும் தன்மையுடையது. ஆனால் ஒரு குடத்தில் உள்ள ஜலமும் ஒரு விளக்கும் ஒரு வீட்டைமட்டும் காக்கும் தன்மையுள்ளது. அதுபோல் சிஷ்யனே தத்துவ ஞானியும், ஈசுவரனும் நான் பிரமம் என்னும் ஞானத்தால் பேதமில்லை. இருவர்களுடைய அறிவும் ஒன்றுதான். எனினும் சத்துவகுண மாயையில் தோன்றினவன் ஈசுவரன், ரஜோகுண மாயையில் தோன்றினவன் ஜீவன். இந்தபேதமே ஒழிய தன் உண்மை சொரூபத்தை அறிந்த ஞானிக்கும், ஈசுவரனுக்கும் மேற்கூறிய குணபேதமே ஒழிய குணியான பிரம்ம சொரூபத்தில் பேதம் இல்லை. குடஜலமும், விளக்கும் அளவில் சிறியது. ஏரியும், நிலவும் அளவில் பெரிது. ஆனால் காக்கும் தன்மை இரண்டிற்கும் ஒன்றானவாறு போல் ஞானி தன்னை அடைந்தவர்களின் அஞ்ஞானத்தைப்போக்கி மூக்தியடைய செய்கின்றான். ஈசுவரனும் தன்னை அடைந்தவர்களைக் காப்பாற்றுகின்றான் ஏனவே ஒருமை, பன்மையான உபாதி பேதமே ஒழிய இருவருக்கும் சொரூபத்தில் பேதமில்லை:

42 அன்பனே நீ ஈசுவரனும், ஞானியும் எப்படி ஒப்பாவார் என்று வினவிய வினவிற்கு முன் கவியில் விடை

அளித்தேன். இந்தக்கவியிலும் அதை உதாரண முகத்துடன் விளக்கிக் காண்பிக்கின்றேன். மனிதர்கள் என்ற முறையில் ஒரு மன்னவனும் ஒரு சித்துப் புருஷனும் சமானமாயினும் சித்தர்களுக்கு எண்வகை சித்து மகிமையால் பேதம் இருக்கிறதல்லவா? மேலும் மும்மூர்த்திகளுக்கு அஷ்டமா சித்திகளும் சர்வஞ்ஞத்துவாதி கல்யாண குணங்களும் உண்டு. இந்தஜீவன் முத்தர்களுக்கு அவைகள் இல்லாமையால் தாழ்வு உளரானலும் நான் சச்சிதானந்த நித்திய பூரணன் என்ற பிரம பாவனையால் ஞானிக்கும், ஈசுவரனுக்கும் சற்றும் பேதம் இல்லை. அதாவது சேதனத்தன்மையில் இருவருக்கும் பேதம் இல்லை என்பது பொருள்.

43 குருதேவா! அடியேனுக்கு மேலான அறிவை அளித்த கருணைக்கு வணக்கம். இன்னும் ஓர் விண்ணப்பம் உண்டு கேட்டருள்வீராக முன் கவியில் எண்வகை சித்திகளும் ஈசுவரனுடைய செல்வம் என்றீர் அங்ஙனமாயின் வியாசர், வசிட்டர் முதலிய ரிஷிபுங்கவர்களுக்கு அந்த சித்தியின் காரணமாக சாபானுக்கிரகசக்திகள் காணப்படுகின்றது. இந்த சித்தர்களுக்கு அது எவ்வாறு உண்டாயிற்று என்பதை அருள்வீர். அன்பனே! கேட்பாய் மேற்கூறிய மும்மூர்த்திகளை நோக்கி செய்யும் தவத்தாலும் பக்தியாலும், யோகத்தாலும் அந்த எண்வகைசித்திகளும் உண்டாயிற்று என்று அறிவாய்

44 பரிபூரண ஞானமே ஓர் உருவாய் எழுந்தருளியிருக்கும் குருமூர்த்தியே சித்திகளும், முத்திகளும் மேற்கூறிய வியாச வசிட்டாதி முனிவர்கள் அடைந்ததாக சாஸ்திரங்களில் கூறியிருப்பதை நாம்பார்த்தோமே. ஆனல் பூமியில் இக்காலத்திலுள்ள ஞானிகளுக்கு சித்திகள் காணேமே முற்காலத்தில் வியாசர் முதலியோர்கள் ஆற்றிய தபசின் பயனக சித்தியும், முத்தியும் அடைந்தார்கள். இக்காலத்திலுள்ள ஞானிகளுக்கு அந்தச்சித்து விளையாட்டு இல்லாமைக்கு காரணம் யாதோ அருள்வீராக.

45 அன்பனே உன்வினவிற்கு இந்த இரண்டு கவியால் விடையளிக்கின்றேன் கேட்பாயாக தனக்கு என பலனை விரும்பிச்செய்யும் புண்ணிய கருமங்களுக்கு காமியகர்மங்கள் எனப்பெயர் பெறும் எல்லா புண்ணிய கர்மங்களும் பலனை

விரும்பாது பிரம்மார்ப்பணமாகச் செய்யும் புண்ணிய கர்மங்களுக்கு நிஷ்காம கர்மம் எனப்பெயர் பெறும். இவ்விருவகையில் காமியமாகச்செய்யும் கர்மத்தின் பயனால் எண்வகைச் சித்திகள் உண்டாகும். நிஷ்காம கர்மத்தின் பயனாக ஆத்மஞானம் உண்டாகும். இவற்றில் ஒன்று செய்தவர்கள் ஒரு பலனைத்தான் அடைவார்கள். இரண்டுவகை கர்மங்கள் செய்தவர்கள் இரண்டுவகை பலன்களும் அடைவார்கள். இது நியமமாதலின் முன்கூறிய காமிய நிஷ்காமியமாகிய இரண்டுவகை கர்மமும் செய்தவர்கள் வியாசர், வசிட்டர் முதலானோர்கள் அதனால் அவர்களுக்கு சித்தியும், முத்தியும் உண்டாயின. இதில்புண்ணிய கர்மத்திற்கும் ஜபதப தியான யோகங்களுக்கும் தவம் என்று ஒரு பெயர் இருந்தபோதிலும் உண்மையில் ஆத்மஞான விசாரத்திற்கே தவம் எனப் பெயர் பெறும். இதை பஞ்சதசியில் காணலாம்.

46 அன்பனே ஜனகராஜன், மாபலிச்சக்கரவர்த்தி, பகீரதன் முதலானோர்கள் ஆத்மஞானத்தைவிரும்பி பெரியவர்களிடத்தில் வேதாந்த சாஸ்திரம் பாடம் கேட்டு தன்னை உணர்ந்தார்களேயொழிய சித்திகளை விரும்பி தவம் செய்தார்களா? சிலர் சித்தியைவிரும்பினார்கள் மற்றும்சிலர் முத்தியை விரும்பி பாடம் கேட்டார்கள். இன்னும் சிலர் இரண்டையும் விரும்பி முயற்சித்தார்கள். சித்திகள் வினோத மாத்திரம் தருமேயொழிய முத்தியைத்தராது. இதன் உள்ளுரை: சித்து விளையாடுதல் என்ற ஒரு கோட்பாடு புராணகாலத்திலிருந்து வந்துள்ளது. அந்த ஐதீகத்தையொட்டி இந்நூலாசிரியரும் காமியத்தவத்தால் சித்திகளும் நிஷ்காமியத்தவத்தால் முத்தியும் உண்டாகும் என்றார். ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை விரும்பினார்கள் ஆனால் ஞானவாசிட்டத்தில்வரும் ஜனகராஜன்' மாபலி, பகீரதன் முதலானோர்கள் முத்தியை விரும்பி தத்தம் குருமார்களிடத்தில் பாடம் கேட்டார்களே ஒழிய சித்திகளை விரும்பி தவம் செய்யவில்லை. இக்காரணம் பற்றி இந்தகவியில் சித்திகள் வினோதமாத்திரம் தருமேயல்லது முத்தியைத்தராது என்று வரையறுத்துக் கூறினமையால் சித்திகள் தவப்பகடியாட்டமாம் என்பதற்கு ஐயமில்லை. சித்திகள் உண்டு என்பதற்கு புராண வரலாறைத்தவிர யுக்தி அனுபவங்களுக்குப் பொருந்தவில்லை. இந்த உண்மையை

உணர்ந்து அன்றோ நமது தாயுமான சுவாமிகள் சித்தர்கணம் என்ற ஒரு தலைப்பை கொடுத்து சித்து விளையாட்டின் பெருமையை வானளாவப்புகழ்ந்தப்பின் அதன்பயனை நோக்கி மக்களை ஏமாற்றும் கபட நாடகமென்றும் அப்பிரயோ ஜனமானதென்றும் கருதி பாடிய பாடலை கீழேபாருங்கள் பராபரக் கண்ணி

"சித்திநெறி கேட்டல் செகமயக்கம்; சன்மமற
முத்திநெறி கேட்டன் முறைகாண்! பராபரமே."

மேலும் தாயுமான சுவாமி பாடல் மெய்கண்ட விருத்தி உரையில் பக்கம் 242 கவி "வானிலே பறக்க மண்ணிலே நுழைய வானவர் வணங்க மற்றொருவ ரூனிலே புகுதலவரவர் தங்களுன்னந்தனி நினைந்தது முரைக்கப் போனதொருயிரை எழுப்பவெண்சித்தி புகன்றதெலாங் கையில் வரினு, ஞானமே இல்லையாயினன்னவரை நாயினுங் கடையென நாடே" என்று கூறியிருப்பதால் சிஷ்யனே விரதம், தவம், யோகந்தியானம், முதலியவற்றால் சித்திகளை அடையலாம் என்ற மயக்கத்தை விட்டு உன் நிஜ சொருபத்தைப் பார்.

47 குருதேவா! இன்னும் ஓர் விண்ணப்பம் உண்டு கேட்டருள்வீராக ஆத்மாவைப் பிரமம் என்றறியும் ஞானமே முத்தியைக்கொடுக்கும் என்று முன்கூறினீர். அங்கனமாயின் சிலர் சித்திகளை வேண்டி அரும்பாடுபட்டார்கள். தங்கள் உடலையும் வாட்டினார்கள் மேற்கூறியப் பிரகாரம் சித்திகள் முத்தியைக் கொடுக்காது என்று அறிந்திருந்தும் ஞான வாசிட்டத்தில் வரும் பெண்மணிகளான சூடாலை முதலியவர்கள் சித்து நெறியை அடைய முயன்றார்கள் இதற்கு காரணம் யாதோ அருளிச்செய்வீர். அன்பனே கேட்பாய் பூமியில் உள்ளவர்கள் எவராயினும் பிராரத்த கர்மத்தை அனுபவித்துத்தான் தீர்க்கவேண்டும் என்று விதியிருப்பதால் அந்த சித்திகளை அடைய முயற்சிப்பது பிராரத்துவ கர்மம் என்று அறிவாய். இதன் உள்ளுரை: ஆண்டான் அடிமை என்னும் புத்தியினால் செய்யும் யாகாதி கர்மத்தினாலும் பிர்மா, விஷ்ணுவாதி தெய்வ உபாசனையாலும் இயமாதி அஷ்டாங்க யோகத்தினாலும் துவைதப்பிராந்தி அதிகரிக்குமே ஒழிய உண்மையான மோட்சம் கிட்டாது. த்வம்பத வாச்சியார்த்த-

மான ஸ்தூல சரீராதி ஒன்பதும் தற்பத வாச்சியார்த்தமான விராட்டாதி ஒன்பதும் நேதி செய்தபின் இலட்சியார்த்தமான கூடஸ்த பிரம்ம ஐக்கிய சொரூபமே தான் என்றறியும் அபரோக்ஷ ஞானமே மோட்சமாம் இது கர்மத்தால் வராது விசாரத்தால் வரும் என்க. தன்னை அறியும் பிரம்ம வித்தை கர்ம காண்ட பக்தி காண்டங்களில் இல்லை என்பதற்கு தத்வ-ராயர் பாடுதுறை 111-வது அதிகாரத்தில் "தன்னை அறிவது கர்ம காண்டத்தில் உண்டோ" என்றும் ஆத்மாவே பிரம்மம் என்பதற்கு ஞானவாசிட்டம் "பகவானுகும் இவ்வான்மா." என்றும் கூறியிருப்பதைக் காண்க.

48 குருதேவா! தாங்கள் அனேகம் சுருதிகளாலும் யுக்திகளாலும் என் நிஜ சொரூபத்தைவிட்டு மனம்நழுவாமல் திடமாய் அதில் அழுந்தவேண்டும் என்று கருதி எனக்கு ஏற்பட்ட சகல சந்தேகங்களுக்கும் பதில் அளித்த சற்குரு மூர்த்தியே வணக்கம். தங்கள் உபதேசத்தால் எனது அந்த கரணத்தில் உண்டான ஐவகை பிராந்திகளும் ஒழிந்து தெளிவடைந்தேன். ஆனாலும் சுத்தமான கண்ணாடியை மேலும், மேலும் துலக்கினுல் குற்றம் இல்லை அல்லவா? அதுபோல் சந்தேகங்களை நீக்க மேலும் மேலும் கேட்டுத்தெளிவது குற்றம் இல்லையல்லவா? பிறவித்துன்பம் நீக்கக்கூடிய தங்கள் வாக்கியாமிர்தத்தைக் கேட்க அடியேனுக்குத் தெகட்டவில்லை.

49 கருணையினுல் எனையாளும் ஐயனே குருவே வேத-மானது அசத்தியம் கூறுதல்லவா? அப்படியிருக்க எவரானு-லும் தாங்கள்செய்த கருமத்தின்பயன் அனுபவித்தால் அல்லது தீராது. என்ற வேத வசனமும் பல ஜன்மங்களுக்கு காரண-மான சஞ்சிதவினை எத்தனையானுலும் ஞானுக்கினியானது எரித்து பஸ்பமாக்கிவிடும். என்ற வேத வாக்கியமும் ஆகிய இவ்விரண்டில் எது உண்மை என்பதை அருளிச் செய்வீர். இதில் சஞ்சித கருமம் பிரார்த்துவமாக வந்து அனுபவித்துத் தீருமென்பதும், அது ஞானுக்கினியால் தீருமென்பதுமாகிய இரண்டில் யாதுறுதி என வினுவினதாம்.

50 அன்பனே உன் வினுவிற்கு இரண்டு கவியினுல் விடையளிக்கின்றேன். நான், நான் என்று எண்ணுவதற்கு

ஏதுவான அந்தக்கரண உபாதிகளுக்கு அளவில்லை. அதனால் ஜீவர்களுடைய பேதங்களுக்கும் அளவில்லை. அவரவர்கள் உடைய நானாவித செய்கைகளுக்கும் அளவில்லை: அதன் பலன்களுக்கும் அளவில்லை. ஆகையால் அந்த ஜீவர்களின் பக்குவம் நோக்கி நன்மையைக்கூறும் வேதங்கள் கர்மம், பக்தி, ஞானம் என்னும் மூன்று காண்டங்களால் பூர்வபக்ஷம் எனவும் சித்தாந்தப்பக்ஷம் எனவும் இரண்டு பக்ஷமாகக் கூறப்பட்டு உள்ளது. அதற்கு உதாரணம் யாதோவெனின் வாழை முதலிய மரங்கள் முன் புஷ்பங்களைத் தோற்றிவைத்து பின் காயாகி பழமாவதுபோல் பக்குவத்திற்கீடாக அவை போதிக்க பட்டுள்ளது.

51 அன்பனே பாவகருமங்கள் செய்தவர்கள் நரகத்தை அடைவது அவசியமானாலும் தான தருமமுதலிய பிராயசித்த கர்மத்தால் பாவம் நீங்கி நரகம்வராது என்று வேதம் கூறுவது பொய்யன்று. ஆனால் அனேக ஜன்மங்களைக் கொடுக்ககூடிய சஞ்சித கருமம் எத்தனையாலும் ஆத்ம ஞானமான அக்கினி அவற்றைப் பஸ்பமாக்கிவிடும். என்று கூறும் வேதத்தின் சித்தாந்த வசனத்தை நம்பினால் மோட்சம் உண்டாம். இதன் உள்ளுரை:- பாவ புண்ணியத்தின் பலன் அனுபவித்துத் தீரும் என்பது பூர்வபட்சம் அந்தப்பாவ புண்ணியங்களும் அதன் பயனாகிய பிறவித்துன்பங்களும் ஆத்மஞானத்தால் கெடும் என்பது சித்தாந்தப்பக்ஷம், பூர்வப்பட்சமான கர்ம காண்டப்படி கர்மம் செய்யச்செய்ய அதன்பலன் அனுபவிக்கத் தக்க பிறவிவரும். இது பீஜாங்குர நியாயமான அனவஸ்தா தோஷமுடையது. ஆகையால் இதை விட்டு சித்தாந்த பக்ஷமான ஞானகாண்டம் அதாவது உத்தரமீமாம் சையை நம்பினால் வீடுண்டு இதில் கர்மம், பக்தி ஆகிய இரண்டும் பிபிலிகாமார்க்கமான பிரவர்த்தி மார்க்கமெனவும் ஞான காண்டம் விகங்க (பக்ஷி) மார்க்கத்தைப் போன்ற நேதி வாக்கியமான நிவர்த்தி மார்க்கமெனவும் கொள்க. கருமத் தொடர்ச்சி பீஜாங்குர நியாயம் போன்றது என்பதற்கு கீதா. சாரம் 12வது கவி "தேகமெடாமுன் கருமச்செயல் வருமாறே தெனவே யேகமா மரமும் வித்து மெனுமுறை போலென்ற. வரோ" என்று கூறியிருப்பதால் அறிக.

52 குருதேவா! தாங்கள் என் சத்துவகுண மனத்தின் கண் சதாகுடியிருந்து அருள்கின்றீர். தாங்கள் உபதேசித்து அருளிய பிரமாத்தும ஐக்கிய ஞானமானது பல் பிறவியைக் கொடுப்பதற்கு காரணமான சஞ்சித கர்மத்தை அடியோடு சுட்டு சாம்பலாக்கும் என்று அருளினீர். அங்கனமாயின் இவ்வற்புத மகிமையுள்ள ஆத்மஞானத்தை மிகக் கற்றறிந்த புலவர் சிகாமணிகளாலும் குண தோஷங்களை அறிய சக்தி உள்ளவர்களாலும் அறிந்து கொள்ளாமல் கர்மங்களையே செய்து வந்தால் மோட்சம் உண்டு என்று சொல்லுகின்ற படுகுழியில் வீழ்ந்து அழிந்து போவதற்குக்காரணம் யாதோ அருளிச்செய்வீர். இவ்வாறே வைராக்கிய சதகமும் "சமய மாகிய படுகுழியிலேடிழிகின்றாய்" என்பதால் சகல கருமங் களும் படுகுழியென்பதாயிற்று.

53 அன்பனே உன் வினாவிற்கு விடையளிக்கின்றேன் கேட்பாய் முக்காலத்தும் அழிவில்லாத பரிபூரண பிரமத்தை உள்முக நாட்டமுடையவர்கள் அடைவார்கள் சதா வெளிமுக நாட்டமுடையவர்கள் அடையமாட்டார்கள். அதற்கு உதாரணம் யாதோவெனின் வழிநடப்பவர்கள் தாங்கள் செல்லும் மார்க்கத்தை பாராமல் பராக்காகப்பார்த்துக்கொண்டு போனால் மலர்ந்த கண்ணிருந்தாலும் குழியில் வீழ்வார்கள். அப்படிப்போல சொர்க்காதிலோக போகங்களை விரும்பி யக்ஞாதி கருமங்களைசெய்பவர்கள் வெளிமுகத்தினராய்பிறவிக் கடலில் உழல்வார்கள் மோட்சத்தை அடையமாட்டார்கள். இக்கவியில் உள்முகமென்பது வேதாந்த விசாரமுள்ள புத்தி எனினும் வெளிமுகமென்பது அஃதின்றிய புத்தியெனினும் ஒக்கும் என்க.

54 சர்வசங்க பரித்தியாகம் செய்த தேசி கோத்தமரே! இதிலும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் போகவில்லை. ஏனெனில் வெளிமுகங்கொண்டு காமிகளானோர்கள் பழிதரும் பிறவிக்கடலில் உழல்வார்கள் என்று கூறினீர் அங்கனமாயின் நன்மை, தீமைகளெல்லாம் அந்தரியாமியான ஈசுவரன் செய்விக்கும் செயலல்லவா? பிறப்பைக்கொடுப்பதும் கொடாமல் இருப்பதும் அவன் செயல் அங்கனமிருக்க இந்த

ஜீவர்கள் மேல் பழிகூறக்காரணம் யாதோ? அன்பனே சுருதி யுத்தி அனுபவமாகிய மூன்றும் தெரியாத மூடர்கள் அங்கனம் கூறுவார்கள். அது அவர்களின் பிராந்தியே காரணமாம். அதன் உண்மையை நீ கேட்பாயாக.

55 அன்பனே உன்வினவிற்கு எட்டு கவிகளால் விடை அளிக்கின்றேன். சுத்தப்பிரமமாய் விளங்கும் ஈசுவரனுடைய சிருஷ்டியும் ஜீவனுடைய சிருஷ்டியும் வெவ்வேருகும் உலகத்தில் எல்லோருக்கும் பொதுவான சர அசரப்பொருள்கள் அனைத்தும் ஈசுவர சிருஷ்டியெனப்படும். தேகாதிகளில் நான் என்னும் அகந்தையும் புத்திர தாராதிகள் எனது என்னும் மமதையும், ஆசையும், கோபமும் ஆகிய இவையனைத்தும் ஜீவனுடைய சிருஷ்டியாம் அது கடவுள் சிருஷ்டியன்று என்பதை நீ அறிவாய்.

56 அன்பனே முன்கூறிய இருவகை சிருஷ்டிகளில் ஈசுவர சிருஷ்டியானது. ஜீவர்களுக்கு உபகாரமாய் இருக்கும் ஜீவனுடைய சிருஷ்டியானது துன்பத்தைக்கொடுக்கும். அது எவ்வாறெனா வினவின் கேட்பாய். மும்மூர்த்திகளுடைய சிருஷ்டியான அன்னம் காய்கறி முதலிய உணவுகளை உட்கொண்டு ஆத்ம விசாரம் செய்து வீட்டின்பத்தை அடைய அது காரணமாய் இருக்கிறது. ஈசுவர சிருஷ்டியான உணவு பொருள்கள் நஷ்டமாய்ப்போனல் ஒருவரும் சிரவணுதிகளைக் கேட்டு முத்தியடைய முடியாது அல்லவா? ஆனல் ஜீவனுடைய சிருஷ்டியான ஆசை கோபமாதிகள் நஷ்டமானல் பந்தத்துக்கு ஏதுவான பிறவித் துன்பம் தீரும்.

57 குருதேவா! ஈசுவர சிருடியான பஞ்சபூத பௌதீக உலகம் இப்போதே அழிந்துபோனல் எல்லோரும் முத்தி அடையக்கூடாதோ? அன்பனே பிரளய காலத்தில் ஈசுவர சிருஷ்ட்டியான பூத பௌதீகங்கள் லயமாய்ப் போனபின் எவராவது பிறவித்துன்பம் நீங்கி முத்தியடைந்தார்களா? இல்லை. ஆகையால் இப்பொழுதே ஈசுவர சிருஷ்டியான கால தேச தேகாதிகள் இருக்கும் இக்கணத்தில் உத்தமர்கள் நல்ல ஆத்ம விசாரம் செய்து ஜீவ சிருஷ்டியான ஆசை,

கோபமாதிகளைக்களைந்து விவேகத்தால் ஞானமுத்தர்கள் ஆனூர் பலர். ஆகையால் காமாதிகள் ஜீவர்களின் செயலன்றி ஈசுவர செயலன்று. எனவே நீயும் ஈ சு வ ர சிருஷ்டியான உணவாதிகளை உட்கொண்டு ஜீவசிருஷ்டியான காமாதிகளை ஒழித்து ஆத்ம விசாரம் செய்து மோட்சமடையக்கடவாய்.

58 அன்பனே! ஜீவேஸ்வரர்களைப்பற்றி மு ண் ட க உபநிஷத்தில் இவ்வாறு கூறியிருக்கிறது. அதை உதாரணத்துடன் விளக்குகின்றேன் கேட்பாய். ஓர் அ ர ச ம ர த் தில் இரண்டு பறவைகள் இருக்கின்றன அதில்ஒன்று அம்மரத்தின் கனிகளை நன்று, நன்று எனப்புசிக்கின்றது. ம ற் றொ ரு பறவை அதைப்புசிக்காமல் சாட்சி மாத்திரமாய்ப் பார்த்துக் கொண்டு இருக்கிறது. இதுபோல் ஒரு சரீரத்தில் ஜீவன் ஈசுவரன் ஆகிய இரண்டு பறவைகள் இருக்கின்றன. அதில் ஜீவன் போக போக்கியங்களைப் புசிக்கின்றான். ஈ சு வ ர ன் ஒன்றும் புசிக்காமல் சாட்சி மாத்திரமாய் இ ரு க் கி ன் று ன். இவ்வாறு வியங்கியப் பொருளாக அதாவது குறிப்புப்பொருளாக வைத்து வேதம் ஜீவனையும் ஈசுவரனையும் வகுத்துக் கூறி இருப்பதை நீ அறிவாயாக. இதன் உள்ளுரை: இதில் ஜீவ ஈசுவரர்கள் என்று பொதுப்படகூறியிருப்பது கிரமசிருஷ்டியை அனுசரித்துக் கூறியதாம். அது எங்கனமெனின் ஜீவனுடைய வாஸ்தவ சொரூபமான கூடஸ்த சேதனத்தின் சாயையெனப்படும் ஆபாசன் கர்மத்தைச் செய்கின்றது. வியாபக சேதனத்தின் ஆபாச அம்சமான அந்தரியாமி எனப்படும் ஈசுவரன் பலனைக்கொடுக்கின்றது. இவ்விரண்டிலுமுள்ள சேதனும்சத்தில் எவ்வித கர்ம பல சம்பந்தமும் இல்லை. ஏன் எனில் சேதனம் இரண்டிடங்களிலும் அசங்கமாய் அதாவது பற்றற்றதாகி ஏகரூபமாகி இருக்கின்றது. இதில் ஜீவ சேதனம் வேறு ஈசுவர சேதனம் வேறு என்று சொல்வதற்கிடமில்லை. இனி ஈசுவர சப்தத்தின் பொருள் யாதோவெனின் பு த் தி யி ல் பிரதிபிம் பித்த பிரதிபிம்பமான சிதாபாசனே ஜீவனெனப்படும் அதற்கு பிம்பமாய் சாட்சி சேதனமான கூடஸ்தனே ஈசுவரன் எனப்படும் இங்கனம் பிம்ப பிரதிபிம்ப பாவமாகி தோன்றுவதற்கு அந்தக்கரணமே இடமாம் இவ்வாறு விளக்கிக்கூறியது கிரம சிருஷ்டியை அடிப்படையாகக் கொண்டு கூறியதாகக்

கொள்ளவேண்டும். கிரம சிருஷ்ட்டி கற்பனை என்பதற்கு தத்வ விளக்கப்படலம் ஈற்றில் ஒன்பது திருஷ்டாந்தங்களைக் காண்பித்தமையால் இந்நூலாசிரியருக்கு அது உடன் பாடன்று பின் யாதுடன்பாடோவெனின் கூறுதும் விசார சாகரம் ஆறுந்தரங்கத்தில்"சகலநாம ரூபங்களும் பிரமத்திற்கு வேறுகாமல் பிரம்ம ரூபமாகவே இருக்கின்றன. இந்த அர்த்தத்தைப் போதிப்பதற்காகவே கிரம சிருஷ்டி சொல்லப்பட்டது. சிருஷ்ட்டி சொல்வதனால் வேறு பிரயோசனமில்லை ஆகையால் சிருஷ்ட்டிக்கு கிரமம் அதாவது முன்காரணமில்லை எல்லாம் விவர்த்தமாயிருக்கின்றது. ஏனெனில் சகலவித காண்பான், காட்சி, காணப்படுபொருள் 'ஆகியவைகளும் ஞானமும் ஒரே காலத்தில் தோன்றுகின்றன. இவைகளுக்கு காரிய காரணபாவம் சொல்லக்கூடாது" என்று கூறியிருப்பதே உடன்பாடாம். மேலும் ஜடப்பொருள்களுக்கு சுகதுக்கானுபவம் கூடாது. சித்ரூபமாகிய ஆத்மாவே சகல போக போக்கியமும் அனுபவிக்கின்றது. என்று கூறுவதே உத்தம சித்தாந்தமாம். இதை ஆத்ம புராணம் 45-வது பக்கத்தில் "ஜடவஸ்து ஜடத்தின் சுக சாதனமன்று ஆகையால் போகத்தின் ஆஸ்ரேய வடி போக்தாவும் ஆத்மாவேயாம். போக ரூபக்கிரியையின் கர்த்தாவும் ஆத்மாவேயாம்" என்றும் ஞான வாசிட்டம் விர சேகர ஞான தேசிக சுவாமிகள் உரையில் 802 பக்கம் "விஷயகார விருத்தியில் சுயம் வெளியாம் ஆனந்தம் விஷய கோடியில் இலது ஜடத்தன்மை வழக்காதலின் கர்த்துரு கரண விர்த்தி கோடியிலும் இலதாம். முடிவாக சாட்சி கோடியிலே உளதாம்" என்றும் கூறியிருப்பதால் பிரமரூபமான ஆத்மாவே சகல போக்த்தையும் அனுபவிக்கின்றது என்பதாயிற்று. மேலும் ஆத்ம புராணம் 788ம் பக்கத்தில் "ஹே மைத்திரேயி எனக்கு உன் சரீரத்தின் கண் உண்டாம் பிரியமானது நின் சரீரத்தின் பொருட்டு அன்றும் மற்றே எனது ஆத்ம சுகத்தின் பொருட்டேயாம். அவ்வாறே நினக்கும் என் சரீரத்தின் கண்ணே உண்டாம் பிரியமானதும் என் சுகத்தின் பொருட்டு அன்றும் மற்றே நினது ஆத்ம சுகத்தின் பொருட்டேயாம்" என்றும் விசாரசாகரம் 4-ந் தரங்கத்தில் "ஹே சிஷ்யனே ஆனந்த சொரூபமே ஆத்மா வென்றறி விஷய சம்பந்தத்தால் அது வெளிப்படுகின்றது"

என்றும் சசிவர்ண போதம் 45-வது கவியின் செங்கல்வராய முதலியார் உரையில் "ஆத்மா பற்றற்றது என்று வேதம் கூறினும் தொழிற்படும் தன்மை சித்துப் பொருளில் நிகழுமே அன்றி சடப்பொருளில் நிகழாது" என்றும் இதற்கு கோ. வ. உரையில் "உடம்பினது ஒவ்வொரு தொழிலும் ஆத்மா தொழில் செய்கின்ற போதே நிகழ்கின்றது. அது வாளா இருந்தால் அதனிடத்தில் ஒரு தொழிலும் நிகழ்வதில்லை." என்றும் கூறியிருப்பதால் ஆத்மா சகலமும் அனுபவித்தும் அனுபவியாதவன் எனக்கொள்ளுதல் வேண்டும். இந்த உண்மை அறியாது ஆபாச வாதம்கூறி சேதன அசேதன விசாரமில்லாமல் ஆத்மா நிர்விகாரன் அதற்கு போக போக்கியங்களில்லை அந்த ஆத்மாவே தானாக அறிந்த ஞானிகளுக்கும் போக போக்கியமில்லை என்று கூறி விவகார ஞானிகளை எல்லாம் இகழ்வரராயினர் பாவம்! நிர்விகாரன் என்பது எல்லாம் அனுபவித்தும் நிர்விகாரனா? அல்லது அனுபவிக்காமல் நிர்விகாரனா? இதில் ஒன்றும் அனுபவிக்காதவன் நிர்விகாரன் எனின் அது ஜடமேயாம் எல்லாம் அனுபவித்தும் நிர்விகாரன் எனின் அப்போது அது சித்தாம். அதுவே ஆத்மாவாம். எனவே இந்நூலாசிரியர் ஆபாச வாதம் கூறியது பூர்வபட்சமாம் ஜீவ கூடஸ்தர்கள் சேதனும் சத்தால் ஒன்று என்பதே சித்தாந்த பட்சமாம் என அறிக அன்பனே.

59 உண்மையான ஆத்ம ஞானம் இவ்வாறு இருந்த போதிலும் ஜீவர்கள் மனம்போன போக்கில் போனால் துன்பம் உண்டாகும் ஆகையால் இந்த ஜீவனால் வரும் காமமுதலிய ஆறுகுணங்களும் இந்த ஜீவனுடைய செயலாகக் கருதி அவைகளை நீக்கிவிட முயற்சி செய்யவேண்டும் அங்கனம் முயற்சிசெய்யாது இந்தக்காமாதிகளும் ஈசுவரனுடைய செயல் தான் என்று சொல்லுபவர்கள் அதோகதி அடைவார்கள். இந்த ஜீவனால் விளைந்த காமாதி ஆறு சத்துருக்களும் இந்த ஜீவனுடைய அறியாமையால் விளைந்ததல்லாமல் அந்த ஈசுவரனால் வருவதன்று என்னும் விவேகிகள் தான் மோட்சம் அடைவார்கள். இதன் உள்ளுரை :- காமாதி இச்சைகளும், ஜீவனும் அனாதியாக இருந்த போதிலும் ஆனந்தமே சொரூப குணமாகப் பெற்றுள்ள ஆத்மாவில் அவை கற்பித குணமாக

கொள்க. இங்கனமன்றி காமாதிகள் ஆத்மாவின் சொரூப குணமாக கூறுபவர்கள் அதோகதி அடைவார்கள் என்பதே இக்கவியின் திரண்டபொருளாம். ஈசுவரன் என்பது ஆத்மாவின் பரியாய நாமங்களில் ஒன்று என அறிக. இக் காரணம் பற்றி அன்ரு "அனைத்துமாயல்லாத அறிவுருவை அகத்துள் வைப்பாம்" என்ருர் தத்துவராயர் மேலும் காமாதி இச்சைகளும் ஜீவனும் அனுதி என்றெப்பிய பின் அதற்கு நாசம் கூறுதல் அடாது. அனுதி வஸ்துக்கள் எப்பொழுதும் உற்பத்தி நாசமின்றி தோன்றிக்கொண்டேயிருக்கும் இக்காரணத்தால் அவை அனுபவத்தோடு கூடிய தோற்றமாய் இருந்த போதிலும் தன் நிஜ சொரூபத்தை நோக்க அவை கற்பித குணங்களாம். பண்டைக்கால ரிஷி முனிவர்கள் இடத்திலும் தற்கால அறிஞர்களிடத்திலும் காம கோபாதிகள் இருந்ததும், இருப்பதும் உலகப்பிரசித்தமாம் அங்கனமிருக்க இந்நூலாசிரியர் "ஜீவகாரிய மோகம் நாசமாக்கி விவேகத்தின் உயிரோடு ஞான முத்தரானுர்கள்" என்று இந்தபடலம் 57-வது கவியில் கூறியது பூர்வ பக்ஷமேயாம். அதன் சித்தாந்தபக்ஷம் யாதோவெனின் இந்தப்படலம் 58-வது கவியின் உள்ளுரையில் காண்பித்த மேற்கோளை இங்கும் கொள்ளத்தக்கதாம். ஈசுவரன் என்பது ஆத்மாவின் பரியாய நாமம் என்பதற்கு கீதாசாரம் 73-வது கவி "பிரமமென்று மீசனென்றும் பெருகு பலசிவனென்று முரை மயக்கமல தான்மா வொருவனே யென்றவரோ. என்று கூறியிருப்பதால் அறிக.

60 குருதேவா! கடவுள் எல்லோருக்கும் பொதுவானுல் சில ஜீவர்கள் சுகம் அடையும்படியும், சில ஜீவர்கள் துக்கம் அடையும்படியாகவும் செய்விப்பதற்குக்காரணம் யாதோ அருள்வீர்? அன்பனே கேட்பாய் நன்மை செய்யும் குழந்தைகளிடத்தில் கருணையும், தீமை செய்யும் குழந்தைகளிடத்தில் கோபமும் காட்டும் தந்தையைப்போல பரோபகாரம் செய்பவர்களிடத்தில் சந்தோஷமும் பிறர்க்கு துன்பம் செய்பவரிடத்தில் கோபமுண்டாவது ஈசுவரனுக்கு இயற்கையாம். சாஸ்திரங்களில் விதித்துள்ள சன்மார்க்கத்தில் செல்பவர்களுக்கு நன்மையும் நிஷேத மார்க்கமான துன்மார்க்கத்தில் செல்பவர்களுக்கு தீமையும் உண்டாகும் என்பதாம்.

61 அன்பனே மேற்கூறிய நன்மை, தீமைகளுக்கு உதாரணம் காட்டுகின்றேன் காண்பாய் குடும்பமாகிய விலங்கை தகர்த்து எறிந்த சிஷ்யனே கற்பக மரத்தைச்சார்ந்தவர்களுக்கு வறுமையும், நெருப்பை அடைந்தவர்களுக்கு குளிர்ச்சியும், தண்ணீரை அடைந்தவர்களுக்கு தாகமும்தீரும் அதுபோல் ஈசுவரனும் தன்னை அடைந்தவர்களுக்கு அருள் செய்வார் அடையாதவர்களுக்கு அருள் செய்யமாட்டார். இங்கனம் அடையாத குற்றம் எவர் குற்றமாகும் என்று நீ ஆராய்ந்து அறியக்கடவாய்.

62 அன்பனே ஒரு உபாயத்தைச் சொல்லுகின்றேன் கேட்பாய் மக்கள் நன்மையடையும் பொருட்டு ஈசுவரன் கொடுத்த ஞானகாண்ட நூலில் கூறப்பட்டுள்ள நல்வழி நடந்து அந்த ஞானகாண்டத்தின் பொருள் அறிவதற்காக ஞானிகள் பின்சென்று சன்மார்க்கவழி நடந்து தீயகுணங்களை களைந்து ஆத்ம, அனாத்ம விவேகமுடையவர்களாகி ஜக ஜீவபர கற்பனைகளை விடுத்து ஆத்மஞானத்தை அடைந்தவர்களுடைய பிறவித்துன்பம் தீரும். இதுவே வேதமுடிவாகும்.

63 குருதேவா! ஒருவன் மேற்கூறிய ஆத்மஞானத்தை எப்படி இருந்தால் அடையலாம்? அன்பனே கேட்பாய் சதா காலமும் விசாரம் செய்தால் அதை அடையலாம் எதைப்பற்றி விசாரிப்பது எனின் மனம் முதலிய இந்த மூன்று சரீரத்தில் நான் நான் என்று சொல்லுவது எது அதற்குப் பொருளான ஆன்மா எது? சித்தெனப்படுவது எது? சடம் எனப்படுவது எது? இரண்டும் சேர்ந்து தத்தாய பிண்டம் போல் அதாவது இரும்பில் வியாபித்த நெருப்புபோல் ஒன்றாகப் பொருந்தி இருந்து தோற்றிவைக்கும் பந்தம் எது? மோட்சம் எனப்படுவதுயாது என்று எப்போதும் ஆராய்ந்து அறிவதே விசாரமாகும். இதன் உள்ளுரை: வேதாந்த வாக்கியங்களின் உள்பொருளான பிரமமே தன் நிஜ சொரூபமாக நிச்சயம் செய்வது சிரவணமெனப்படும். கூடஸ்த பிரமங்களின் அபேதத்தை நிச்சயித்தலும் ஜீவேசுவர்களை அத்தியாசம் என விடுதலும், மனனமெனப்படும். அனாத்மாகார விருத்தியைத் தள்ளி அகம் பிரம்மாகார விருத்தியின் ஸ்திதி நிதித்யாசன

(தெளிதல்) எனப்படும். இதற்கே சமாதியென்றுங் கூறுவர் இந்த கேட்டல் சிந்தித்த லாதிகளைப்பற்றித்தான் விசாரிக்க வேண்டும். மற்றைய விசாரமெல்லாம் பந்தத்திற்கேதுவாகும் ஜீ வே ஸ் வ ர் க ளை அத்தியாசமென்பதற்கு கை வ ல் ய ம் ஸ்ரீபொன்னம்பல சுவாமிகள் உரையின் 166-வது பக்கத்தில் "அந்தமாம் ஜீவன் ஈசன்" என்ற செய்யுளுக்கு உரையில் "பிரம்ம வித்தையினல் நாசமாகும் ஜீவ ஈசுவரர்கள்" என்று கூறியிருப்பதே போதுமான சான்று. இங்கே ஈசுவரனுக்கு நாசம் கூறியது மாயோபாதியோடு கூடிய ஈசுவரனை எனக் கொள்க. ஈசுவர சேதனத்திற்கு நாசம் கூறக்கூடாது.

64 குருதேவா முன் கவியில் சித்து ச ட வி சா ர மே ஞானத்தைத்தருமே ஒழிய மற்று எந்த வைதீக க ரு ம மு ம் ஞானத்தைக் கொடுக்காது என்று அருளிச் செய்தீர் அங்கனமாயின் முற்பிறப்புக்களில் செய்த புண்ணிய கருமத்தின்பலன் ஞானத்தைக் கொடுக்காதோ? சித்து சடவிசாரம் ஏன் செய்ய வேண்டும். இந்த ஐயத்தை நீக்கி அருள்வீராக. அன்பனே உன் வினவிற்கு விடை பதினெரு கவியால் அளிக்கின்றேன் புண்ணிய கருமத்தை அதன் பலனை விரும்பாது பிரம்மாற்பணமாக செய்தால் மனதில் உண்டாகும் காம குரோதாதிகள் நீங்கி நிராசை முதலிய சற்குணங்கள் உண்டாகும். அதன் பின்னர் சித்து சட விசாரம் செய்து ஆத்ம ஞானம் அடைய வழிதோன்றும் என்று அறிவாய்.

65 புண்ணிய குருமூர்த்தி பக்தியும், வைராக்கியமும் சொர்க்கலோகாதி பதவிகளும் எண்வகைச்சித்திகளும் தபசும் நிஷ்டையும் தியானமும் இயம நியமாதி அஷ்டாங்க யோகமும் சாலோகமாதி பதவி முத்திகளும் ஆகிய இவைகளைத்தரக் கூடிய அதிசாமர்த்தியமுள்ள விசித்திர கருமங்கள் தன்னைப் பிரமமென்று அறியவொட்டாமல் மறைக்கின்ற அறியாமையை நீக்கி ஆத்மாவே பிரமம் என்கின்ற ஞானத்தைத் தராதோ? சித்து சடவிசாரம் செய்துதான் ஞா ன த் தை அடைய வேண்டுமோ? இதை அருளிச்செய்வீராக. இதன் உள்ளுரை: புண்ணிய கருமத்தால் வரும் சாலோக மாதிப் ப த வி க ள் கற்பிதம் என்பதற்கு பிரமாணம் அனுமானம் "கைலாசாதிப்

பதவிகள் அனித்தியம் என்பது பிரதிக்ஞை ஆண்டுளோர்க்கு திருசியமாயிருத்தலின் என்பது ஏது யாது யாது திருசியமோ அது அது கடம்போல் அனித்தியம் என்பது திருஷ்டாந்தம். இதனால் சாலோகமாதி பதவி முத்திகள் அ னி த் தி ய மா ம் மேலும் கைலாசாதி பதவிகள் அ னி த் தி ய ம் என்பதற்குப் சிவஞான வள்ளலார் சாஸ்திரம் 275-வது பக்கம் "கைலாசம் முதலிய ஸ்தானம் ஒரு காலத்தில் தோன்றி ஒரு காலத்தில் அழியும்" என்றுகூறியிருக்கிறது ஆனால் கைலாசம் என்பதற்கு பொருள் யாதோவெனின் சீதாராம ஆஞ்சனேய சம்வாதம் 10-ம் பக்கம் சுலோகம் " கே ளி னு ம் ஆனந்தானும் சமூக கைலந்தேன." இதன் பொருள்: நாம் அனுபவிக்கும் சகலவித ஆனந்தங்களின் கூட்டம் அதாவது சமஷ்டியே கைலாசமாம் ஞானனுபவ ஸ்திதியே வைகுண்டமெனப்படும்" என்று கூறி இருப்பதால் பதவி ஸ்தானங்கள் அனித்தியமும் பிரமானந்தம் நித்தியமுமாம்.

66 அன்பனே உன்னுடைய வினவிற்கு ஒரு உதாரணத்தால் விடையளிக்கின்றேன். மா று வே ட ம் பூ ண் டு ள் ள ஒருவனது உண்மைக்குணம் அறியவேண்டின் அவர்களிடத்தில் மறைந்திருபவைகளான சுபாவங்கள், சீலங்கள், குணங்கள், குறிகள் ஆகிய இவைகளை ஆராய்ந்துபார்த்து இவர்கள் நல்லவர்கள் என்று அறியாமல் ஓடியும், குதித்தும், தலைகீழாய் நின்றும் உயர் கம்பத்தேறி ஆடியும் இவ்வாறான பல கருமங்கள் செய்தாலும் அவர்களுடைய உண்மையான சுபாவகுணம் அறிய முடியாதல்லவா?

67. அன்பனே முன்சொன்ன திருஷ்டாந்தத்தைப்போல் தாஷ்டாந்தத்தில் இருபத்தெட்டு தத்துவங்களோடு கூடியிருக்கின்ற அந்தபிரமத்தை விள்க்கிக்காட்ட வேதமானது! சொருப லக்ஷணை தடத்த லட்சணை, அதத்வா விருத்தி ல ட் ச ணை ஆகிய மூன்று லக்ஷணைகளால் அ தி கா ரி புருஷர்களுக்கு அறிவிக்கின்றது. இவ்வாறு வேதம் கூ றி ய ஞானமானது இந்தப்படலம் 63-வது க வி யி ல் கூறியதுபோல் சித்த சட விசாரத்தால் வருமன்றி உபநிஷத்துக்கள் படித்தாலும் ஏனைய சுருதி நூல் கற்றாலும் 32 தா ன தருமங்களைச் செய்தாலும்

தவங்கள், மந்திரங்கள் அந்தந்த வருணாசிரமத்திற்குரிய ஆசாரங்கள், யாகங்கள் ஆகிய இவைகளில் எது செய்தாலும் இருபத்தெட்டு தத்துவமான உடம்பைத்தான் என்று அறியலாமேயொழிய 29-வது தத்துவமான ஆத்மாவாகிய கூடஸ்தனே நான் என்று அறியும் ஞானம் இவைகளால் வராது. இதன் உள்ளுரை: அனாத்மாவை நேதி செய்து ஆத்மாவை அறிவிப்பது அதத்வா விருத்தி லக்ஷணை எனப்படும். ஒரு மரத்தின் கிளையின் வாயிலாக மூன்றாம் பிறைச்சந்திரனை அறிவிப்பது போல் பஞ்ச பூதாதி ஜகத்திற்கு உபாதான நிமித்த காரணமாயிருப்பது ஆத்மாவான பிரமமேயென அறிவிப்பது தடத்த லக்ஷணையாம். உஷ்ணப்பிரகாசமே சூரியன் என்பதுபோல் சத்து சித்து ஆனந்தம் நித்தியம் பூரணம் ஆகிய ஐந்தும் ஆத்மாவின் சொரூபகுணம் என அறிவிப்பதே சொரூப லக்ஷணையாம். இந்த லட்சணங்கள் சித்து சடவிசாரத்தால் வருமன்றி ஏனைய உபாயத்தால் வாராதென்க மந்திரத்தால் வாரா என்பதற்கு மேற்கோள் சிவஞான வள்ளலார் சாத்திரம் 289-வது பக்கத்தில் "சப்தகோடி மகா மந்திரம் சித்தவிப்பிரம காரணம்" என்று கூறியிருப்பதால் அறிக. யாகத்தால் வாராதென்பதற்கு மேற்கோள் திருக்குறள் "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்துண்ணாமை நன்று" என்றும். சுவாமி ராம தீர்த்தா M. A. என்பவருடைய சொற்பொழிவான ராமதீர்த்த விஜயம் 406வது பக்கத்தில் 'ஆயிரம் யாகங்களைச் செய்வதைப் பார்க்கிலும் ஒரு ஏழை மனிதனுக்கு ஒரு ரொட்டித்துண்டு கொடுப்பது மேலானதாகும் என்று கூறியிருப்பதால் அறிக. 28 தத்துவத்தோடு கூடியிருப்பதே பிரமம் என்பதற்கு மேற்கோள் பிரம்மகீதை கைவல்ய உபநிஷத்தில் "மாலுரு நனவு, கனவு உறக்கங்கள் வடிவமாய் நிகழ்ந்துள்ள இறைக்கு' இதன் பொருள் "ஆவரணம் அல்லது மறைப்பில்லாத பிரம்ம சொரூபமான ஞானிகள் இருபத்தெட்டு தத்துவமான மூன்று அவஸ்தை வடிவமாய் இருக்கிறார்கள் என்று கூறியிருப்பதால் அறிக. குறை-நிறை பொருள்

68 குருதேவா! ஒரு கண்ணாடியில் உள்ள அழுக்குப் போக வேண்டுமானால் துடைத்தல் முதலிய கையின்

தொழிலால் அது போகுமே ஒழிய புத்தியினுல் செய்யும் விசாரத்தால் எப்படி அந்த அழுக்குப்போகும். அங்கனம் போக்கினவர்கள் ஒருவரும் இலரே அதுபோல் களங்கமான அஞ்ஞானமும் சற்கருமத்தால் நீக்கப்படாமல் அந்தக்கரணத்தால் அதாவது தேகாதிப்பிரபஞ்சம் மித்தையென அறியும் விசார ஞானத்தால் எப்படி அந்த அஞ்ஞானம் நீங்கும் இதை அருளிச் செய்வீராக.

69 அன்பனே முன்கவியில் நீ எடுத்துக் காண்பித்த உதாரணம் பொருத்தமற்றது. வேறு பொருத்தமான உதாரணத்தைக்காண்பிக்கின்றேன் அதாவது செப்புக் கண்ணுடியில் உண்டாம் களிம்பாகிய அழுக்கு நீக்க கையினுல் தேய்த்தல் முதலிய தொழில்கள் வேண்டும் அதாவது கருமம் வேண்டும். ஆனுல் கற்பளிங்கினில் தோன்றும் கறுநிறம் அதனுடன் இயற்கையாக உளதன்று. பின் எங்கனமெனின் தனக்கெனசொரூபம் ஒன்றின்றிதோற்றமாத்திரமாகவுடையது அந்தக்கருநிறம் செப்புக்கண்ணுடியில் தோன்றும் களிம்பு நீக்க தேய்த்தலாதி தொழில் வேண்டும் என்பது உண்மை. ஆனுல் கற்பளிங்கினில் கறுநிறம் கற்பனைத் தோற்றம் என அறிவதற்கு மனதின் விசாரமே போதும் சாதனத்தொழில் தேவையில்லை. இதன் உள்ளுரை: சற்கருமத்தால் அஞ்ஞானம் நீங்காது சித்து சட விசாரமே அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தைக் கொடுக்கும் என்பதாயிற்று இதில் "தர்ப்பணத்தினிற களிம்பு வாஸ்தவமலஞ் சகசமாதலின் மைந்தா" என்று கூறியிருப்பதில் தர்ப்பணம் என்பது தாமிரத்தகட்டில் பொருத்திய கண்ணுடியே செம்புக்கண்ணுடி எனக்கொள்க. அதற்கு களிம்பு சகசம் அதாவது இயற்கையாகவேயுள்ளது. அதைநீக்க சாதன தொழில் வேண்டும். ஆனுல் ஆத்மாவில் தோன்றும் அஞ்ஞானம் சகஜமாக இல்லாமல் தோற்ற மாத்திர மாகவுடையது அதைநீக்க விசார ஞானமே போதுமானது என்பதாம்.

70 அன்பனே முன் கூறிய ஸ்படிகக்கல்லில் கறுநிறம் கற்பனையாகத்தோன்றும் என்று நான் சொன்ன திருஷ்டாந்தத்தைப்போல் தாஷ்டாந்தத்திலும் சத்து சித்து, ஆனந்தம்,

நித்தியம் பூரணமான ஐந்திலக்கியமும் சொரூபகுணமாகப் பெற்றுள்ள ஆத்மாவான பிரமத்தில் அசத்து, சடம், துக்கம், அநித்தியம், கண்டம் ஆகியஐந்தும் கற்பனையாகத்தோன்றும் இது மாயா கற்பிதம் அல்லாமல் உண்மையான பிரமத்தில் உளதன்று இங்கனம் அறியாமல் சற்கருமம் செயயச்செய்ய அஞ்ஞானம் அதிகரிக்குமே ஒழிய நான் பிரமம் என்று அறியும் முத்தி வராது. அது எங்கனமெனின் ஐப்பசிமாத அமாவாசை இருளில் கார்மேகமும் சூழ்ந்துகொண்டால் கூரிருள் அதிகரிப்பது போல் கருமம் செய்யச்செய்ய அஞ்ஞானம் அபிவிருத்தியடைந்து அதன் பயனாக பிறவித்துன்பம்வருமேயொழிய பிறவித்துன்பம்தீர்ந்து முத்திவராது ஆகையால் பிரபல சுருதி வாக்கியமான சித்து சட விசார ஞானமே அஞ்ஞானத்தைச் சுட்டு நீறாக்கும், நெருப்பாகும், அதுவே முத்தியுமாகும் இதன் உள்ளுரை: ஆத்மாவினிடத்தில் நான், எனது என்பதற்கிடமான தேகாதிப்பிரபஞ்சம் கற்பித தோற்றம் என்பதற்கு ஸ்படிகக்கல் உபமானம் காட்டினர். ஸ்படிகத்தில் கருநிறம் வெறுந்தோற்றமே ஒழிய அதற்கு ஸ்படிகத்தைவிட வேறு தனிப்பொருள் இன்று அங்கனமே சச்சிதானந்த சொரூபமான ஆத்மாவில் நான் தேகமுடையவனென்றும் நான் துக்கி என்றும், நான் அஞ்ஞானியென்றும், நான் ஜனன மரணமுடையவனென்றும் தோன்றும் தோற்றமெல்லாம் மேற்கூரிய ஸ்படிகத்தில் கருநிறம் போல் அத்தியாசமே அல்லாமல் வாஸ்தவமன்றாம். இதில் கருமம் செய்யச்செய்ய அஞ்ஞானம் அதிகரிக்கும் என்பதற்கு வாசுதேவ மனனத்தின் அஞ்ஞான சொரூப நிரூபக அத்தியாயத்தில் அதாவது 109-வது பக்கத்தில் காணலாம்.

71 அன்பனே ஒருவன் தன் வீட்டுக்குள் ஒரு பண்டம் வைத்தபின் அதை மறந்துவிட்டு அதைத்திரும்பவும் பெற வேண்டுமானல் என்ன செய்யலாம் ஒரு நூறாண்டு காலம் அழுதாலும், அல்லது காசிக்குப்போனாலும், அல்லது ராமேஸ்வரத்திற்குப் போனாலும் அந்தப்பண்டம் கிடைக்கமாட்டாது அல்லவா? அந்தப்பண்டம் வைத்த இடத்தை நினைந்து உணர்ந்த பின் அகப்படும் அதுபோல் இந்த ஆத்மாவும்

துன்பத்திற்குக் காரணமான தன்னுடைய மறப்பை விசார ஞானத்தால் கெடுத்து தான் பேரறிவு சொரூபன் என்று தன்னறிவினுல் நிச்சயம் செய்வதை விட்டு பெரிய சற் கருமங்கள் நூறுயுக கால பரியந்தம் செய்தாலும் அந்த ஆத்மாவை அறிந்து உய்யமுடியுமோ? முடியாது. இதன் உள்ளுரை: முன்வைத்த பொருள் வைத்தயிடத்தை ஞாபகப்படுத்திப்பார்த்தால் வெளிப்படுமே ஒழிய மற்று எத்தொழிலாலும் வெளிப்படாது அதுபோல் சித்து சட விசார ஞானத்தால் அஞ்ஞானம் நீங்கி எப்பொழுதும் சொரூப சுபாவமாயுள்ள ஞானம் வெளிப்படுமே ஒழிய தீர்த்த யாத்திரை, ஆலய வழிபாடு யக்ஞயாகாதி முதலிய வெளித்தொழில்களும், ஜபதப யோக ஆசன பிராணயாம முதலிய உள்தொழில்களும் பல கற்ப கோடி காலம்வரைச்செய்தாலும் அதன்பலன் அனுபவிக்க பிறவி வருமே ஒழிய முத்தி வராது. ஏன் எனில் கருமத்தின் பயன் அநித்தியம் அதற்குஉதாரணம் யாதோவெனின் கிருஷியாதி தொழிலின்(கருமம்)பயன் தானியப்பேறு அது அநித்தியமாம் அதுபோல் சற்கருமத்தால் விளைவது அநித்திய பலமான பிறவித்துன்பமேயாம். நித்தியமான ஞானத்தைக்கொடுக்கும் சக்தி அதற்கு இல்லை கருமத்தால் பிறவித்துன்பம் தீராது என்பதற்கு உதாரணம் பிரமகீதை "மையலொன்றற இவ்வறிவினை அறியின் மானிடன் முத்தனும் அன்றி, துய்ய கருமத்தால் மைந்தரால் மற்றொரு பொருளினுல் உற்பவம் துடையான்" என்று கூறியிருப்பதால் காணலாம். மேலும் கருமத்தால் முத்தியில்லை என்பதற்கு மேற்கோள் ஞான வாசிட்டம் 'தவமகந்தீர்த்தஞ்சேவை யருச்சனை தானமாதி யவ மயக் கத்தானீனுள் விலங்கு போலவத்தவர் வாழ்வர் பவமுறுமிவற்றை விட்டு பரிசுத்த பரம போதங் கவரறப்பற்றி யெல்லாக் காதலு நீக்கி நிற்பாய்." மேல் காண்பித்த சற்பிரமானங்களின் தாற்பரியத்தை அனுசரித்து இந்நூலாசிரியருஞ் கனத்த கருமங்கள் நூறுயுகம் செய்யினும் காணுமோ காணுதே என்ருர். இது காறும் கருமம் ஞானத்தைக்கொடுக்காது என்றும் சித்து சடவிசாரமே ஞானத்தைத்தரத்தக்கது என்றும் 13 கவியால் கூறிமுடித்தார்.

அவதாரிகை

இனி கரும காண்ட நூல்களின் கருத்து வேறு என்று ஐந்து கவியால் கூறி விளக்க ஆரம்பிக்கின்ருர்.

72 குருதேவா! சர்வதுக்க நிவர்த்தி பரமானந்தப் பிராப்தியுமான மோட்சம் தரத்தக்கது சித்து சட விசாரத்தால் உளவாகும் ஞானமே யாம் என்று உத்தரமீமாம்சையும் அதன் சங்கரபாஷ்யமும் வேதோப நிஷத்துக்களும் கூறியிருக்க கரும காண்ட நூல்களில் புண்ணியத்தால் தேவர்களும் பாவத்தால் தரு விலங்குகளும் புண்ணிய பாவ கலப்பால் மனிதர்களுமான பிறவிகள் உண்டாகும். ஆதலால் நீ மேற்கொண்டு பாவத்தை செய்து இழிவான பிறவியை அடையாதிருத்தற்பொருட்டு அவரவர்களுடைய வருணாசிரம தருமப்படி ஒழுகினால் சுக முண்டென்று பூர்வமீமாம்சையான கருமகாண்டத்தில் கூறிய தற்குக் காரணம் அருள்வீராக.

73. அன்பனே! அங்கனம் கூறிய வேதத்தின் அபிப்-பிராயம் வேறு அதை விளக்கிக் கூறுகின்றேன். கேட்பாய் தினமும் மண்ணைப் புசிக்கின்றக்குழந்தைக்குக் காமாலை நோய் வரும் என்று அறிந்து இரக்கம் கொண்ட தாயானவள் அதற்கான கசப்பு மருந்தை ஒளித்து வைத்துக் கொண்டு தித்திப்புப் பண்டத்தை எதிரே காண்பித்து குழந்தையை அழைத்து கசப்பு மருந்தைக்கொடுக்கின்ற கருணையுள்ள மாதாவைப்போல் கரும காண்ட நூலில் இல்லற தருமத்தைச் செய் யாகங்களைச்செய் என்று சொல்லும். அங்கனம் சொல்லு கின்ற வேதத்தின் உள்நோக்கம்வேறு. அந்த நோக்கத்தை சுவர்க்காதிபோக போக்கியத்தில் இச்சையுள்ள கர்மகாண்டி கள் அறிய மாட்டார்கள்.

74 அன்பனே! உண்பதுவும், புணர்வதுவும், மனையறங்கள் செய்வதுவும் ஜீவர்களுக்கு இயற்கை சுபாவமா யிருத்தலின் அதற்கு விதி வேண்டுவதில்லை. என்பதை உதாரண முகத்துடன் காண்பிக்கின்றேன். ஜீவர்களுக்கு அருந்தல், பொருந்தல் இரண்டும் இயற்கையாயிருக்க அவர் களைப்பார்த்து நீ அருந்துக; நீ பொருந்துக என்று வேதம் விதிக்குமோ? விதிக்காது. வேதத்திற்கு அவ்வளவு தெரியாதா? இயற்கைக்கு விதி கூறுவது பொருந்தாது. அது எதுபோலவெனின் காக்கையைப்பார்த்து நீ கறுத்திடுக என்றும் நெருப்பைப்பார்த்து நீசுடுஎன்றும்வேம்பைப்பார்த்து

நீ கசந்திடு என்றும் வேகமுள்ள வாயுவைப்பார்த்து நீ அசைந்திடு என்றும் ஒருவன் கூறுவானாயின் அவன் வார்த்தையைப்பயனற்றதாககொள்ளுவதுபோல் இயற்கைகு விதிகூறும் சாஸ்திரங்களும் பயனற்றதாம். ஆகையால் வேதம் போக போக்கியத்தைக் கொடுக்கக்கூடிய கருமத்தை விலக்கிக் கூறியதே ஒழிய அதை செய்யவேண்டும் என்று விதிக்கவில்லை. எனவே வேதத்தின் அபிப்பிராயம் பிரவர்த்தி மார்க்கத்தைக் கூறுவதன்றுநிவர்த்தி மார்க்கத்தை கூறுவதில் தான் பிரியம்..

75 அன்பனே வேதத்தின் அபிப்பிராயம் வேறு என்பதற்கு மேலும் இரண்டு உதாரணத்தைக் காண்பிக்கின்றேன். மது, மாமிசத்தை உண்ணவிரும்பினுல் யாகங்களை செய்து உண்ணவேண்டும் என்று கரும காண்டம் கூறினுல் அதற்கு உட்பொருள் யாது 10,000 ரூபாய் செலவு செய்து ஒருயாகம்செய்து அதில் ஒரு ரூபாய் மதிப்புள்ள மது மாமிசத்தை புசி என்று கூறினுல் யாராவது செய்வார்களா? செய்ய மாட்டார்கள். ஆகையால் மது, மாமிசம் உண்ணவேண்டாம் என்பது அதற்குப் பொருளாகும் அல்லவா? அதுபோல் காம இச்சை உண்டானுல் பல பெண்மணிகளை இச்சிப்பதைப் பார்க்கிலும் ஒரு பெண்மணியை மணந்துகொள் என்று கருமகாண்டம் கூறுகின்றது அதுவும் துன்பத்திற்கு காரணம் என்று அந்த கரும காண்டமே கூறியிருப்பதால் சகலமும் விட்டொழிப்பதே வேதத்தின் அபிப்பிராயமாம். ஆகையால் மனையறங்கள் செய் மகங்கள் செய் என்ற விதி பூர்வபக்ஷமாம். ஞானகாண்டம் சித்தாந்த பக்ஷமாம் சகலத்தையும் விட்டொழி பதே வேதத்தின் அபிப்பிராயம் என்பதற்கு மேற்கோள் பொய்யாமொழி

"அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு."

என்று கூறியிருப்பதால் அறிக.

76 அன்பனே யாகத்தை செய்து மது, மாம்சாதிகளை அருந்துக என்ற கர்ம காண்ட நூல் பின் அதைப் புசிக்க வேண்டாம் முகர்ந்து பார்த்து எறிந்துவிடுக என்று கூறிய வாக்கியத்தையும் நீ ஆராய்ந்து பார்த்துக்கொள்க. காம

இச்சை உண்டானால் ஒருபெண்ணை மணந்துக்கொள்க என்று கூறியபின் புத்திரோற்பத்திக்காக மட்டும் விதித்துள்ள நாட்களில் அதாவது பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை உறவு கொள்ள வேண்டும் என்ற வாக்கியத்தையும் நீ ஆராய்ந்து கொள்க. யாகாதிகளையும், இல்வாழ்க்கையும் விட்டொழித்த துறவிகளான ஞானிகளை வேதமும், உலகமும் புகழ்வதையும் நீ ஆராய்ந்துபார். இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்த பின் வேதத்தின் உண்மையான கருத்து சர்வதுக்க நிவர்த்தியும் பரமானந்த பிராப்தியையும் பயப்பதாகும் என்று உறுதி செய்து சற்கருமங்களில் உள்ள ஆசையைவிட்டு ஒழிப்பாயாக இதன் உள்ளுரை: யாகத்தில் கொலையுண்ட உயிரானது சொர்க்கத்தில் கொலைசெய்தவனுடைய வரவை எதிர்ப்பார்த்துபழிக்கு பழிவாங்கும் ஆகையால் யாகத்தில் உயிர்க்கொலை செய்யாதே என்று பாகவத புராணத்தில் "மகமியற்றுழி மாய்த்த மறியெலாம்" என்ற செய்யுள் தொடங்கி ஆறு செய்யுட்களால் மறுக்கப்பட்டிருப்பதைக் காண்க. இது காறும் கூறிய ஆற்றால் வைதீகக்கருமங்கள் செய்யச்செய்ய அஞ்ஞானம் அதிகரித்து பிறவித்துன்பத்தைக் கொடுக்கும் என்றும் சித்து சட விசார ஞானமே முத்தியைக் கொடுக்கும் என்றும் கூறி முடித்தார்.

77 குருதேவா! தாங்கள் முன் 70வது கவியில் அஞ்ஞானமும், வைதீகக் கருமங்களும் தம்முள் உறவாக இருந்துகொண்டு அஞ்ஞானத்தை அதிகரிக்கச்செய்யும் என்று கூறியது உண்மைதான். ஆனால் துங்க (மேலான) ஞானமே அஞ்ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பு என்று அருளிச்செய்தீர் அது உண்மையானால் ஞானமும், அஞ்ஞானமும் நிலவிலே மறுப்போல அல்லது களங்கம் போல ஒற்றுமையாக இருந்து கொண்டு இந்த சிருட்டிகள் செய்வது கூடுமா? இதை அருள்வீராக.

78 அன்பனே உன் வினாவிற்கு விடை மூன்று கவியால் அளிக்கின்றேன் இந்தக்கவியில் ஜோதிஞானம், சொரூப ஞானம், விருத்தி ஞானம் என மூன்றாகக் கூறுவதுபோல் தோன்றினும் ஜோதி என்பதை சொரூப ஞானத்திற்கு அடைமொழி ஆக்கி சொரூப ஞானம் எனவும் விருத்திஞானம்

எனவும் இரண்டாகக் கொள்ளவேண்டும். இதில் அறிவே எண்ணங்களாகத் தோன்றும். அங்கனம் தோன்றுவதால் அவை இரண்டு என்னும் தொகைக்கு உட்பட்டது அன்று எனினும் நெருப்புப் பெட்டியில் உள்ள அக்கினி இருட்டிற்கு விரோதியாகாதது போல இந்த அறிவு அஞ்ஞானத்திற்கு விரோதியன்று என்பதை நீ சுழுத்தியவஸ்தையில் அனுபவித்திருக்கின்றாய் அல்லவா? அறிவெனினும், சொரூப ஞானம் எனினும் ஒருபொருளையேக் குறிக்கும். ஆகையால் அறிவின்கண் கற்பிதமாயுள்ள அஞ்ஞானத்தை நான் அறிவு சொரூபன் என்று உன் உள்ளத்தில் நின்று எழுகின்ற எண்ணமாகிய விருத்தி ஞானம் கெடுக்கும். எனவே விருத்தி ஞானமே அஞ்ஞான சத்துரு. சொரூப ஞானம் அஞ்ஞான சத்துருவன்று என்று நீ அறிவாயாக. இதன் உள்ளுரை: இந்தக் கவியில் ஜோதி ஞானம் என்பது பிரகாசமுடைய ஞானம் என்பது பொருள் எனவே சொரூப ஞானம் எனவும் விருத்தி ஞானம் எனவும் இரண்டுதான் கூறப்பட்டுள்ளது. சுழுத்தியவத்தையில் சொரூப ஞானமும், அஞ்ஞானமும் ஒன்றாக இருக்கின்றது. அது நனவில் அகம்பிரம்மாகார விருத்தியினால் அஞ்ஞானத்தைக் கெடுக்கின்றது. இங்கனமாய சொரூப ஞானமே விருத்தி ஞானமாய் வெளிப்படுகின்றது. அந்த சொரூப ஞானம் அஞ்ஞான சத்துருவன்று என்பது உலகப்பிரசித்தம் சுழுத்தியில் நின்று விழித்துக்கொண்டவன் இரண்டு அனுபவத்தைக் கூறுகின்றான். அதிலொன்று நான் சுகமாய்த் தூங்கினேன் என்பது. ஒன்றுந்தெரியவில்லை என்பது மற்றொன்று இதில் ஒன்றுந்தெரியவில்லை என்ற அஞ்ஞானமும், சொரூப ஞானமும் தம்முள் விரோதியாகாமல் இருக்கின்றது சுழுத்தியில் இந்நிலையில் முத்தி மோட்சமில்லை பின் முத்தி எங்கனமெனின் நனவில் நான் சச்சிதானந்த சொருபன் என்ற விசேஷ விருத்தி ஞானத்தினால் அஞ்ஞானம் நீங்கி முத்தியுண்டாகும். அது எங்கனமெனின் தீப்பெட்டியிலிருக்கும் நெருப்பு இருட்டிற்கு விரோதியாகாமல் தட்டி வெளிப்படுத்தியப்பின் விரோதியாவது போலும் எனக் கொள்க.

79 குருதேவா! குவிதல், விரிதல் சுபாவமுள்ள சுழுத்தி அவஸ்தையில் ஆத்மாவான பிரமத்தோடு வேறுபடாமல் ஒற்றுமையாக இருந்தபின் நான் பிரமம் என்னும் ஞானம் அஞ்ஞானத்தை எப்படி கெடுக்கும் இதை அருள்வீராக. அன்பனே கேட்பாய்: சூரியன் தானகவே ஒன்றையும் எரிக்-காமல் சூரிய காந்தக்கல்லின் வாயிலாகப் பற்றியெரிப்பது போல் மாயையான விக்ஷேபத்தின் காரியமான பஞ்சதன் மாத்திரையில் தோன்றிய அந்தக் கரணத்தில் நான் பிரம மென்னும் விருத்தி ஞானம் உண்டாகுமானல் அதன் வாயிலாக அறியாமை எனப்படும் அஞ்ஞானம் நீங்கி முத்தனுவாய்.

80 குருதேவா! மனம், வாக்கு, காயம் என்னும் முக்-கரணத்தால் இயற்றப்படும் தொழில்களெல்லாம் கருமம் அல்லவா? அப்படி இருக்க நான் பிரமம் என்னும் விருத்தி ஞானமானது மனமுதலிய அந்தக்கரணத்தின் தொழிலாகிய கருமமன்றே! அங்கனமிருக்க மனதின் தொழிலால் ஆன கர்மமே அஞ்ஞானத்தைக் கெடுத்தது என்று சொல்லக் கூடாதோ? நான் பிரமம் என்னும் விருத்திக்கு அதாவது எண்ணத்திற்கு விருத்தி ஞானம் என்று அதற்கு ஒரு பெயர் சூட்டி அழைத்த காரணத்தை அருள்வீராக?

81 அன்பனே உன் வினவிற்கு 8 கவியால் விடையளிக்-கின்றேன் கேட்பாயாக விருத்தி ஞானம் அந்தக்கரணத்தின் தொழிலான கருமந்தான் அதில் சந்தேகமில்லை ஆனாலும் ஒரு தாயின் பிள்ளைகள் தங்களுக்குள் விரோதித்துக்கொள்வதை உலகத்தில் பார்த்தோம் அதுபோல் ஜப, தப, தியானம் முதலிய கருமங்கள் தேகமேதான் என்னும் அகங்காரபுத்தி உள்ள புருஷர்களால் ஏற்படுத்தக்கூடிய தந்திரங்களாகும். இதற்குப் புருஷதந்திரம் என்பெயர். விருத்தி ஞானம் அப்படி புருஷதந்திரம் அன்று. அது வஸ்து தந்திரமாம். அதாவது அந்தக்கரண சாட்சியான கூடஸ்தபிரமமே தன் நிஜ சொரூபம் என்று அறிவது வஸ்து தந்திரமாம்.

82 அன்பனே மனோவாக்குக்காயங்களால் செய்யக்கூடிய கருமங்கள் செய்யவும் செய்யாமல் இருக்கவும் ஒன்றை

மற்றொன்றாக மாற்றவும் கூடும் ஞானம் அப்படியன்று அதை மாற்றவோ ஒன்றை மற்றொன்றாக்கவோ முடியாது. ஆகையால் மனதின் தொழிலான தியானமும் விவேக ஞானமும் வேறு வேறாகும். உலகத்தில் ஒன்றை மற்றொன்றாக்குவது எது எனின் சிவலிங்கத்தை சிவனாகப்பாவிப்பதுவும், சாளக்கிராமத்தை விஷ்ணுவாகப் பாவிப்பதுவும் ஆகிய பாவனாத்தியானமானது கற்பிதமாம். ஆகையால் ஆராய்ச்சியினால் தன் வாஸ்த்தவ சொரூபத்தைப் பிரமம் என்று ஞானகதப்பிரத்தியக்ஷத்தால் அதாவது விசாரக்கண்ணால் கண்டதுவே ஞானமாம். இந்தப் பேதம் தெரியாமல் மயக்கத்தை அடைய வேண்டாம். இதில் கற்பித யோகமென்பது சகுனத்தியானத்திற்கு பரியாயப் பெயர் எனக்கொள்க.

83 அன்பனே தியானம், கற்பிதம், ஞானம் வாஸ்தவம் என்பதை மேலும் விளக்கிக்காட்டுகின்றேன். சகல விஷயங்களையும் இது இன்னது, இது இன்னது என்று கண்டு அறிந்து அனுபவித்த அறிவெதுவோ அதுவே ஞான வடிவமாம் ; சிவலிங்கத்தை சிவமாகப்பிறர் சொல்லிக் கேள்விப்பட்டு பாவிப்பது தியானமாம். தியானம் ஒரு காலத்தில் மறந்துப் போகக்கூடும். பிராமணனுக்கு பிராமணத்துவம் மறவாதது போல பிரம சொரூபமான தன்னை கேட்டல், சிந்தித்தல் தெளிதலால் நான் பிரமம் எனக்கண்டது மறவாது. ஆகையால் இங்கனம் கண்ட பிரம்ம வஸ்து மெய்யாம். தியான வஸ்துக்கள் பொய்யாம். எனவே அஞ்ஞானமான அறியாமையைக்கெடுப்பது நான் பிரமமென்னும் விருத்தி ஞானமேயாகும் தியானம் முதலிய கருமங்கள் அறியாமையைக் கெடுக்காது. இந்த வேறுபாட்டை நீ ஆராய்ந்து அறிவாய். இதன் உள்ளுரை: இக்கவிக்கு ஸ்ரீபொன்னம்பல சுவாமிகள் இயற்றி அருளிய உரையின் 323வது பக்கம் "மூர்த்தித்தியானம் போல தியான மாத்திரத்தால் நான் பிரமமென்னும் நிச்சயமானது தியானத்தைவிடில் இல்லாமல் போவதால் தியானவஸ்துக்கள் பொய்யென்றும் பிராமணனுக்கு நான் பிராமணன் என்பது தியானிக்காமல் இருந்தாலும் மறந்து போகாதது போல் ஆரூட ஞானிக்கு மறந்திருந்தாலும் பிரம்மத்துவம் சுபாவசித்தமாய் இருத்தலால் கண்டது மறவாது என்று கூறினர்."

என்று வரைந்திருப்பதால் பிரம்மத்தை தியானிப்பதும் பொய் என்பதற்கு ஐயமில்லை. தன்னை விசாரித்தவர்களும் மூர்த்தி தியானம்விட்டு பிரம்மத்தைத்தியானம் பண்ணுகிறார்கள். இது ஐவ்கை பிராந்தியில் ஒன்றும் பிராமணன் தன்னை பிராமணன் என்று தியானிப்பது உண்டா? இல்லையே! தியானம் என்பது தனக்கு அன்னியமான பொருளைத்தான் தியானிக்க முடியும். பிரமமென்பது தன் நிஜ சொரூபத்திற்கு உரிய பெயர். அதை தனக்கு வேறாக்கி எப்படி தியானிக்க முடியும் முடியுமானால் அது தன்னைப் பற்றுதல் என்னும் கிரியைக்கு கர்த்தாவும் கருமமும் (செயப்படுபொருள்) தானேயாதல் ஆத்மாஸ்ரேய தோஷமாம். அதாவது தியானிப்பவனும் தியானிக்கப்படுபொருளும் தானேயாதல் ஆத்மாஸ்ரேயத் தோஷமாம். மகா வாக்கிய விசாரம் செய்து பாகத்தியாக லக்ஷணையினால் தன் சொரூபம் பிரமம் எனக்கண்டு அறிந்தவர்கள் மீண்டும் பிரமத்தியானம் பண்ணுகின்றேன் என்று கூறுவது நகைப்பிற்கிடமாம். இங்ஙனம் தியானிப்பது துவைத சித்தாந்தமேயாம் அல்லது ஐவகைப் பிராந்தியில் ஒன்றும் சகல சாஸ்திரங்களும் அறிவே பிரமம் என்று கூறியிருக்கும் போது அறிவை அறிவுக்கு வேறுபடுத்தி தியானிப்பவன் யார் இரண்டு அறிவு உளதா? இன்றே அறிவை தியானிப்பது ஜீவன் எனில் அந்த ஜீவத்துவம் பழுதையில் பாம்பு போல் வாஸ்தவ அபேத பேத கற்பித சம்பந்தமுடையது. என்றும் அத்தியாசம் என்றும் வேதமும் சான்றோர்களும் கூறியிருக்க அதை உணராமல் பிராந்தர்களாகி ஜீவத்தன்மையை உயர்திணை ஆண்பால் பொருளாக்கி ஜீவன் என்று கூறுவது ஏனோ? இனி அறிவான பிரமத்தில் ஜீவத்துவம் தோன்றுவது தற்கிழமையாகவா? பிறிதின் கிழமையாகவா? இதற்கு விடை தற்கிழமையெனின் முதலும் சினையும்போல் இரண்டிற்கும் முதல் ஒன்றாகும். ஆகுமானால் முற்றும் பிரமமே ஒழிய ஜீவத்துவம் இன்று இனி பிறிதின்கிழமையெனின் ஜீவத்துவம் தோன்றுவதற்கு பொருள், இடம், காலம் காட்ட வேண்டும் காட்டுமானால் பிரமம் கண்டப்பொருளாய்ப்போம். போகுமானால் கண்டப்பொருள் அழிவுபாடு உடையது பாவம்! இந்தப்பரிதாப நிலையைவிட்டு தன்னை உள்ளங்கையிற் கனி போல் காட்ட வல்லவர்களைதேடி அடிக்கிற் பிழைக்குதும். இனி

பிரமத்தில் ஜீவத்துவம் எவ்வாறு இருக்கிறது எனின் வேதாந்த சூடாமணி 92-வது பக்கம் "ஒரு ஆடையில் வரைந்துள்ள சித்திரம் போலும் ஜீவேஸ்வர ஜகத்து என்றும் பஞ்சதசியின் சித்திர தீபத்தில் "ஜீவேஸ்வர ஜகத்து என்னப் பட்ட சித்திரம் ஆரோபிக்கப்பட்டது" என்றும் கூறியிருப்ப-தால் ஜீவன் சித்திரம் போன்றது என்ருயிற்று. ஆகுமாஞல் சித்திரம் ஒரு பொருளும், ஆடை ஒரு பொருளும் ஆக இரண்டு பொருளாகுமா? ஆகுமாஞல் சித்திரம் ஆடையைத் தியானிக்கலாம். அதுபோல் பிரம்மத்தைவிட ஜீவன் தனிப்-பொருள் ஆனுல் அன்ரே பிரமத்தைத் தியானிக்கலாம். அங்கனம் இன்றே உள்ளது ஓர் பொருள் என்று வேதம் கூறுகிறதை மறுத்து ஜீவனை உட்பொருளாக்கி தன் சொரூப நிலை மறந்து கடவுளைத்தேடி அலைவதுதான் வேதாந்தம் கற்றறிந்தர்க்கு முடிவாகுமா? மேலும் விசாரசாகரம் சிவராவ் பதிப்பு 294-வது பக்கம் "நான் உபாசிப்பவன் அதாவது தியானிப்பவன். தெய்வம் தியானிக்கப்படுபொருள் இரண்டும் வேறு வேறு என்னும் புத்தியால் தியானம் சித்திக்கிறது. ஞானிக்கு மேற்கூறிய இரண்டுபேதமும் தோன்றுகிறதில்லை. என்னுடைய தேகாதிகளும் தெய்வத்தின் தேகாதிகளும் சொற் பனம் போல் கற்பிதங்கள். சேதனம் ஒன்றே வாஸ்தவம். இது ஞானிகளுடைய நிச்சயம் ஆகையால் ஞானத்திற்கும், தியானத்திற்கும் விரோதமுண்டு என்று கூறியிருப்பதால் அறியலாம்.

84 குருதேவா! சாலோகமாதிப்பதவி முத்தியைத் தருகின்ற மூர்த்தித்தியானமும் சர்வதுக்க நிவர்த்தியைத் தருகின்ற பிரமத்தியானமும் சத்தியமன்று என்று தாங்கள் முன் கவியில் தியான வஸ்த்துக்கள் பொய் என்றருளிச்செய்தீர் அல்லவா? அங்கனமாயின் அதஞல் வரும் முத்திகளும் பொய்யாகாதோ இதை அருளிச்செய்வீராக. அன்பனே அதற்கு விடையளிக்கின்றேன் கேட்பாய் சங்கு சக்கர கதா பத்மத்தோடு விஷ்ணுவின் மூர்த்தியை தியானம் பண்ணும் போது அது பாவனுரூபமாயிருப்பதால் அது பொய்யேயாம். தியான பலத்தால் அந்த மூர்த்தியின் சச்சிதானந்த வடிவ உண்மை உருவம் இவன் ஆகும்போது அது உண்மையாம்.

அதுபோல பிரம்மத்தைப்பற்றி பெரியவர்களாலும் வேதாந்த சாஸ்திரங்களாலும் கேள்விப்பட்டபின் உண்டாகும் பிரமத்தியானம் சத்தியமன்று அந்தப்பிரமம் தன் நிஜ சொரூபமாக அறியும்போது அது உண்மையாகும். இதில் மூர்த்தித்தியானமும், பதவிமுத்திகளும் பிரம்மத்தியானமும் பூர்வபக்ஷமாகக் கூறியதாம்.

85 குருதேவா! தாங்கள் முன் கவியில் மூர்த்தித்தியானமும், பிரமத்தியானமும் பாவனுவடிவமாக இருத்தலால் அது பொய்யாம் என்று அருளினீர். அது உண்மைதான். ஆனால் பொய்யான தியானம் மெய்யான முத்தியை அளிக்குமா? இதை அருள்வீராக. அன்பனே எவரெவர் எதை எதை தியானம் பண்ணுகிறார்களோ அதன் அதன் வடிவம் ஆவார்கள். சங்குசக்கரத்தோடு கூடிய மூர்த்தியைத் தியானித்தால் அந்த மூர்த்தியின் உண்மை. வடிவமான சச்சிதானந்த வடிவமாவார்கள் பிறவித்துன்பம் தீரவேண்டுமானால் தன் நிஜ வடிவமான பிரம்ம சொரூபத்தை தியானிக்கிற் பிரம்ம சொரூபமே ஆவார்கள். இது உண்மை இதில் தியானம் என்பது பூர்வபக்ஷமாய்க் கூறப்பட்டது அது பொய் என்பதற்கு இப்படலம் 83-வது கவியின் உள்ளுரையில் காண்பித்த பிராமணங்களை இங்கும் கொள்க.

86 குருதேவா! தாங்கள் முன்கவியில் சொரூபமே தியானிக்கில் சொரூப மாகுவர் என்று அருளினீர். அது உண்மையானல் சித்து சட விசாரம் எதற்கு? அதன் பயனாகிய ஆத்மஞானம் எதற்கு? இதைஅருளுவீர் அன்பனே பிரமத்தியானமானது பரோக்ஷம், அபரோக்ஷம் என இரண்டு விதமாம் பிரமத்தின் இலக்கணங்களை குரு முகமாகவும் சாஸ்திர ரீதியாகவும் கேள்விப்பட்டு அதனல்உளவாகும் பிரம சிந்தனை தியானம் எனப்படும் அதுவே பரோட்ச ஞானமாம். பின்பு அந்த பரோபட்சமாய் அறிந்த பிரமம் தன் நிஜ சொரூபமாக அறிதல் அபரோக்ஷ ஞானமாம். இந்த அபரோக்ஷ ஞானம் சித்து சட விசாரத் தெளிவால் உண்டாவதால் இந்த அபரோக்ஷ ஞானமே அஞ்ஞானத்தைக்கெடுக்கத்தக்கதாம். இதுவே முத்தியும், மோக்ஷமுமாம் 85 + 86-ன் உள்ளுரை :-

முன்கலியில் அவரவர் தியானமே பிறப்பாகும் என்றார். இதுவும் பூர்வபட்சமாகக் கூறப்பட்டது. சித்தாந்தப் பக்ஷமாமேல் முரண்படும். எங்கனமெனின் உலக சிருட்டியின் ஆரம்பகாலத்தில் யார் எதைத் தியானித்தார்கள்? தியானத்தினால் அன்றோ பிறப்பு வர வேண்டும். அப்போது சூட்சும சரீரங்கள் இருந்தன. அதிலுள்ள ஜீவர்கள் தியானம் செய்ததின் பயனாக தூல சரீரங்கள் வந்தது எனின் சூட்சும சரீரம் தூல சரீரத்தை விடுத்து தனியாக நிற்காது என்பதை கீழ்வரும் பிரமாணங்களால் அறியலாம். பஞ்சதசிப் பிரகரணம் 400-வது பக்கத்தில் "தூல சரீரத்தை விடுத்து லிங்க சரீரம் ஓரிடத்தும் காணமுடியாது" என்றும் கோவிலூர் மடத்திலிருந்து வெளியிட்டுள்ள யாஷ்ய ஹிருதயம் 41-வது பக்கத்தில் "விசுவோற்பத்திக்கு முன்னம் ஜீவனில்லை மகா பிரளயத்திலும் ஜீவனில்லை மத்தியில் அந்தக்கரணக்கற்பனை யினால் கற்பிதனானன்" என்றும் ஞானவாசிட்டம் மானுவேடன் கதை 7வதுபாட்டின் ஸ்ரீவீரசுப்பையசுவாமிகள் உரையில்'பரம சிவத்தினின்றும் முன்காரணமில்லாமலே ஜீவர்கள் யாவும் உண்டாம்" என்றும் சீதாராம ஆஞ்சனேய சம்வாதம் பக்கம் 248ல் மனமுதலிய அந்தக்கரணங்கள் தூல சரீரத்தைவிடுத்து தனித்து நிற்காது" என்றும் அனுபவானந்த தீபிகைவசனம் 137-வது பக்கம் "நனவில் காணும் சூட்சும தேகம் கனவில் தூல தேகத்தில் அடங்குவதும் சுழுத்தியில் காரணதேகத்தில் அடங்குவதும் அனுபவமாயிருக்க இது தனித்து உயிரோடும் பிராணாதி அந்தக்கரணங்களோடும் சென்று சுக துக்கத்தை அடையுமென்று கூறுவது சதுர் மறையின் அடிப்படைக்கு விரோதமாம். ஏன் எனின் அது அநாதியாகையால் என்றும், ஆத்ம புராணம் 500-வது பக்கத்தில் "தூல சரீரம் இன்றி சூட்சும சரீர நிலை பொருந்தாதாம்" என்றும் கூறியிருப்பதை உய்த்துணர்க. இவ்வாறான பிரபல சுருதி வாக்கியங்களை நோக்குவார்க்கு ஜீவத்துவம் இடைக்காலத்தில் தோன்றிய அந்தக்கரணக் கற்பனையாகும். இத்தகையக் கற்பனாஜீவன் தான் செய்யும் மூர்த்தித்தியானமும் பிரமத் தியானமும் மற்றுமுள்ள தியானமும் கற்பனையாகுமன்றி எதார்த்தமாகுமா? ஆயினும் பிரமத்தியானத்தை இரண்டாக விளக்கிக் கூறினார் கீதாசாரியர் 'பகர்ந்த சத்த ஞானம்பரோட்சம அனுபவத்தால்

அகம் பிரமம் என்னும் ஞானம் அபரோக்ஷம்" இதன் உரையில் பிரமம் இருக்கிறது என்று கேள்வியினுல் அறிதல் பரோட்சம் சச்சிதானந்தப் பிரமம் நான் என்று அறிதல் அபரோக்ஷம்" என்று கூறியிருப்பதால் பிரமத்தை எதிரிட்டு அறிவதும் தியானத்தால் அறிவதும் சரிதான் என்று கூறுபவர்களை மறுத்தவாருயிற்று. மேலும் கர்ணன் தன்னை க்ஷத்திரிய குலத்தவன் என்று அறிவதற்கு தியானம் செய்தானு? தசமன் தன்னை தசமன் என்று அறிவதற்கு தியானம் செய்தானு? இல்லையே. தியானம் செய்தால் தன் எதார்த்த நிலை அறிய முடியாது அது விசாரத்தால் அன்ரே அறிய வேண்டும். இதுப்பற்றி இந்நூலாசிரியரும் ஸ்திர விசாரமே ஞானமாம். இதுவே முத்தியுமாம் என்ருர். இதை விடுத்து தியானம் செய்வதால் அபரோக்ஷஞானம் வராது. தன் நிஜ சொரூபத்தை ஐயந் திரிபறத் தெளிதல் அபரோக்ஷ ஞானமாம். இதை திருவாரூர் மடத்துக்கட்டளை வியாக்கியானத்தின் 227-வது பக்கத்தில் "திடாபரோக்ஷ பிரம்ம ஞானி யார் என்னில் பொன்னில் பூட்டணம் போல் தன்னிடத்தில் தோன்றி நின்ற தேகாதிப் பிரபஞ்சம் மித்தையெனவும் பிரம்மமாகிய தான் சத்தியம் எனவும் அறிந்து நிற்பவனேயாம்' என்றும் பஞ்சதசி 321-ம் பக்கத்தில் "நான் பிரமம் என்று அறிந்தால் அது அபரோக்ஷ ஞானமாம்" என்றும் ஷை 185ம் பக்கம் "நான் பிரமமாயிருக்கிறேன் என்னும் திட நிச்சயமாகிய அபரோக்ஷ ஞானம் ஒருக்ஷணத்தில் உதயமாகி இரண்டாவது க்ஷணத்தில் நிலைபெற்று மூன்ருவது க்ஷணத்தில் அஞ்ஞானம் காரியத்தோடு நஷ்டமாக்கும்." என்றும் கூறியிருப்பதால் ஒரு கணத்தில் ஞானமுண்டாக வேண்டும் தியானம் பிரட்டபேஷண நியாயம் போல் அதாவது அரைத்த மாவை மீண்டும் அறைப்பது போல்வதாம். இது இவ்வாறிருக்க ஸ்திர விசாரத்தால் உதயமான ஞானமே முடிவாம். என்று இந்நூலாசிரியர் பசுமரத்தாணி போல் கூறியிருப்பதைத் உணராமல் தியானம் செய்கின்றேன் என்று ஆசனம் கட்டி சின்முத்திரைப்பிடித்து கண்ணின் கருவிழியை மேலே செருகி கல்போல் அசையாமல் இருந்து தவப்பகடியாட்டம் ஆடுபவர் களைப்பார்த்து உலகத்தவர்கள் இந்த ஞானிகளும் தவப்பகடி ஆட்டம் ஆடாமல் சித்து சடவிசாரத்தால் அபரோக்ஷ ஞானம் அடைந்த பெரியர்வளை யெல்லாம் இகழ்வராயினர் பாவம்!

87 குருதேவா! மகா வாக்கிய விசாரத்தால் என் நிஜ வடிவம் பரிபூரணப்பிரமம் என்று நிச்சயம் செய்தேன். அங்ஙனம் நிச்சயமான விருத்தி அஞ்ஞானம் என்கின்ற அறியாமையைக் கெடுந்த பின்னரும் காண்பான் காட்சி காணப்படுபொருள் என்ற திரிபுடி பேதம் தோன்றுவதால் பிரம்ம சொரூபமான நான் பரிபூரண சொரூபன் என்ற அனுபவம் எங்ஙனம் உண்டாகும். இதை அருள்வீராக. அன்பனே ஒருகுடம் தண்ணீரில் உள்ள சேற்றைப்பிரித்தபின் தேற்றும் பொடிதானும் மண்ணோடு மாயும். அதுபோல் நான் வியாபக சொரூபன் என்ற அகண்டாகார விருத்தியும் அறியாமையைக் கெடுத்த பின்னர் தானும் தேற்றும் பொடி போல் பிரமமாய்விடும். இதன் உள்ளுரை :- விருத்தி அத்தியந்த நாசமாகவில்லை. தேற்றும் பொடியும் அத்தியந்த நாசமாகவில்லை மண்ணோடு கலந்து நிற்கின்றது. அதுபோல் அஞ்ஞானத்தைக் கெடுத்த விருத்தி தானும் பிரம்மமாய் நிற்கின்றது. பிராரத்துவம் உள்ளளவும் அங்ஙனம் நிற்கும் என்று நிச்சயிப்பதற்கு மாய்தல் அல்லது நாசம் எனப்பெயர் வழங்குவதைக்காண்க. சொரூப ஞானமே விருத்தி ஞானமாய் தோன்றும் என்று இந்தப்படலம் 78-வது கவியில் கூறியதால் விருத்தி ஞானமும் பிரம்மமேயாம்.

88 குருதேவா! மேற்கூறிப் போந்தபடி அகண்ட அனுபவம் பெற்ற ஜீவன் முத்தர்களுடைய நிச்சயம் யாதோ? அதை அருள்வீராக. அன்பனே எவ்வித குறைபாடுகளும் இல்லாத ஏக சக்கரவர்த்தியானவன் லாப நஷ்டம் கருதாமல் சுகமாயிருப்பதுபோல் இந்த ஜீவன் முத்தர்கள் இருப்பார்கள் மேலும் குழந்தைகள் முக்காலங்களைப்பற்றி நினையாமல் இருப்பது போல் இருப்பார்கள். பந்த மோட்சங்களைப் பற்றி மறந்து விடுவார்கள் அவைகள் உண்டு என்று பலர்சொன்னா லும் எள்ளி நகைப்பர். ஏன் எனில் தன் சொரூபத்தில் அவைகள் கற்பனையாகையால் எனக்கொள்க. மேலும் பந்த முத்தி உண்டென்றுக் கூறுபவர்களை எள்ளி நகைப்பர் என்பதற்கு உதாரணம் காட்டுகின்றார். ஒருகொசு ஆகாயத்தை உண்டு உமிழ்ந்தது என்று கூறுபவர்களை யார்தான் நகைக்க மாட்டார்கள்.

89 அன்பனே! ஆத்மானுபவம் பெற்ற ஜீவன் முத்தனுக்கு உலகம் கற்பனையாகத் தோன்றும் என்பதற்கு ஒரு கதை கூறுகின்றேன் கேட்பாய். மலடி மைந்தனும் கட்டையிற் கள்வனும் ஆகாயத்தில் தோன்றும் தாமரைப்பூவை சூடி கந்தர்வ நகரத்தில் சென்று கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியை விலைபேசி கலகமுற்று இடையில் முயற் கொம்பினுல் குத்தி இருவரும் மாண்டார்கள். இதன் உண்மையை அறிந்தவன் மயங்கமாட்டான்.

90 முன்கூறிய கதையில் மயங்காதவனைப்போல நீயும் ஜீவன் முத்தனுடைய அனுபவத்தை ஒத்து வாழக்கடவாய். மாயையானது ஒன்பது வகையாலும் நிச்சயமான சொரூபம் இல்லாத அனிர் வசனீயமான மாயையின் காரியமான தேகாதிப்பிர்பஞ்சம் அனிர்வசனீயமாம் அது எதுபோல எனின் தாயையன்றி பிள்ளைகளுக்கு வேறுபிறவியும் ஜாதியும் உண்டோ? இல்லை. அதுபோல் மாயை எங்கனம் பொய்யோ அங்கனமே அதன் காரியமான உலகமனைத்தும் பொய்யாம். இந்தப் பொய்யை மெய்யாகக்கருதி நீ மயங்க வேண்டாம். ஆகையால் மாயா காரியமான நரகமும், சொர்க்கமும் நன்மையும், தீமையும் பொருந்திய பிரபஞ்சத்தை உண்மையாகப் பாராமல் பொய்யென்று உபேக்ஷித்து சச்சிதானந்த நித்திய பூரணப்பிரமமாயிருப்பாய்.

91 குருதேவா! தாங்கள் முன்கவியில் மாயையைப் பொய்யென்றும் அதன் காரியமான தேகாதி உலகம் எல்லாம் பொய்யென்றும் கூறினீர். அங்கனமாயின் பிரம்ம தேவன் முதல் முப்பத்துமூன்று கோடி தேவர்களும். பூமியில் உள்ள மகாத்மாக்களும் கங்கையாதித் தீர்த்தங்களும், காசி முதலிய தேசங்களும் அர்த்தோதய முதலிய புண்ணிய காலங்களும், சாமவேதமுதல் நான்கு வேதங்களும் சந்தஸ் கற்பம் முதலிய ஆறு அங்கங்களும் பஞ்சாட்சரம் முதலிய மந்திரங்களும் சாந்திராயணாதி தவங்களும் ஆகிய இவைகள் அசத்திய மென்று சொன்னால் அதனால் தோஷமில்லையோ அருள்வீர்.

92 அன்பனே! உன் வினவிற்கு விடை இருகவிகளில் கூறுகின்றேன் கேட்பாய். ஒருவன் தான் கண்ட கனவில்

பிரமா முதலிய தேவர்களையும் கங்கையாதித்தீர்த்தங்களையும் மற்றுமுள்ள தேகாதிப் பிரபஞ்சங்களையும் கண்டபின் விழித்து கொண்ட நனவில் தான் கனவில் கண்ட சொர்ப்பனம் பொய் என்று சொல்வது பிழையாகுல் அற்பமான மாயாகாரியமாயுள்ள பிரமாதி, கங்கையாதி, தேகாதி முதலியவைகளையும் பொய்யென்று சொல்வது பிழையாகும். மேற்கூறியவன் சொர்பனத்தில் கண்டதை பொய்யென்று சொல்லலாம் எனின் அற்பமாயையில் தோன்றிய தேகாதிப்பிரபஞ்சம் தன்சொரூபத்தில் விழித்த ஞானிகளால் பொய்யென்று சொல்லலாம் அது குற்றமன்று.

93 அன்பனே! சுருதி யுக்தி அனுபவத்திற்கு ஒத்து வரும் அத்வைத சித்தாந்தத்தை பொய்யென்றும் அவை மூன்றுக்கும் ஒத்துவராத துவைத சித்தாந்தத்தை மெய் என்றும் இதுபுராண சம்மதமென்றும் கூறுபவர்கள் மூடர்கள் இவர்களை புண்ணியவான்கள் என்றும் மகா தருமவான்கள் என்றும் புராணங்கள் கூறுகின்றன. அங்கனமாபின் சுருதி, யுத்தி அனுபவத்திற்கு ஒத்துவரும் அத்வைதத்தை சத்தியம் என்று கூறும் ஞானிகளுக்குக் குற்றம் கூறும் சாத்திரம் உளதோ? இல்லை. பொய்யென்பது எது எனின் பஞ்சபூதமாகிய மாயையும் அதன் காரியமான நாம ரூபமுமாம். சத்திய மானது எது எனின் சத்து சித்தானந்த நித்திய பூரணமாய் யாவரிடத்திலுல் வியாபித்திருக்கும் ஆன்மாவேயாம். இக்கவிக்கு ஸ்ரீபொன்னம்பல சுவாமிகள் அருளிச்செய்த உரையின் 337-வது பக்கத்தில் "சுருதி யுத்தி அனுபவங்களால் பெரியவர்கள் பொய்யென்று தள்ளிய பிரம்மா முதலிய தேவர்கள் கங்கையாதியாம் தீர்த்தங்கள் காசி முதலிய தேசங்கள் உத்திராயணுதி காலங்கள் வேதங்கள் அங்கங்கள் மந்திரங்கள், தவங்கள் முதலியவற்றை சத்தியம் என்று நிச்சயித்து தீர்த்தமாடல், சேவை, அர்ச்சனை, தானம், தவம், மகம் முதலியவற்றை செய்யா நிற்கும் பரமார்த்த அறிவில்லாதவர்களை மகா தருமவான்கள் என்று புர்ராணம் துதிக்குமாயின் அவைகளை பொய்யென்று சொன்ன பரமஅத்வைத ஞானிகளை வேதங்கள் போற்றுகின்றதே ஒழிய நிந்தை செய்யவில்லையே

இதையும் நீ யூகித்துணரக்கடவாய்" என்று கூறியிருப்பதால் ஞானிகளுக்குக்குற்றங்கள் விதித்த சாத்திரங்களுமுண்டோ? என்றார் இந்நூலாசிரியரும். மெய்யதேதெனின் சச்சிதானந்த மாய் வியாபிக்கும் ஆன்மாவே என்பதற்கு மேற்கோள் வள்ளலார் சாத்திரம் பக்கம் 168 செய்யுள் "பறையர் என்பதும் பண்டிதர் என்பது மறையுமிந்த மலினவுடலையே பறையர் தம்முளும் பண்டிதர் தம்முளு மறிவனேக மென்றாரறிந் தோர்களே" சைவ, வைணவ முதலிய சமய நூல்களின் கருத்தும் இதுவேயாம் என்பதற்கு வள்ளலார் சாத்திரம் 168-ம் பக்கம் "சமயமே பரமென்னுஞ் சமத்தராய்ச் சமய சாத்திரங்காட்டுஞ்சழக்கர்காள் சமயமென்னுஞ் சத்தார்த்த முணர்கிலீர் சமயமென்பது தன்னையறிதலே" இதுகாறும் பொய், மெய் இலக்கணம் கூறியவாறு காண்க. மேல் மாயை இலக்கணம் பத்து கவிகளால் கூறி முடிக்கின்றார்.

94 குருதேவா! தாங்கள் முன்கவியில் பொய்யதேனனில் நாமரூபங்களாம் பூதமாகிய மாயையென்று கூறினீரே. அங்கனமாயின் அந்த மாயையின் சொரூபம் யாது? அந்த மாயையை உடையவர்கள் யாவர்? அது எப்படி வந்தது. அந்த மாயை என்ன காரணத்தால் எனக்கு வந்தது. அந்த மாயையும் பிரமமும் வேறு வேறா? அல்லது இரண்டும் ஒன்றா? வேறு வேறு எனின் அப்போது பிரமம் கண்டப் பொருளாய்ப்போமே இரண்டும் ஒன்று எனின் மாயை எங்கனம் பொய்யோ அங்கனம் பிரமமும் பொய்யாமே. மாயை என்ற மேகங்களை சிதறடிக்கக் கூடிய சண்டமாருதக் காற்று போன்ற சற்குரு மூர்த்தியே. இந்த ஆறு வினாக்களுக் கும் விடையளிப்பீராக.

95 அன்பனே! உன் ஆறு வினாவில் முதல் நான்கு வினாவிற்கு இக்கவியில் விடையளிக்கின்றேன். அந்த மாயை யின் சொரூபம் ஒன்பது வகையினாலும் இன்ன சொரூபம் உடையதென்று நிச்சயிக்க முடியாமையால் அது அநிர்-வசனீயமே ஸ்வரூபமாம். இந்த புத்திர தாராதி சம்பத்துக்கள் என்னுடையது என்பவர்கள் மாயையே உடையவர்கள் (2) இந்த தேகமே நான் (3) உலகம் சத்தியம் (4) என்று

நம்பி இருப்பவர்களே இந்த மாயையை உடையவர்கள் ஆவார்கள் இந்த மாயை உற்பத்தியில்லாத அநாதியாதலின் அது பரிணும ஆரம்ப விவர்த்த ஆகிய பக்ஷங்களால் நிச்சயிக்க முடியாததால் அது வந்தது இப்படியென்று கண்டபேர் இல்லை. அன்பனே துக்கத்திற்குக் காரணமான மாயை ஏன் வந்தது எனின் சித்து சட விசாரம் செய்யும் நல்ல புத்தி இல்லாமையால் வந்தது என்று அறிவாய்.

96 அன்பனே! பாக்கி இரண்டு விஞவில் மாயை பிரமத்திற்குவேருகுமா என்ற ஐந்தாவது விஞவிற்கு இரண்டு கவியால் விடையளிக்கின்றேன். ஜால வித்தையைக் காட்டுபவனிடத்தில் உருவமற்ற பலசக்திகள் அடங்கி இருக்கின்றன அதில் ஒன்றைக்காண்பிக்கின்றேன். ஒரு மாங்கொட்டையை முளைக்கவைத்து பின் மரமாகி, பூவாகி, காயாகி, கனியாகி வெளிப்படுகின்றது அந்தப்பழத்தைப்பார்த்து அனுமானத்தால் ஒரு சக்தியுண்டு என்று அறிவதுபோல் பிரமத்தினிடத்தில் அளவிறந்த சக்தியுண்டு. அதைக்கண்டு அறிதல் ஒருவர்க்கும் முடியாது. ஆகாசாதி பூதங்களும் அதன் காரியமான பிரபஞ்சத்தையும் கண்டு அனுமானத்தால் ஆற்றல்மிகு சக்தி ஒன்று உண்டு என்று அறிதல் வேண்டும்

97 அன்பனே! மேற்கூறிய மாம்பழம் முதலிய பொருள்களும் அதைக்காண்பிக்கும் புருஷனும் பார்ப்பவர்கள் கண்களுக்குப்புலப்படும். எந்த சக்தி பழமுதலியவற்றை தோற்றி வைத்ததோ அந்தசக்திஒருவர்கண்களுக்கும்தென்படுவதில்லை அதுபோல் மாயா சக்தியின் காரியமான நாம ரூபப்பிரபஞ்சமும், பிரமமும் காண்பவர்களுக்குக் கண்கூடாகத் தோன்றும் ஆனல் அந்த மாயா சக்திமட்டும் கண்கூடாகத்தோன்றுவது இல்லை. ஆகையால் ஆதாரமான பிரமத்திற்கும் காரியமான பிரபஞ்சத்திற்கும் வேருக அனந்த சக்திகள் உண்டு. இதன் உள்ளுரை :- ஜால வித்தைகளைக்காண்பிக்கும் காட்சிகளை பார்த்துக்கொண்டிருந்த ஒருமகனைப்பார்த்து தந்தை மகனே! ஜால வித்தைக்காரனல் காண்பிக்கப்பட்ட இம்மாமர முதலியன முழுமையும் பொய்யென்றுன். இப்படி சொன்னதனல் ஜாலக்காரனை பொய்யென்று மகன் அறிகிறதில்லை.

ஆனால் அவன் சத்தியம் என்றே அறிகின்றான். அதுபோல் ஜகத்து முழுவதும் பொய்யென்று சொல்வதனால் ஆத்மா சத்தியமென்று அறிந்து கொள்பவன் விவேகமுள்ளவனாவான்

98 அன்பனே! மாயையும் பிரமமும் ஒன்று? என்ற உன் ஆறுவது வினாவிற்கு விடையளிக்கின்றேன். இந்திர ஜால சக்தியானது இந்திரஜாலக்காரனைவிட வேறு அன்று. அவன்காட்டிய இந்திரஜாலம் பொய். அதை காட்டுபவனை அவன்மெய் அதுபோல சர்வ சக்திமானாகிய பரிபூரண ஆத்மாவின் சொரூபம் சச்சிதானந்த நித்திய பூர்ணமானது என அறிவாய். இந்திர ஜாலக்காரனுடைய ஜால சக்தி எங்ஙனம் அநிர்வசனீயமோ அங்ஙனமே அநிர்வசனீயமான மாயாசக்தி பிரமத்திற்கு வேறல்ல. ஜாலம் பொய்யாகி ஜாலக்காரன் மெய்யானதுபோல் பிரபஞ்சம் ஓரவஸ்தையில் தோன்றியது மற்றோர் அவஸ்தையில் காணாது மாறுதலின் பொய்யென்றும் பிரமம் பற்றற்றதாதலின் அவைகளோடு மாறுதலடையாமல் சாக்ஷி மாத்திரமாயிருத்தலின் சத்தியமென்றும் அறிவாய்.

99 குருதேவா! தாங்கள் பிரமத்திற்கு வேறாக ஒருமாயா சக்தி இல்லை என்றீர். அங்ஙனம் இல்லாத ஓர் சக்தி உண்டு என்பதை எங்ஙனம் அறிவது? இதை அருள்வீராக. அன்பனே உலகத்தில் புல் முதலிய சடப்பொருள்கள் எல்லாம் பூத்துக்காய்ப்பன பாராய். நல்ல அறிவுள்ள சிஷ்யனே அந்தச் சடப் பொருள்களில் ஒருசக்தி நடத்திடாவிட்டால் அதன் அதன் சுபாவங்கள் அப்படி அப்படி இருக்கமாட்டாது. மாறுதல் அடையும் என்க.

100 அன்பனே! மேலும் அந்தசக்தியின் விசித்திர செயல்களைக் கேட்பாயாக. கருவில் இருந்து உருவான முட்டையினிடமாக பலநிறம் கலந்த பறவைகள் வெளிப்படும் விசித்திரத்தையும் நீ பாராய். உருவமற்ற அந்த சக்தியின் நியமமில்லாவிடில் அரசனில்லா பட்டணம் போலாம். மேலும் உஷ்ண சுபாவமான அக்கினி குளிர்சுபாவமான ஜலம் ஆகும் கசப்பு மதுரமாய் மாறும். தகுதியற்றவனும் வேதத்தை ஓதுவான். சலனமற்ற மலைகளும் சலனமுள்ள மேகங்களாகமாறும்

கடல்களெல்லாம் மண்திடல்களாகும் ஜகத்தானது இப்படி மாறுதல் அடைந்துபோகும்.

101 குருதேவா! பிரமத்திற்கு வேறுகாமலும் பிரமம் ஆகாமலும் விளங்கும் மாயா சக்தி ஒருவர்க்கும் காண முடியாதது. என்றும் இத்தகையதென்று அறியமுடியாதது என்றும் அது அநிர்வசனீயம் என்றும்அது நாம ரூபங்களைத் தோற்றிவைப்பதற்கு மூல காரணம் என்றும் சொன்னீர் இத்தகைய மாயையை நீக்கும் வழி யாது? விலக்கமுடியாதது எனின் அகம் பிர்மாஸ்மி என்னும் அத்வைதப் பாவனையால் என்னையும் பிரமத்தையும் ஏகரூபமாக அறிவது எப்படி? சர்வ துக்க நிவர்த்தி பரமானந்த பிராப்தி வடிவ மோக்ஷமுண்டாவது எப்படி ? இதை அருள்வீராக.

102 அன்பனே ! ஒரு மந்திரவாதியானவன் மணி மந்திர மருந்தாலே வாயுத்தம்பனமும் அக்கினத்தம்பனமும் ஜலஸ்தம்பனமும் செய்தால் அதில் அதில் உள்ள சக்தி குறைந்து காட்டுகிறதல்லவா? அதுபோல் நீயும் இந்த மாயைக்கு ஆதாரமான சச்சிதானந்த பிரமமாய் வேறு ஒரு பொருளையும் வாஸ்தவமாக நினைக்காமல் இருந்தால் இந்த மாயா சக்தி ஒழிந்துபோம். மாயையொழிவதற்கு நான் பிரம சொரூபன் என்ற மந்திரத்தைத் தவிர வேறு மந்திரங்கள் வேதங்களில் காணேம்.

103 அன்பனே! மண்ணின்கண் முன்பு இல்லாதிருந்த குடம் பின்பு நாவினுல் அந்த மண்ணையே குடம் என்பர்.அந்த மண்ணைத்தவிர குடம் என்பதற்கு பொருள் முக்காலத்திலும் இல்லை. அந்தக்குடம் அழிந்தது என்பதும் சொல்மாத்திரந் தான். மண் முக்காலத்திலும் மண்ணுகவே இருக்கின்றது. விவகார நிமித்தம் மண்ணைக்குடம் என்பர். ஆகையால் குடமென்ற நாம ரூபங்களை உபக்ஷேித்து மண்பார்ப்பதே பரமார்த்தம். அதுபோல் ஜீவேஸ்வர ஜகத்து என்னும் நாமரூப வேறுபாடுகளைக் கற்பிதம் என்று நீக்கி சச்சிதானந்த வடிவ பிரம்மமாகவே வாழக்கடவாய் இதன் உள்ளுரை :- மண்ணைத்தவிர குடம் இல்லாமைப்போல பிரமத்தைத் தவிர

ஜீவேஸ்வர ஜகத்து இல்லை. குடம் மண்ணைத்தவிர இன்மையின் குடம் தோன்றியதென்பதும் ஒடுங்கிய தென்பதும் சொல் மாத்திரமாய் இருப்பது போல ஜீவேஸ்வர ஜகத்து பிரம்மத்தைத் தவிர இன்மையின் ஜகத்து தோன்றியது என்பதும், ஒடுங்கியது என்பதும் சொல்மாத்திரமேயாம். குடத்தின் நாமரூபங்களை ஒழித்து அதனை மண்ணாய்ப் பார்ப்பது பரமார்த்தமாவதுபோல் ஜீவேஸ்வர ஜகத் தென்னும் நாம ரூபங்களை ஒழித்து அதனை பிரம்ம வடிவமாய் காண்பதே பரமார்த்தமாம் என்று அறியத்தக்கதாம். இது காறும் மாயையின் இலக்கணம் கூறிமுடித்தார். மேல்மாயாத் தோற்றம் நீக்கி சுகமடைய உபாயம் மூன்று கவியால் கூறுகின்றார்.

104 குருதேவா! எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக் கின்ற சச்சிதானந்த பிரமத்தில் அசத்து சடம் துக்கமாகிய மூன்றும் பிரபஞ்ச வடிவமாயினும் அவைகள் எனக்குதோன்று கின்றன அந்த தோற்றமும் தோன்றாமலிருப்பதற்கு வழியாது அதை அருள்வீராக. அன்பனே ஜலத்தில் தோன்றும் தனது சாயையானது தலைகீழாகத் தோன்றுமானாலும் கரையில் நிற்கும்தன்னை நோக்குவானாயின் அந்தச் சாயைப்பொய்யாய் அவனுக்குத் தோன்றும். அதுபோல் உனது கற்பித பேதமான நாம ரூபங்கள் தோன்றுமாயினும் பிரம்மமான உன்னை நோக்கினால் அந்த தோற்றம் உனக்கு பொய்யாய்த் தோன்றும் ஜகத்தோற்றத்தை ஒழிக்க உபாயம் இதுவேயாகும். இதற்கு மேற்கோள் மகாராஜத்துறவில் "தோன்றிடு முலகமெங்கே தோன்றிடும் என்னை நோக்கில்" என்று கூறியிருப்பதால் பிரமத்தை நோக்க உலகத்திற்கு தனிப்பொருள் இல்லை என்பது தேற்றம். இதன் உள்ளுரை: நாமரூப உலகம் தன்னை அறிந்த ஞானிகளுக்கு சோபாதிகமாம், அதாவது பொய்யென்றறிந்த பின்னும் அனுபவத்தோடு தோன்றிக் கொண்டு இருப்பதாம். அதற்குத்திருஷ்டாந்தம் யாதோ வெனின் ஒரு தடாக நீரில் பார்ப்பவன் தான் தலைகீழாக நிற்பதாகத் தோன்றினும் அந்தத் தோற்றம் பொய்யென்றும் தான் நேராகவே நிற்கின்றோம் என்றும் அறிவது போல தான் ஒரு ஜீவனாகத் தோன்றினும் பேரறிவு சொரூபனேயாம்

என்று அறிவது சோபாதிகத்தின் பொருளாம். இக்கவிக்கு கோ. வடிவேலு செட்டியார் அவர்கள் இயற்றியருளிய உரையில் "தெளிந்த குளத்தின் தீரத்தில் இருப்பவன் தான் அங்குள்ள ஜலத்தில் அதோமுகனுகித் தோன்றுவது பொய் என்று நிச்சயித்தகாலத்தும் அவ்வதோமுகம் தோன்றுவது போல் ஜீவத்துவம் முதலிய யாவும் மித்தை. சத்தியமான பிரத்தியக்காத்மா தான் என்றறிந்த காலத்தும் ஜீவத்துவாதி பிரபஞ்சத்தோற்றம் இருத்தலால் ஜீவன் முத்தனுக்கு பிராரத்துவ போக விவகாரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாம்.' என்றுகூறியிருப்பதால் ஞானிகளுக்கு சகலவிவகாரமும் உடன்பாடாம். அரசாளுதல் முதலிய எவ்வித விவகாரங்களுக்கும் தகுதியுடையோர்கள் ஞானிகள் தாம் என்பதற்கு மேற்கோள் ஒழிவில் ஒடுக்கம் வெண்பா "பூசிமுடிப்பனவும் பூண்பனவும் பொற்றுகிலுமாசை மிகுந்தவரசியர்காங் காசிற்ற முண்யர்க்காகாசீவன் முத்தனுக்குப் போகமலாற் குண்டையொப்பார்க்கே னிதுவாகும்' என்று கூறியிருப்பதால் அறியற்பாலதாம்.

105 அன்பனே! அறிவுப்பொருள் காரணம் அறிபடுப்பொருள் காரியம் இவ்வாறன காரிய காரணங்களைப்பற்றி நீ விசாரிக்கவேண்டாம். காரியமான நாம ரூபப் பேய்கள் உண்டாயது எப்படி? அது தோன்றமல் அழிவது எப்படி? என்று விசாரித்தல் பயனற்றதாம். ஆனல் நாம் செய்த்தக்கது யாது எனின் நீண்ட சொர்ப்பன சமானமான பிரபஞ்சம் இன்ன காரணத்தால் உண்டாயது என்பதையும் எவ்வுபாயத்தால் போம் என்பதையும் விசாரியாமல் உன்னது ஆத்மாவாய் பரிபூரண பிரமமாய் இருக்கக்கடவாய். இதுவே நீ செய்யத்தக்க உபாயமாம். இதில் காரியம் தெக்தபட நியாயம்போல் பொய்யாம் என்பதற்கு மேற்கோள் கீதாசாரம் "தெரிந்தவர்க்குத் தோற்றுவது தெக்தபடம் போல்வதல்லாற் பரந்த சகங்காரியத்திற் பயன்படாதென்றவரே!" தீர்க்க சொர்ப்பனக்காட்சி போன்றது ஜீவேஸ்வரசகத்து என்பதற்கு மேற்கோள் கீதாசாரம்85" சொர்ப்பன த்திற்றனித்தொருவன் தோற்றம் வேறில்லையங்கே கற்பனையாம் பொருளறிவு காண்பவன்போ லென்றவரோ" என்று கூறியிருப்பதால் இந்நூல்

ஆசிரியரும் சொர்ப்பன சமானம் பிரபஞ்சம் என்ருர் காரண-மான அறிவையன்றி காரியமான அறிபடுபொருள் முக்காலத்-தும் இல்லையென்பதற்கு மோற்கோள் சிவஞான வள்ளலார் சாத்திரம் பக்கம் 209 " அறிவையன்றியரியப் படும் பொருள் சிறிதுமில்லையெனத் தெளியாவிடின் மறியுமைம்புல வாதைத் திரைகளில் பிறவிமைக்கடல் வீழ்வை பெருந்தவ" என்பதனுல் அறியலாம்.

106 அன்பனே ! பொய்யான நாம ரூபப்பிரபஞ்சத்தில் எவ்வளவுக்கெவ்வளவு அபிமானம் வைத்திருந்தனேயோ அவ்வளவுக்கவ்வளவு அபிமானம் விடப்படுமாயின் அவ்வளவுக்கவ்வளவு அகமுகப்பார்வை உண்டாகும். இவ்வாறு இடைவிடாது பழகிவந்தால் உன் மனம் உன் வசத்தில் நிற்கும். அங்கனம் நின்ருல் சித்துரூப வடிவமாய், விடும். இங்கனம் நீ ஆத்ம சொரூபமான பிறகு வெறுக்கத்தக்க இந்த சரீரத்தில் இருந்தாலும் நீ ஆனந்தக்கடல் வடிவாவாய் இதில் உள்விழிப்பார்வையென்பது. கண்களை உள்ளே திருப்பிப்பார்ப்பது அன்று. கண்ணின் கருவிழிகளை மேலே சொருகிப்பார்ப்பதுமன்று. பின் யாது பொருளோ எனின் அகம் பிரம்மாகார விருத்திக்கே உள்விழிப்பார்வை எனப்-பெயராம். இதுகாறும் மாயா நிவர்த்தி உபாயம் கூறி முடித்தார்.

107 குருதேவா! சச்சிதானந்த சொரூபமான ஆத்மா-வாய தன்னைத்தவிர வேறு ஒரு பொருளும் நித்தியமாக இல்லை. அங்கனமிருக்க ஒவ்வொரு உயிராக உடம்பு தோறும் இருப்பது அந்த ஓரே சச்சிதானந்தப் பொருள்தான் என்பது பொருந்த வில்லை.ஏன் எனில் நான் நான் என்று ஒவ்வொரு ஜீவர்களிடத்திலும் இருந்துகொண்டு விவகரிக்கின்ற படியினுல் இந்த ஆத்மா சத்து என்பது ஒக்கும். சகல பதார்த்தங்களையும் அறிகின்றபடியினுல் சத்தே சித்தென்பது பொருந்தும். இதுபோல் எல்லா விர்த்திகளிலும் ஆனந்தம் தோன்ருத காரணம் யாது? இதை அருள்வீராக.

108 அன்பனே ! உன் வினவிற்கு மூன்று கவிகளால் விடையளிக்கின்றேன். ஒரு புஷ்பத்தினிடமாக கண்ணினுல்

அறியும் உருவமும், நாவினுல் அறியும் ரசமும், தோலினுல் அறியும் ஸ்பரிசமும் (ஊறும்) ஆகிய இவை இருக்கின்றன. ஆனுலும் கண்ணினுல் கந்தத்தையும் மூக்கினுல் உருவத்தையும் அறிய முடியாது. அது அது ஒவ்வொன்றைத்தான் கிரகிக்க முடியும் அதுபோல் சச்சிதானந்தம் ஆத்மாவின் சொரூப குணமானுலும் பிரபஞ்சமயமான விருத்திபேதத்தினுல் ஆத்மா வேறு, ஆனந்தம் வேறு போல் தோன்றும்.

109 அன்பனே! மேலும் சச்சிதானந்தங்கள் பேதப்படுவதற்குக் காரணம் கேட்பாய் தமோகுண விருத்தி ரஜோகுண விருத்தி, சத்துவகுண விருத்தி என. விருத்திகள் முக்குணத்தால் உண்டாகும். இதற்கு முறையே மூட விருத்தியெனவும் கோர விருத்தியெனவும், சாந்த விருத்தியெனவும் பெயர் பெறப்படும். இன்பமே வடிவமான சச்சிதானந்தங்கள் எப்பொழும் ஒரு தன்மை உடையதாலுைம் நாம் முன் கூறிய விருத்தி பேதத்தினுல் சச்சிதானந்தங்கள் வேறு வேருகத் தோன்றும் அங்கனம் தோன்றினுலும் அது வேறு வேறு அன்று.

110 அன்பனே! நமது எண்ணங்களுடைய பேதத்தால் சச்சிதானந்தங்கள் பேதப்படுவது போல் தோன்றும். அது எங்கனமெனின் அறிவற்ற சடப்பொருள்களான கல்லு, மண் காய்ந்தமரம் முதலியவைகளில் பிரம்ம சத்தா மாத்திரமாய் விளங்கும் ஏனைய சித்தும் ஆனந்தமும் விளங்காது. காமாதி கோர விருத்தியிலும் மயக்கமான மூட விருத்தியிலும் சத்தோடு சித்தும் விளங்கும். ஆனந்தம் விளங்காது. சாந்தமான விருத்தியில் சச்சிதானந்தமான மூன்றும் விளங்கும் கோரமான விருத்தியும்,மூடமானவிருத்தியும் விட்டால் சமதமாதி சாதனங்களின் வாயிலாக பிரம்மத்தின் ஆனந்தமும் வெளியாகும். இதன் உள்ளுரை: பரம்பொருள் எங்கும் நிறைந்திருக்கும் போது அது கல், மண் முதலியவைகளிலும் இருக்க வேண்டுமே எனின் நெருப்புப்பெட்டியில் நெருப்பிருந்தாலும் அது இருளை நீக்காது அன்றி சாதக பாதகமுமில்லை. அதைத் தட்டியெழுப்பினவுடன் ஒளி ஏற்பட்டு இருளை நீக்குகின்றது போல் பிரமம் சத்தாமாத்திரமாய் இருக்கும்போது சாதக

பாதகமில்லை. அன்றி அஞ்ஞான இருளையும் நீக்கவில்லை. நீக்குமெனின் சுழுத்தியவஸ்தையிலுள்ள அஞ்ஞான இருளைப் போக்காதது அனுபவம் அல்லவா? ஆகையால் அது சித்தாக (அறிவாக) வெளிப்படும் போது சாதக பாதகம் உண்டு. அகம் பிரம்மாகார விருத்தியினுல் அஞ்ஞான இருளையும் நீக்கி ஆனந்தம் அடையலாம். எங்கு அந்தக்கரணமுண்டோ அங்கு தான் சித்து விளங்கும். அந்தக்கரணம் இல்லாத விடத்தில் விளங்காது. இந்த அந்தக்கரணம் ஜீவர்களிடத்தில் தான் காணமுடியும் சடப்பொருள்களில் காணமுடியாது. இக்காரணம் பற்றி சகல நூலாசிரியர்களும் ஜீவனையே கடவுளாகப் பகர்ந்துள்ளார்கள். மேற்கோள் திருமந்திரத்தில் 'ஜீவன் பரசிவனுமே' என்றும் சிவஞானவள்ளலார் சாத்திரம் பாகம் 160ல் 'ஈசன் வேறு யான் வேறெண்ணுகின்ற பாதகரை நீசரெனக்கண்டு நினையென்றுருைசையொடும் வேதமுடிவறிந்த வேதியரைக்கூடென்றுன் பேத நிலையெல்லாம் பிரியென்றுன்" என்று கூறியிருப்பதால் அறியலாம்.

111 அவதாரிகை:- முன்கவியில் தொகுத்துக் கூறிய சச்சிதானந்த இலக்கணத்தை இக்கவியில் வகுத்துக்கூறுகின்றார். குருதேவா! சச்சிதானந்தத்தின் இலக்கணம் அறிந்திலேன். சத்தென்பது யாது? சித்தென்பது யாது? ஆனந்தமாவது எது? இதன் இலக்கணத்தை அருள்வீராக. அன்பனே உன் வினவிற்கு ஒன்பது கவிகளால் விடையளிக்கின்றேன். மூன்று காலத்திலும் மாறுதலடையாமல் இருப்பது பிரமத்தின் சத்தா மாத்திரமாம். ஒவ்வொரு விஷயங்களையும் இது இன்னது இது இன்னது என்று அறிதல் எதுவோ அது பிரம்மத்தின் சித்து அம்சமாம். இஷ்ட பதார்த்தம் கிடைத்தபோது அதை அனுபவிக்கும் தருணத்தில் உண்டாகும் ஆனந்தம் பிரம்மத்தின் ஆனந்தம்சமாம். இவை மூன்றும் ஆத்மாவாய் பிரமத்தின் சொரூப குணங்களாம்.

112 குருதேவா! நாசத்தை அடையும் இந்த சரீரத்தை நான் என்று அபிமானிக்கும் சரீரியை அதாவது தேகியை நான்கு வேதங்களின் முடிவில் கூறிய நான்கு மகாவாக்கியங்களிலும் நீயே சச்சிதானந்தப் பிரமம் என்று உபதேசிக்கினும்

நீயே சுத்தப்பிரமம் என்று சற்குரு உபதேசிப்பினும் குற்றமற்ற அந்த சச்சிதானந்தப் பிரமம் நானே என்ற அனுபவம் இந்த சரீரியான் புருஷனுக்கு எப்படியுண்டாகும். இதை அருள்வீராக. பஞ்ச கோசங்களான முப்புரத்தை ஆத்மா அல்லவென்று நே தி செய்து மித்தையாக்கிக் காட்டுவதில் மதயானையைப்போன்ற சாமர்த்தியம் உடையக்குஞ்சரக்குருநாதனே இதன் உள்ளுரை: நான்கு மகா வாக்கியமாவன சாம வேதத்தின் சாந்தோக்கிய உப நிஷத்தில் உள்ளது. தத்துவமசி மகாவாக்கியம்: ரிக் வேதத்தின் ஐதிரேய உப நிஷத்தில் உள்ளது பிரக்ஞானம் பிரம்மம் என்னும் மகா வாக்கியம். யஜுர் வேதத்தின் தைத்திரியோ உபநிஷத்தில் உள்ளது அகம் பிரம்மாஸ்மி என்னும் மகா வாக்கியம் அதர்வண வேதத்தின் முண்டகோபநிஷத்தில் உள்ளது. அயமாத்மா பிரமம் என்னும் மகாவாக்கியம். இந்த நான்கு மகா வாக்கியங்களும் பேரறிவே வடிவமான தன்சொரூபத்தையே உணர்த்தி நின்றது எனக் கொள்க.

113 அன்பனே! போனஜென்மத்தில் செய்தகருமத்தின் பயனை இந்த சரீரம் வந்தது என்று சொல்லும்போது சென்ற காலத்தில் இந்தசரீரியான ஆத்மா உண்டல்லவா! இப்போது செய்யும் கருமத்திற்கு தக்கபலன் வருங்காலத்தில் அனுபவிக்க போகின்றது என்று கூறும்போது வருகின்ற காலத்தும் இந்த ஆத்மா அழியாமல் இருக்கின்றதல்லவா. துக்கத்தை அனுபவிப்பதற்கிடமான சூட்சும சரீரமும் சுகத்தை அனுபவித்தற்கிடமான தேவ சரீரமும் சுகதுக்கத்தை கலந்து அனுபவிப்பதற்கிடமான மானிட சரீரமும் ஆகிய இந்த சரீரங்களை விளக்கிக்கொண்டிருப்பதால் நிகழ்காலத்திலும் இந்த ஆத்மா உண்டல்லவா? மேற்கூறிய சரீரங்கள் நசித்தாலும் ஆத்மா நாசமடையாமல் இருப்பதால் அது மூன்று காலத்தும் மாறுதல் அடையவில்லை. ஆகையால் அது சத்து என்பது பொருந்தும். இதில் ஆத்மா அழியாத பொருள் என்பதற்கு போன ஜென்மத்தை எடுத்துக்காட்டியது கிரம சிருஷ்டியை அனுசரித்துக் கூறியதாம். மூன்று காலம் என்பதற்கு ஜாக்கிர சொற்பன சுழுத்தியெனக் கொள்க.

114 அன்பனே! முன் கவியில் சத்து லட்சணம் சொன்னேன்: இந்தக்கவியில் சித்து லட்சணமும் ஆனந்த லட்சணமும் கூறுகின்றேன் கேட்பாய். சுழுத்தி யவஸ்தையில் உள்ள அஞ்ஞான இருளையும் இராக்காலங்களில் உள்ள பூத இருளையும் இவ்விருளினால் ஆத்மாவாய தான் மறைபடாமல் அவ்விருளைக் காண்பதுவும் அன்றி பகற்காலத்தில் உள்ள பொருள்களையும் அறிகின்ற காரணத்தால் சத்தே சித்தாகும். எல்லாப்பிரியங்களுக்கும் ஆத்மா மேலான பிரிய சொரூபமாய் இருப்பதாலும் சகல விஷயங்களையும் ஆனந்த மயமாக்குவதாலும் இந்த ஆத்மா ஆனந்தமாம். இதில் சூரியன், சந்திரன், அக்கினி முதலிய எல்லாப் பிரகாசங்களுக்கும் பிரகாசத்தை அளிப்பது ஆத்மாவாய பிரமமாம். அதுவே ஆனந்தமாம். அது தன் நிஜ சொரூபமாம்.

115 அன்பனே! மேற்கூறிய ஆனந்த சொரூபமான ஆத்மா உண்டபின பருகுவன போன்றுள்ள சுகசாதனப் பொருள் அன்றும். பின்னர்யாது பொருளோ எனின் ஆத்மா சுகப்பொருளாம். அன்னபானதி முதலிய சுக சாதனப் பொருள்கள் எல்லோருக்கும் பிரியமாகும். அதுபோல் ஆத்மாவையும் சுகசாதனமாகக் கருதுவது கூடாது. மேற்கூறிய ஆத்மா சுகசாதனமானல் உன்னுடைய ஆனந்தம் வேறே ஏது? அனுபவிப்பது யார்? ஆத்மாவாகிய உன்னைத்தவிர அனுபவிப்பதற்குக் கர்த்தா யார்? இரண்டாத்மா இல்லையே! நிரதிசயானந்தம் வேறு அதை அனுபவிக்கும் ஆத்மா வேறு என்பதில்லை. அந்த ஆத்மாவே ஆனந்தமாம். அது அதற்கு சாதனமாகாது என்பதாம். இதன் உள்ளுரை:- இதனல் ஆத்மா தன்னைத்தானே அனுபவிக்க முடியாது என்பதாயிற்று இவ்வாறே பஞ்சதசி 201-வது பக்கத்தில் “ஆத்மாதானே அனுபவமென்னும் நித்திய ஞான வடிவமாயிருத்தலால் அதற்கு அனுபவிக்கப்படும் தன்மையில்லை. ஏன் எனின் ஆத்மாவிற்கு அன்னியமாக ஞாதாவாகிய அறிபவனும் ஞானமாகிய அறிவும் இல்லாமையால் ஆத்மா தன்னைத்தானே அனுபவிக்க முடியாததாம் என்று கூறியிருப்பதால் ஆத்மா-தானே தனக்கு அறிபடுபொருளாய் அனுபவிப்பது கூடாத-

தாம். இக்காரணம் பற்றியே ஆத்மா சுகதனமன்று என்று இந்நூலாசிரியர் மறுத்தவாறு காண்க மேலும் ஆத்ம புராணம் பக்கம் 45-ல் "இவ்வஸ்து எனது சுக சாதனம் இவ்வஸ்து எனது துக்க சாதனம் என்னும் இவ்வகையாய ஞானம் போக மெனப்படும். அது சேதன மாய ஆன்மாவின் கண்ணேயே கூடும். ஏனெனின் எல்லா ஜடவஸ்துக்களும் சேதனமாய ஆன்மாவின் சுகசாதனமாம். ஜட வஸ்து ஜடத்தின் சுக சாதனமன்றும் ஆகையினால் போகத்தின் ஆஸ்ரேய வடிவ போக்தா ஆத்மாவாம் போக ரூபக்கிரியை யின் கர்த்தாவும் ஆத்மாவேயாம். ஜடவஸ்து அன்றும். ஏனெனின் சுதந்திரன் கர்த்தா எனப்படுபவன் அச்சுதந்திர தன்மை ஆத்மாவின் வேறாய ஜடவஸ்துவில் பொருந்து வதில்லை. ஆகையால் கர்த்தாவும் போக்தாவும் ஆத்மாவே யாம்." என்று கூறியிருப்பதால் ஆத்மாவே அனுபவிக்க வேண்டும் என்று கூறுபவர்கள் எல்லாம் 'அரங்கின்றி வட்டாடியற்றே நிரம்பிய நூலின்றிக்கோட்டி கொளல்" என்ற பொய்யா மொழிக்கு இலக்கானவர்கள் என்பதற்கு ஐயமில்லை பாவம்! மேலும் இந்நூல் தத்வ விளக்கப்படலம் 74-வது கவிக்கு ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகளின் உரையின் ஈற்றில் "ஓர்கிரியைக்கு யாது கர்த்தாவோமோ அதுகருமம் ஆகாது. இதனால் பிரகாசத்தின் கர்த்தாவும் தான், பிரகாசத் தின் கருமமும் தானேயென்று சொல்லுதலும் விரோதமாம்" என்று கூறியிருப்பதால் கர்த்தாவும் கருமமும் என்றாகாது. என்பதாயிற்று. ஆகுமானால் தியானிப்பவனும் அல்லது அனுபவிப்பவனும், அனுபவிக்கப்படும். பொருளும் ஒன்றுதல் விரோத தருமமாம். ஆகையால் அனுபவிக்க வேண்டும் என்ற பிராந்தியை விட்டு அனுபவ வடிவமான ஞான சொரூபமாய் எஞ்சி நிற்பாய். இதை விசார சாகரத்தின் ஆறுந்தரங்கத்தில் "சிஷ்யனே தீனத்தன்மையை விட்டு உன் சொரூபத்தைப்பார். நீயோ ஜனனமில்லாத சுத்தப்பிரமம் பார்க்கப்படுவனவற்றையெல்லாம் பிரகாசம்

செய்கின்றாய். உன் அஞ்ஞானத்தால் ஜகத்தையெல்லாம் நீ சிருஷ்டித்தப் பிறகு மறுபடியும் எல்லாவற்றையும் நாசம் செய்து நாசமற்றவனாயிருக்கின்றாய். மித்தியாப்பிரபஞ்சத்தைப் பார்த்து சிறிதுகூட மனவருத்தத்தை அடையவேண்டாம். நீ தேவர்களுக்கெல்லாம் தேவனாயிருக்கின்றாய். ஆனந்த சொரூபியாயிருக்கின்றாய். மாயையினால் உன்னிடத்தில் ஜீவன், ஈசுவரன், ஜகத்து ஆகிய மூன்றும் விளங்குகின்றன. அது ரஜ்ஜுவில் சர்ப்பமும், கிளிஞ்சலில் வெள்ளியும் விளங்குவது போலாம்" என்று கூறியிருப்பதால் அனுபவிப்பது யார்? உபய ஆன்மாவும் உளவோ? என்றார் இந்நூலாசிரியரும்.

116 அன்பனே! ஆத்மா ஒன்று அந்த ஆத்மாவை அனுபவிக்கும் மற்றொரு ஆத்மா இல்லை என்பதை விளக்கிக் காண்பிக்கின்றேன். விஷயானந்தத்தில் வரும் பிரியமானது அற்பமாம். ஆத்மாவில்வரும் பிரியம் மகத்தானதாம் அதற்கு காரணம் யாதோவெனின் விஷயானந்தத்தில்வரும் பிரியம் மாறி மாறி வரும். ஆத்மாவில்வரும் பிரியம் மாறாது. ஒரு விஷயானந்தத்தைவிட்டு மற்றொரு விஷயானந்தத்தை பற்றுவதே விஷயானந்தம்மாறிமாறிவரும்என்பதற்கு அனுபவமாம் அதுபோல் ஆத்மாவை தள்ளத்தக்கதும், கொள்ளத்தக்கதும் அன்று. ஆகையால் அந்த ஆத்மாவை விட்டவர் யார்? கொண்டவர் யார்? இதனால் விஷயானந்தத்தை விடத்தக்க ஆத்மா தன்னை ஒரு காலத்தும் விடத்தக்கதல்ல. எனவே ஆத்மா தன்னைத்தானே பற்றுதலும் விடுதலும் இல்லை மற்றொன்றைப் பற்றுதலும் விடுதலும் கூடும்.

117 குருதேவா! ஆத்மா பிரிய வடிவமாயின் சிலர் தற்கொலை செய்து கொள்ளுகிறார்களே அது ஏன்? அன்பனே ஒருவன் தற்கொலை செய்துகொண்டு இறந்தால் அவனால் வெறுக்கப்பட்ட வுடல் அவன் அன்று. எனவே ஆத்மா தனக்கு அன்னியமான தேகத்தின்கண் வெறுப்பு ஏற்பட்டதே ஒழிய தன்னிடத்தில் வெறுப்பு வந்ததில்லை இதனால் ஆன்மா ஒரு போதும் தன்னை வெறுப்பதில்லை என்று அறிவாயாக இதனால் ஆத்மாவிற்கு ஆனந்தம் சொரூப குணமாயிருத்தலால் அதற்கு எதிர்மறையான வெறுப்பு அதனிடம் இல்லை என்பதாம்.

118 அன்பனே! ஆத்மா பிரிய சொரூபம் ஆனாலும் அது தனக்கு அன்னியமான வஸ்துக்களையும் பிரியமாக்குவதில் உள்ள ஏற்றத்தாழ்வை கேட்பாயாக. தனத்திலுள்ள பிரியத்திலும் புத்திரனிடத்திலே உள்ள பிரியம் அதிகமாம் புத்திரனிடத்திலே உள்ள பிரியத்திலும் தன் ஸ்தூல தேகத்தில் உள்ள பிரியம் அதிகமாம். தன் தூல தேகத்தைப்பார்க்கிலும் கண் முதலிய இந்திரியங்களில் உள்ள பிரியம் அதிகமாம் அதிலும் பிராணனில் உள்ள பிரியம் அதிகமாம். அதிலும் அதிகப்பிரியம் ஆத்மாவிலாம். இக்காரணத்தால் இந்த ஆத்மாவே முக்கியப்பிரிய வஸ்துவாம். யுக்தி வாயிலாகப் பார்க்குமிடத்திலும் கௌணாத்மா, கர்த்தாத்மா, மித்தியாத்மா என மூன்று விதமாம். இந்த மூன்று ஆத்மாவின் விளக்கம் அடுத்த கவியில் தொடரும். இதன் உள்ளுரை: யாவரும் பிரியப்படுவது பொருள். அந்தப்பொருளை வைத்து ஆளுவதற்கு மக்கள் பேற்றை விரும்பி மிகப்பொருட் செலவில் புத்திர காமேஷ்டியாகம் செய்வதால் பொருளிலும் மகன் பிரியமாம். சிலர் அதிகப்பசி வந்த காலத்தில் மகனை விலைபேசி விற்றுத் தம் உடலை பாதுகாப்பதனால் தனயனிலும் தம் உடல் பிரியமாம் காதடைப்பு, கண்ணோய் முதலிய இந்திரியங்களின் நோயை நீக்கிக் கொள்ள மருந்து உண்டு பத்தியம் இருந்து தம் உடலை வாட்டுவதால் உடம்பைப் பார்க்கிலும் இந்திரியம் பிரியமாம். கை, கால் முதலிய இந்திரியங்களில் ஒன்றைத் துண்டித்தால் உயிர் பிழைக்கும் என்று மருத்துவர் கூறினால் அதற்கு நாம் உடன் படுவதால் இந்திரியங்களைப் பார்க்கிலும் பிராணன் அதிகப் பிரியமாம். சிலர் மோட்சத்தை அடைய விரும்பி கங்கா நதியில் வீழ்ந்து பிராணனை விடுவதால் பிராணனைப்பார்க்கிலும் ஆத்மாவே மிகப்பிரியமாம். இவ்வாறாக ஊகித்துணருமேயானால் இந்தப்பிரியங்கள் எல்லாம் ஒன்றுக்கு ஒன்று அதிகமாகும். மேற்கூறிய பிரியங்களெல்லாம் கௌணாத்மா, மித்தியாத்மா, கர்த்தாத்மா ஆகிய மூன்றில் அடக்கிக் கூறுகின்றார் இந்நூலாசிரியர்.

119 அன்பனே! பிரியத்தின் ஏற்றத்தாழ்வை இன்னும் கேட்பாய். ஒருவன் மரணகாலத்தில் சகல தனத்தையும் புத்திரனுக்கு உரிமையாகக் கொடுப்பதால் தனத்தைப் பார்க்-

கிலும் புத்திரனுகிய கௌணுத்மா முக்கியம். ஸ்தூல தேகத்தை போஷிக்கச்செய்வதால் அவனுக்கு தூல தேகமான மித்தியாத்மாவே முக்கியமாகும். பெரிய தவத்தைச்செய்து மோட்சத்தை அடைய விரும்புவதால் அதற்குக் கர்த்தாத்மாவான ஜீவாத்மாவே முக்கியமாம். தத்துவ விசாரம் செய்யும் உத்தம புருஷனுக்கு இந்த மூன்று ஆத்மாவைப்பார்க்கிலும் சச்சிதானந்த சொரூபமான தானே மிகமுக்கியமாம்.

120 அன்பனே! விஷயங்களிலுள்ள பிரியம் நிலை பெருது மாறி மாறி வருவதுபோல் ஆத்மாவில் உள்ளபிரியம் மாருது. ஒரு தன்மைத்தாய் இருப்பதால் ஆத்மாவின் சொரூபானந்தம் மாருது. ஒரு புருஷனுக்கு பிரதி கூலமான புலியாயினும் அவனுக்கு அனுகூலகாரியம் செய்யுமாயின் அதனிடத்தில் அவனுக்குப் பிரியம் உண்டாகும். இதுபோல் தன் புத்திரனுயினும் பிரதிகூல காரியத்தைச் செய்தால் அவன் மேல் வெறுப்புண்டாகும் அல்லவா. புல் முதலியவைகளும் ஓர் சமயத்தில் விருப்புக்கும், மற்ருேர் சமயத்தில் வெறுப்பிற்கும் காரணமாயிருக்கின்றன. சித்து வடிவமான ஆத்மா இப்படி பலவஸ்துக்களில் தனது பிரியத்தை வெளிப்படுத்திலும், தனது சொரூபானந்தத்தை விடாதிருக்கின்றன. ஆகையால் உன் வாஸ்தவ சொரூபத்தை பஞ்ச கோசத்தினும் வேறுபிரித்து ஆனந்த சொரூபம் ஆவாய். இதுகாறும் ஆத்மாவின் பிரியத்தின் ஏற்றத்தாழ்வை கூறி முடித்தார்.

121 குருதேவா! ஆத்மா ஆனந்த சொரூம் என்று சொன்னீர் அல்லவா. அந்த ஆனந்தம் எத்தனை விதமாய் இருக்கும் என்பதை அருள்வீராக. அன்பனே இது முதல் பதினேரு கவிகளால் உன்வினவான ஆனந்தத்தின் வகைத் தொகைகளைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக. ஞான வடிவான பிரமானந்தம் வாசனனந்தம், விஷயானந்தம் என்று ஆனந்தம் மூன்று விதமாயிருக்கும். இதை எண்வகை ஆனந்தம் என்றும் சிலர் சொல்லுவார்கள். அவை ஐந்தும் இந்த மூன்றில் அடங்கும். ஆக எண்வகை ஆனந்தமும் இன்னது இன்னது என்று கூறுகின்றேன் கேட்பாயாக.

122 அன்பனே! எண்வகை ஆனந்தங்களையும் தொகுத்துக்கூறுகின்றேன் கேட்பாய். 1) ஒருவன் விரும்பிய வஸ்துவை அடைந்தபின் இச்சை நிவர்த்தி வாயிலாக உள்முக மனோவிர்த்தியில் உண்டாகும் ஆனந்தம் விஷயானந்தமாம். 2) சுழுத்தியவஸ்தையில் உள்ள சுயம்பிரகாச ஆனந்தம் பிரமானந்தமாம். 3) நித்திரை தெளிவில் சிறிது நேரம் சும்மா அமர்ந்திருப்பதால் உண்டாகுமானந்தம் வாசனானந்தமாம். 4) பிரியங்களில் நானே மிகப்பிரியன் என்று விவேகத்தில் தோன்றும் ஆனந்தம் ஆத்மானந்தமாம். 5) யோகாப்பியாசத்தால் மனோலயமான விடத்தில் தோன்றும் ஆனந்தம் முக்கியானந்தமாம். 6) விருப்பு, வெறுப்பு அற்ற விடத்தில் தோன்றும் ஆனந்தம் நிஜானந்தமாம். 7) நாம ரூபங்கள் சத்தியம் என்னும் துவைதப் பிராந்தி நீங்கினவிடத்தில் உளதாகும் ஆனந்தம் அத்வைதானந்தமாம். 8) தத்துவ மகாவாக்கிய விசாரத்தால் உளதாகும் ஆனந்தம் வித்தை ஆனந்தமாம்,

123 முன்கூறிய ஆனந்தங்களின் இயல்பை வகுத்துக் கூறுகின்றேன் கேட்பாயாக. விஷயானந்தம் எவ்வாறு உண்டாகும் என நீ வினவின் கேட்பாய். நனவில் அனுகூல பதார்த்தங்களை நாடி அங்கும் இங்கும் அலைந்து, திரிந்து களைப்புற்ற ஜீவன் தான் ஓய்வு எடுத்துக்கொள்ளுதல் பொருட்டு படுக்கையில் படுத்து சிறிது நேரம் உறங்கிய பின், நனவில் மகளீரோடு உற்ற கலவியின் நுகர்ச்சியின்போது அவனது அந்தக்கரணத்தில் ஆத்மாவின் பிரதி பிம்பம் ஏற்படும். அப்போது அவனுக்கு ஆனந்தம் உண்டாகும். இங்கனம் உண்டாகும் ஆனந்தத்தை விஷய சுகானந்தம் என்பர் மேலோர்கள்.

124 அன்பனே! இனி பிரமானந்தத்தைப் பற்றிக் கூறுகின்றேன் கேட்பாயாக. நனவில் உணவுகளைத் தேடி அலைந்த கஷ்ட நிவர்த்திக்காக பருந்து என்ற பறவையானது தனது கூண்டிற்குள் வேகமாக சென்று அடங்கிக்கொள்வது போல் இந்த ஜீவனும் நனவில் விஷயங்களைத்தேடி அலைந்த சிரமம் தீர்த்துக்கோள்வதற்காக சுழுத்தி அவஸ்தையில்

ஆதியந்தமற்ற பரனுகிய தன் நிஜரூபப் பிரமத்தோடு ஐக்கியமாவன் அப்போது தன்னைத்தவிர மற்றென்றையும் நினையாமல் ஆனந்த சொரூபமாக விளங்குவன் அதுவே பிரமானந்தமாம்.

125 அன்பனே! சுழுத்தியில் உள்ள ஆனந்தம் பிரமானந்தமாம் என்பதற்கு சுருதி யுக்தி அனுபவம் கூறு-கின்றேன். சுழுத்தியானந்தம், பிரமானந்தம் என்று அதர்வண வேதத்தில் கைவல்யோபநிஷத்தின் தாற்பரிய-மாம். இது சுருதி வாக்கியம் எனப்படும். நித்திரைக்குப் பங்கம் வராமல் இருப்பதற்காக படுக்கை, சொகுவலை முதலியவற்றை சம்பாதித்துக் கொள்வதே அந்த சுழுத்தியில் ஆனந்தம் உண்டு என்பதற்கு யுக்தியாம். தனக்குப்பிரியமான மங்கையோடு கலவிசெய்யுங் காலத்தில் நன்மையும் தீமையும் ஆண் பெண் முறைமையும் உள் வெளி என்ற பேதமும் தெரியாமல் இருப்பது அனுபவமாம். அதுபோல் சுழுத்தியிலும் அந்தப்பேதம் தெரியாது இருப்பதால் அது பிரமானந்தமாம். இதன்உள்ளுரை:- இக்கவியில் அமளி என்பது அயர்ந்த தூக்கமான சுழுத்தி அவஸ்தையையும், மகளிர் கூட்டுறவில் வரும் ஆலிங்கனத்தையும் குறிக்கும். இதில் ஆலிங்கனத்தில் உள் வெளி என்ற பேதம் தெரியாதது போல் சுழுத்தியிலும் உள் வெளி பேதம் தெரியாத அனுபவத்தை உவமையாக சில உரை ஆசிரியர்கள் கூறியிருக்கிறார்கள். சிலர் அமளி என்பது ஆலிங்கனத்தைக் குறிக்காது ஏனெனின் ஆலிங்கனத்தில் உள் வெளி பேதம் தெரியும் என்று கூறியிருக்கிறார்கள். அதுவும் ஒரு பட்சமாம் எப்படி இருந்த போதிலும் உவமேய-மான சுழுத்தியானந்தத்தைத்தான் இக்கவியில் விளக்கிக்கூற இந்நூலாசிரியர் முற்பட்டார் என்பதற்கு ஐயமில்லை. எனவே அமளி என்ற சொல்லுக்கு சுழுத்தியானந்தம் அல்லது பிரமானந்தம் என்றுபொருள் கொள்வதே எமது பட்சமாம். பஞ்சதசி 1028-ம் பக்கம் "சுழுத்தியில் ஜீவனில்லை. பிரமமே உள்ளது." மேற்படி நூல் 1045-ம் பக்கம் டிப்பணியில் "சுழுத்தியில் உள்ள ஆனந்தம் நிரதிசயானந்மாம் என்று விசேஷமாக எப்போது அறிகின்ருேே அப்போதே அஞ்ஞானம் நிவர்த்தியாயிற்று" இதில் விசேஷ மென்பது

நான் சச்சிதானந்தன் என்ற நிச்சயித்தைக் குறிக்கும். பிரமானந்த யுக்தி ரத்னாகரம் 305-ம் பக்கம் "சுழுத்தியில் அந்தக்கரணமில்லை ஆதலால் சுழுத்தியில் உள்ள சுகம் நிருபாதிக சுகமாம்" ஆத்ம புராணம் பக்கம் 44-ல் 'சுழுத்தியில் சொரூபானந்தமே உள்ளது.' தத்துவானுசந்தானம் பக்கம் 134-ல் "சுழுத்தியில் ஓர் விஷயத்தாலும் சுகமுண்டாகின்றதில்லை. ஆனால் தனது சொரூப இன்பமேயுள்ளது என்றும் கூறியிருப்பதை அனுசரித்து இந்நூலாசிரியரும் சுழுத்தியில் உள்ள ஆனந்தம் பிரமானந்தம் என்றார். மேலும் சுழுத்தியில் காணும் ஆனந்தம் ஏதாவது ஒரு விஷயத்தில் இருந்து வந்ததன்று. அங்கு விஷயங்கள் ஒன்றுமில்லை. உடம்பில் உள்ள உறுப்புக்கள் ஏதாவது ஒன்றில் நின்று அந்த ஆனந்தம் வந்ததாகக்கருத இடமில்லை. ஏனெனின் சரீர உறுப்புக்கள் அனைத்தும் சடப்பொருளாகும் சடத்தில் நின்று ஆனந்தம் வரும் என்பது பொருந்தாது. மேலும் சடப்பொருளும் ஆனந்தமும் பேதப் பொருளா? அல்லது அபேதப்பொருளா? இதற்கு விடை பேதப்பொருள் எனின் சடம் ஒரு பொருளும், ஆனந்தம் ஒரு பொருளும் ஆக இரு பொருள்பட்டு கண்டத்துவ தோஷம் வரும். வருமானால் ஆனந்தம் பிரமம் என்னும் சுருதிக்கு விரோதமாம். இனி இரண்டும் அபேதப்பொருள் எனின் முதலும் சினையும்போல் ஒன்றாக வேண்டும் ஆகுமானால் இரண்டிற்கும் முதல் ஒன்றாக முடியும். ஆகுமானால் சரீரத்தின் உறுப்புக்களில் ஒன்றாவது ஆனந்தமாக இருக்க வேண்டும். இருக்குமானால் உறுப்புக்களில் சடத்தன்மை காணக்கூடாது. காணுகின்றபடியினால் சடப்பொருள் வேறு, ஆனந்தம் வேறு என்பதாயிற்று. எனவே சுழுத்தியானந்தம் ஒரு விஷயத்தில் நின்றாவது அல்லது சரீர உறுப்புக்களில் நின்றாவது உற்பத்தியாகின்றதில்லை. இக்காரணத்தால் அந்த ஆனந்தம் நிரதிசய அகண்டமாக நிறைந்துள்ளது இதுபற்றி தூங்கும் சுகமது பிரம சுகமெனல் சுருதிப்பொருள் என்றார்.

126 தேவர்கள் போற்றும் குருதேவா! உலகத்தில் ஒருவனுடைய அனுபவம் மற்றொருவனுக்கு வராதல்லவா.

அங்கனமிருக்க பஞ்சகோசங்களில் ஒன்றான மனோமய கோசம் எனப்படும் மனதும் விஞ்ஞான மய கோசமெனப்படும் புத்தியும், சுழுத்தியில் லயமடைந்தபின் ஆனந்த மயனல்லவா சுழுத்தி சுகத்தை அனுபவிக்கின்றான். இந்த அனுபவம் விஞ்ஞான மயனுன புத்தியில் நினைவு வடிவமாக வருவது பொருந்தாதே. ஏனெனில் சுழுத்தி காலத்தில் புத்தியுமனமுமில்லை. இல்லாதிருக்க நனவில் அந்தக்கரணத்திற்கு சுழுத்தியானந்தானுபவம் எவ்வாறுண்டாம்? இதை அருள்வீராக.

127. அன்பனே! உன் வினவிற்கு விடையளிக்கின்றேன் கேட்பாய். ஒருதரம் உருக்கி பின் கட்டியான நெய்யும், உருகின நெய்யும் உருவில் வேறு வேறு. சுவையில் ஒன்று அதுபோல் விஞ்ஞான மயன், ஆனந்த மயன் என்னும்பேதம் மாயா அந்தக்கரண உபாதியால் இரண்டாகச் சொல்லுகின்றதே ஒழிய இரண்டிலுமுள்ள சேதனம் ஒன்றேயாம். நனவில் அந்தக்கரண உபாதியோடு சேர்ந்துள்ள சேதனமே சுழுத்தியிலும் ஆனந்த வடிவமாயுள்ளது. ஆனாலும் அந்தக் கரணம் லயமான சூட்சும அவஸ்தையை அடைந்து சுழுத்தியில் பிரம்மானந்தத்தை அனுபவிப்பவன் ஆனந்த மயனேயாவன். ஆதலால் ஆனந்த மயன் விஞ்ஞான மயன் என்ற இருவரும் பேதமிலர். எங்கனம் மழைத்துளிகளும், ஜலமும், வெல்லமும் பாகும் ஒன்றுகுமோ அங்கனமே இருவரும் ஒருவரேயாவர். இதன் உள்ளுரை: 'மாயா விருத்தியெனும் நுண்கரணம் தன்னால் அனுபவித்தல் சுழுத்தியாம்." என்று வேதாந்த சூடாமணி கூறுவதால் சூட்சும அந்தக்கரணம் ஒப்பப்பட்டிருக்கிறது. இங்கனம் ஒப்பினதுவும் பூர்வபட்சமேயாம். சித்தாந்த பட்சம் யாதோவெனின் சுழுத்தியில் அந்தக் கரணமில்லை. "அங்கு எந்த ஆனந்த மயன் இருக்கின்றனோ அவனே விஞ்ஞான வடிவம் அடைந்து ஸ்தான பேதத்தால் சொற்பனத்தையாவது, ஜாக்கிரத்தையாவது அடைகின்றான்' என்று பஞ்சதசி யோகானந்தப் பிரகரணம் கூறுகின்றது. எனவே சுழுத்தியில் எந்தப்பிரமானந்தம் இருக்கின்றதோ அந்தப் பிரமானந்தம் நனவில் விஞ்ஞான மயனுன புத்தியில் விளங்குகின்றது. இதை அறிவிப்பதற்காக வெல்லமும்

பாகும் போலும் மழைத்துளிகளும் ஜலமும் போலும் என்ற உவமானத்தைக்காட்டினுர். உவமானத்தில் மேற்கூறிய இரண்டிற்கும் முதல் ஒன்ருனவாறு போல் உவமேயத்திலும் விஞ்ஞான மயன் ஆனந்த மயன் என்னும் இரண்டிற்கும் முதல் ஒன்றுதான் என்பதற்கையமில்லை. அங்கனமிருக்க மழை துளிகளுக்கும் வெல்லத்திற்கும் உயர்வும், ஜலத்திற்கும் பாகுக்கும் தாழ்வும் கூறுவது அறிவுடமையாகுமா? ஆகாது அதுபோல் மழைத்துளிகளும் வெல்லமும் போன்ற பிரமத்-திற்கும் அல்லது ஈசுவரனுக்கும் உயர்வும் நீரும் பாகும் போன்ற விஞ்ஞான மயனை ஜீவனுக்குத் தாழ்வும் காணுவது அறிவுடைமையாகுமா? ஆனந்த மயன், விஞ்ஞான மயன் ஆகிய இரண்டிற்கும் முதல் ஒன்ருயிருக்க பேதப்படுத்திக்கூறி நடைமுறைப்பழக்கத்தில் கொண்டுவந்தது பேதமையிலும் மிகு பேதமையாம். இதில் விஞ்ஞான மயன், ஜீவன் எனப்-படும். எனவே ஜீவர்கள் எல்லாம் பிரமமே என்ருயிற்று ஆகுமாதல் ஜீவர்கள் வேறு, கடவுள் வேறு என்று பிரிப்பதற்கிடமில்லை. மேலும் இக்கவிக்கு ஸ்ரீபொன்னப்பல சுவாமிகள் உரை பக்கம் 397-ல் 'கரணலாபேக்ஷையின்றி பிரம்மானந்தத்தை அனுபவியா நிற்கும் ஆனந்தமயன்'என்று கூறியிருப்பதால் ஆத்மா அந்தக்கரணம் முதலியவற்ருேடு கூடியும் கூடாமலும் மூன்றவஸ்தையிலும் இருக்கின்றது. இங்கனமிருக்கும் சேதனமே பரம்பொருளாம். இக்கவியில் ஞானசுகமுணுமானந்தன் என்பதில் ஞான சுகத்தை உண்ணும் என்று பொருள் கொளல் ஆகாது. ஏனெனின் இரண்டுபொருள் உள்ள இடத்தில்தான் உண்ணுதல் என்ற தொழில் கூடும். இந்தப்படலம் 115-வது கவியில் உபய ஆத்மாவும் உளவோ? அதாவது இரண்டாத்மா உண்டோ? என்று இந்நூலாசிரியரே நம்மனேரே கேள்வி கேட்டிருப்ப-தால் ஒன்றை மற்ருென்று அனுபவித்தது என்று பொருள் கொள்ளக்கூடாது. உண்ணல் அல்லது அனுபவித்தல் என்று வரும் இடங்களில் எல்லாம் சொரூபமாத்திரமாக இருந்தது என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். இது போல் ஐக்கியம் அல்லது இரண்டறக் கலத்தல், ஜீவன் முக்தி விதேக முக்தி, நிர்விகல்ப சமாதி' நனவிற் சுழுத்தி, வரிட்ட

நிலை என்று வருமிடங்களில் எல்லாம் அஞ்ஞான நிவர்த்தி என்றே பொருள் கொள்ளுதல் வேண்டும் என்று சங்கர பாஷ்யம் கூறுவதை இங்குணர்க.

128 குருதேவா! இந்த ஜீவன் சுழுத்தியில் பிரமத்தோடு கலந்து பிரம்மானந்த மயமாய் இருந்தபின் அதை விடுத்து நனவில் வெளிவருவதற்குக்காரணம் யாது? இதனை அருள்வீராக. அன்பனே தேகாதிப்பிரபஞ்ச வாசனை என்னும் கர்மத்துடன் சுழுத்தியில் இந்த ஜீவன் அடங்கி இருந்தமையால் மீண்டும் அந்தக்கர்மம் இந்த ஜீவனை வெளியில் கொண்டுவரும். சுழுத்தியவஸ்தையை விட்டு நனவிற்கு வந்தவன் சிறிது நேரம் விருப்பு வெறுப்பின்றி சும்மாயிருக்கின்றான். அதுவுமன்றி அவன் அந்நேரம் வெளியிலும் போகான். ஒன்றைப்பற்றவுமினல்ல மறதியையும் அடையமாட்டான். உள்ளே அனுபவித்த ஆனந்தத்தை விடாமல் ஒருவிஷயத்தையும் கருதாமல் உதாசீனனாய் இருப்பதால் இதுவே வாசனை ஆனந்தமாம்.

129 அன்பனே! அந்த வாசனானந்தத்துடன் அவன் ஏன் இருக்கவில்லையெனின் கேட்பாய். சுழுத்தியில் நின்று வெளியில் இழுக்கச்செய்த கருமம் அத்துடனில்லாமல் உடனே தேகமேதான் என்று அபிமானித்து பலவேறுபட்ட சுகதுக்கங்களில் அலைந்து உழன்ற துக்கத்தால் பிரம்மானந்தத்தை மறந்தேபோம். ஆனாலும் முன்கருமம் சுகதுக்கம் தரும். இதற்கிடையில் மௌனமான உதாசீன சுகமுண்டாகும். இதற்கு அனுபவம் யாதோவெனின் எந்தப் புருஷனும் நான் யாதொரு சிந்தனையுமில்லாமல் சுகமாயிருந்தேன் என்று கூறுவதே அனுபவமாம். இந்தப்படியான உதாசீன சுகமே நிஜானந்தமாம். இதில் மௌனம் என்பது தன்னையன்றி மற்றொன்றை நினையாதிருத்தல் எனக் கொள்க.

130 அன்பனே! முக்கியானந்தத்தின் இயல்பை கேட்பாய். பத்மாசனத்தில் உட்கார்ந்து உடம்பை தறிபோல் வைப்பாயாக. அதன்பின்னர் புத்தியை சங்கற்பத்திலாவது

விகற்பத்திலாவது செல்ல விடாமல் தராசின் நுனியைப் போல் சமநிலையில் வைத்துக்கொள். புறவிஷயங்களை ஒன்றையும் சுட்டியறியாமலும், தூக்கத்தை அடையாமலும் இருப்பாயாகில் அதுவே சுத்தாத்ம நிலையாகும். இதில் தோன்றும் ஆனந்தமே முத்தியானந்தமாகும். ஜீவனுக்கு நான் கர்த்தா என்னும் அகங்காரம் சகஜமாக இருந்தால் அது நிஜானந்தமாம். அந்த அகங்காரம் லயமானல் முக்தியானந்தமாகும். ஆகையால் நிஜானந்தம் முக்தியானந்தம் ஆகாது என்பதற்கு உதாரணம் கூறுகின்றேன். குடத்திற்குள் ஜலமிருந்தால் வெளிப்புறத்திலுள்ள குளிர்ச்சி ஜலமல்ல அது குணமாம். ஜலம் குணியாம். அதுபோல் நிஜானந்தம் குணமும் முக்கியானந்தம் குணியுமாம் எனக் கொள்க.

131 அன்பனே! முன்கூறிய முக்கியானந்தத்தின் பெருமையை இன்னும் கேட்பாயாக (1) சர்வபௌமன் அதாவது ஏக சக்ராதிபதி (2) மனுட கந்தர்வன் (3) தேவ கந்தர்வன் (4) பிதிர் (5) அஜானதேவன் (6) கருமத்தேவன் (7) முக்கியதேவர்கள் (8) இந்திரன் (9) பிரகஸ்பதி (10) பிரஜாபதி என்னும் விராட் (11) இரணியகர்ப்பன் என்னும் பிரமன் ஆகிய இவர்களுடைய ஆனந்தங்கள் ஒன்றுக்கு ஒன்று நூறு பங்கு அதிகமாகும். இவ்வாறுகிய ஆனந்தங்கள் அனைத்தும் பிரமானந்தக்கடலின் நுரை. அலை, திவலை போல்வனவாகும். இதன் உள்ளுரை :- ஆனந்தம் ஒன்றே யொழிய இரண்டல்ல. அது பெரிதுக்கெல்லாம் பெரிதாயிருப்பதால் பிரமம் எனவும், அதன் சொரூபகுணம் ஆனந்தமாயிப்பதால் ஆனந்தம் எனவும் கூறப்படும். மேற்கூறிய பிரமானந்தமே விஷயானந்தமாகவும் வாசனை யானந்தமாகவும் மீண்டும் அதுவே ஐவகையாகவும் அந்த ஐந்தும் இந்த மூன்றில் அடங்கும் எனவும் ஆக ஆனந்தம் எண்வகை யெனவும் இதன் விரிவு ஏகசக்கராதிபதி முதல் பதினொன்றுகவும் கூறினர். இவ்வானந்தங்கள் யாவும் கடலின் அலை, நுரை, குமிழியைப்போலவும் பிரமானந்தம் பிரளய காலத்து வெள்ளக்கடல் போலவும் உதாரண முகத்தால் கூறியதை உய்த்துணர்க,

132 அன்பனே! மேற்கூறிய பிரமானந்தம் உடையவர்களுடைய அனுபவத்துக்கு சான்று கூறுகின்றேன் கேட்பாய். எத்தகைய மனிதனுயினும் ஞானபூமி ஏழினுள் ஏழாவது பூமியில் அதாவது பிரம சொரூபமாக நிலைபெற்று இருப்பானேயாமாகில் அவன் நாரதன், சுகன், சிவன், திருமால் பிரமன் முதலிய அறிஞரது அனுபவமாகிய அறிவானந்த வடிவன் ஆவன். உலக விவகாரம் இல்லாமலும், தூங்காமலும் இருக்கும் இந்நிலையே அறிவானந்த வடிவமாம். இதுவே முக்கிய நிஜானந்த அனுபவமாமென்று முன் கூறிய நாரதன் முதலிய உவமானமுமாம் என அறியக்கடவாய். இத்தகைய பரம புருஷரது திருவடிகளில் உதிரா நின்ற தூளிகள் என் சிரசில் தரிக்கத்தக்கதாம். இதன் உள்ளுரை: ஞான பூமியைப் பற்றி பின் கூறப்படும். துரியம் என்பதற்கு நாலாவது எனப் பொருள்கொள்க. அதாவது மூன்று சரீரத்தையும், மூன்று அவஸ்தையையும் விளக்கிக்கொண்டிருக்கும் பொருள் நான்காவதாக இருப்பதால் அதைத்துரியம் என்றூர். துரியம் ஓர் அவஸ்தையில் சேர்ந்ததல்ல. சேர்ந்ததாமாயின் அதற்குத் தத்துவம் சொல்லவேண்டும். எனவே சொரூபத்திற்கு உரிய பரியாயப் பெயர் என அறிக. இதை ஸ்ரீபொன்னம்பல சுவாமிகள் உரை 205-வது பக்கம் "மூவகை ஜீவர்களுக்கு சாட்சி நான்காம் பொருளாதலால் சொரூபம் துரியம் எனப்படும்" என்றுகூறியிருப்பதால் அறியலாம்.

133 பிறப்பென்னும் பேதமை நீங்கி சிறப்பென்னும் செம்பொருள் கண்ட சிஷ்யனே! முன் கவிகளில் ஐந்துவித ஆனந்தத்தைச் சொன்னேம். அதாவது இந்தப்படலம் 123-வது செய்யுளில் விஷயானந்தமும், 124-முதல் 127 வரையில் பிரமானந்தமும், 128ல் வாசனனந்தமும், 129-ல் நிஜானந்தமும், 130-ல் முக்கியானந்தமும் ஆக ஐவகையானந்தங்களும் கூறினேம். இனி வித்தையானந்தத்தை கடைசியில் சொல்லுவோம். முன் மாயையைப்பற்றியும் சச்சிதானந்தத்தைபற்றியும் கூறியபோது வேதமுடிவான அத்வைதானந்தமும், ஆத்மானந்தமும் அங்கே சொன்னேம். அதாவது 95 முதல் 106 வரையில் ஆத்மானந்தமும் 114 முதல் 120 வரை அத்வைதானந்தமும் கூறினேம்.

அன்பனே இதில் இன்னும் உனக்கு ஐயமுண்டேல் சொல்லு வாயாக. இதுகாறும் ஆனந்தங்களின் இலக்கணம் கூறி முடித்தார். மேல் சச்சிதானந்தத்தின் ஒருமை இலக்கணம் கூறுகின்றார்.

134 ஜகஜீவ பர கற்பனைக்கு ஆதாரமான குருதேவா! கேட்டு அருள்வீராக. முன் உபதேசித்த சச்சிதானந்தப் பதங்களுக்குள் சத்துவேறு, சித்துவேறும், ஆனந்தம் வேருக இருக்குமா? அல்லது இம்மூன்றும் ஆத்மாவின் சொரூபகுண மாக இருக்குமா? வேறுவேறு எனின் ஒவ்வொரு விஷயத்தைக் கண்டு தாவிச்செல்லும் என் மனமானது ஒரு வழிப்படுதல் எவ்வாறு கூடும். அவை அஸ்தம், கரம், பாணி என்று ஒரு கைக்கு பரியாயப் பெயர்போல் ஆத்மாவின் பரியாய நாமமாக அதாவது ஆத்மாவான பிரமத்தையே போதிக்கின்றதா? என்பது எனக்குத்தெரியாமல் இருக்கின்றது. ஆகையால் பல மலரின் மதுக்களை தேனீ ஒன்ருய்ச்சேர்த்த தேன்போல் சச்சிதானந்தங்களின் ஒருமையை அருளிச்செய்வீராக. இதன் உள்ளுரை: மேற்கூறிய சச்சிதானந்தமே கடவுளாம். இதை அறியாது சிலர் கடவுள் வேறு, ஆத்மா வேறு என்றும் அவையிரண்டும் பிறிது ஒரு காலத்தில் ஒன்று சேர்வதே அத்வைதமாம் என்று கூறுவர். அவர்களைப்பற்றி கோ. வடிவேலு செட்டியார் கைவல்யம் 248-வது பக்கத்தில் "சுருதியினுள் ஏகமே வாத்வைதம் என்ற வாக்கியத்தின் பொருள் உணராதார் சொற்பனம்போல் கற்பனையாக பேதப் பொருள் இரண்டும் தம்முள் அபேதமாவதற்குறிய சங்கற்ப விசேஷணமே அத்வைதமாம் என்று கூறுவார்கள்" என்று கூறி மறுத்திருப்பதால் ஆத்மாவின் சொரூபநிலையே அத்வைத மாம். மேற்கூறிய பேதப்பொருள் இரண்டும் தம்முள் அபேத மானல். மீண்டும் பிரிந்து போகும். அது ஆன்ருேர் வாக்கியத் திற்கு விரோதமாம். "பட்டினத்து சுவாமிகள் புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்" என்றும் "கூடுதலுடன் பிரிதலற்று என்று தாயுமான சுவாமிகளும் கூறியிருப்பதற்கு விரோதமாம் இதுபற்றி பாரதியார்பாடல் 340வது பக்கத்தில்" அத்வைதம் கண்டால் மரணமுண்டோ' என்றும் டி யார் பாடல்

"சாமி நீ; சாமி நீ; கடவுள் நீயே;
தத்வமஸி; தத்வமஸி; நீயே அஃதாம்;
பூமியிலே நீ கடவுளில்லை யென்று
புகல்வது நின் மனத்துள்ளே புகுந்த மாயை;
சாமி நீ அம்மாயை தன்னை நீக்கி
ஸதா காலம் 'சிவோஹ' மென்று -ஸாதிப்பாயே'

என்றும் மகாத்மா காந்திஜீ எழுதியுள்ள ஹிந்து தருமம் என்னும் புத்தகத்தின் 38வது பக்கத்தில் "ஒவ்வொரு உயிரும் ஈஸ்வர சொரூபமாதலால் உயிர்களுக்குத்தொண்டு செய்வதே கடவுள் தொண்டாகும். தேசப்பணியே தெய்வப்பணி ஆகும் என்றும் கூறியிருப்பதால் துவைதப் பிராந்தியை விட்டு அத்வைத நிலையில் இருப்பாயாக. இந்நிலையில் ஜனன மரணம் யாருக்கு?

135 அன்பனே! உன் வினாவிற்கு விடையாக சச்சிதானந்தத்தின் ஒருமையையும் அதனது இலக்கணத்தையும் கூறுகின்றேன் கேட்பாய். உவமானமாக குளிர், இளகல், வெண்மை என்ற பதங்களினால் ஜலம் மூன்று கூறாயதோ? இவ்வாறே ஒளி, தவனம், செம்மை என்றபதங்களினால் அக்கினியும் மூன்று கூறாயதோ? இல்லை. அதுபோல் ஆகாசமுதல் அகங்காரம் பரியந்தமான சகல பிரபஞ்சமனைத்தும் பழுதையில் பாம்புபோல் தோன்றி இருப்பதால் அதன் காரியமான தத்துவங்கள் அனைத்தும் அசத்து, சட, துக்க ரூபமெனக் கண்டு நேதி செய்து பார்த்தால் அவைகளுக்கு விளக்கம் தரும் சத்து, சித்து ஆனந்த சொரூபமான பிரமம் ஏகமாம். இதற்கு மேற்கோள் பிரபோத சந்திரோதயம் பக்கம் 247-ல் பிரபோதன் வாக்கியம் "நான் தேவர் மனிதர் முதலிய எழுவகைப் பிறப்புமல்லேன் அசரங்களுமல்லேன், பஞ்ச பூதங்களுமல்லேன், ஞானேந்திரியங்களுமல்லேன், கன்மேந்திரியங்களுமல்லேன், பஞ்ச பிராணங்களுமல்லேன், அந்தக்கரண சதுஷ்டயமுமல்லேன், இவ்வுலகத்தில் காணப்படுகிற எல்லாப்பொருள்களும் என் கண்ணுக்குச் சச்சிதானந்தமயமாகவே காணப்படுகின்றன" என்று கூறுவதால் நீயும் உலகை சச்சிதானந்தமாகப்பார்த்து இன்புற்று இருப்பாயாக.

136 அன்பனே! சச்சிதானந்தங்கள் வேறு வேறல்ல என்பதற்கு வேதத்தின் விதி நாம வாக்கிய பிரமணங்களைக் கேட்பாயாக. உற்பத்தி நாசரகிதமாதலின் நித்தியம் எனவும் எங்கும் நிறைந்திருத்தலின் பூரணம் எனவும், சஜாதியாதி பேத ரகிதமாதலின் ஏகம் எனவும், உண்மையாதலின் பரமார்த்தம் எனவும், ஞானவடிவமாயிருத்தலின் பிரமம் எனவும் எல்லாவற்றிற்கும் காரணமாயிருத்தலின் நிதானம் எனவும், எப்பொழுதும் ஒரு தன்மைத்தாய் இருத்தலின் சாந்தமெனவும், காரிய காரண ரகிதமாதலின் சத்தியமெனவும், மோட்சவடிமாயிருத்தலின் கேவலமெனவும், மூன்றவஸ்தைக்கும் சாட்சியாயிருத்தலின் துரியம் எனவும், விவகாரமற்றதாதலின் சமம் எனவும், திருசியங்களை அறிவதாயிருத்தலின் திருக் எனவும், கொல்லனது அடைக்கல்லு போல் விகாரப்படாது இருப்பதால் கூடஸ்தன் எனவும், சர்வ பதார்த்தங்களையும் அறிவதால் சாட்சி எனவும், அறிவுவடிவமாயிருத்தலால் போதம் எனவும், பற்று அற்றதாதலின் சுத்தம் எனவும், இலக்கணையினுல் போதிக்கப்பட்ட பொருளாதலின் இலக்கியமெனவும். ஒரே வடிவாயிருத்தலால் சனதனம் எனவும், சரீர அபிமானியாயிருத்தலின் ஜீவன்எனவும், தற்பத தொம்பதங்களால் உணர்வதாயிருத்தலின் தத்துவம்எனவும்,ஆகாசத்தைபோல் பற்று அற்றதாதலின் விண் எனவும், சடமான சூரியாதிப் பிரகாசம் போல் அல்லாமல் சித்தாயிருத்தலால் ஜோதியெனவும், பந்தம் அற்றதாதலின் முத்தம் எனவும், கால தேசங்கடந்தாதலின் விபு எனவும், காண்பதற்கரிதாதலின் சூட்சுமமெனவுமாம். இவ்வறு ஆத்மாவைப்பற்றிய விதி வாக்கியங்கள் கூறப்படுகின்றன.

137 அன்பனே! முன் கவியில் கூறிய இருபத்தைந்து பெயர்களால் குறிக்கப்பெற்ற மெய்ப்பொருள் ஒன்றேயாயது போல் சச்சிதானந்தப் பிரமம் ஒன்றேயாம். அந்தப் பிரமத்திற்குரிய விலக்கு நாமங்களையும் கேட்பாயாக. மேற்கூறிய சச்சிதானந்தப் பிரமம் சலனமற்றதாதலின் அசலம் எனவும், மலின சுபாவ மின்மையால் நிரஞ்சனம் எனவும், மரணமின்றியதாதலின் அமிர்தம் எனவும், கண் கூடாகக் காணமுடியாதாதலின் அப்பிரமேயம் எனவும்,

பிறத்தல் முதலிய மலமின்றியிருத்தலின் விமலமெனவும், வாக்குக்கு எட்டாததாதலின் வசனாதீதம் எனவும், தேகம்போல் ஜடமாகாதிருத்தலின் அஜடம் எனவும், நோயின்றி இருத்தலின் அனாமயம் எனவும், பற்றற்று இருத்தலின் அசங்கம் எனவும், தனக்கு ஒரு உவமையற்றதாதலின் அதுலம் எனவும், இடைவெளியின்றி இருத்தலின் நிரந்தரம் எனவும், பிரமாணாதீதம் ஆதலின் அகோசரம் எனவும், கண்டப் பொருளாக இல்லாததால் அகண்டம் எனவும், ஜனனமற்றதாதலின் அஜம் எனவும், முடிவின்றி இருத்தலின் அனந்தம் எனவும், நாசமின்றி இருத்தலின் அவிநாசி எனவும், சர்வஞ்ஞத்துவாதி கல்யாண குணங்கள் அற்பமும் இன்றி இருத்தலின் நிற்குணம் எனவும், கை, கால் முதலிய மூர்த்தி வடிவமாயில்லாததால் நிஷ்களம் எனவும், எவ்வித உருவுமின்றி இருத்தலால் நிரவயவம் எனவும், உற்பத்தி இன்றி இருத்தலின் அனாதியெனவும், எவ்வித சரீரமின்றி இருத்தலின் அசரீரி எனவும், பிறத்தல் முதலிய அறுவகை விகாரமுமின்றி இருத்தலின் அவிகாரம் எனவும், துவைதமின்றி இருத்தலின் அத்வைதம் எனவும் இவ்வாறு விலக்கு நாமங்கள் பல உள. இந்தப்பெயர்கள் யாவும் அவிதவை என்றசொல் விதவையை நீக்கி மாங்கல்யஸ்திரீயை அறிவிப்பதுபோல் விலக்கு நாமங்களால் பிரமத்தை உன் சொரூபமாக அறிவிக்கின்றது வேதம்.

138 அன்பனே! முன் இரண்டு கவிகளால் கூறிய விதி நாமமும், விலக்கு நாமமும் ஆகிய இவை ஒரு பொருளான பிரமத்தையேக்குறிக்கும். ஒரு பொருளைக்குறிக்கும் பதங்கள் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்ட பதங்களாம். அதுபோல் அல்லாமல் சத்து, சித்து, ஆனந்தம் என்ற பதங்கள் மூன்றாயிருந்தாலும் அதற்குப்பொருளான பிரமம் ஒன்றேயாம். அந்த பிரமம் சச்சிதானந்த வடிவமாயிருக்கும் ஒருமையை அறிந்து நீ அகண்ட பரிபூரண பிரம சொரூபமாகக்கடவாய்.

139. குருதேவா! குணரகிதமான பிரமத்திற்கு சச்சிதானந்தாதி குணமுண்டு என்று வேதம் கூறுவது என் தாய்

மலடி என்னும் வாக்கியம் போல் அல்லவா இருக்கின்றது. அன்பனே! நீ ஐயப்படல் ஆகாது. ஒரு பொருளை அறிய வேண்டியவன் அப்பொருளின் குணங்களை பிறர் சொல்லக் கேட்டு அல்லவா அறியவேண்டும். அப்படி ஒருவரும் கூருமல் அறியத்தக்க விவேகம் உடையவர்கள் இருக்கிருர்களா? இல்லையல்லவா? ஆகையால் உண்மையைக்கூறும் நற்குணமுள்ள வேதங்கள் இந்த ஜீவன் முத்தியை ஜீவர்கள் அடையவேண்டி பிரமஞானம் தோன்ற வேதம் கூறிய சத்து சித்து முதலிய குணங்கள் பிரமத்தின் குணங்கள் அன்று. அவைகள் பிரம சொரூபமேயாம்.

140 குருதேவா! அஞ்ஞான இருள்கெட கோடி சூரிய பிரகாசத்தைப்போன்ற தாங்கள் என் அபிப்பிராயத்தைக் கேட்டு அருள் செய்வீராக. எங்கும் நிறைந்த பரிபூரண அறிவானந்த சொரூபமே எனது நிஜ சொரூபமாக நான் அறிந்த நிச்சயத்தை என் உள்ளத்தில் வைர மலை போல் உறுதியாயிற்று. வேதமும் கூறியவாறு என்னை அறிவானந்த சொரூபமாக அறிந்தேன். ஆனல் சச்சிதானந்தத்தின் ஒருமையை திருஷ்டாந்த முகத்தில் அனுபவமாகும்படி அருளிச்செய்தால் என்மனம் அதில் பசுமரத்தாணிபோல் உறுதியாக அறிவானந்த சொரூபமே நான் எனத் தெளிவு அடைவேன்.

141 அன்பனே! உன்வினவிற்கு விடை மூன்று கவிகளால் அளிக்கின்றேன். மூன்று காலந்திலும் கெடாதிருக்கும் சத்தே சித்தாகும் அதாவது ஆனந்தமாயிருக்கும் பிரமமேஅறிவாகும் அந்த சத்துக்கு சித்து வேறு எனக் கூறுவேயாயின் அது அசத்தாம். அசத்தானல் படும் இழுக்கு யாதோவெனின் சாட்சித்துவம் எங்கே? அதாவது அசத்துப்பொருள்கள் ஜடம். ஜடம் ஒன்றை அறிவதற்கு அதில் அறிவேது? இனி சித்தே சத்தாகும். சித்துக்கு சத்து வேருனல் அது சடமாம். ஏனெனில் அறிவில்லாததால் சத்தும், ஜடமாகும் அங்கனமாயின் ஜடப்பொருள்கள் ஒன்றையும் விளக்கிவைப்பதற்கு அறிவில்லையல்லவா? ஆகையால் சத்தும், சித்தும்

பொருந்தியதே ஆனந்தமாம். மேலும் சத்துக்கும் சித்துக்கும் ஆனந்தம் வேருகில் ஆனந்தம் அசத்தாம். அசத்தனுல் அது மூடம் எனப்படும். அதனுல் ஆனந்தம் உதியாது. எனவே சச்சிதானந்தமாகிய இம்மூன்றும் ஒத்ததே ஆனந்தமாம். இந்த ஆனந்தமே பிரம்மமாம். அதுவே நீயாம்.

142 அன்பனே! சச்சிதானந்தங்களின் ஒருமையை மீண்டும் யுக்தி வாயிலாக சொல்லுகிறேன் கேட்பாயாக. மூன்று காலத்தும் மாறுதலடையாத சத்தான ஆத்மா விளங்குவது தன்னுலோ? அல்லது மற்றொரு ஜடப் பொருளாலோ? அந்த சத்தானது ஜடத்தால் விளங்குகிறது எனின் சத்துக்கு வேருனது அசத்து ஜடமாய் இருக்க வேண்டும். அது தன்னையும் பிற வஸ்துக்களையும் அறியும் அறிவற்றதாயிற்றே ஆகுமானுல் மலடி மகன் ஒரு காரியம் செய்வதுண்டோ? ஆகையால் அசத்தால் சத்து விளங்காது அந்த அசத்தும் சத்து என்று நீ கூறினுல் முடிவின்றிய அனவஸ்தா தோஷமாம். ஆதலால் பேயைப்போல் அலையும் புத்தியுள்ள சிஷ்யனே நீ இவ்வாருன சந்தேகங்களை எல்லாம் விட்டொழிப்பாயாக. இதில் அனவஸ்தை தோஷமாவது சத்து விளங்குவது அசத்தாலே. அசத்து விளங்குவது சத்தாலே என மீண்டும் மீண்டும் கூறினுல் முடிவேது? இந்த முடிவு பெருத நிலைக்கு அனவஸ்தா தோஷம் எனப்பெயர் பெறும்.

143 அன்பனே! சச்சிதானந்தங்கள் ஏகரூபம் என்பதற்கு வேதப்பிரமாணமும் அதற்கான யுக்திகளையும் மேல் காண்பித்தேன். அடுத்தப்படியாக அனுபவத்தையும் கேட்பாயாக. சுருதி, யுக்தி அனுபவம் ஆகிய மூன்றும் ஒத்தது அல்லவா ஏற்றுக்கொள்ளத்தக்கது. சுழுத்தி அவஸ்தையில் உளதாகும் சுகம் அல்லது ஆனந்தம் விழித்த பின் நனவை அடைந்தவனுக்கு சுழுத்தியில் நான் சுகமாய் இருந்தேன்என்றஸ்மிருதிஅதாவதுஞாபகம்உண்டாகின்றது அல்லவா? எனவே அந்த ஆனந்தமே அறிவாம். சுழுத்தி ஆனந்தத்தைத்தவிர அறிவாவதற்கு வேறு காரணம் அங்கு இல்லை. ஆகையால் அந்த ஆனந்தமே சித்தாம். இந்த

அறிவானந்த சொரூபமான நீ சுழுத்தியிலும் கற்பாந்த பிரளய காலத்தும் இருந்துக்கொண்டு மாயையும் அதன் காரியமான அஞ்ஞானத்தையும் காண்கின்ருய். உன் இருதயத்தில் இப்படி ஆராய்ந்து சத்தே சித்து சித்தே ஆனந்தம். இந்த சச்சிதானந்த சொரூபமே நின் நிஜசொரூபமாகும். இந்த நிஜ சொரூபமே தான் என்பதற்கு சிவஞான வள்ளலார் சாஸ்திரம் 205-வது பக்கம் செய்யுள். 'பல்கலையாலாகமத்தாற் பகர்கீதை பதினெட்டானல் வினையாற் கருமத்தானுன் மறையான் ஞானத்தாற் சொல்லூகத்தான் மறையாத் துணிவாலிற்றுறந் தோரானல்லோரானுன் பார்க்கிஞனேயப் பரப்பிரமம்'

144 சகல வேதாந்த சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த குருவே! தத்துவ விளக்கப்படலம் முதல் இதுகாறும் உபதேசித்தருளிய சுருதி யுக்தியனுபவங்களை விடாமல் பல மலரின் மதுக்கள் சேர்ந்து ஒன்ருயினவாறு போல் பல ஜீவர்களாகத் தோன்றினும்அவர்களின் யதார்த்தவடிவமான சச்சிதானந்தங்களின் ஒருமையை தனதனுபவத்தில் கண்ட சொரூபநிலையில் இருந்தால் மீண்டும் நேத்திராதி இந்திரியங்களோடு கூடி வெளியுலகை நோக்கிய போது பலசித்திரங்கள் அடங்கிய ஒரு ஆடை அல்லது சுவரைப்போல் இயங்குவன, நிற்பன, நடப்பன, பறப்பன ஆகிய சித்திரங்கள் யாவுமாய் விளங்கும் ஒரு சச்சிதானந்தப்பிரமமாய் விளங்கிஞன். இவ்வர்று விளங்குவதற்கு மேற்கோள் பட்டினத்தடிகள் திருக்கழுமலமும் மணிக்கோர்வையில் "எந்தைநின், திருவளர் நாட்டங் கருணையிற்பெறலும், யாவையுமெனக்குப் பொய்யெனத் தோன்றி, மேவருநீயே மெய்யெனத் தோன்றினை ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய சித்திரவிகற்பமெல்லாமொன்றில் த்விராது தடவினர் தமக்குச் சுவராய்த் தோன்றுந் துணிவு போன்றனவே" என்றும் 'சிற்சொரூபந்தானே ஜெகசொரூப்மானவெல்லாம்' என்று சொரூப சாரமும் கூறியிருப்பதால் உலகம் கடவுள் சொரூபம் என்று ஆயிற்று.

145 எனது மனதிற் கொத்த குருதேவா! அகம் பிரமாகார விருத்தி உண்டாவதற்குக் காரணமான வேதாந்த வாக்கியங்களால் ஆத்ம சொரூபமான பிரமத்தைச் சிந்தித்தும் அதை உணர்ந்தும் மகிழ்ச்சி அடைவதே நமக்கு விஞேதம்

அல்லவா! இதற்கு அன்னியமான ஒரு தொழிலும் செய்யத்-தக்கதாயில்லை. இந்தப் பிரமத்தைப்பற்றி உபதேசிப்பதும், அதைப்பற்றிச் சிந்திப்பதும் அல்லவா அறிஞர்களுக்கான நீதி ஆகையால் முன் 132-வது கவியில் துரியாதீதமும் ஏழாம் பூமியும் முக்கியமாம் என்று அருளிச்செய்தீர். அதன்தொகை வகைகளை எளிதாக உணரும்படி அருளிச்செய்வீராக.

146 அன்பனே! நீ வினவிய துரியாதீதப் பூமியைப் பற்றி கூறுகின்றேன் கேட்பாயாக இந்தத் துரியாதீதத்தைப் பற்றி அறிய வேண்டுமானால்; முதல் ஞானபூமி 7, அஞ்ஞான பூமி 7 இவைகளின் விளக்கத்தைத் தெரிந்துக்கொள்ள வேண்டும். இதைப்பற்றிப் பெரியோர்கள் பலர்கூறியிருக்கிறார்கள். இதில் முதல் அஞ்ஞான பூமி ஏழையும் கூறுகின்றேன். கேட்பாயாக. அஞ்ஞான பூமியின் பெயர்களாவன. 1. பீஜஜாக்ரம், 2. ஜாக்ரம், 3. மகா ஜாக்ரம், 4. ஜாக்ர சொற்பனம், 5. சொற்பனம், 6. சொற்பன ஜாக்ரம், 7. சுழுத்தி இதுவே அஞ்ஞான பூமிகளின் பெயர்களாம்.

147 அன்பனே! முன்கூறிய எழு பூமிகளுள் முதல் நான்கு பூமிகளைப்பற்றி இக்கவியில்கூறுகின்றேன்கேட்பாயாக சிருட்டியின் ஆரம்ப காலத்தில் அல்லது ஜாக்ராவஸ்தையின் ஆரம்பத்தில் பஞ்சபூதம் ஆகிய மாயையில் தோன்றிய அந்தக் கரணத்தில் தோன்றும் பிரம்மத்தின் பிரதி பிம்பமே சிதா-பாஸன் இந்த சிதாபாசனோடு கூடிய அறிவு ஜீவன் அது பீஜஜாக்ரம் எனப்படும். அந்த அறிவில் முன் இல்லாதிருந்து பின் நான் எனது என்னும் அபிமானம் சூட்சுமமாக எழுதலே ஜாக்ரமாம். இந்த அபிமானம் பிறவிதோறும் வளர்ந்து வருவதே மகாஜாக்ரமாம். இந்த அறிவுதான் தான் அறிந்து உள்ள விஷயங்களைப்பற்றி மனோ ராஜ்யம் செய்தலே ஜாக்ர சொற்பனமாம்.

148 ஏனைய மூன்றும் இக்கவியில் கூறுகின்றார். உண்டு உறங்கி மீண்டும் மனோராஜ்யம் செய்தாலே சொற்பனமாம். இந்த அறிவு முன் சொற்பனத்தில் கண்டு மறந்த விஷயங்களை மீண்டும் சிந்திப்பதே சொற்பன ஜாக்ரமாம். இந்த அறிவு மேல்கூறிய ஆறவஸ்தைகளையும் சிந்தித்து அறியமுடியாதபடி

அஞ்ஞான இருளால் மூடப்பட்டுள்ள நிலைமையே சுழுத்தியாம். அன்பனே! இதுகாறும் யாம் அஞ்ஞான பூமிகளின் கூறுபாடு களைச் சொன்னோம். இனி அஞ்ஞானத்தில் இருந்து நீங்கப் பெற்று வியாபக சேனமான பிரமத்தை அறிந்து ஜீவனுக்கு மோட்சத்தைத் தருகின்ற ஞானபூமி ஏழையும் பற்றிக் கூறுகின்றேன் கேட்பாயாக.

149 அன்பனே! ஞானபூமியின் பெயர்களாவன:- 1. சுபேட்சை, 2. விசாரணை, 3. தனுமாநசி, 4. சத்துவாபத்தி, 5. அசம்சத்தி, 6. பதார்த்தாபாவனை, 7. துரியமும் ஆகும்.

150 இவற்றுள் முதல் நான்கு பூமிகளை இக்கவியில் கூறுகின்றார். பிரமஞானத்தை அடைய தீவிரமான இச்சை உண்டாகுதல் சுபேட்சை என்னும் முதற்பூமியாம். சற்குருவை அடைந்து ஞானசாஸ்திரங்களை விசாரித்து ஜீவப்பிரமங்களின் அபேதத்தை அறிவது விசாரணை என்னும் இரண்டாம் பூமியாம். விசாரணையினால் தெளிவடைந்து தனது ஆசைகளைச்சுருக்கிக்கொள்ளுதல் தனுமாநசி என்னும் மூன்றும் பூமியாம். மேற்கூறிய மூன்று பூமியின் அப்பியாசத்தால் அனாத்ம வாசனையில் நின்று நீங்கி ஆத்ம ஸமஸ்காரத்தோடு கூடிய மனதில் தன் நிஜசொரூப நிச்சயம் உண்டாதலே சத்துவாபத்தி என்னும் நான்காம் பூமியாம்.

151 ஏனைய மூன்று பூமிகளைப்பற்றி இக்கவியில் கூறுகின்றார். ஆத்மாவான பிரம சொரூபமே தன் நிஜ சொரூபம் என்னும் நிச்சயத்தால் மித்தையான நாம ரூபங்களை மறந்து விடுதல் அசம் சத்தி என்னும் ஐந்தாம் பூமியாம். இந்த ஐந்து பூமிகளின் திட நிச்சயத்தால் அத்வைதானந்தம் மேலிட அதனால் காண்பான் காட்சி காணப்படும் பொருள் என்னும் திரிபுடிபேதம் நீங்குவதே பதார்த்தாபாவனை என்னும் ஆறுவது பூமியாம். சொச்சொரூபமாக நிலைத்தல் துரியமாகிய ஏழாவது பூமியாம்.

152 அன்பனே! இந்தத்துரிய பூமியை முன்னர் யான் துரியாதீதம் என்று கூறியதற்குக்காரணத்தைக் கூறுகின்றேன்

கேட்பாயாக. சுபேட்சை, விசாரணை, தனுமானசி ஆகிய மூன்று பூமியிலும் இருப்பவர்களுக்கு உலகம் மெய்யாக தோன்றுவதால் ஜாக்ரம் எனப்படும். நான்காம் பூமியான சத்துவாபத்தியில் உலகம்சொற்பன சமானமாகத் தோன்றும். ஐந்தாம் பூமியான அசம் சத்தியே சுழுத்தியாம். ஆருவது பூமியானபதார்த்தபாவனையே துரியமாம். இந்தக்கணக்குப்படி ஏழாவது துரியாதீதம் என்று வேதம் மௌனமாய்க்காட்டும். இதன் உள்ளுரை - சுபேட்சை, விசாரணை, தனுமாநசி ஆகிய மூன்றுபூமியில் இருப்பவர்களுக்கு தேகாதிப்பிரபஞ்சம் சத்தியமாய்த் தோன்றுவதால் ஜாக்ரம் எனவும், நாலாவதான சத்துவாபத்தி என்ற பூமியில் இருப்பவர்களுக்கு உலகம் மித்தையாகத் தோன்றுவதால் சொற்பனம் எனவும் ஐந்தாவதான அசம்சத்தி என்னும் பூமியில் இருப்பவர்களுக்கு மேற்கூறிய இரண்டுவிதத் தோற்றமுமில்லை. அதாவது நாமரூபங்கள் தோன்றுவதில்லை. முற்றும் பிரமாமகவே தோன்றுகின்றபடியால் அதை சுழுத்தி எனவும், ஆருவதான பதார்த்தாபாவனை என்னும் பூமியில் இருப்பவர்கள் சொச்சொரூபஸ்தியில் இருப்பதால் துரியம் எனவும் இதற்குமேல் ஏழாவதானவிடம் அதீதம் என்றும் ஒரு கற்பனையுமில்லாதவிடம் என்றும் தன்பதியல்லா பேர்கள் தமையல்லன் அல்லர் என்ருன் என்னும் கவிக்கு ஒத்துவேதம் மௌனமாய்காட்டு. இதில் பூமி என்று வரும் இடங்களில் விசாரணையினுல் உண்டாகும் மனதின் பரிபாக நிலையெனக்கொள்க. ஞான பூமி ஏழும் மூன்றவஸ்தையில் அடக்கிக்கூறுகின்றபோது முதல் மூன்றும் ஜாக்ரம் நாலாவது சொற்பனம், ஐந்தாவது சுழுத்தி, ஆருவது துரியமாய் வருவதைக் காண்க.

153 குருதேவா! துரிய பூமியை துரியாதீதம் என்று சொன்னுல் அது சந்தேகத்திற்கு இடமல்லவா? அன்பனே! வேதாந்த நூல் உணர்ந்த பெரியோர்கள் துரிய பூமியை துரியாதீதம் என்று கூறினுல் ஐயம் ஏற்படும் என்றெண்ணி விதேக கைவல்யத்தை துரியாதீத பூமி என்று கூறுவர். அந்த பிரகாரம் எண்ணிப்பார்த்தால் பதார்த்தா பாவனையென்னும் ஆருவது பூமி கனசுழுத்தி அல்லது காட சுழுத்தி என்றும் ஏழாவது பூமியை துரியம் என்றும் பேதப்படுத்தி கூறுவது

உண்டு. இவ்வாறு பேதமாகக்கூறியதின் பொருளைத் தெரிந்து கொள்வாய். பெருமைமிகு ஞானபூமியின் பிரிவுகள் இன்னமும் உண்டு சொல்லுவேன் கேட்பாயாக. இதன் உள்ளுரை இதில்பேதம் யாதோவெனின் முன்கூறிய 152ல் முதல் மூன்று பூமி ஜாக்ரம் என்றும், நாலாவது பூமி சொற்பனம் என்றும் ஐந்தாவது பூமியே சுழுத்தி யென்றுங் கூறியபின் 153-ல் ஆருவது பூமியே சுழுத்தியென்று கூறுவது பேதமேயாம். இந்தப்பேத நிவர்த்தி எங்கனமெனின் ஐந்து, ஆறு பூமிகளை கன சுழுத்தியாகக்கொள்க. இங்கனம் கொண்டால் ஏழாவது துரியமாகும். அதுவே அதீதமுமாகும். இனி ஏழாவதான துரிய பூமியே அதீதம் என்ருல் அது ஐயத்திற்கிடமல்லவா எனின்; 153-வது கவியில் அரியதொரு விதேக முத்தி அதீத மென்பர் என்று கூறுவதால் விதேக முத்தியே அதீதமென்ருர்

154 அன்பனே! முதல் மூன்று பூமியில் ஏறியவர்கள் அப்பியாசிகளே ஒழிய ஜீவன் முத்தர்கள் அன்று; மற்று நான்கு பூமிகளில் ஏறியவர்கள் ஜீவன்முத்தர்கள் எனப்படுவர் இவர்கள் நான்குவிதமாவார்கள். இவர்களில் ஐந்தாவதான அசம்சத்தி என்னும் பூமியில் ஏறியவன் பிரம்மவித்துவரன் எனப்படுபவன். ஆருவதான பதார்த்தாபாவனை என்னும் பூமியில் ஏறியவன் பிரம்ம வித்து வரியான் எனப்படுவன். ஏழாவதான துரிய பூமியில் ஏறியவன் பிரம்மவித்து விரிஷ்டன் எனப்படும். இவற்றிற்கிடையேயுள்ள சத்துவா பத்தி என்னும் நாலாவது பூமியில் ஏறியவனுக்கு பிரம்மவித்து எனப் பெயர் பெறும். இவர்களில் நடுப்பூமி வந்த ஞானிகளே பிரம்ம வித்தாம் தூய முத்தர் ஆதாவது தூய முத்தன் என்று அடைமொழி கொடுத்துச்சிறப்பித்து கூறியதை நோக்குக. இதன் உள்ளுரை: சத்துவாபத்தி என்னும் நாலாவது பூமியில் இருப்பவன் பிரம்ம வித்து எனப்படும். இவன் மகாவாக்கிய விசாரத்தால் பிரம்மத்தைத் தன் சொரூபமாக அறிந்தவன். இவனே பிரம்ம நிஷ்டா குருவாக இருந்து அதிகாரி புருஷர்களுக்கு வேதாந்த உபதேசாதிகள் செய்வன். இவனுக்கு உலகம் சொற்பன சமானம். இவனது விவகாரமோ மாதவம் செய்யினும் செய்வர். வாணிபம் செய்யினும் செய்வர், பூதலம் புரப்பர், ஐயம் புகுந்துண்பார் ஜீவன் முத்தர் என்று கூறியது

இவனையே குறிக்கும். இவனுடைய பிராரத்த கருமம் அவ்வாறு இருக்கிறது. இவனாலே உலகத்தில் பிரம்ம வித்தையாசம் பிரதாயம் நிலைக்க வேண்டும். இவனாலே சிஷ்யர்கள் சிரவணங்கேட்டு ஞானிகள் ஆகவேண்டும். அதுமட்டுமா? இவனாலேயே மக்களுக்கு உபகாரமான தருமஸ் தாபனங்கள் ஏற்பட வேண்டும். அதுமட்டுமா? இவனாலே பொய்யை பொய்யென்றும், மெய்யை மெய்யென்றும் உலகர் உணர வேண்டும் அதுமட்டுமா? ஜனகராஜனைப்போல் உலகை ஆளத்தகுதியுடையவன் இவனேயாம். அதுமட்டுமா? எங்கனம் அலங்காராதிகள் மாங்கல்யஸ்திரீக்குபொருந்துமோ விதைவைக்குப் பொருந்தாதோ அங்கனமே சகல போக்கிய போகங்களும் இவனுக்கே பொருந்தும். விதவை ஒப்பார்க்குப் பொருந்தாது. இதுபற்றி அன்றே 154வது கவியில் சொன்ன நடுப்பூமியில் வந்த ஞானிகளே பிரம்ம வித்தாம் தூய முத்தர் என்று சிறப்பித்துக்கூறினர் இந்நூலாசிரியரும். மற்றைய மூவருக்கும் மேற்கூறிய உலகோபகார கருமங்கள் செய்வது பொருந்ாதென்க. ஏனெனின் அசம்சத்தி என்னும் ஐந்தாம் பூமியில் ஏறியவன் வரன். இவனுக்கு உலகம் சுழுத்தியில் இருப்பவனைப்போன்று விஷயங்களைக் கிரகியாதவன். ஆகையால் இவனாலும் உலக உபகாரங்கள் இன்று.அடுத்தபடி பதார்த்தா பாவனை என்னும் 6வது பூமியில் ஏறியவன் வரியான். இவனுக்கு உலகம் கன சுழுத்தியில் இருப்பவனைப் போன்று இருத்தலாலும் இவனாலும் உலகோபகாரங்கள் இன்று. ஏழாவதாகிய துரிய பூமியில் இருப்பவன் வரிட்டன், இவன் ஸ்வரூப சுபாவஸ்திதியில் இருப்பதால் இவனுடைய அந்தக்கரணம் விஷய பரிணாமமாய்ச் சலனமடைவதில்லை. ஆகையால் இவனாலும் உலகோபகார கருமங்கள் இன்று. இதனால் நான்காவதான சத்துவாபத்தியில் ஏறிய பிரம்ம வித்தானவன் உலகில் இருமுக நாட்டமாயிருப்பான். இப்படி இருப்பதற்குக்காரணம் அதிகாரி புருஷர்களின் பிராரத்த கரும விசேஷமே காரணமாம். எனஉணர்க. மேலும் இருமுக நாட்டம் எங்கனம் ஆம் எனின் ஏரிக்கரையில் நிற்பவனுக்கு ஏரியின் உள்ளும், வெளிப்புறத்திலும் நடப்பது தெரிவது போலும், பூனையின் கண்களுக்கு இரவும், பகலும் தெரிவது போலும் இவன் பரமார்த்தீக லௌகீகமாகிய இரண்டிலும்

நாட்டமுடையவனாக இருப்பான். இவன் பெருமையைப்பற்றி இக்கவிக்கு(154)துறவாண்டவர் என்னும் பெரியார் அளித்த உரையில் "ஸ்திரீ முதலிய விஷயங்கள் என்னும் பாம்புகடித்து விடும் என்னும் பயத்தால் வரன், வரியான், வரிட்டன் ஆகிய மூவரும் சமாதி மேடையில் ஏறியிருக்க இந்த பிரம்ம வித்தான வன் அந்தப்பாம்பை தன்மேலே போட்டுக்கொண்டு தனக்கு மயக்க விஷம் ஏறாமலும் அதாவது தனது அசங்க (பற்றற்ற) ஞானத்தால் விஷயத்தோடு கூடி இருந்தும் விஷயவாசனை தன்னைப்பற்றாமலும் விஷயமாகிய பாம்பால் கடிபட்டு மயக்கம் அடைந்த திடபோதமில்லாத ஏனைய முமுட்சுக்களின் மயக்கத்தைநீக்க பிரம்மோகம் அதாவது பிரமமே நான் என்னும் கருடத்தியானத்துடன் சாட்சி மாத்திரமாயிருப்பதால் நடுப்பூமியில் வந்த பிரம்மவித்தாம் தூய முத்தர் என்றார்" என்று கூறியிருப்பதால் பிரம்ம வித்தின் திட நிச்சயம் தெளிவாகத் தெரிகிறதல்லவா! இந்த நிச்சயத்தை விட்டு பேச்சு மூச்சடக்கி மௌன சமாதியிருக்க வேண்டும் என்றும் ஞானிகளுக்கு விவகாரம் கூடாதென்றும் பேசியும், எழுதியும் வரும் இக்காலத்தில் ஞானிகளின் நிச்சயம் தெரியாமல் வாளா போயினர் பலர். நனவிற் சுழுத்தி நிர்விகல்ப சமாதி, வரிட்ட நிலை, சின்முத்திரை கண்களின் விழிகளை மேலே சொருகி இருத்தல், அமிர்தபானம் பருகல், ஜோதி தரிசனம் செய்தல் முதலியவற்றைப்பற்றி வானளாவப் பேசி விவகார ஞானிகளை யெல்லாம் தூற்றுவாராயினர். பாவம்! இவர்களுடைய மயக்க வார்த்தைக்கு கோடாரியாக மேல் காட்டிய் துறவாண்டவரின் விளக்கமே போதும் என்க. மேலும் ஞானவாசிட்டம் விரசேகரருரை 1079-ம் பக்கத்தில் "ஞானிகளுக்கு அனவரதமும், சமாதியேயாம் என்றார்" ஷை உரை 1123-ம் பக்கம் "அனுபவித்த சோர நாயகன்மீது மதிபதிந்த நாரியானவள் கிரக கிருத்தியங்கள் செய்வதொப்ப ஞானியும் நுகர்வினை வயத்தால் எய்திய தொழில்கள் செய்யினும் சொச்சுரூப அனுசந்தானத்தை விட்டகலான்." என்றும் ஷைவாசிட்டம் 1651ம் பக்கம் 'கேயூராதிகளிற் கனகமென்னும் ஏகபுத்தி உடையவன் நிர்விகல்பன்' என்றும் ஷை நூல் 1726-ம் பக்கம் "நனவிற் சுழுத்தி நிலையேவி அதாவது நிர்விகாரசித்தனாய் விவகாரங்களைச்செய்வாய் என்றும் கூறியிருப்பதால் ஞானிகளுக்கு

விவகாரம் உடன்பாடாம். எனவே இனிமேலாயினும் நனவிற் சுழுத்தி, நிர்விகல்பசமாதி, மனோலயம் முதலிய விவகாரங்களை விட்டொழித்து உலகை பிரம்ம சொரூபமாக பார்ப்பாயாக. விசாரசாகரம் 7-ந் தரங்கத்தில் 'சமாதி அப்பியாசம் செய்யவேண்டும் என்று பேசிய மத்திம கனிஷ்ட (கடை) அதிகாரிகளின் பேச்சைக்கேட்டு இவர்கள் பைத்தியம் பிடித்தவர்கள்போல் பிதற்றுகிறார்கள் என்று நினைத்து உத்தமாதிகாரியானவன் சிரித்தான்" என்று கூறியிருப்பதால் சமாதி பழகவேண்டும் என கூறுபவர்களின் வாய்மூடுவதற்கு தக்க சான்றாம். நான் பிரமமென்னும் உறுதிக்கு உவமை யாதோவெனின் பஞ்சதசி 1258-ம் பக்கம் "ஓர் ஆற்றில் ஜலம் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதன் அடிபாகத்தில் உள்ள பாராங்கல்லு அசையாமல் இருக்கிறது அதுபோல் ஞானியின் புத்தி விவகாரம் செய்யினும் தான் ஆத்ம வடிவமாய் இருத்தலால் அவன் விவகாரம் செய்தும் செய்யாதவன் ஆகிறான். மேலும் ஞானியின் விவகாரத்தில் நியமமில்லை என்பதற்கு பஞ்சதசி 1275ம் பக்கத்தில் "இந்த ஞானி புசிக்கின்றவனாயும், விளையாடுகின்றவனாயும், ஸ்திரீகளோடாவது, வாகனங்களோடாவது, மற்று ஞானி முதலியோர்களோடாவது ரமிக்கின்றவனாகி இந்த ஞானி சரீரத்தைப்பற்றி நினைக்கின்றதில்லை. பிராணன் பிராரத்வ கருமத்தினால் இவனை ஜீவிக்கச் செய்கின்றது" என்று கூறியிருப்பதாலும் அறியலாம் இவன் உலக உபகார கருமம் செய்யும்போது பயமில்லையோவெனின் புரந்தரன் போர் செய்யினும் அஞ்சான். இவனுக்கு கருமத்தில் பற்றில்லையோ எனின் தண்ணீரில் நெட்டியானது ஆயிரவருஷ காலம் கிடந்தாலும் உள்ளே ஈரம் சேர்வதில்லை. மேலும் இவனைப்பற்றி கீதாசாரியன் 18-ம் அத்தியாயத்தின் 17வது சுலோகத்தில் 'பிரம்மவித்தானவன் இவ்வுலகத்தாரை எல்லாம் கொன்றாலும் கொன்றவனாகமாட்டான்" என்றார். இதற்கு சித்பவானந்த சுவாமிகள் உரையில் "தன் நிஜ சொரூபத்தில் உறுதிக்கொண்டு இருப்பவன் உடலும் இந்திரியங்களும் செய்கின்ற செயலிலே கட்டுண்டு போவது இல்லை. கொல்லுதல் முதலியன பிரகிருதியின் விவகாரங்களாகக் காண்கின்றான்" என்றார். மேலும் பஞ்சதசி 1274-ம் பக்கம் "இந்தப் பிரம வித்தானவனுக்கு தாய் வதையினாலும்,

திருட்டினாலும், கற்பழித்ததனாலும், சிசுவதையினாலும் பாவமில்லை என்னே இவன் பெருமை.

155 குருதேவா! முன் சுபேட்சை, விசாரணை, தனுமாநசி என்னும் மூன்று பூமியில் ஏறியவர்கள் முத்தரல்லவென்றும் அவர்கள் அப்பியாசிகள் என்றும் கூறினீர். அங்கனமாயின் அவர்கள் அடையுங்கதியாது? இதை அருள்வீராக. அன்பனே! நான்காம் பூமியான சத்துவா பத்தியில் வருவதற்குமுன் அந்த மூன்று பூமியில் ஏறியவர்கள் மரணமடையுமாயின் சொர்க்காதி போகங்களை அனுபவித்தபின் பூமியில் உத்தமர்களுடைய குலத்தில் பிறந்து மெள்ள மெள்ள வந்து விட்டுப்போன குறைகளைப் பூர்த்தி செய்வார்கள். அதாவது நான்காம் பூமியில் வந்து பிரம ஞானத்தால் மோட்சமடைவார்கள். துன்பத்திற்கு ஏதுவான பிறவியை அடையமாட்டார்கள் முதற்பூமியான சுபேட்சைகிடைப்பதுமே மிகக்கஷ்டம் எல்லாப் பூமிகளுக்கும் அடிப்படையான முதற்பூமி கிடைத்தால் முத்தியும் கைவந்ததாகும். இதில் சொர்க்கத்தை அடைவதென்பது பூர்வபட்சமெனக்கொள்க.

156 அன்பனே! ஞானபூமியின் பெருமையை இன்னும் கேட்பாயாக. இந்த ஞான பூமி ஏழினுள் முதல் பூமியான சுபேட்சையிலாவது இரண்டாம்பூமியான விசாரணையிலாவது ஏறியிருப்பார்களாயின் அவர்கள் ஆசார ஈனர்களாயினும் நற்குணம் இன்றியவர்களாயினும் சற்குரு பாதத்தின் மீது ஆணையாக முத்தர்கள் ஆவார்கள் இது சத்தியமே. இதை கபட வார்த்தை என்பவர்கள் கெடுவார்கள் வேதவாக்கியங்களைப்பற்றி நீ சந்தேகப்படாதே. மகாவாக்கிய விசாரத்தின்படி சொரூப நிச்சயித்தல் உறுதியுடையவன் ஆகி இருப்பாயாக. இதன் உள்ளுரை: செப்பும் மொழிவழி திடமாய் அகம் பிரமம் என்று இருந்து தெளிந்திடாயே என்றார். இவ்வாறு வேதாந்த சூடாமணியின் 144-வது கவியின் உரையில் "தேகமேதான் எனப்பாவிப்பதுபோல பிரம்மமே நான் என்ற திடபோதமே ஞானப்பியாசத்திற்கு அவதியாம்' என்றும் பஞ்சதசி 945ம் பக்கம் 'மரண சுபாவமுள்ள தேகத்தை நான் என்னும் அபிமானத்தைவிட்டுதான் மரணமின்றிய பிரம்மமாய்

இந்த சரீரத்திலேயே நிஜவடிவ சச்சிதானந்த பிரம சொரூப-மாய் இருக்கின்றேன்” என்றும் கூறியிருப்பதால் அறியலாம். ஆனால் பிரம்மத்தைத்தியானிக்க வேண்டாவோ எனின் வேண்டாம். பஞ்சதசி 901-ம் பக்கம் ‘ஞானத்தின் பொருட்-டாவது மோட்சத்தின் பொருட்டாவது ஞானிக்கு தியானம் செய்யவேண்டிய அவசியமில்லை. ஏனெனின் தனக்கு அன்னியமான பொருளைத்தான் தியானிக்க முடியுமே ஒழிய தன்னைத்தான் தியானிக்க முடியாது. முடியுமானால் தன்னைப் பற்றுதல் என்னும் தொழிலுக்கு கர்த்தாவும் அதை ஏற்கும் பொருளும் தானேயாதல் ஆத்மாஸ்ரேய தொஷமாம்.என்று முன்னமே கூறியுள்ளோம்.இக்காரணத்தால் செப்புமொழிவழி திடமாய் அகம்பிரமம் என்றிருந்திடாயே என்றார் இந்நூல் ஆசிரியரும்.மேலும் பகவத்கீதை ஐந்தாம் அத்தியாம் 16-வது சுலோகத்திற்கு வீரசுப்பையா சுவாமிகளின் உரையில் ‘யான் பிரம சொரூபன் என்னும் ஞானம் மகாவாக்கியத்தால் உண்டாயினும் பத்தாமவன் நீ ஆகின்றாய் என்னும் வாக்கியத் தாலும் உண்டாகும் ஞானம் போல அபரோக்ஷவடிவமேயாம். இது சர்வ வேதாந்த சாஸ்திரங்களின் நிச்சயம்’

157 நெல் முளைப்பதுபோல் ஜெனித்துக்கொண்டிருந்த என்னை அரிசி முளைக்காததைப்போல் மீண்டும் ஜெனிக்காத வழிசெய்த குருதேவா! தாங்கள்முன் 153வது கவியில் கொடிய செயல் செய்பவர்களும் ஞான பூமியின் வாயிலாக விதேக முத்தியை அடைவார்களென்று சொன்னீரே ஆனால் மனைவி, மக்கள் முதலிய குடும்பத்தை விட்டு சன்னியாசியாகிப்பின் ஏகாந்தத்தில் வசிப்பவர்கள்தான் முத்தியடைவார்கள் என்று சிலர் கூறும் பிராந்தியை நீக்கி அருள்வீராக.

158 அன்பனே! உன் வினாவிற்கு விடை ஆறு கவியால் கூறுகின்றேன் கேட்பாய். பந்தப்பிராந்தி நீங்கும் சன்னியாச மானது நான்கு வகையாகும். அவைகளின் பெயர்களாவன குடீசகம், வெகூதகம், அம்சம், பரமாம்சம் என்பனவாகும். பந்தத்தைவிட்டு நீங்கும் இந்த சந்நியாஸம்களுக்கு ஆசை-யின்மையே காரணமாம். வேஷம் காரணமன்று. இதன் உள்ளுரை: துறவுக்கு விராகம் காரணம் அன்றி வேடம்

காரணமன்றே என்று இந்நூலாசிரியர் அருளிச்செய்திருப்பதைச்சற்று ஆராய்வோம் துறவோடு சன்னியாசத்தையும் இணைத்து ஒன்ருகக் கூறியிருக்கிருர்.அற்ப்சுருதி வாக்கியப்படி பிரம்ம சரியாஸ்ரமம்,கிரஹஸ்தாஸ்ரமம்,வானப்பிரஸ்தாஸ்ரமம் சன்னியாச ஆஸ்ரமம் என நான்கு. இதன் வரிசைக் கிரமப்படி பார்த்தால் எழுபது வயதில் தான் சந்நியாசம் பெறமுடியும் என்று சில நூலாசிரியரும் இளமையில் சந்நியாசம் பெற வேண்டும் என் சில நூலாசிரியரும் கூறியிருக்கின்றனர். எழுபது வயதில் பெறும் சந்நியாசம் ஆபத்சன்னியாசம்ாம். இது பயனற்றது என்று வைராக்கிய தீபம் கூறுகிறது. இந்த சன்னியாசங்கள் எல்லாம் ஒருவித சடங்கே ஒழிய உண்மையான சன்னியாசம் இதுவன்று. இனி துறவும் சன்னியாசமும் வேறுவேறு எனக்கொள்ளுதல் வேண்டும் ஏனெனின் துறவே சந்நியாசம்-ஆனல் உள்துறவு, புறத்துறவு ஆகிய இரண்டு துறவுகளும் உடையவர்கள் கானகத்திலும் நாட்டிலும் இருக்கிருர்கள். ஆனல் அவர்களிடத்தில் ஆத்ம ஞானம் தினையளவும் இல்லை. இல்லாமையால் அந்தத்துறவு பயனற்றதோவெனின் அங்கனமன்று சற்குருவை அடைந்து கேட்டல், சிந்தித்தல், தெளிதலின் மூலமாக ஆத்மஞானத்தை அடைய அந்தத்துறவு அவகாசம் தருகிறது. இவ்வாருக அந்தத்துறவைப்பயன்படுத்திஞல்பயனுண்டு.பயன்படுத்தாவிட்டால் அதனல் பயனில்லை. இனிவேஷமே சன்னியாசமானல் ராவணன் சன்னியாசமும் அர்ச்சுனன் சன்னியாசமும் ஏற்க வேண்டும். அங்கனம் ஏற்பார் ஒருவருமில்லை. இனி சன்னியாசம் என்ற சொல்லுக்குப் பொருள் யாதோவெனின். சகல தொழில்களையும் விட்டு விடுவது சன்னியாசம் என்றும் எல்லா தொழில்களையும் செய்துகொண்டு இருப்பது சன்னியாசம் என்றும் கீதையின் ஐந்தாம் அத்தியாயம் இரண்டாவது சுலோகத்தில் கூறப்பட்டிருக்கிறது. இந்த இரண்டுவித அபிப்பிராயத்தில் சகல கருமங்களையும் விட்டு பிச்சை ஏற்று உண்டு திரிதல் ஒருவித சன்னியாசமாம். வேதாந்தப்பாடங்களைக்கேட்டு தெளிவடைந்தபின் சகல கருமங்களையும் நிஷ்காமமாக அல்லது பலனை விரும்பாது செய்துக்கொண்டு இருப்பது மற்றொருவித சன்னியாசமாம். ஆத்மஞானத்துடன் உலகோபகார கருமமும் செய்துகொண்டு இருப்பவனுக்கு

கரும யோகி என்ற ஒருபெயரும் உண்டு. மேற்கூறிய இரண்டில் ஞானத்துடன் கருமங்களையும் செய்யும் சன்னியாசியைத்தான் பகவான் கீதையில் கருமயோகி என்று சிறப்பித்துக் கூறியுள்ளார். இது கீழ்வரும் மேற்கோளால் விளங்கும். கீதை ஐந்தாம் அத்தியாயம் இரண்டாம் சுலோகத்திற்கு வீரசுப்பையா சுவாமிகள் உரையில் "அருச்சுனு! சகல கருமங்களையும் விட்டுவிடும் சன்னியாசத்தைப்பார்க்கிலும் பற்று இன்றி கருமங்களைச்செய்யும் கருமயோகி அதாவது சன்னியாசியே மேலானதாம்" என்றும் ஷை சுலோகத்திற்கு சித்பவானந்த சுவாமிகள் அளித்த உரையில் "கர்மத்தை விட்டுவிடும் சந்நியாசமும், சகல கருமமும் பலனை விரும்பாது செய்யும் சன்னியாசமும் ஆகிய இரண்டும் சிறப்புடையது. எனினும் பலனை விரும்பாது கருமம் செய்யும் சன்னியாசமே மேலானது" என்றுர். இதில் ஞானமில்லாது கருமங்கள் மட்டும் செய்யும் சன்னியாசம் சிறப்புடையது என்று கூறியது இதிகப் பிரமாணத்தை ஒட்டிக் கூறியதாம். எங்கனமெனின் ஓர் ஆல விருக்ஷத்தை முளையிலேயேக்கிள்ளி எறிவது சுலபம். வளரவிட்டுப்பறிப்பது சஷ்டம் அதுபோல் கருமத்தில் அல்லது ஆண்டான் அடிமையில் பழகியவர்களுக்கு ஆத்ம ஞானம் புகட்டுவது கஷ்டம். இதை கீதா சாரத்தின் முகவுரையில் ஞானுசாரியர் காசிகானந்த சுவாமிகள் மதால்சாவின் கதையினுல் விளக்கியுள்ளார்கள். சுவாமி விவேகானந்தரும் ஞான தீபத்திலும் எடுத்துக்காட்டியுள்ளார். அதாவது மார்க்கண்டேயப்புராணத்தில் வரும் மதால்சா என்னும் பெண்மணியானவள் தன்குழந்தைகளுக்கு கருமம், பக்தி, ஆண்டான், அடிமை ஆகியவைகளைப் போதிக்காமல் ஆத்ம ஞானத்தைப்புகட்டி திருஞானசம்பந்த சுவாமிகளைப் போல் வளர்த்தாள். திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு இளமையிலேயே ஞானம் ஊட்டப்பட்டது. ஷை சுலோகத்திற்கு மகாத்மா காந்திஜி அளித்த உரையில் அனுசக்தியோகம் 50ம் பக்கத்தில் 'அர்ச்சுனு கரும சன்னியாசத்தைப்பார்க்கிலும் அதாவது கருமங்களை விட்டுவிடும் சன்னியாசத்தைப்பார்க்கிலும் பற்றின்றி கருமங்களைச்செய்துவரும் சன்னியாசமே மேலானது என்றும் ஷை சுலோகத்திற்கு ஸ்ரீவினேபாஜி அளித்த உரையின் 61ம் பக்கத்திவ் 'சன்னியாசத்தில் இரண்டு தன்மைகள்

ஒப்பி இருக்கின்றன. ஒன்று 24 மணி நேரமும் கருமம்செய்து கொண்டே இருந்தும் எதையும்செய்யாமை, மற்றொன்று ஒருகனமும் எதையும் செய்யாத போதிலும் எல்லாவற்றையும் செய்தவனுகின்றது இந்த இரண்டில் முதல் கூறியதுதான் சுருதி யுக்தி அனுபவங்களுக்கு ஒத்த சன்னியாசமாகும்'என்று கூறியிருப்பதால் சன்னியாசம் என்பதற்குபொருள் கருமத்தை விட்டுவிடுவதன்று. உலக உபகாரமாகச்செய் என்று பகவான் கூறியிருப்பதால் சகல தொழில்களையும் ஞானத்துடன் செய்வதே கரும யோகமாம். இதுவே சன்னியாசமுமாம். ஏனெனின் கருமம் செய்யாது எந்த ஜீவனும் உலகத்தில் ஒரு கண நேரமும் வாழமுடியாது. கண் திறப்பதும், மூச்சு விடுவதும் கருமம்தான். அப்படியிருக்க கருமங்களை விடுவது சன்னியாசம் என்பது பொருந்தாது. இந்த சன்னியாசங்கள் அனைத்தும் பூர்வபக்ஷமான கருமகாண்டங்களால் சிருஷ்டிக்க பட்டவையாகும். வைதீக சடங்குகளால் ஏற்படுகின்ற சன்னியாசங்கள் இவைகள். இந்த சன்னியாசங்கள் பரம்பரா சாதனமாக ஒப்பப்பட்டிருக்கின்றன. இவைகட்கு ஆதாரமான கரும காண்டத்தைப்பற்றி அடுத்த கவியில் 'அந்தண் நூல் மித்தையென விடுதல் தீவிரதரமாம் என்றூர். இதற்கு ஸ்ரீபொன்னம்பல சுவாமிகளின் உரையில் அந்தணன் ஊர் அதாவது சொர்க்கலோகம்' என்றும் வேறு உரைக்காரர்கள் அந்தண நூல் அதாவது கரும காண்டம் என்றும் எழுதப்பட்டு இருக்கின்றது. அது எப்படியாயினும் இரண்டும் தீவிரதர வைராக்கியமுடையவனுக்கு மித்தைதான். இனி உண்மையான சன்னியாசம் யாதோவெனின் கேட்பாய். ஆதி சங்கர பகவற்பாதர் இயற்றியருளிய பஞ்சமாஸ்ரமம் என்னும் நூல் ஒன்றுள்ளது. அதில் ஒரு சுலோகத்தைப் பாருங்கள் 'தேகம் நியாசோஹி சன்னியாசம் நைவ காஷாய தாரணம் நாகம் தேகோ அகம் ஆத்மேதி ஏதக்ஞானம் விதுர் புதா' இதன்பொருள் 28 தத்துவமான தூல சூட்சும சரீரங்கள் நானல்ல 29 வது தத்துவமான கூடஸ்த பிரமமே நான் என்று அறிவதுவே சன்னியாசமாம். காவியுடை அணிவது மட்டும் சன்னியாசமன்று. தேகம் நானன்று நான் ஆத்மஸ்வரூபி என்று அறிவது ஞானமுமாகும். இந்த ஆத்ம ஞானமுள்ள சன்னியாசிகள் எந்த தேசத்திலும், எந்த ஜாதி-

யிலும், எந்த ஆஸ்ரமத்திலும், எந்தத் தொழிலும் இருக்கலாம். அங்கனமிருந்தாலும் அவர்கள் சன்னியாசிகள்தான் என்பதற்கு ஐயமில்லை. இந்த ஞானமில்லாதவர்கள் எந்த ஆஸ்ரமத்திலிருந்தாலும் கால க்ஷேபமே ஒழிய வேறு பேறில்லை. நேதி நேதி வாக்கியமான இந்த தேகம் நியாசம் அதாவது தேகம்தானல்ல எனப்படும் சந்நியாசத்துடன் சந்நியாச ஆஸ்ரமத்தையும் பெற்றுக்கொண்டால் அது போற்றுதற்குரிய தாகும். ஏன் எனின் ஆத்மஞானத்துடன் ஆஸ்ரமமும் சேர்ந்தால் கர்மகாண்டி, பக்தி காண்டி முதலியோர்கட்கு இவர்களிடத்தில் பூஜிக்கத்தக்க புத்தியுண்டாகும் அதன்வாயிலாக மகாவாக்கிய உபதேசாதிகள் பெற வாய்ப்புக்கிட்டும். அதன் மூலமாக இவர்களும் ஞானிகள் ஆவார்கள். இந்த ஞானம் எல்லோருக்கும் பொருந்தும் என்பதற்கு 163-வது கவியில் 'பந்தமனை துறந்து சிலர் அதிதிகளாயிருந்து அடைவர் பரம ஞானம் அந்தணர், மன்னர், வணிகர் சூத்திரராயிருந்து சிலர் அடைவர் ஞானம்" என்று கூறியிருப்பதால் அறியலாம். இப்படி ஞானம் எல்லோருக்கும் உரியது என்பதற்கு ஐயம் இல்லை. பண்டைக்கால ரிஷிகளும், முனிவர்களும் குடும்பத்தோடு ஞானிகளாக இருந்தார்கள் என்பதற்கு சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் 6-வது சுடரின் 180-வது பக்கத்தில் "அனைவருக்கும் ரிஷிகளாக உரிமையுண்டு என்று வாத்ஸாயன சூத்திரம் கூறுகிறது" ஷை நூல் 216வது பக்கத்தில் "எவன் ஆத்மாவை உணருகிறானோ அவனே ரிஷியாவான் காட்சிப்பொருள்கள் ஒவ்வொன்றிலும் கடவுளைக் காண்பவன் ரிஷியாவன்" என்றும் கூறியிருப்பதால் தபசி, ரிஷி, முனி என்பதெல்லாம் ஆத்மஞானியைக் குறிக்கும் பரியாயபெயர்கள் எனக்கொள்க. மேலும் முனி என்பதற்கு ஆதிசங்கரர் இயற்றி அருளிய அபரோக்ஷானுபூதியின் 50-வது பக்கத்தில் "மனன சீலன் முனி அதாவது சேதனா சேதன விசாரத்தால் தன்னை பிரமம் என்று அறிந்தவன் முனி" என்று கூறியிருப்பதால் ஆத்மஞானம் ஒன்றே உண்மையாம். இதைப்புகட்டாமல் தன் சொரூபத்தை தனக்கு வேறாக்கிப் போதிப்பது ஏனோ? இந்த ஆத்மஞானத்தைத்தவிர மேறு ஒரு மெய்ப்பொருள் உளதாக அறிவாளி உலகத்தில் ஒருவரும் கூறவில்லை. இதோ நமது ஆசியஜோதி மனிதருள் மாணிக்கம் வரைந்த உலகசரித்திரம்

1ம் பாகம் 302வது பக்கத்தில் இந்தியா, கிரீஸ் இந்நாடுகளில் புராதன தத்துவ சாஸ்திரிகள் உன்னை உணர் என்று இயம்பினர்கள். இந்த ஞானத்தை அடைய பழைய ஆரிய முனிவர்கள் இடைவிடாது வியக்கத்தக்கமுயற்சி வரலாறுகளே நமது உபநிஷத்துக்கள் "என்றுகூறியிருப்பதால் தன்னை ஆத்ம ஸ்வரூபி என்று அறியும் பிரம்ம வித்தைக்குமேல் வித்தை கிடையாது. இவ்வாறான கருத்துக்களை மனதில் வைத்துக் கொண்டு இந்த சிஷ்யன் மூன்கவியில் இல்லாளும் குடும்பமும் விட்டு சன்னியாசம் புகுந்துஏங்காகியானேர் அல்லாமல் முத்தி பெறுர் என்று சிலர் சொல்லும் மயக்கம் அகற்றுவீரே என்று கேள்வி கேட்டு இருப்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

159 அன்பனே! துறவின் இலக்கணத்தை கேட்பாயாக துறவுஅடைபவர்களுக்குள் மூன்றுவித வைராக்கியம் உண்டு. அவைகளுக்குப் பெயர் மந்தம், தீவிரம், தீவிரதரமுமாம். இவற்றுள் தனக்குரிய குடும்பத்திற்கு ஏதாவது நஷ்டம் வரும் போது அப்பிரியம் காரணமாக இந்தக்குடும்பம் வேண்டாம் என்று வரும் வைராக்கியம் மந்தமெனப்படும். பெரிய துக்கம் வரும்போது இந்த உடல் இருக்கும் வரையில் மனைவி, தனம் வேண்டாம் என்றும், இந்த சம்சாரத்தை விட்டகலவேண்டும் என்றும், அப்பொழுது மாத்திரம் உண்டாகும் வைராக்கியம் தீவிரம் எனப்படும். சொர்க்காதி புவனங்களிலும் சண்டையும் துக்கமும் உளதாகக் கேள்விப்படுவதால் அது கிடைத்தாலும் வேண்டாம் என்றுவரும் வைராக்கியம் தீவிரதரமெனப்படும். இதில் வைராக்கியம் என்பது நிராசையைக்குறிக்கும் எனக் கொள்க.

160 அன்பனே! மேற்கூறிய வைராக்கியங்களில் மந்த வைராக்கியத்தில் துறவியானவனுக்கு குடீசகம், வெகூதகம், அம்சம், பரமஹம்சம் என்ற நான்குவித சன்னியாசங்களில் ஒன்றுகூடப் பலிக்காது. இரண்டாவதான தீவிர வைராக்கியம் உள்ள துறவிக்கு குடீசகம், வெகூதகம் என்று இரண்டுவித சன்னியாசம் சித்திக்கும். இந்த இரண்டுவித சன்னியாசத்தின் தாற்பரியத்தைக் கேட்பாய். உலகமெங்கும் யாத்திரைசெய்ய

திடமுள்ளவர்களே வெகூதக சன்னியாசி என்றும் அங்கனம் திடமில்லாமல் ஓரிடம் பற்றிக்கொண்டு இருப்பவர்களை குடீசக சன்னியாசி என்றும் அழைப்பார்கள்.

161 அன்பனே! மந்தமும் தீவிரமும் ஆகிய இருவித சந்நியாசத்தின் இலக்கணம் சொன்னோம். இனி தீ வி ர த ர சன்னியாசத்தின் இலக்கணமும் கேட்பாயாக. தீ வி ர த ர வைராக்கியமுடையோர்களுக்குள் இரண்டுவிதமுண்டு. அதில் ஒன்று அம்சன் என்றும், மற்றொன்று பரமஹம்சன் என்றும் கூறுவர். இந்த இரண்டில் அம்ச சன்னியாசிக்கு மோட்சம் சத்திய லோகத்தில் கிடைக்குமே அன்றி இ வ் வு ல க த் தி ல் கிடையாது. பரமஹம்ச சன்னியாசிக்கு மோட்சம் இ ங் கே சித்து சட விசாரத்தால் உண்டாகும் என அறிக. அந்த ப ர ம ஹ ம் ச சன்னியாசமும் இருவகையாகும் அதையும் நீ கேட்பாயாக. இதன் உள்ளுரை: இதில் அம்சனுக்கு முத்தி சத்தியலோகத்து அன்றி வராது என்று கூறியதற்குக்காரணம் யாதோவெனின் அவன் பிரணவம் முதலிய மந்திர ஜபமும் மூர்த்தியுபாசனையும் உடையவனுதலால் அங்கனம் கூறினர். இதுவும் பூர்வபட்சமேயாம். ஏனெனின் மோட்சம் ஒ ரு வ ர் கொடுப்பதுவும் வாங்குவதுவும் அன்று. வாங்குவதாயின் அர்ச்சுனனுக்கு கண்ணன் மோட்சத்தைக் கொடுத்திருக்கலாம் கீதையில் 700 சுலோகத்தை உபதேசிக்கத் தேவையில்லை. அங்கனமே ஸ்ரீராமனுக்கு வசிட்டமாமுனிவர் மோட்சத்தைக் கொடுத்திருக்கலாம். ஞானவாசிட்டத்தில் 6000 சுலோகம் உபதேசிக்கத்தேவையில்லையல்லவா? இதனுல் சத்தியலோகத்தில் மோட்சம் கூறுவது கருமகாண்டத்தின் சி ரு ட் டி யா ன பூர்வபட்சமாம். பரமஹம்சனைப்போல் எவ்வித துறவியானுலும் சித்து சட விசாரம் செய்து தன் யதார்த்த சொரூபம் பிரமம் என்று அறிவது மோட்சமாகும் என்பது சிதையாத சித்தாந்தமாம்.

162 அன்பனே! மேற்கூறிய மரமஹம்ச சன்னியாசம் இரண்டு விதமாயிருக்கும். அவர்களுக்குரிய பெயர்களாவன ஒன்று ஜிக்ஞாசு, மற்றொன்று ஞானவான் என இரண்டுவிதமாகும். இதில் ஜிக்ஞாசு என்பவன் முன்கூறிய ஞானபூமி

ஏழினுள் முதல்மூன்று பூமியில் நடப்பவனுகும். இரண்டாவ-தான ஞானவான் என்பவன் ஞானபூமி ஏழினுள் நான்காவ-தான சத்துவாபத்தி என்னும் பூமியில் நடக்கும் ஜீவன் முத்தனுவான். இவனைத்தான் முன் பிரமவித்தாகவருணிக்கப் பட்டது. அஞ்ஞானமில்லாத மேற்கூறிய ஞானவான் இரண்டு விதமாவார்கள். அவர்களின் இலக்கணத்தையும் நீ கேட்பா-யாக. இதன் உள்ளுரை:- இதில் ஞானவான் என்பவனை உயர்வுபடுத்த வேண்டி சுஞ்ஞானவான் அதாவது நல்ல ஞானமுள்ளவன் என்று பொருள்படும்படி முன் கவியில் கூறி இருக்கிறுர். இவன் நான்காவது பூமியான சத்துவாபத்தியில் நடப்பவனுவான். இவனே தூய மேலோன் என்றுர். இவ்வாறு முன் 154வது கவியில் பிரமவித்தாம் தூய முத்தன் என்றுர். இவனைத்தான் சுஞ்ஞானவான் என்று சிறப்பித்து இருக்கிறுர். இவன் உலக விவகாரத்துடன் இருப்பவன். இனி அஞ்ஞானம் நீங்கக்கூடிய ஞானபூமியில் முதல் மூன்று பூமியை அப்பியாசித்துக்கொண்டு இருக்கும் ஜிக்ஞாசு என்பவன் இரண்டுவிதமாக இருப்பார்கள்.

163 அன்பனே! அந்த இரண்டுவிதம் யாதோவெனின் பொன்னில மாதராசையை முற்றும் துறந்து சற்குருவை அடைந்து சன்னியாச ஆஸ்ரமத்தைப் பெற்றபின் சேதனு சேதன விசாரம் செய்து. பிரம்ம ஞானத்தை அடைவது ஒரு-விதம். மற்றெருவிதம் யாதோவெனின் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரராயிருந்து தத்தம் வருணு சிரமத்திற்குரிய கருமங்களை நிஷ்காமமாய் செய்யும் மானச சந்நியாசம் உடையவர்களாகி அதாவது மனதில் நிராசையுடையவர்-களாகி குருவை அடைந்து சேதனு சேதன விசாரம் செய்து பிரம்ம ஞானத்தை அடைவார்கள். இந்தப்படி சாஸ்திரத்திலும் உலகத்திலும் கண்டும், கேட்டும் இருந்தும் அன்பனே சிலர்-உடைய பிராந்தி வசனந்தால் உன் மனத்தின் கண் மயக்கம் ஏன்? சுருதி யுக்தி அனுபவத்தால் நானே பிரமமெனத் தெளிந்து ஐயம் நீக்குவாயாக. இதில் சிலருடைய பிராந்தி வசனமாவது இல்லாளும் குடும்பமும் விட்டு சந்நியாசம் புகுந்து ஏகாங்கி யானேரல்லாமல் முத்தி பெறுர் என்று சிலர்

சொல்லும் மயக்கமகற்றுவீரே என்று சீடன் கேட்டதற்கு மேற்கூறிய ஆறு கவிகளால் மயக்கத்தை நீக்கி தெளிவடையச் செய்ததைக் காண்க.

164 அன்பனே! முன் 133-வது கவியில் கூறிய வித்தையானந்தத்தை இப்போது கூறுகின்றேன்கேட்பாயாக. உலகில் எது உற்பத்தியாகின்றதோ அது அழியும். எது அழிகின்றதோ அதுமீண்டும் உற்பத்தியாகும். இது இயற்கையின் நியதி. இதுபோல் அறிவாகிய ஆத்மா ஒன்றில் நின்று தோன்றியதில்லை. ஆதலால் அது பிறந்ததுமில்லை. இத்தகைய அறிவான பிரமமே என் நிஜவடிவமாயிருத்தலால் நான் அந்த பிரமமாகவே இருக்கின்றேன். ஆதலால் நான் பிறப்பு இறப்பு அற்றவன். ஆனால் நான் பிறந்தேன், வளர்ந்தேன் என்ற அனுபவமிருப்பதால் நான் பிறப்பு, இறப்பு அற்றவன் என்பது எப்படி கூடுமெனில் நான் பிறந்தேன் என்று கூறும் போது தேகத்தை நான் எனக்கொண்டு கூறுவதால் அது அகங்காரமாம். அந்த அகங்காரம் ஜடம். அது நான் என்ற சொல்லுக்கு வாச்சியார்த்தமேயன்றி லட்சியார்த்தம் அன்றாம். நான் என்னும் சொல்லுக்கு லட்சியார்த்தம் பிரம்ம சொரூபம். அது எனது நிஜவடிவமாயிருத்தலின் பிறப்பு இறப்பு அற்ற பிரமமாகிய நானே நானாயிருக்கின்றேன். இதில் ஐயம் சிறிதுமில்லை. இதன் உள்ளுரை: இதில் ஆத்மா பிறப்பதும் இல்லை இறப்பதுமில்லை இருப்புமாத்திரமாம். அதற்கு வேறாக மாயா பிரபஞ்சம் இருப்பது என்பது சொல்மாத்திரமாம். மூக்காலத்தும் உள்ளது ஆத்மாவேயாம். ஆத்மா எனினும், கடவுள் எனினும், பிரமம் எனினும், அறிவு எனினும், ஆனந்தம் எனினும் ஒக்கும். இவ்வாறான ஆத்மா பிறக்கும் பொருள் அன்று. ஏனெனின் பிறக்கும்பொருள் அழிந்தே தீரவேண்டும். தோன்றுதலும் மறைதலும் நாமரூபங்களின் செயலாகும். நாமரூபத்தை (உடலை) நான் எனக்கொண்டால் அது அழியும். பிரமத்தை நான் எனக்கொண்டால் அது அழியாது. இதற்கு மேற்கோள் கைவல்யோபநிஷத் 'நித்தியமாயிருக்கின்றன.பிரமமே நீ நீயேஅது'என்றும் அமிர்தபிந்து உபநிஷத்"அந்தப்பிரமமே நான் என்று அறிந்தால் பிரம்மமேயாகின்றான்" என்றும் ஆத்ம போதோபநிஷத்"நான் பிரமத்தைவிட வேறல்லாத உத்தமன் என்றும், ரிபுகீதை 15ம்

அத்தியாயம் "ஆத்மாவே துரியபர சொரூபமாகும்" என்றுங் கூறியிருப்பதால் ஆத்மாவே பிரம்ம சொரூபமாம். இனி ஆத்மா பிறப்பதும் இல்லை, இறப்பதுமில்லை. ஆனால் ஜீவன் பிறந்திருக்கின்றதே எனின்? நன்று கூறினாய்! ஜீவன் இறந்துபோனால் மறுபிறவி எடுப்பது யார்? இறப்பு என்பது இன்மையையே குறிக்கும் அங்கனமாயின் இல்லாத பொருள் எங்கனம் பிறக்கும். இது பிராந்தியாம். இந்தப் பிராந்தி நிவர்த்திக்கு வழி கூறுன்கிறேன் கேட்பாய். ஆத்மாவே பிரமம் இதில் சந்தேகமில்லை. இந்த ஆத்மாவில் ஜீவன் எவ்வாறு இருக்கிறது பேதமாகவா? அபேதமாகவா? இதற்குவிடை அபேதமெனின் இரண்டிற்கும் முதல் ஒன்றாய்ப் பிரமமாய்ப்போகும். போகுமானால் ஜீவனுக்குரிய ஜனன மரண முதலிய இழிகுணங்கள் பிரமத்திற்கும் ஏற்படும். இதற்கும் பயந்து பேதம் எனின் ஜீவனும் பிரமமும் கண்டப்பொருளாய்ப் போம். போகுமானால் பிரமம் பரிபூரணம் என்ற வேத வசனத்திற்கு விரோதமாகும். இனி இந்த ஜீவாத்மாவானது தானே ஒரு தனி முதலாயும், சத்துப்பொருளாயும் இருக்குமா? அல்லது தனக்கு முதலாக ஒரு சத்துப்பொருள் இருந்து அதில் தான் போலியாயிருக்குமா? எனின் பிரமமான சத்துப் பொருளினிடத்தில் போலியாய் நிற்பதுவே ஜீவனும்! எங்கனம் பழுதையில் பாம்பு போன்றும் சொற்பன உலகு போன்றும் தோன்றுகின்றதோ அங்கனமே ஜீவத்துவமும் என அறிக. ஜீவத்வம் பிரமத்தில் போலியாய்த் தோன்றும் என்பதற்கு உதாரணம் வீரசைவ பரம்பரையில் வந்த குமாரதேவ சுவாமிகள் இயற்றியருளிய அத்வைத உண்மை 91-வது கவியில் 'இந்த ஜீவன் கற்பிதமே அன்றி வேறு ஓர் பொருளன்று' என்றும், ஷை 78-வது கவியில் "தன்னை ஜீவனெனத் திரிவாய் தான் நின்று உணர்தல் அஞ்ஞானம்; தன்னை பிரமமெனத்துணிவாய் தான் நின்று உணர்தலே ஞானம்" என்றும் ஷை 18-வது கவியில் 'இங்காம் ஜீவத்வ மோகமிரியும் தன்னைத்தேர்ந்த அக்கணமே' என்றுங் கூறி இருப்பதால் ஜீவத்துவம் பிராந்தி மோகம் என்பது ஆயிற்று. அது ஒரு கணத்தில் தீரக்கூடியவாறும். மேலும் வேதாந்த சூடாமணி 111-வது கவியில் "புன்னெறி கொள் குடும்பியாய் வலியறுமோர் சித்துப் போலியாம் ஜீவன் உயர் சுருதி

விசாரத்தின் முன்னமொரு தன் சொரூபமாகிய பேரொளி அமுதர் .துரியநிலை அறியாதிருத்தல் அஞ்ஞானம்' இதன் உரையில் 'போலிச்சித்தான ஜீவன் தன் நிஜ சொரூபமான ஆத்மதன்மையை அறியாதிருத்தல் அஞ்ஞானம்' என்று கூறியிருப்பதால் ஆத்மஸ்வரூபத்தில் ஜீவத்துவம் போலி என்பதாயிற்று. மேலும் சிவஞான சித்தி 8-ம் சூத்திரம் 'மன்னவன் மகன் வேடரிடத்தே தங்கி வளர்ந்து அவனை அறியாதுமயங்கி நிற்ப பின்அவனும் என் மகன் நீ என்றவறிற் பிரித்து பெருமை யொடும் தாளுக்கி பேணுமாபோல்' என்று கூறியிருப்பதால் அரசகுமாரன் வேரிடத்தில் வளர்ந்து மீண்டும் அரசனுகிருன்.அப்போது அவன் ஒருவனு? அல்லது இருவரா? உலகத்தில் யோக்கியன் அயோக்கியன் ஆகிருன். அயோக்கியன் யோக்கியன் ஆகிருன் அப்போது இருவரும் ஒருவன்தானே. அதுபோல் ஜீவனுய் இருப்பதும் பிரமமாயிருப்பதுவும் சந்தர்ப்ப பேதத்தால் ஒருபொருள் என அறியக்கடவாய். இவ்வாறே ஆதி சங்கரரும் தாமியற்றி அருளிய ஆத்மபோதம் 27-வது சுலோகத்தின் உரையில் "பழுதையில் பாம்புபோல் தன்னை ஜீவன் என்று அறிந்து பயத்தை அடைகின்ருன். வேதாந்த விசாரத்தால் நான் ஜீவன் அல்ல பரமார்த்த சொரூபி என்று அறிந்தாலுயின் பயமற்றவன் ஆகிருன்' என்றும், ஷை 45வது சுலோகத்தின் உரையில் 'கட்டையிற்கள்வன் போல் பிரம்மத்தில் ஜீவத்வம் தோன்றுகிறது. ஜீவனது உண்மை வடிவமான கூடஸ்தனே பிரமமென அறிந்த காலத்தில் ஜீவத்வம் நீங்குகின்றது.' என்று கூறியிருப்பதால் பிரம்மத்தில் ஜீவத்துவம் தோற்றமே ஒழிய அது தனிப்பொருள் அல்ல. மேலும் திருமந்திரத்தில் 'மரத்தை மறைத்தது மாமத யானை' என்றும் 'பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்' என்றும் கூறிபோந்துள்ள பிரமாணங்கள் யாவும் ஒன்று மற்றென்ருகத் தோன்றுவது என்று அறிவிப்பதற்கல்லவா அங்கனம் கூறிற்று. இதில் ஒன்று வாஸ்தவமும் மற்றொன்று போலியும் ஆகவேண்டுமே! மரம் வாஸ்தவமும் ஆனை போலியும், தங்கம் வாஸ்தவமும் பணிகள் போலியுமாயவாறுபோல் பிரமமான ஆத்மா வாஸ்தவமும் ஜீவத்வம் போலியுமாம். இங்கனம் இருக்க இந்த ஜீவத்வத்தை

தனிப்பொருளாக்கி உயர்திணை ஆண்பால் பொருள் எனவும் அதுவேறு பரம்பொருள் வேறு எனக்கூறியும் எழுதியும் வரும் அறியாமை கடலினும் பெரிதாம் என்பதற்கு ஐயமில்லை. இது எதுபோல் எனின் பொன்னிற்கும் பணிக்கும் தனித்தனி விலை பேசியதற்கு ஒப்பாம் என்க. மேலும் அனுபவானந்த தீபிகை கவி 'மண்ணீரனல்வளிவான் திரிபவையே மாந்தர்கள் முதல் ஏழுவகை தோற்ற நசிப்பும் உண்ணுடிலில்லை இறப்பு பிறப்பும் உடலுக்கு முதல் கெடலின்மையினுல்' இதன்பொருள்: மக்கள் முதல் ஏழ்வகைப் பிறவிகளும் ஐந்து பூதத்தின் காரியமாம். பிறப்பதாகவும் இறப்பதாகவும் தோன்றுவது இந்த பூதங்களினுடைய மாறுதலாம். பஞ்சபூத அணுக்களான முதற் காரணம் கெடாமையால் உடலுக்கும் பிறத்தல், இறத்தல் காணமுடியாது என்றுல் ஆத்மாவிற்குப் பிறத்தல் இறத்தல் ஏது? இல்லை என்பதாயிற்று.

165 அன்பனே! நான் என்ற சொல்லுக்குப்பொருளாய் ஜாக்ர சொற்பன சுழுத்தி ஆகிய மூன்று காலத்திலும் மாறுதல் அடையாமல் இருக்கின்ற அறிவானந்த சொருபமான பிரம்மமே நானுகும். அப்படியிருந்தும் அந்தப் பிரமத்தை நான் அறியேன் என்றுல் அப்பொழுது நான் என்பது எது? புத்தி முதலிய அந்தக் கரணந்தான் அங்கனம் கூறுகின்றது எனின் சுழுத்தி மூர்ச்சை முதலிய அவஸ்தைகளில் இந்தப் புத்திலயமாகின்றதே! அங்கனம் லயமான காலத்தும் லயமாகாமல் சுழுத்தியில் ஆனந்தமாகவும், ஜாக்ர சொற்பனங்களின் சாட்சியாகவும் அறிவானந்த சொரூபமாகவும் உள்ள பிரமம் எதுவோ அதுவே நான் என்பதின் உண்மை பொருள் ஆகும். மேற்கூறிய நான் அவஸ்தா வயப்பட்டவனுயினும் பிரமமேயாம் என்பதற்கு மேற்கோள் சொரூபானந்தர்,

சொரூபசாரம் வெண்பா -16

"சாயையென வாழ் குடும்பந்தன்னைச்சுமந்தாலு
மாயையெனு மேக மறைத்தாலுந் - தூய வொளி
தானு விளங்கிச் சக சாட்சி யாவிருக்கு
ஞானுதித்தன்றுனே நாம்'

என்று கூறியிருப்பதாலும் அறியலாம்.

166 குருதேவா! ஞான சொரூபமான நான் எங்கும் நிறைந்திருப்பது எக்காரணத்தால் என்பதை அருள்வீராக. அன்பனே! ஆத்மா பரிபூரணமாய் எங்கும் நிறைந்தபொருள் என்பதற்கு தின சுழுத்தியின் அனுபவத்தைச் சொல்லுவது முக்கிய சித்தாந்தமாகும். ஏனெனில் சுழுத்தி சுகம் எந்தக் கருவியில் நின்றுவது அல்லது சரீரத்தில் நின்றுவது உற்பத்தி ஆகாததாயிருத்தலின் அது அகண்டமாம். ஆகையால் அந்த ஆனந்தமே நிறைந்ததாம். நிறைந்தப் பொருள் எதுவோ அதுதான் ஆனந்தமாயிருக்க முடியும். குறைந்த வஸ்துக்களுக்கு ஆனந்தம் உலகத்தில் இல்லை. உள்ளதாகத் தோன்றினலும் அது கணப்பொழுதில் மாறுதல் அடையும் தன்மையுள்ளதாயிருக்கும். ஆனதால் அறிவானந்த சொரூபமான இந்த ஆத்மா நிறைந்தபொருளாம் என்பதற்கு ஐயமில்லை. மேற்கோள் சொரூபசார வெண்பா - 29

'ஏது சிவானந்தமோ வேது சிவாகாரமோ
வேது சிவன் செயலோ வென்றதே-யேதும்
பிறவாக வொன்றகாப் பேதமாகாத
வறிவா நிறைவேயது'

என்று கூறியிருப்பதால் நிறைந்ததே இந்த ஆத்மா எனக் கொள்க.

167 அன்பனே! மனமே சங்கல்பத்தினுலே சகல தேகாதி பிரபஞ்சமும் தோன்றுகின்றன. ஆராய்ந்து பார்க்குமிடத்து அனேகஉலகங்கள்தோன்றுவது இவ்வறிவிலல்லவா! சொர்க்க லோகமென்றல் அங்குள்ளவர்களிடத்திலும் இந்த அறிவு இல்லாவிட்டால் நலம் தீது எங்கனம் தெரியும் ஆகையால் எல்லாவுலகமும் அதாவது ராமலிங்க அடிகளின் திருவுள்ளத்தில் கண்ட 2500 உலகங்களையும் கடந்து நிற்பதும் ஆதி அந்தமற்றதும் இந்த அறிவு சொரூபமாம் என்பதை சித்து சட விசாரம் செய்தால் காணலாம். ஒரு குடம் மண்ணென்று அறிந்தால் எல்லாக்குடங்களும் மண் தாள் என்று அறிவது போல் நானே எல்லாமாய் எங்கும் நிறைந்தவன் என்பது தேற்றம்.

168 குருதேவா! தாங்கள் முன்கூறியது போல் நான் பரிபூரணனுயிருந்துக்கொண்டு என் சொரூபானந்தத்தை அனுபவிக்க எப்படியிருந்தால் முடியும் என்பதை அருள்வீராக. அன்பனே! ஜாக்ரத்தில் இந்திரியங்களால் ஏற்படுகின்ற எண்ணங்களும் சொற்பனத்தில் இந்திரியங்கள் இன்றி ஏற்படுகின்ற எண்ணங்களும் சுழுத்தியில் ஒன்றுந்தெரியவில்லை என்ற அவித்தையா விருத்தியும் ஆகிய இவைகள் சாட்சியின்றி சித்திக்காமையின் அந்த சாட்சி அவஸ்தைகள் மாறினும் தான் மாருமல் இருப்பதால் அது நித்தியமெனவும் அந்த நித்தியமே தனது சொரூபமெனவும் அதுவே ஆனந்தமெனவும் அறிவது ஆனந்தமல்லவா? இவ்வாறு நீயும் ஆனந்த சொரூபமாக இருப்பாயாக இதில் நிறைந்த பொருளான ஆத்மா அந்தக்கரண உபாதியால் தன்னை அகண்டத்திலிருந்து வேறு பிரித்தது போல் கருதி தான் தனிப்பட்டதுபோல் தோன்றுகின்றது. தோன்றினும் தான் அகண்ட சொரூபமேயாம். இதற்கு மேற்கோள்

சொரூபசாரவெண்பா - 13

'நனவிற்ற சேந்திரிய நாட்டியங்கள் பார்ப்போங்
கனவின் மனக்கூத்துங் காண்போ- நினைவில்
சுழுத்தியிலே யில்லாத சூனியக் கூத்தாடி
விழுப்பொருளா நாமிருப்போமே'

என்று கூறியிருப்பதால் இந்த ஆத்மா அவஸ்தாத்திரய சாட்சியாய் விளங்குவதைக் காண்க.

169 குருதேவா! மூன்று அவஸ்தையிலும் மணிகளுக்குள் நூல்போல் வியாபித்திருக்கின்ற ஆத்மாவானது மூன்றவஸ்தையின் கண்ணும் உளதாகும் எண்ணங்களுக்கு சாட்சியாயிருப்பதறிந்தேன். ஆனல் பழக்க வாசனையினுல் வருகின்ற எண்ணங்களை அடக்கி சொரூபாகாரமாய் இருப்பதற்கு உபாயம்யாது? இதை அருள்வீராக. அன்பனே! அறிவே அரசனுகவும் புத்தி முதலிய அந்தக்கரணங்களோடு ஐம்புலன்

களையும் மேற்கூறிய அறிவிற்குத் தாசனாக இருக்கும்படிப் பழகினால் சகலமும் அடங்குந்தானே. இதன் உள்ளுரை:- இதில் மனதை அடக்குவதின் பொருள் இருவகையாகும். அதில் ஒன்று மனம் அத்தியந்தம் லயமாதல். மற்றொன்று பண்படுத்தி தாசராக அதாவது அடிமையாக்கிக் கொள்ளுதல் இந்த இரண்டு விதத்தில் தாசராயிருத்தல் என்பது இந்நூல் ஆசிரியருக்கு உடன்பாடு. அத்தியந்த லயம் உடன்பாடன்று மனதின் ரஜோதமோ குணங்களை மாற்றி சத்துவகுணமாய் இருத்தலே பொருந்தும். இதன்றி மனோ நாசம் முத்தியாயின் தத்துவ விளக்கப்படலம் 55-வது கவியில் சுழுத்தியற் பிரளயத்தில் தோற்றமாம் சகங்கள் மாண்டும் அழுத்தியபவம் போய் முத்தி அடைந்தவர் ஒருவருண்டோ? என்று இவரே நம்மைக்கேட்டிருப்பதால் மனோலயமுத்தியன்று பிரளய காலத்தில் மனமிருக்கிறது ஆனால் முத்தியில்லை யென்னில்? பிரளய காலத்தில் மனமில்லை என்பது திண்ணம் இதை கோவிலூர் மடத்தில் நின்று வெளிப்பட்டுள்ள பாஷ்ய இருதயம் 41வது பக்கம் 'விசுவோற்பத்திக்கு முன்னம் ஜீவன் இல்லை. மகா பிரளத்திலும் ஜீவன் இல்லை. மத்தியில் அந்தக் கரணக்கற்பனையினால் கற்பிதனானவன்' என்று கூறியிருப்பதால் பிரளயத்தில் மனதும் ஜீவனும் இல்லை என்பதாயிற்று. மேலும் மனம் என்பது சூட்சும சரீரத்தின் ஒருபகுதி. சூட்சும சரீரம் இல்லாவிட்டால் ஜீவன் இல்லை எனவே பிரளயத்தில் ஜீவன் இல்லாமையால் மனமுமில்லை. இல்லாமையால் முத்தியுமில்லை ஆகையால் இப்போது மனதோடு கூடியிருக்கும் போது 28 தத்துவத்தின் பேதா பேதம் அறிவதே முத்தியாகும் என்று கட்டளை கூறியிருப்பதை மறவற்க. எனவே மனோ நாசமென்ற பிராந்தியை விட்டு உலகம் தனது சொரூபமெனக்கண்டு பலனை விரும்பாது கருமத்தைச் செய்க பாஷ்ய கிருதயத்தின்படி ஜீவத்துவம் கற்பிதம் என்றாயிற்று ஆகுமானால் பழுதையில் பாம்பு கற்பிப்பது போல் மனதால் ஜீவத்துவம் கற்பனை செய்வதாகும். இங்கனம் கற்பிதப்பொருள் தனிப்பொருள் ஆகுமா? ஆகுமானால் பாம்பு தனிப்பொருள் ஆகவேண்டுமே! ஆகாது. இங்கனமாய கற்பிதப் பொருளை வேத விரோதமாய் ஜீவனென்று கூறுவது அறிவுடைமையாகுமா?

170 அன்பனே! இதுவரையிலும் சித்து சட விசார்த்தைத் பற்றிய ஞானமே முக்கியமென்று சொன்னேன். இந்த விசாரம் புத்தியில் ஏருதவர்கள் மனேலய சாதகம் செய்து பழகினல் அதன்பின் சித்து சட விசாரம் உண்டாய்விடும் மனதை அடக்குவதால் மட்டும் பயனில்லை. இதைப்பற்றி யோகசாஸ்திரங்களில் பலஉபாயங்கள் கூறப்பட்டுஇருக்கின்றன.பிராண வாயுவோடு மனதையும் சேர்த்து அடக்கிப்பழகினல் விருத்திகள் அடங்கும். இது உனக்குப்பிடிக்காவிட்டால் காரண சரீரமான அஞ்ஞானத்தை விசாரத்தினல் போக்கினல் விருத்திகள் தானே அடங்கும். இந்த அஞ்ஞானம் நீங்க வேண்டுமானல் மீண்டும் சித்து சட விசாரம் செய்துதான் ஆகவேண்டும். இது முக்கியமான சித்தாந்தமாம். பிராண வாயுவோடு மனதையும் சேர்த்து அடக்குமுபாயம் மத்திமபக்ஷமாம். இதன் உள்ளுரை: யோகமென்பது மூச்சடக்குவது அல்ல. ஜீவப்பிரமங்களின் ஏகத்துவமே யோகமாம்,யோகம் என்பது ஞானத்திற்கு மற்ருெரு பரியாயப் பெயராம். இனி யோகமென்பது ஹடயோகம், ராஜயோகம் என இருவகைத் தாம்.இதில் சித்து சட விசாரமில்லாத பிடிவாத புத்தியுள்ளவர்களுக்கு மூச்சையடக்கி இருக்கச்சொல்வது ஹடயோகமாம். சித்து சட விசாரமுள்ளவர்களுக்கு உரியது ராஜ யோகமாம். இந்த ராஜயோகம் எட்டு அங்கமுடையதாக இருக்கும். இந்த எட்டுக்கும் வெளியர்த்தமும் உள்ளர்த்தமுமாக இருவகை தாற்பரியங்கள் நூல்களால் கூறப்பட்டிருக்கின்றன. அதில் மூச்சடக்குதல் முதலியன வெளியர்த்தமான ஹடயோகமாம். அதன் உள்ளர்த்தமான ராஜயோகத்தைக் கேட்பாய். எமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டு விதமாம். இதன்பொருள் சர்வமும் பிரமம் என்னும் விசேஷ ஞானம் எமம் எனப்படும். சகலமும் தன்னம்சமாகக்காணுதல் நியமமெனப்படும். கர்த்தத்வ போக்தத்வாதிகள் தோன்றுதிருத்தல் ஆசனமாம். அடுத்தபடி பிராணுயாமம். இது ரேசக, பூரக, கும்பகம் என மூன்று விதமாம் இதில் ஜடவஸ்துக்களான தேகாதிப்பிரபஞ்சத்தை நேதி செய்தல் ரேசகம் எனப்படும். நான் பிரமம்என்னும் விருத்தி ··ரகமாம்.

பிரமமாக நினைத்தல் கும்பகமாம். விஷயானந்தங்கள் அனைத்தும் சொரூபானந்தமே என அறிவது பிரத்தியாகாரமாம். எங்கு எங்கு மனம் செல்லுகின்றதோ ஆங்கு ஆங்கு பிரமத்தைக் காணுதல் தாரணை எனப்படும். வேறு பற்றின்றி பிரமத்தை மீண்டும்மீண்டும் சிந்தித்தல் தியானம் எனப்படும். ஆத்ம சொரூபமாக நிலைத்தல் சமாதியாம். இதுவே ராஜயோகத்தின் பொருளாம். இஃது ஆதிசங்கர பகவற்பாத ஆசாரிய சுவாமிகளால் இயற்றியருளிய அபரோக்ஷானு பூதியிலும் விசாரசாகரம் சிவராவ் மொழி பெயர்ப்பின் 350-வது பக்கத்திலும் காணலாம். இதைவிட்டு மூச்சை அடக்குதல் மூக்கு நுனியை நோக்குதல் முதலியன தன்னிழலோடு போராடுவது போல் ஜடப்பொருளான வாய்வோடு போராடுதல் பயனில்லை. இதை சொரூபானந்தர் சொரூபசாரத்தின் 55-வது வெண்பா.

'மூலக்குளேயிருந்து மூச்சடக்கிப் பேச்சடக்கிச்
சாலக் கன யோகஞ்சாதிப்பார் - மேலுணர்வு
கண்டிருக்கச் சாதனையேன் காயத்தையே வலித்திங்
குண்டிருக்க வெண்ணுகிறரோ.'

என்று கூறியிருப்பதால் ஹட யோகத்தை மறுத்தவாருயிற்று.

171 குருதேவா! காரண சரீரமாகிய அவித்தையைப் பிடுங்கிடில் விருத்திகள் அடங்கும் என்று அருளிச்செய்தீரே அங்கனமாயின் காரண சரீரத்தைக் களைவது எவ்வாறு என்பதை அருள்வீராக. அன்பனே! வேதம் பொய் சொல்லாது. அதன் பொருள் அகத்துள் உன்னி சர்வம் பிரமமயம் என்னும் வேதவாக்கியத்தை யுக்தி அனுபவத்தோடு ஆராய்ந்துப்பார்த்து பரிபூரணமாய் எங்கும் நிறைந்த ஆத்ம சொரூபமான என்னிடத்தில் சகல தேகாதிப் பிரபஞ்சங்களும் பழுதையில் பாம்புபோல் கற்பிதமாக தோன்றும் என்ற உறுதி உண்டானல் அவித்தையாகிய காரண சரீரம் எங்கு தேடினும் காணமுடியாது. இதன் உள்ளுரை:- பிரம்மமாம் தனை மறந்த பேதமையே அஞ்ஞானம் என்று இந்நூலாசிரியர் அஞ்ஞானத்திற்கு இலக்கணம் கூறியிருப்பதால் உண்மையில் தான் பிரமமாயிருந்தும் தான் பிரமமல்ல என்று ஏற்படுகின்ற நிச்சயமே அஞ்ஞானம், இதுவே காரண சரீரமுமாம். இது

மற்றிரண்டு சரீரத்திற்கும் காரணமாயிருக்கிறது. இது இருக்கும் வரையில் பிறவி தோன்றும். இது நசித்தால் பிறவிதோன்ருது. இந்தக்காரண சரீரம் நாசமடைய உபாயம் அதற்கு யாதோவெனின் தன்னை பிரமம் என்று அறிந்தால் அதுவே நாசமாம். வேறு உபாயத்தால் நாசமாகாது. இங்ஙனமாய அவித்தை அநாதியாதலின் நாசமெங்ஙனமாம் எனின்? ஜீவன் ஈசுவரன், வித்தை, அவித்தை முதலிய ஆறும் அநாதியாகலின் நாசம் சொல்லக்கூடாது. பின்னையாது சொல்ல வேண்டும் எனின்? கற்பித அநாதியென்றே சொல்ல வேண்டும். எனவே நாசம் என்ற சொல்லுக்கு கற்பிதத்தைக் கற்பிதமாய்க் காணுதல் எனப்பொருள்கொள்க. இதுபற்றி அன்றே இந் நூலாசிரியர் இந்தக்கவியில் பூரணமாகும் என்மேல் புவனங்கள் தோன்றும் என்னும் தாரனை வந்ததாகில் தரித்திடும் அவித்தையெங்கே என்று நம்மைக் கேட்டிருக்கிருர். எனவே பாம்பிற்கு பழுதையைவிட தனிப்பொருளில்லாதவாறு போல் இந்த அவித்தைக்கு பிரமத்தைவிட தனிப்பொருளில்லை, அவித்தை வாஸ்தவமாயிருந்தால் சித்து சட விசாரத்தால் நீங்காது. நீங்கிப்போகின்றபடியால் தோற்றமேயாம். பிரம்மத்தைத் தன் சொரூபமாக அறிந்தால் அவித்தையாத் தோற்றம் ஏது? இல்லையென்ற வாருயிற்று.

172 குருதேவா! நான் பிரம்ம சொரூபன் என்ற உறுதி வைரமலை ஒப்ப பலப்பட்டிருக்கிறது. ஆனாலும் மனம் உலக விவகாரத்தில் சென்று அலைகின்றது இப்படி அலைகின்ற மனதிற்கு நான் பிரமம் என்கின்ற நிச்சயமும் உலக விவகாரமும் ஆகிய இரண்டும் ஏக காலத்தில் எங்ஙனம் பொருந்தும் இதை அருள்வீராக. ' அன்பனே! நீ எத்தகைய நிச்சயத்தோடு இருக்க வேண்டுமெனின் பிரம்மமாகிய என்னைவிட வேருக ஒரு அணுவும் கூட இல்லை. தோன்றுகின்ற தோற்றங்கள் அனைத்தும் என் அம்சமே யாம். அது எங்ஙனமெனின்? கனு காண்பவனுடைய காட்சிப்பொருள் முழுவதும் அவனை விட வேருக இல்லையல்லவா. அதுபோல் சகல நாம ரூபப் பிரபஞ்சங்களையும் அறியும் அறிவானந்த சொரூபன் நானே என்றிருப்பாயாக. இதில் சொற்பன சாட்சியைவிட சொற்பன காட்சிப்பொருள்வேருகவின்மையாய வாறுபோல் தேகாதிப் பிரபஞ்சம் சேதனனை உன்னைவிட வேருக இல்லை என்பதாம்

இதை சொருபானந்தர் சொருபசாரம் 27-வது வெண்பாவில் காணலாம்.

'என்னைத்தவிர மற்றிங்கேதுமில்லை யென்றுணை
பொன்னைத்தவிர விலைப் பூடணம்போற் -பொன்னையுரு
வேருக்கிப் பேருரைத்த வேற்றுமை போனம் மையுமவ்
வாருய்ப் பகுத்துரைத் தோமால்'

என்று கூறியிருப்பதால் உலகம் மெய்ப்பொருள் வடிவே. நீயும் அதுவாயிருக்கிருய்.

173 அன்பனே! நான் அறிவானந்த சொருபன். எங்கும் நிறைந்தவன் என்ற திட நிச்சயம் மறவாதிருந்தால் எத்தனை எண்ணினுலும், எத்தொழிலைச் செய்தாலும் அதனுல் ஆத்ம சொருபமான எனக்கு எவ்விதக் குறைபாடுமில்லை. தூங்குகின்ற போது நிகழும் கனவில் பல நிகழ்ச்சிகளைக் கண்டபின் விழித்துப்பார்த்தபோது அத்தனையும் பொய்யாய் கழிந்தவாறுபோல் என் நிஜ சொருபத்தை நோக்க தேகாதிப் பிரபஞ்சங்கள் அத்தனையும் பொய். நான் ஆனந்த சொருபன் என்று நிச்சயம் மறவாதிருப்பாயாக. இதன் உள்ளுரை:. ஞானத்தின் பலன் நான்கு விதம் 1. துக்காபாவம், 2. சர்வ காமாப்தி, 3. கிருத கிருத்தியத்துவம், 4. பிராப்தி பிராப்பியம் என்பனவாம். இதில் 164 கவிமுதல் துக்கா பாவம் அதாவது ஞானிக்கு இகலோக, பரலோக துக்கமில்லை என்றும், 168 கவிமுதல் சர்வகாமாப்தி அதாவது ஆனந்தானு பவம் கூறினர் 172 முதல் கிருத கிருத்தியத்துவம் அதாவது எல்லாம்செய்து முடிந்தமை கூறி 174கவிமுதல் பிராப்திபிராப் பியம் அதாவது அடையத்தக்கனவெல்லாம் அடைந்தோம் என்பதையும் கூறிமுடித்தார். இனி சித்து சொருபனை ஞானி எதைச்செய்தாலும் அதன் பலன் அவனுக்கில்லை. ஏனெனின் அவன் பிரம்மமாகியத் தன்னைக் கண்டவன் பற்றற்றவன். அவன் செய்யும் நன்மை தீமைகள் அவனைச்சாராது. ஆனல் தீமை செய்வானே எனின் செய்யமாட்டான். ஏனெனின் அவன் எல்லாம் தன்னம்சமாய் கண்டவன் ஆகையால் தீமை செய்யமாட்டான் எனினும் பிராரத்த கருமம் எங்கனமோ அங்கனமே அவன் செயல் இருக்கும். மரத்தின் சருகுகள் காற்று எந்தப்பக்கம் அடிக்கின்றதோ அங்கு செல்லுமே ஒழிய தன்னிஷ்டப்படி செல்லாது. அதுபோல் இந்த ஞானியும்

எனக்கொள்க. இக்காரணத்தால் தீமைகள் செய்த ஞானிகளும் அனந்தம் பேர்கள் இருந்தார்கள். அதற்கும் ஞானத்திற்கும் சம்பந்தமில்லை. பரசுராமன் தாயாரைக்கொன்ருன். அந்த பாவம் அவனைச் சேரவில்லை. தேவேந்திரன் நூறு அசுவமேத யாகம் செய்தான் அந்தப் புண்ணியம் அவனைச் சாரவில்லை. ஞானவாசிட்டத்தில் வரும் கற்கடி என்பவள் அனேக கொலைகளைச் செய்தாள். அந்தப்பாவம் அவளைச்சாரவில்லை. இவ்வாருன வரலாறுகளை நோக்கும்போது அவர்கள் அடைந்த ஞானம் வேறு நாம் அடைந்த ஞானம் வேரு? இல்லையல்லவா எனவே கூடுமானவரையில் உலக உபகார கருமமே செய்க. இந்தப் பிரம சொரூபமான அறிவு தன் சொரூபமாகஅறிந்த ஞானியினுடைய திருஷ்டியில் பிராரத்துவ கருமமில்லை. அவனுக்கு விதிநிஷேதமுமில்லை. அவனது விதேக முக்தி காலத்திலும் விதிநிஷேதமில்லை. இதை விசாரசாகரம் சிவராவ் மொழிப்பெயர்ப்பின் 364ம் பக்கத்தில் இந்த ஞானிக்கு தேச கால ஆசனுதிகளின் அபேகைஷயில்லை. காசியிலாவது அல்லது மலின ஸ்தலங்களிலாவது அவனது சரீரம் விடக்கூடும். எவ்விதத்திலும் அவன் முக்தனே. ஒருக்கால் பிரம்மசிந்தனை செய்து கொண்டாவது அல்லது வியாதியினுல் ஆகா ஊஹூ என்று சொல்லிக்கொண்டாவது அவன் சரீரம் விடக்கூடும். எவ்விதத்திலும் அவனுக்கு ஆத்மாவில் ஜனன மரண பிராந்தியில்லை. அதனுல் அவன் முக்தன் உபாசகனுக்கு தேச கால ஆசனுதிகளின் அபேகைஷ உண்டு இந்த விதிமுறைகளை அறிந்து பிரம்மமே தான்என்று அறிந்த உத்தமாதிகாரியானவன் தன் சொரூபநிலையில் இருந்தான். அவனுடைய பிராணனும் லயமாய் விட்டது எனவே சிஷ்யனே கால தேச ஆசனுதி அபேகைஷயின்றி கடமையைச் செய்வாயாக. இந்நிலையில் உனக்குப்பிரியம் எதுவோ அதைச் செய்வாயாக. இதை கீழ்வரும் செய்யுளால் காணலாம். வாசிட்டம் கடைசிச் செய்யுள்.

எனக்கீதென்னு முணர்வுடைமை யிடர் விட்ட
 - கலாதுணர்வின்மை
அனர்த்தமில்லா வீடளிக்கு மாசையே திங்
 - கது செய்வாய்
சனிப்பில் சிவமெங்கனு முளது சாந்தஞ்
 - சுபஞ் சித்துரு வென்னுங்
கனத்த வந்தவொரு நினைவே கருமத்தி
 - யாக மிராகவனே.

இதற்கு வீரசுப்பையா சுவாமிகளினுரையில் "நான் உபசாந்த சொரூபன், மங்கள சொரூபன், அறிவு சொரூபன் என்னும் கணமான ஒரு நினேவே சர்வ சங்க பரித்தியாகமாம் என்றும் மேலும் இக்கவிக்கு பொரையார் அருணுஜல சுவாமி களுரையில் 'மங்களகரமாகிய அறிவானந்த சொரூபன் நான் என்னும் ஒரு கனத்த நினேவே சர்வசங்க பரித்தியாகமாம்' என்றுவசிட்டமா முனிவர் இராகவனை நோக்கிக்கூற இராமனும் ஆத்மாவே தான் என்று அறிந்து பின் துஷ்ட நிக்ரக சிட்ட பரிபாலனும் செய்து அனேக நாள் அரசாண்ட பிறகு விதேக முத்திநிலேயை அடைந்தார். அதுபோல் சிஷ்யனே நீயும் சொரூபநிலேயில் இருப்பாயாக. சரீரம் கருமத்திற்கீடாக எப்படியோ அப்படி செயலாற்றட்டும் அதனுல் உனக்கு ஹானியில்லே.

174 குருதேவா! தங்களுடைய கிருபா கடாட்சத்தால் ஜடமான சரீரத்தையே நான் என நம்பி இருந்ததின் விளேவாக அனேகாயிரம் சென்மங்கள் தோன்றி மறைந்தன. கீழ் மேலாகத்தோன்றிய அத்தனே ஜன்மங்களும் கானலில் தோன்றும் வெள்ளம் போல பொய்யென்று தங்கள் திருவருளால் அறிந்தேன். இத்தகையப் பொய்த்தோற்றத்திற்கு அதிஷ்டானமான பிரமமே என் நிஜ சொரூபம் என்று அறிந்து தன்னம்பிக்கையோடு கடைத்தேறினேன். ஆதாவது ஈடேறி விட்டேன்.

175 இவ்வாருன பரமானந்தம் எனக்கு ஏற்படுவதற்கு என்ன புண்ணியம் செய்தேனே? ஏது பாக்கியமோ? அதாவது அதிர்ஷ்ட பலமோ அறியேன். நன்னிலமென்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருந்த நாராயண தேசிகர் என்னும் சற்குரு கிருபா விசேஷத்தால் நான் தன்னியனுனேன் அதனுல் உண்டான பரமானந்தத்தால் உத்தரீயமான மேலாடையை ஆகாயத்தில் எறிந்து விளேயாடுகின்றேன். நான் இன்னும் ஆனந்தக்கூத்தாடுகின்றேன். இதில் நன்னில மென்பது துரிய சொரூபமான பிரமத்தையும் நன்னிலம் என்ற ஊரையும் குறிக்கும்.

அ. கை. மாதா பிதாவே புகழுதல்

176 மகாவாக்கிய விசாரத்தால் உண்டான நித்தியானந்தமென்னும் பிரமானந்தம் பெற்ற சந்தோஷத்தால் ஆனந்தக் கூத்தாடுவான் என்னும் நிச்சயத்தை நான் பிறந்த அன்றே அறிந்த உண்மையினால் அன்றோ என்னைத் தாண்டவரா என்று அழைத்தனர். அதனால் அவர்கள் மிகவும் மகிமையுள்ளோர் ஆவர்.

177 எனக்குண்டான பிரமானந்தத்தால் விளைந்த ஆனந்த மகிழ்ச்சியை யாருடன் சொல்வேன். இவ்வானந்தம் சத்துவாம்சமான அந்தக்கரணத்தில் தோன்றி பிரபஞ்சமுழுவதும் வியாபித்து பரிபூரணமாயிற்று. இவ்வாறான நிரதிசயானந்தம் எனக்குண்டாகுமாறு குருவாகவும் வேதாந்த சாஸ்திரமாகவும் இருந்து அருள்செய்த பரம்பொருளின் பத்ம பாதத்தை அனுதினம் பணிகின்றேன்.

178 மகா வாக்கியத்தின் பொருள் துக்காபாவம், சர்வ காமாப்தி, கிருத கிருத்தியத்வம், பிராப்தி பிராப்பியம் என்னும் நான்கு வகையாக இருக்கும் என்று அதன் விளக்கத்தை இதுகாறும் கூறினோம். இனி கூறத்தக்கது ஒன்றும் இல்லை. அன்புடன் கைவல்ய நவநீதமென்னும் இந்நூலை சற்குரு வாயிலாகக்கேட்டு ஆராய்ந்து தன் நிஜ வடிவப் பிரமத்தை உள்ளவாறு அறிந்து உறுதியுடன் நிஷ்காம கருமம் செய்து ஜீவன் முத்தரான முனிவர்களாவீர்கள்.

179 வேதார்த்தமான சாதன சதுஷ்டய முதல் வித்தையானந்தபரியந்தம் அதிகாரிகளுக்கு விளங்கும்படி கூற வேண்டிய காரணங்கள் எதுவும் குறைவுபடாமல் கைவல்ய மென்னும் இந்நூலை பூரணமாக்க வேண்டி நன்னில மென்னும் திவ்யக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருந்த நாராயண தேசிகரென்னும் சற்குரு மூர்த்தி என் தியானத்தில் தோன்றிக் கூறவேண்டிய அனைத்தையும் கூறி இந்நூல் முற்றும் பெறுமாறு செய்தருளினர்.

180 சற்குருவின் திருவடியில் அபிஷேகம் செய்த தீர்த்தத்தை தமது சிரசில் தெளித்துக்கொண்டவர்கள் கெங்கை முதலிய புண்ணியதீர்த்தம் அனைத்திலும் சென்று

முழுகினோர் அடையும் பயனெலாம் அண்டவர்கள் போல கைவல்ய நன்னூலென்னும் இந்த மெய்ஞ்ஞான சாத்திரத்தை சற்குரு வாயிலாக விதிமுறையில் கற்றிறந்தவர்கள் ஞான சாஸ்திரங்கள் பலவற்றினையும் படித்துணர்ந்த ஞானிகளாய் வாழ்வார்கள். இதில் குலவு சற்குருவின் பாத குளிர் புனல் தலைமேல்கொண்டால் உலகினில் தீர்த்தமெல்லாம் உற்றபேர் அடைவார்போல. என்று கூறினமையால் இதுகுரு சிஷ்யர்களின் அன்பின் மிகுதியை உணர்த்தி நின்றது. இவ்வாறே மானந்திபாராயணரும் தமது சீடனுகிய சசிவர்ணனுக்கு தமது பாதோதக தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து அருளியது விருத்தாஜல புராணத்தில் காணலாம் அது. இது சசிவர்ண போதம் 85-வது கவி

"தமரக் கலைக்களவு தெரிவற்ற தற் பொருளதனையீகுவா
னமரர்க் களப்ரிய பதநற்புனற் கொடு செய்தபிடேகமே"

இதன் உரையில் தன் சொச்சொரூபயாகிய பிரமத்தை சீடன் அடைந்துய்ய வேண்டி தேவர்களாலும் அளவிட்டுக்கூறுதற்கரிய பெருமையையுடைய தனது நல்லபாதோதகதீர்த்தத்தைக் கொண்டு சீடனுக்கு அபிஷேகம் செய்தருளினர்: என்று கூறி இருப்பதால் பண்டைக்காலந்தொட்டு குரு சிஷ்ய சம்பிரதாயத்தால் பரமார்த்தீக அன்பின்பிரவாகத்தைக்காட்டும் பொருட்டு குருவின் பாதோதக அபிஷேகத்தை சிஷ்யன் பரமானந்தமாக ஏற்றுக்கொள்வான். இது குருவானவர் சிஷ்யனிடத்தில் வைத்த அன்பின் பெருமையைக் காட்டுகின்றது. அவ்வாறே சிஷ்யன் குருவினிடத்தில்வைத்த அன்பினல் அந்த பாதோதக தீர்த்தம் அவனுக்குப் பரமானந்தமாகத் தோன்றிற்று. அங்கனம் தோன்றுமோ எனின் தோன்றும். எங்கனமெனின் அன்பானது இரண்டுவிதம், அதில்லௌகீக இன்பத்தை நோக்கிச்செல்லும் அன்பு ஒன்று. பரமார்த்தீக இன்பத்தை நோக்கிச் செல்லும் அன்பு மற்றொன்று. அப்படி இருந்த போதிலும் அன்பு ஒன்றுதான் இதில் லௌகிக இன்பத்தில் செல்லும் அன்பைப்பற்றி சிறிது காட்டுதும். திருக்குறள் 1121 'பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி வால் எயிறு ஊறிய நீர்' இதன் உரையில் மெல்லிய சொல்லை உடையவளது தூய்மையான பற்களின் இடையில் ஊறிய நீரானது பாலோடு தேனைக்கலந்த கலவை போலும் என்றார். இதனும்

மங்கையரது வாயில் ஊறும் உமிழ் நீரானது தேனும் பாலும் கலந்துண்ணும்போது உண்டான இனிமையைப் போன்றது என்பதாயிற்று. ஏன் அங்கனம் தோன்றியது எனின் அவள் இடத்தில் வைத்த அன்பே அதற்குக்காரணமாம். இதுபோல் பரமார்த்தீகத்தில் அன்புள்ளவர்களுக்கு அதை அறிவிக்கும் குருவின் பாதோதகத்தீர்த்தம் உயர்வாகத் தோன்றும். இந்த பாதோதகத்தீர்த்தம் கிட்டினவர்களுக்கு குருவின் ஞானோபதேசமாகிய பிரமானந்தத் தீர்த்தமும் கிட்டும் என்பதற்கு ஐயமில்லை. இதை சிவஞான வள்ளார் சாத்திரமும் கூறுகின்றது. கவி

"தீர்த்தந் தேடித்திசைத்துத் திரிவீர்கா
டீர்த்தமாவது தேசிகன் வாசகந்
தீர்த்த மீதெனத் தேர்ந்து கொளாதவர்
தீர்த்த மாடியுந் தேரை யொப்பார்களே."

இதன் பொருள் வெளிப்படை. குரு சிஷ்ய சம்பிரதாயத்தில் அஸ்த தீக்ஷை, திருவடி தீக்ஷை, ஸ்பரிச தீக்ஷை, நயன தீக்ஷை, பாதோதக தீக்ஷை எனப்படுவதெல்லாம் குருவின் அனுக்கிரகத்தையும், பெருமையையும் குறிக்கும் சொற்களாம் இதை சுவாமி விவேகானந்தர் சரித்திரம் 2-ம் பதிப்பின் 102-வது பக்கத்தில் 'விவேகானந்த சுவாமிகள் B.A, படித்து இருந்தும் ஆத்ம ஞானத்தை அறியாது தட்டுக்கெட்டுத் தடுமாறிய காலத்தில் இராமகிருஷ்ண தேவரை அடைந்தார். இவர் மேல் பரமார்த்தீக அன்போடு விவேகானந்தருடைய மார்பில் குருதேவர் தமது வலக்கரத்தைப் பரிபூரண மனதுடன் வைத்து வாழ்த்தினார் என்றுகூறியிருப்பதால் அஸ்ததீக்ஷையின் பெருமையை அறியலாமல்லவா! இதுவும் குருவின் பெருமையைக்காட்டுகின்றது அல்லவா! ஷை சரித்திரம் 454-வது பக்கத்தில் சுவாமி விவேகானந்தர் மேற்கு நாடுகளின் விஜயம் முடித்துக்கொண்டு தாய்நாடு திரும்பும் வழியில் பாம்பனில் வந்து இறங்கினார். அப்பொழுது இராமநாதபுரம் ராஜா பாஸ்கரசேதுபதியவர்கள் அங்கு தயாராக வைத்திருந்த குதிரைவண்டியில் ஸ்வாமிகள் ஏறினார் உடனே பாஸ்கர சேதுபதியவர்கள் குதிரைகளை அவிழ்த்து விட்டு தாமும் தமது பரிவாரங்களும் சேர்ந்து வண்டியை இழுத்துக்கொண்டுபோய் சபா மண்டபத்தில் இறங்கச்செய்து சுவாமிகளை வித்வ சபையில் அக்ராசனாதிபதியாக அமரச்செய்தார்கள் என்று கூறியிருப்பதால் இதுவும் பரமார்த்தீகத்தில்

செல்லும் அன்பின் பிரவாக ரூபத்தை காட்டுகின்றதல்லவா! மேலும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் திவ்யசரித்திரம் ஸ்ரீவில்லிபுத்தூர் A. சீனிவாசாச்சாரியர் B.A., L.T., அவர்கள் எழுதிய சரித்திரம் 516-வது பக்கத்தில் "சுவாமி விவேகானந்தரை ஒரு கட்டிலின்மீது உட்காரவைத்து ராமகிருஷ்ண தேவர் தமது வலது காலை விவேகானந்தர்மீது ஊன்றினர். திருவடி தீண்டப்பெறுதலும் புத்தம் புதியதோர் அனுபவம் உண்டாயிற்று என்ருர் விவேகானந்தர். என்னே குரு சிஷ்ய சம்பிரதாயத்தின் பெருமை. மேலும் ஞானவாசிட்டம் நிர்வாணப் பிரகரணம் 26, 27 கவிகளின் சாரம் வருமாறு:-

தசரதச் சக்ரவர்த்தியின் ராஜ சபைக்கு விசுவாமித்திர ரிஷி விஜயம் செய்தார். உடனே அரசன் தக்க ஆசனத்தில் அமரச்செய்து விதிமுறைப்படி பாத பூஜைகள் செய்தார். வஸ்திரம், தட்சிணை, பழம், தாம்பூலம், பால் பொழியும் உயர்தரக் கறவை மாடுகள் முதலியவைகள் அளவிறந்தனவாகச் சமர்ப்பித்தபின் கீழ்வருமாறு தமது மகிழ்ச்சியை தெரிவித்தார்

குருதேவா! உங்கள் வருகையினுல் எனக்கு ஏற்பட்டுள்ள உவகைக்கு அளவில்லை தேகத்தோடு ஆகாயகமனம் பண்ணினவன்போலும் உடலைவிட்டு நீங்கிய ஜீவன் மீண்டும் உடலுக்கு வந்தது போலும் பாற்கடலில் தோன்றிய அமிர்த கும்பம் என்கையில் வந்தது போலும், குளிர்ந்த கங்கையில் முழுகினவன் போலும்,சூரியனைக்கண்ட தாமரைமலர்போலும், மழையைக்காணுத பயிர்கள் மழையைக் கண்டது போலும் குருடன் அடைந்த கண்ணைப்போலும், எனக்குண்டான இதுபோன்ற இன்பம் எக்காலத்தும் நான் அடைந்ததில்லை. என்று கூறியிருப்பதால் சான்ருேர்களிடத்தில் ஏற்படும் பரமார்த்தீக அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்? இல்லை என்பதாயிற்று. மேலும் ஆதிசங்கரர் காசியில் ஒரு வீதியின் வழியாக வரும்போது ஒரு ஹரிஜனப்பெரியார் அவர் எதிரே தோன்றினர் உடனே கெச்ச கெச்சேதி என்ருர். அதாவது விலகிப்போ,விலகிப்போ என்பதாம். இதைக்கேட்ட ஹரிஜன பெரியார் உனக்கும் எனக்கும் அன்னமயக் கோசமான சரீரத்திரயத்திற்குஉபாதானகாரணம் குடத்திற்கு மண்போல்ஒன்று தான் அதை விலகிப்போகச்சொல்ல முடியாது. சைதன்யச்

சொரூபமான ஆத்மா எனக்கும் உனக்கும் ஆகாயம் போல் ஒன்றுதான் அதையும் விலகிப்போகச் சொல்ல முடியாது. அப்படி இருக்க நீ எதை விலகிப்போகச் சொல்லுகின்றாய் என்று கேட்டார். உடனே ஆச்சாரியர் நீயே எனக்கு குரு ஆகும்என்றுகூறி மனீஷா பஞ்சகம் என்ற ஐந்து சுலோகத்தால் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்தார். இதனால் பரமார்த்தீக அன்பின் வாயிலாக குரு சிஷ்ய சம்பிரதாயமின்றி உலகில் முத்தி பெற்றவர் யார். இதனாலன்றோ ஞானிகள் பெருமையைப்பற்றி பிரம்ம கதை கேநோபநிஷதார்தம் பிரம்ம தேவன் கூறுகின்றான்.

'ஈசனு ஞாநியிருந்துள விடத்தேயிருப்பது முத்திதானந்த தேசிகனேவல் செய்பவன் காலன் சென்னியிலிருப்பது மன்னி, மாசிலாப் பரம ஞாநியா முநிக்கு மகேசனு மொப்பலன் மதிக்கி, லாசிலா வரியு மொப்பலனுனு மொப்பலனேவ ரொப்பாரே' இதன்பொருள் வெளிப்படை' மேல் காட்டிய ஆன்றோர் வாக்கியங்களின் பொருளை மனதிற் கொண்டு இந்நூலாசிரியரும் குலவு சற்குருவின் பாதக்குளிர் புனல் தலைமேல் கொண்டால் உலகினில் தீர்த்தமெல்லாம் உற்றபேர் அடைவார் போல என்றுகூறி சற்குருவின் பெருமையை உணர்த்தினர். ஆனல் நித்திய வஸ்துவின் இலக்கணம் இன்னதெனவும் அநித்திய வஸ்துவின் இலக்கணம் இன்னதெனவும் அறியாதார்க்கு இஃது ஒரு கதை போலும்! அங்கனமாயின் நித்திய வஸ்துவின் இலக்கணம் தெரிந்தவர்கள் இலரோ எனின் பலர் உளர். எக்காலத்தும் உளர். இந்நூல் நித்திய வஸ்துவின் இலக்கணம் கூற வந்ததே ஒழிய வேறன்று. எங்கனமெனின் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோற்றைப் பதம் பார்ப்பதுபோல் நித்திய வஸ்துவின் இலக்கணம் தெரிந்த ஒருவரை எடுத்துக்கொள்வோம். ஆத்மபுராணம் 552-ம் பக்கத்தில்.

'மிதிலாபுரிக்கு அரசனை ஜனகராஜன் தமது குருவாகிய யாக்ஞவல்கியரை நோக்கி ஹேபகவன் எனது மிதிலாபுரி எனப்படும் நாடு நகரம், எனது மனைவி, மைந்தன் தாசன், தாசி, சதுரங்கசேனை மற்றுமுள்ளவுடைமைகள் யாவும் தங்களுக்கு குரு தட்சிணையாகக் கொடுப்பினும் தாங்கள்

எனக்கு கொடுத்தருளிய ஆத்மஞானத்திற்குச் சமானமாகாது ஏனெனின் இவையாவும் அநித்தியப் பொருளாம். அதாவது அழியும் பொருளாம். தாங்கள் எனக்கு அளித்த ஆத்ம ஞானம் நித்தியப் பொருளாம். அதாவது அழியாப் பொருளாம். நித்தியப் பொருளுக்கு அநித்தியப்பொருள் களைக் கொடுப்பது ஈடாகாது அதாவது சமானம் ஆகாது பின்யாது கொடுப்பேன்! ஆயினும் இவை யாவும் தங்களுக்கு குருதட்சிணையாக உதகத்தை ஜலத்தைவிட்டு உண்மையாக கொடுத்துவிட்டேன் என்றார். இதைக்கேட்ட யாக்ஞவல்கி-யரும் நீ கொடுத்தவை யாவும் பெற்றுக்கொண்டேன் ஆனால் இவையாவும் உன்னிடமே இருக்கட்டும். நீ ஆத்ம சொரூப நிச்சயத்தோடு இருந்துக்கொண்டு உலக விவகாரக் கருமம் செய்து வாழக்கடவாய் என்று ஆசீர்வதித்து தனது ஆஸ்ர-மத்திற்கு ஏகினார்.' என்றுகூறி இருப்பதால் நித்தியவஸ்து-வின் இலக்கணம் தெரிந்து கொண்டவர்களின் நிச்சயம் தெரிந்து கொள்ளலாம் அல்லவா!

இந்த கைவல்ய நவநீதமென்னும் பிரபல நூலின் கருத்து யாவும் ஆதியந்தம் வரையில் ஆராய்ந்துபார்த்தால் தன் சொரூப சுபாவமாயுள்ள அகம் பிரமமென்னும் ஞானமே முடிவாகக் காணமுடியும். இதுசர்வ வேதாகம இதிகாச புராணாதிகளில் கூறியுள்ள உண்மைப் பொருளும் இதுவே-யாகும். என்பதை உத்திரகீதை இரண்டாம் அத்தியாயம் 48-வது சுலோகத்தில் பகவான் அர்ச்சுனனைநோக்கி அருளிச் செய்திருப்பதைப் பாருங்கள் "எவன் வேத சாஸ்திரங்களை நன்றாய் ஓதியும் கேட்டும் நான் பிரமமென்று அறிய வில்லையோ அவனுக்கு படித்த பிரயாசை மட்டும்தான் பலன்' என்று கூறியிருப்பதால் அறியலாம். சித்து நான் நிறைந்-தோன் என்ற திடம் மறவாதிருந்தால். என்று கூறும் அரைக் கவியே போதும் என்பதற்கு பாலபோதம் 213வது பக்கத்தில் உள்ள ஒரு கவியைப்பாருங்கள்

திருத்தகு கோடி நூலாற்றெரித்திடு பொருள்களெல்லா
மரைச் செய்யுடன்றல் யானு மறைகுவன் சாரமாகப்
பெருத்ததோர் பிரம மெய்யே பேசிடுமுலகு பொய்யா
மருத்தியல் சிவனே ஜீவனந்நியமில்லை சற்றும்.

இக்கவியில் பெருத்ததோர்பிரமம் மெய்யே என்பதும் பேசிடு உலகு பொய்யாம் என்பதும் பிரமமே (சிவன்) ஜீவன் என்பதும் இவை ஒருகோடி கிரந்தங்களின் உண்மைப் பொருளாம் என்பதும் உய்த்துணர்க. மேலும் இந்நூலின் கருத்து யாவும் ஞானவாசிட்டத்தின் ஒரு கவியால் அடங்கும் என்பதை கீழ்வரும் கவியில் காணலாம்.

வைராக்கியப் பிரகரணம் 24-வது கவி

இறப்பிலா விந்த மோக மிறையு மீட்டெண்ணமின்றி
மறப்பதே நல்லதென்று மதித்துயர் மனத்தினுக்குத்
திறப்படக் காணப்பட்ட தில்லெனச் சித்திறலே
யுறப்பெறு மெப்போதப்போதுயர் பரசுகமதாமே.

இதன் பொருள்: தோன்றுகின்ற தேகாதிப் பிரபஞ்சம் அநாதியாகையால் இது எக்காலத்திலும் தோன்றிக்கொண்டேயிருக்கும். அங்கனம் தோன்றும் தோற்றப் பொருள்கள் யாவும் சத்தியம் என்ற எண்ணம் எள்ளவும் வராமல் மறந்துவிடுவதே நல்லது. அப்படி மறந்துவிட முடியாவிட்டால் அறிவையன்றி அறிபடுபொருள் அணுவளவும் இல்லையென்ற உறுதி உன்னிடத்தில் எப்பொழுது வைரமலைபோன்று திடம் உண்டாகின்றதோ அப்போதே நீ ஆனந்தக்கடல் வடிவம் ஆவாய் என்பதாம்.

சித்து நான் நிறைந்தோன் என்ற திடம் மறவாதிருந்தால் எத்தனை எண்ணினும் ஏது செய்தாலும் என்னே! என்பது இந்நூலாசிரியர் கண்ட முடிவாகும். அதுமட்டுமா நீ யச்சச்சிதானந்தமாய் வேறென்றும் நினைந்திடாதிருப்பாயாகில் மாயைச் சத்தி போம் ஈதன்றி மந்திரம் மறைகளில் காணுமே. அதுமட்டுமா? ஆலமர்க்கடவுளாணை அவைக்கெலாம் சாட்சி நீயே அதுமட்டுமா! பிறந்ததுண்டானால் அன்றோ பிறகு சாகுவதுதான் உண்டாம். பிறந்ததேயில்லை என்னும் பிரமமாவதுவும் நானே. அதுமட்டுமா! நிறைந்ததே இந்த ஆன்மா நிதானம் இவ்வறிவுதானே. அதுமட்டுமா; பூரணமாகு மென்மேல் புவனங்கள் தோன்றுமென்று தாரணை வந்ததாகில் தரித்துடும் அவித்தை எங்கே. அதுமட்டுமா! விஷயானந்தம்முதல் பதினோரானந்தமும் பிரமானந்தக் கடலின் நுரைகளாம். அதுமட்டுமா! ஆனந்த மயனே

விஞ்ஞான மயனும். அதுமட்டுமா! சுழுத்தியில் காணும் நிருபாதிக ஆனந்தமே விஞ்ஞானமயனும்.அதுமட்டுமா! தானன்றி வேறொன்றுமிலாத பூரண சச்சிதானந்தமாம். அதுமட்டுமா! கசத்த தேகத்திலிருந்திடினும் ஆனந்தக்கடல் வடிவாவாயே அதுமட்டுமா! உன் போதமாய்ப் பூரணமாய் இருப்பாயே. அதுமட்டுமா! ஜீவபேத கற்பிதங்களை மறந்து நீ சின்மயமாவாயே அதுமட்டுமா! விதன மாயை ஏன் வந்ததென்றால் புத்தி விசாரம் அற்றதினுலே. அதுமட்டுமா; மெய்யதேதெனில் சச்சிதானந்தமாய் வியாபிக்கு மான்வாவே. அதுமட்டுமா! கண்டவஸ்து மெய் தியான வஸ்துக்கள் பொய். அதுமட்டுமா! கனத்த கருமங்கள் நூறுயுகம் செய்யினும் காணுமோ காணுதே. அதுமட்டுமா! அரிய சமாதிகள் பழகுவனேல் அவன் ஆருடனுமன்றே. அதுமட்டுமா! ஆய்ந்து அறிவுற்றவன் அப்படி செப்பினுமாபாசனுமாகான் அதுமட்டுமா! விரதமிம் மூன்றுடையவரே வீடுள்ளோரே, அதுமட்டுமா! ஞான்ம் மெய் மகனே உன்னை நம்மானை மறந்திடாதே. அதுமட்டுமா! திடமாக சுவானுபூதி சிவோக என்றிருந்திடாதே. அதுமட்டுமா! அறிபொருளாகும் உன்னை அனுபவித்தறிவாய் நீயே. அதுமட்டுமா! ஞானஸ்திரம் என்றும் பிரமமென்றும் தெளிவதே அபவாதம் காண். அதுமட்டுமா! விமலபோத சொரூபத்தைப் பணிகின்றேனே. அதுமட்டுமா! காண்பவையெல்லாம் சொற்பனம் போல வெண்ணித்துனிந்தவன் ஞானியாவான். அதுமட்டுமா! சொன்ன நடுப்பூமி வந்த ஞானிகளே பிரமவித்தாம் தூய முத்தர். அதுமட்டுமா! இப்படி கண்டவெல்லாம் என்மயம் என்கனுப்போல் கற்பிதமென்று தானே காண்கின்ற சித்து நானே. அதுமட்டுமா! நான் என என்னைத்தானே நம்பி ஈடேறினேனே. அதுமட்டுமா! அந்தண நூல் மித்தையென விடல் தீவிரதரம் இன்னும் இவைபோன்ற பல அறிய மகா வாக்கியங்கள் இந்நூலாசிரியரின் திருவாயில் நின்றும் வெளியாய் இருப்பதை துருவி ஆராய்ந்து தன் சொச்சொரூபஸ்திதியில் இருப்பாயாக. இங்கனம் பிரம்மமே தன் சொரூபமாக அறிந்தவர்களில் ஒருவரைப்பாருங்கள் ஆதி சங்கரர் வடநாடு திக்கு விஜயம் செய்யும்போது ஸ்ரீவல்லி என்னும் கிராமத்தை அடைந்தார். அங்கு வசிக்கும் பிரபாகரர்

என்பவர் தன் மைந்தன் பதிமூன்று வயதுள்ள சிறுவனை அழைத்துக்கொண்டு தந்தையானவர் ஸ்ரீசங்கரரை தரிசித்து கீழ்வருமாறு கூறினர். சுவாமி இந்த சிறுவன் ஒருவரொடும் பேசுவதில்லை விருப்பு வெறுப்பு இல்லை. மானபிமானமும் இல்லை. ஒன்றில் முயற்சியும் இல்லை என்றார். இதை கேட்ட ஆசார்ய சுவாமிகளும் அந்த சிறுவனை நோக்கி நீ யார் என்று ஒரு கவியினால் வினவினர். அந்தக் கவி வருமாறு:

இங்குறு நீயார் பிள்ளாய் யாருடை மைந்தனீதா
னெங்கு செல்கின்றாயுன் பேரென்ன நீ யெங்கிருந்து
மிங்குவந்தனை யென்னுள்ள மின்புற விசைப்பாயென்று
சங்கரனவிலப் பாலன் சாற்றிட வாய்திறந்தான்.

இதன் பொருள் வெளிப்படை உடனே அந்தச்சிறுவனும் வாய் திறந்து கீழ்காணும் கவியால் பதிலளித்தான்.

நரனலன் சுரனியக்க னலனந்தணன் மற்
றரசனும் வணிகன் சூத்ரனல்ல னற்பிரமசாரி
கிரகியும் வானப்ரத்தன் கேடகல் சந்நியாசி
நிரையினி லாருமல்லே னிச போத வடிவனமே

இதன் பொருள் வெளிப்படையாயினும் கடைசி அடியில் தன்னை போத சொரூபன் அதாவது அறிவு சொரூபன் என்று பதில் கூறி இருப்பதைக்கண்டு கொள்க. இந்த ஆச்சர்யகரமான பதிலைக்கேட்ட ஆச்சார்ய சுவாமிகளும் அந்த சிறுவனை நோக்கி உத்தமனே நீ கண்டு கொண்டுள்ள உண்மையான போத சொரூபத்தை தங்கள் தங்களுடைய ஆத்மாவாக அறிந்து உயர்வதற்கு அறியாத மக்களுக்கும் அறிவிக்க வேண்டி நீ என்னுடன் வருகின்றாயா? என்று வினவினர். சிறுவனும் அதற்சிசைந்தான். குருநாதரும் அந்த சிறுவனின் தாய்தந்தையர்களிடம் விடைபெற்று வரும்படி அவனுக்குக் கட்டளையிட்டார். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த அந்த சிறுவனின் பிதாவானவர் ஆச்சர்யமும், ஆனந்தமும் அடைந்தார். அந்த சிறுவனும் மாதா பிதாக்களிடம் சென்று நமஸ்கரித்து கைக்கூப்பிக்கொண்டு அம்மா எனக்கு அன்னம் அளிப்பாய் நான் வேதாந்தத்தைப் பரப்புவதற்காக உலகம் எங்கும் சென்றுவருகிறேன். எனக்கு அனுமதி அளிப்பாயாக என்றான். இதைக்கேள்வியுற்ற தாயானவள் அன்பு மேலீட்டால் மகனைத்தழுவி முத்தமிட்டு என் கண்ணே! நீ

இவ்வளவு காலமும் பேசாமல் இருந்துவிட்டு இப்பொழுது மிக அழகாகவே பேசுகின்றாய் இதற்கு காரணம் யாது எனக் கேட்டாள். அதற்குத் தனயனும் தனது தெய்வத்தாயை நோக்கி அம்மா எல்லா மனிதர்களும் ஞான சொரூபிகளாய் இருந்த போதிலும் அதை அறியாதவர்களாயிருக்கின்றார்கள் அதை அறிவிக்கக்கூடிய ஞானாசாரிய ஜகத்குரு வந்து விட்டார். அந்த மகாத்மாவோடு நானும் சேர்ந்து உலகில் வேதாந்தத்தைப் பரப்ப வேண்டும் இதற்கு நீ அனுமதி அளித்தால் நீயும் முத்தியடைவாய் என்றார். இதைக்கேட்டத் தாயும் அனுமதியளித்து ஆசிகூறி அனுப்பினாள் சிஷ்யனும் குருவும் உலக உபகார நிமித்தம் அவ்விடம் விட்டேகினார்கள். பிற்காலத்தில் இந்த சிறுவனுக்கு அஸ்தாமலகர் என்ற தீக்ஷா நாமம் சூட்டி வடதிசையில் உள்ள ஒரு மடத்திற்கு மடாதிபதியாக்கி வேதாந்தத்தைப் பரப்பும்படிக் கட்டளை இட்டுவிட்டு சங்கரரும் பிறநாடுகளுக்கு விஜயம் செய்யச் சென்றார் ஆதிசங்கரருடைய நாலு சிஷ்யர்களுள் இவர் ஒருவர் என்பது உலகப் பிரசித்தமாம். இவருக்கு அஸ்தா மலகர் என்று பெயர் வந்ததற்குக்காரணம் கீழ்வரும் கவியால் விளங்கும்.

அத்தத்தினெல்லி பொல வான்மாவைக் காட்டலாலீ
த்த்தாமலகத் தோத்ரமாகும் பேர்பெற்ற தன்றி
யத்தா மலக னென்றவ்வறிவினிற் பெரிய பால
னித்தரை யாவ ராலுமேத்திடப் பட்டானம்மா.

இதன் பொருள் வெளிப்படை இவ்வாறு தன்னையுணரக் கூடியவர்கள் கோடிக்கு ஒருவர்தான் இருக்கக்கூடும் என்பதாயிற்று. சிஷ்யனே மேலே காண்பித்த அஸ்தாமலகர் என்ற சிறுவன் தன்னை அறிவு சொரூபன் என்று அறிந்தது போல் நீயும் உன்னை பேரறிவு சொரூபனாக அறி. இந்த அறிவு சொரூபத்தைத் தான் பகவான் என்றும் கடவுள் என்றும் சகல சாஸ்திரங்களும் கூறுகின்றன.

ஞான வாசிட்டம் சுரகு கதை 29-வது கவியில் பகவானாகிய இந்த ஆத்மதத்துவமென்னும் ஞானமானது" என்றும் ஷை 28-வது கவியில் "இந்த அறிவான சொரூபமே திருமால், பிரமன், ருத்ரன், தேவேந்திரன், யமன் முதலியவர்களிடத்தில் பல மணிகளுக்குள் ஓரே நூல் போல் எங்கும் நிறைந்து

இருக்கின்றது' என்னும் ஷை நூல் ஜனக ராஜன் கதையின் 10-வது கவியில் 'அறிவும் அறிபடு பொருளும் கூடிய கூட்டரவில் உண்டாகும் அறிவானந்தம் ஆத்மாவின் சொரூபமேயாம்" என்றும் ஷை 11வது கவியில் 'நான் நான் என்று இடைவிடாமல் சொல்லிக்கொண்டிருக்கின்றதாயும் ஞான சொரூபமாயும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இருக்கின்ற இந்த ஆத்மாவான தெய்வத்தைவிட்டு மற்றொரு தெய்வத்தை தேடுவது தன்கையில் இருக்கும் இரத்தினத்தை எறிந்து விட்டு வளையல் உடைந்த சிறு துண்டைத்தேடும் அறிவிலிக்கு ஒப்பாகும்' என்றும் ஷை நூல் மாபலிச் சக்கரவர்த்திக்கதை 45-வது கவியில் மாபலிக்கு குரு உபதேசித்ததாவது. சிஷ்யனே சுருக்கமாகச் சொல்லுகின்றேன் கேட்பாய் இவ்விடத்தில் உள்ளதுவும் அறிவேயாம் தோன்றி விளங்குகின்ற யாவும் அறிவு சொரூபமேயாம். எல்லையுள்ளதுவும், எல்லை-அற்றதுவும், உள்ளிலும், வெளியிலும், நானும், நீயும் எல்லாம் அறிவேயாகும். உலகம் நிறைந்து விளங்குவதும் இந்த அறிவேயாகும்' என்றும் கூறியிருப்பதால் பேரறிவே தெய்வமென்பதாயிற்று. சிஷ்யனே நீயே அந்த தெய்வ சொரூபமாம். அறிவற்ற எப்பொருளும் தெய்வமாகாது. பஞ்ச பூதமும் அதன் காரியமான தேகாதிப்பிரபஞ்சமும் இந்த அறிவாலேயே விளங்குகின்றது என்பதை மகாகவி கம்பரும் தனது ராமாயண சுந்தர காண்ட காப்புச் செய்யுளில் கூறி உள்ளதைப்பாருங்கள்." அலங்கலிற்தோன்றும் பொய்மை அரவெனப் பூதமைந்தும்' என்றார் இதில் ஐம்பூதமும் பழுதையில் தோன்றும் பாம்புபோல் பொய்யென்றார். இதில் அக்கினியும் ஒன்றாகும். இங்ஙனம் பொய்யான அக்கினியைத் தெய்வமாக மதித்து வழிபடுவது எவ்வளவு அறியாமையாகும் என்பதை யோசித்துப்பாருங்கள். சிஷ்யனே உண்மையான தெய்வம் எது தெரியுமா? வசிட்டமாமுனிவர் தம் சிஷ்யனை நோக்கிக் கூறியிருப்பதை பாருங்கள். ஞானவாசிட்டம் தேவ பூஜை கதை 20, 21, 22-ன் சாரம். "நலத்தைத்தருகின்ற தெய்வம் யாதோவெனின் சரீரத்தோடு கூடிய விஷ்ணுவும் தெய்வமல்ல, சிவனுமல்ல, படைக்கும் பிரமனுமன்று, மனதுமன்று, ஆதியும், அந்தமும் அற்று உற்பத்தி நாச ரகிதமான செயற்படா அறிவே தெய்வமாம். இங்ஙனமாய தெய்வம் தேக

முதலிய சடப் பொருள்களாக எங்ஙனமாகும் ஆகாது. இந்த அறிவான தெய்வத்தைவிட்டு பஞ்ச பூதமாகிய சடப்பொருள் களைத் தெய்வமாகக் கருதுவது எதைப்போன்றது எனின் 15 மைல் தூரம் போகவேண்டிய ஒருவன் கூப்பிடு தூரம் போவதற்கு ஒப்பாம்' என்பதாம். சிஷ்யனே உண்மையான தெய்வத்தைப்பற்றி மேலும் கேட்பாய். மேல் காண்பித்த வாசிட்டத்தின் கருத்தை ஸ்ரீவீரசுப்பையா சுவாமிகளின் உரையில்' புண்டரீகாட்சனுகிய விஷ்ணுவும், திரிலோசகனுகிய பரமசிவனும் உண்மையான தெய்வம் அன்று. கமலோற்பவனுகிய பிரமனும், தேவேந்திரனும் உண்மையான தெய்வங்களல்ல. வாயுவும், சூரியனும், சந்திரனும், அக்கினியும், பிராமணனும், புவியை ஆளும் ராஜாக்களும் உண்மையான தெய்வமன்று. மேற்கூறிய விஷ்ணுவாதியோரிடத்திலும், நம்மனோரிடத்திலும், சர்வ உலகங்களிலும் நிறைந்திருக்கின்ற அறிவு சொரூபமே உண்மையான தெய்வமாகும். அந்த தெய்வ சொரூபமே நின் சொரூபமாம் சிஷ்யனே இந்த ஞானத்தை ஒரு அரசனுக்கு அவன் மனைவியே குருவாக இருந்து உபதேசித்து அருளிய பெருமையைக் கேட்பாய். சூடாலை கதை 49-வது கவி 'இந்த உலகம் உண்டானதில்லை உண்மையில் அறிவு சொரூபத்தைத்தவிர வேறொன்றுமில்லை அந்த அறிவே நீயாக இருக்கின்றாய் என்றாள்' அரசனை சிஷ்யனும் தன் அனுபவம் கூறத்தொடங்கினுன். ஷை கதை 142-வது கவியில் 'குருதேவா தாங்கள் உபதேசித்தப்படி சிந்தித்துப்பார்த்தேன். சடமான தேகாதி உலகம் நானன்று இந்த மல சரீரமும், இந்திரியங்களும், மனதும், சித்தமும், புத்தியும், அகங்காரமும் நானல்ல. பின் நான் யாரென்னில் எல்லாவற்றையும் விளக்கிக்கொண்டிருக்கின்ற அறிவு சொரூபமே நான்" என்றான் அரசன். சிஷ்யனே மேலும் ஞானிகளின் நிச்சயத்தைக் கேட்பாய். ஞானவாசிட்டம் அருச்சுனன் கதை 10, 11 கவிகளின் சாரம். விஷ்ணு என்கின்ற பேரறிவு சொரூபன் அருச்சுனனை நோக்கி " ஹே அருச்சுனு! உற்பத்தி நாசமின்றி இருக்கின்ற உனது ஆத்ம சொரூபத்தைப்பார். அறிவு சொரூபனுகிய நீ ஜனன மரணமின்றிய நித்தியமாய், அறிவற்றதாய் இருக்கின்றாய் அழிவெய்தும் இந்த சரீரத்தில் நீ அழியாதவனாய் இருக்கின்றாய். இந்த

நிச்சயத்துடன் சகல கருமங்களையும் செய்வாய்' சிஷ்யனே நீ யார் தெரியுமா? ஞான வாசிட்டம் உபசாந்திப்பிரகரணம் 10, 11 கவிகளின் சாரம்' அறிபடுபொருளைப்பற்றியும் பற்றுத அறிவு சொரூபமான பரமாத்மாவே நீயாம். இந்த நிச்சயத்-துடன் ஆயிரம் காரியங்களைச் செய்தாலும் நீ ஜீவன் முத்தனு யிருக்கின்ருய் என்பதை அறிந்து இன்பமயப் பொருளாய் இருக்கக்கடவாய்" சிஷ்யனே நீ எந்த் நிச்சயத்தோடு இருக்க வேண்டும் எனின் நான் சச்சிதானந்த் பிரம சொருபனுய் இருக்கின்றேன் என்னும் நிச்சயத்தோடு இருப்பாயாக. சிஷ்யனே நீ யார் தெரியுமா? நீ ஜனன, மரணமில்லாத சுத்தப் பிரமம். தீனத் தன்மையை அதாவது நான் துக்கி என்னும் தன்மையை விட்டு உன் சொருபத்தைப்பார். நீ பார்க்கப்படுவனவற்றை எல்லம் பிரகாசிப்பிக்கின்ருய். உன் அஞ்ஞானத்தால் ஜகத்தை எல்லாம் நீ சிருஷ்டிக்கின்ருய், மறுபடியும் எல்லாவற்றையும் நாசம் செய்தும் நீ நாசமற்ற-வனுய் இருக்கின்ருய். மித்தியாப் பிரபஞ்சத்தைப் பார்த்து கொஞ்சம்கூட மனவருத்தத்தை அடையவேண்டியதில்லை.

நீ தேவர்களுக்கெல்லாம் தேவனுய் இருக்கின்ருய். நீ சுக சொரூபியாயிருக்கின்ருய். மாயையினுல் உன்னிடத்தில் ஜீவன் ஈசுவரன் ஜகத்து ஆகியமூன்றும் விளங்குகின்றது. அது பழுதையில் பாம்பும் சிளிஞ்சலில் வெள்ளியும் விளங்குவது போலாம். சிஷ்யனே அழியத்தக்க தேகத்தில் அழியாத பிரமமே நீ என்று அறிவாயாக. இந்த நிச்சயத்தை அறிய முடியாது போனுல் சோபானமாக அதாவது படிக்கிரமமாக பலஉபாயங்கள் வேதத்தில் கூறப்பட்டுள்ளது. நான்பிரமசொரூபன்என்ற திடபோதமில்லாதவர்களுக்கு பலவுபாயங்களைக் கூறுவது நூல் வழக்காகும் இதை சுவாமி விவேகானந்தர் சிகாகோ பிரசங்கத்தில் ஒருசுலோகத்தால் விளக்கிக் கூறியிருக்கின்ருர். அதாவது திரிசிரபுரம் தேசீய கலாசாலைத்தமிழ் ஆசிரியர் உறையூர் S. V. வரதராஜய்யங்கார் அவர்கள் எழுதிய விவேகானந்தர் சரித்திரம் 2-ம் பாகத்தின் 348-வது பக்கத்தில் உள்ள சுலோகம்

"உத்தமோ பிரம்ம சத்பாவ :
தியானபா வஸ்து மத்திம :
ஸ்துதிர் ஜபோ அதமோ பாவ பகிர் :
புஜா அத்மா அதமா ।

இதன் பொருள்:- இந்நூலாசிரியர் அத்தியாரோப அபவாத கிரமப்படி எடுத்துக்காட்டிய பிரகாரம் சித்து நான் நிறைந்தோன். அதாவது பிரமமே நான் என்று அறிவது உத்தம சித்தாந்தமாம். பிரமத்தைத் தியானிப்பது மத்திம சித்தாந்தமாம். ஸ்துதியும் ஜெபமும் செய்வது அதம சித்தாந்தமாம். வெளிமுகத்தில் செய்யும் பூஜைகள் அதமத்திலும் அதமசித்தாந்தமாம்' என்று கூறியுருப்பதால் இந்நூல் ஆசிரியர் எடுத்துக்காட்டிய நான் பிரமமென்னும் நிச்சயம் உத்தம சித்தாந்தமாம். இதுவே வேதத்தின் உண்மைப் பொருளாம். சிஷ்யனே நீ அதுவாயிருந்து எக்காலமும் வாழக்கடவாய்.

கைவல்ய நவனீத சாரம்
முற்றுப் பெற்றது.

பிரமம் ஸத்யம் - ஜகத் மித்தை



முடிவுரை:

அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றுள் இன்பத்தை தேடிச்செல்லுவதுதான் எல்லா ஜீவராசிகளின் இயல்பு. மாந்தர் இதில் தலைச்சிறந்து விளங்குகின்றனர். பகலுக்குப்பின் இரவு மாறி வருவதுபோல இன்பம் உண்டு என்றால் துன்பம் உண்டு. ஆகவே மாந்தருள் ஞானி ஒருவரே நிலைத்த ஆனந்தம் அல்லது சோக மோகம் அற்ற வீடு பேற்றை நாடி தம்முள் நிலைபெற செய்தவர் ஆவர். மேற்கண்ட புருஷார்த்தம் அடைவதின் இலட்சியம் வீடு-பேராகையால் இவ்வீடு பேற்றை அடைவதற்கு விரும்பும் ஒவ்வொருவரும் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் எனும் வாய்ப்பினை பெறவேண்டும். இம்மூன்றையும் முறையாகப் பெறுவதற்கு தக்க குருமார்கள் கிடைப்பதே அரிதாக இருக்-கும் இக்காலத்தில் மெய்ஞ்ஞான நாட்டமுள்ள அன்பர்கள் பிரபல சுருதிகளின் சாராம்சமாக விளங்கும் இக்கைவல்ய சந்தேகம் தெளிதல் என்னும் நூலை சுவாமி வாசுதேவானந்தா அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

மகாஞானி தாண்டவராய சுவாமிகளே மறு அவதாரமாக ஸ்ரீவாசுதேவானந்தா சுவாமிகளாக வந்து நம்போன்றோர் உய்ய மிகுந்த காருண்யத்துடன் தெளிவான உரை செய்-திருப்பது நமது பாக்கியமே.புறப்பொருட்களிலே சாந்தியும், சமாதானமும் அடையக்கருதி தேடிச்செல்வது; தன் நிழலை புதைக்கக்கருதி குழிதோண்டும் செயல் போன்று பயனற்றதே அத்தகைய செயல்கள் நிறைந்தும் மனிதாபிமானம் அருகியும் வரும் இக்காலத்தில் இகத்திலே பேத புத்தியை மாற்றி சமத்துவம், சகோதரத்துவம் உள்ளத்தூய்மையுடன் அமைந்த சாந்தியுற்ற வாழ்வே வீடுபேறு எனக்காட்டும் இந்நூலை சுவாமி விவேகானந்தா அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

ஜடப்பொருளாகிய புறப்பொருட்களிலே சுகமிருப்பதாகக் கருதி நாய் பசையற்ற எலும்பை கடிப்பதுபோல பல்வித செயல்களில் ஈடுபட்டுவரும் மனிதகுலம் சோக மோகத்தால் துன்பமடைவதும் சீர்த்திருத்தம் வேண்டியோ சுயநலத்-தாலோ மனிதரை மனிதர் கொன்று குவிக்கும் இந்நாளில் புற சீர்த்திருத்தம் நாடுவதும், புறப்பொருட்களில் சுகத்தைக்-காண விழைவதும் மலடி மைந்தன் முயற்கொம்பை தெடுவது ஒப்ப எனக்காட்டும் இந்நூல் ஒவ்வொரு மனிதனின் அகத்தை யும் சீர்செய்து உருப்படுத்தி தன்னில் உலகத்தையும், உலகத் தில் தன்னையும் காண்பானின்றி காணும் அபேத நிலைக்கு உயர்த்தும் ஓர் அருமருந்தாக அமைத்து வெளியிட்டுள்ளார் கள் சுவாமி வாசுதேவானந்தா அவர்கள்.

மனக்கலக்கமுற்ற ராமனுக்கு அன்று வசிட்டர் கூறியது "சிந்தனை விரிவு பந்தமாம், அதனை தீர்த்திடில் முக்தியாம்" என்னும் தாரக மந்திரமாகும். அன்று முடி மன்னர் காலம். அரசன் வழிகுடி. இன்று ஜன நாயக காலம். அன்று ராமனுக்கு செய்த உபதேசம் இன்று பாரதத்தில் எல்லோரும் புரிந்து கொண்டால் பாரில் ஒவ்வொருவருக்கும் தேவை தெளிதல் சந்தேக நிவர்த்தியை அடிப்படையாகக்கொண்டு வலுப்பெறும் ஆதலால், இந்நூல் மெய்யன்பர்களுக்கு ஒரு வேத நூலாக அமைத்துத் தந்துள்ளார்கள் சுவாமி வாசுதேவானந்தா அவர்கள்.

"திடஞானி தரிசனமே சிவத்தைக் காணல், அத்தேசிகன் வாசகமே தீர்த்தமாடல்" என்னும் சிவஞான வள்ளலார் வாக்கிற்கிணங்க சித்து ஜட ஆராய்ச்சி செய்து ஆத்மா, அனாத்மா விசாரணைமூலம் இச்சரீரம் யாது? சரீரியாது? என்ற கேள்வியால் அவைகளுக்கான விடைகளின் மனனத்தால், கிளர் சுருதியால் மறைப்பு நீங்கி, திடஞானம் பெற்று பெருங்கனவான இவ்வுலகமெனும் நாடக மேடையில் வீடு-பேறு அடையச் செய்துள்ளார்கள் சுவாமி வாசுதேவானந்தா அவர்கள்.

"சித்தென அருமறை சிரத்தில் மேவிய தத்துவம் அவன், அது தம்மை தாம் உணர்வித்தகர் அறிகுவர்" என்னும் கம்பர்பிரான் வாக்கிற்கொப்ப தன்னை சட தேகமாகப் பாராது சித்சொரூபமாகக் காணும் குருவின் அருள்பெற்ற ஞான விருப்பம்உடையோர் எவ்வித சந்தேகமும் இன்றி மன சிக்கர, சாக்ஷாத் கார நிலையிலிருந்து உலகினை வெருட்டாது, உல கால் வெருளாது இன்சொல் உடையோராய், சாந்தராய், சம நோக்குடையவராய், சகோதரத்துவம் உடையோராய் எவ்விதக்கவலையும் அற்ற வீடு பெற்றோராய் திரண்டொழுகும் பிரபஞ்சம் என்னும் பேராற்றில் நிறைஞானியாய், விசிராந்தி-யாய் நீந்தும் ஆற்றலுடன், சிந்தித்து அடங்கா மனமகிழ்வு உடையோராய், வாழ்ந்துய்ய சுவாமிகள் எழுதிய இந்நூல் யாவற்றிலும் தலைசிறந்து விளங்குகின்றது. 'உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பினுள் உத்தமனைக் காண்பதே" என்னும் அவ்வைக் குறளுக்கு இணங்க யான் பெற்றபேறு இவ்வையகமெல்லாம் பெறுக என்று அன்பார்ந்த வாசகர்களை படித்துபயனடைய வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

சுவாமி சத்யானந்தா என்கிற

S. வேணுகோபாலன் M.A., B.Com., B.T.,

தலைவர்

பிரம்ம வித்யா பீடம், திருவாரூர்.

பிழைத்திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	27	ஜீவப்பரமங்களின்	ஜீவப்பிரமங்களின்
7	9	மறைக்கமால்	மறைக்காமல்
7	11	பிரம்ம	பிரமம்
8	25	விவகாரமும	விவகாரமும்
8	33	இந்நூலசிரியரும்	இந்நூலாசிரியரும்
9	10	தன்ளை	தன்னை
9	19	முக்தரிட்த்தில்	முக்தரிடத்தில்
9	33	திருஷ்யில்	திருஷ்டியில்
21	8	சாமதிகள்	சமாதிகள்
25	29	மூக்தியடைய	முக்தியடைய
27	17	வேதாதந்த	வேதாந்த
32	25	சிருடியான	சிருட்டியான
34	10	சசலவித	சகலவித
42	5	செயயச்செய்ய	செய்யச் செய்ய
43	9	நங்கி	நீங்கி
52	20	பிராமணங்களை	பிரமாணங்களை
52	29	பரோபட்சமாய்	பரோட்சமாய்
53	12	யாஷ்ய	பாஷ்ய
54	36	பெரியர்வளை	பெரியவர்களை
55	4	கெடுந்த	கெடுத்த
56	10	ஓத்த	ஒத்த
57	16	அங்கனமாபின்	அங்கனமாயின்
60	22	நடந்திடாவீட்டால்	நடந்திடாவிட்டால்
64	3	மோற்கோள்	மேற்கோள்
69	1	சுகதனமன்று	சுகசாதனமன்று
69	23	என்ருகாது	ஒன்ருகாது
72	23	ஆனந்த சொரூம்	ஆனந்த சொரூபம்
74	8	தாறபரியமாம்	தாற்பரியமாம்
74	10	சொசுவலை	கொசுவலை
74	34	இதிவ்	இதில்
77	33	ஐக்கியம்	ஐக்கியம்
78	1	நீலை	நிலை
79	18	முத்கிய	முக்கிய
79	22	நுளர	நுரை
79	26	ஆனந்தமாயிப்பதால்	ஆனந்தமாயிருப்பதால்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
79	30	ழுதல்	முதல்
83	2	பிரம்ணங்களை	பிரமாணங்களை
83	25	இவ்வறு	இவ்வாறு
86	2	அசத்தனுல்	அசத்தானுல்
87	32	குகுதேவா	குருதேவா
90	15	பிரமாமகவே	பிரமமாகவே
90	18	சொரூபஸ்தியில்	சொரூபஸ்திதியில்
91	21	விரிஷ்டன்	வரிஷ்டன்
94	24	அஞசான்	அஞ்சான்
94	34	பஞ்சதகி	பஞ்சதசி
98	22	சுவாயி	சுவாமி
100	1	தொழிலும்	தொழிலிலும்
100	30	கூறியிருப்பதால	கூறியிருப்பதால்
100	33	மேறு	வேறு
101	9	ஏங்காகியானேர்	ஏகாங்கியானேர்
102	30	மரமஹம்ச	பரமஹம்ச
103	29	வசனந்தால்	வசனத்தால்
104	26	ஓக்கும்	ஒக்கும்
108	30	ம்ண்தாள்	மண்தான்
111	34	ரகமாம்	பூர்கமாம்
113	34	காட்சிப்பொருன்	காட்சிப்பொருள்
118	3	கற்றிறந்தவர்கள்	கற்றறிந்தவர்கள்
118	35	இதனும்	இதனுல்
121	9	பிரம்மகதை	பிரம்மகீதை
122	2	பொரூம்	பொருளாம்
123	15	எள்ளவும்	எள்ளளவும்
125	26	அதற்சிசைந்தான்	அதற்கிசைந்தான்
126	20	பொல	போல
128	34	அறிவற்றதாய்	அழிவற்றதாய்
129	21	சிளிஞ்சலில்	கிளிஞ்சலில்
130	10	வெளிமுதத்தில்	வெளிமுகத்தில்

நன்றியுரை பக்கம் 1-ல், 4-வது வரியில்

அப்பலத்தாடியார் - அம்பலத்தாடியார்

முன்னுரை பக்கம் 3ல், 8-வது வரியில்

லட்சணங்களை - லட்சியங்களை

முடிவுரை பக்கம் 1-ல், 27-வது வரியில்

விவேகானந்தா - வாசுதேவானந்தா

நிஷ்காம்ய யக்ஞம்

சரியான எக்ஞம் இன்னதென்று அறிந்து செய்ய வேண்டும். எளியவர்களைக்காத்து அவர்களுக்கு ஊதியம் செய்வதேயாகும். ஒரு மனிதனுக்கு செய்யவேண்டிய உதவி அவனுக்கு அறிவைத்தருவதுதான். இன்றைக்கு ஒருவனுக்கு உணவளிக்கலாம், நாளைக்கு மறுபடி பசியெடுத்து விடும். அவனுக்கு ஒரு தொழிலை கற்றுக்கொடு அவன் ஜீவதசை முழுவதும் சம்பாதித்து சாப்பிடும்படி செய்கின்றாய். ஒவ்வொரு மனிதனும் தன்னைவிட தாழ்ந்திருப்பவர்களைத் தன் சொந்தக் குழந்தைகளைப்போல் பாவிக்கட்டும். பிரதிபலனை அபேட்சிக்காமல் உதவிபுரிந்து ஆத்மாவுக்குத் தேவையான உணவு, அறிவு. அன்பு கிடைக்கட்டும். இதுவே மகத்தான நிஷ்காம்ய யக்ஞம்.

ஸ்ரீ சுவாமி இராமதீர்த்த பரம ஹம்ஸர், M.A.

தமிழ்நாட்டுத் தத்துவ ஞானி ஸ்ரீ குருகிணகர் சுவாமிகளின் அருள்வாக்கு

1. வேதாந்தம் கற்பது பரதேசியாய் போவதற்காக அல்ல. வேதாந்தம் கற்பது குடும்பம் நடத்தும் விதத்தை விபரமாக தெரிந்துக் கொள்வதற்கேயாகும்.

2. கூறையில்லாத வீட்டில் மழை பெய்வதுபோல் ஜாக்கிரதையில்லாதவன் சிந்தையில் தீய குணங்கள் சாரும்.

3. உனக்கு வரும் கஷ்டத்தைக் குருவாக ஏற்றுக்கொள். அப்பொழுது நீ நிம்மதியோடு வாழ்வதற்குறிய நல்ல பாடத்தைக் கற்றுக்கொள்வாய்.

4. பெண்ணிடத்தில் நீ பிரியப்படுவதுபோல் உன்னிடத்தில் நீ பிரியப்படு.

5. பணக்காரன் அனுபவிக்கும் சுகமானது பல தொழிலாளர்கள் படும் சரீரப்பிரயாசைகளை விலைகொடுத்து வாங்கப் பட்டதாகும்.

6. தனது தேவைக்குமேல் அதிகம் பணத்தின்மேல் ஆசையுடையவன் தனவந்தனுயினும் அவன் தரித்திரனே ஆவான்.

7. அதிக ஆசை உயிரைப்போக்கும் கருநாகத்திற்கு ஒப்பாகும்.

8. பிறரிடத்தில் (100) நூறு குற்றங்களை கண்டுபிடிக்க முயற்சிப்பதைவிட உன்னிடத்தில் ஒரு குற்றத்தைக் கண்டு பிடித்து அதிலிருந்து விடுபட முயற்சிசெய்.

9. இனிமையான கனிகளின் சுமையால் மரக்கிளைகள் வணங்கி நிற்பதுபோல் நற்குணங்களின் செயற்கையால் மனிதன் வணக்கமுடையவனுக இருக்கவேண்டும்.

10. அநேக நாடுகளை யுத்தத்தில் ஜெயித்து அரசாட்சி செய்பவன் வீரனல்ல, ஆனல், சர்வ அகண்டகண்டங்களை யும் தனக்கு வேருகாது தன்மயமாகக் கண்டு தன்னைத்தான் ஜெயித்தவனேவாஸ்தவ வீரனுவான்.